# ஈரோடு மாவட்டக் கோயில்கள்







முனைவர் வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்
வேதியியப் பாதுகாப்பு மற்றும்
ஆராய்ச்சி ஆய்வகம்

அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர், சென்னை—600 008
2000

# ஈரோடு மாவட்டக் கோயில்கள்

*தொகுப்பாசிரியர்*

முனைவர் வே. ஜெயராஜ்

*காப்பாட்சியர்*
*வேதியியப் பாதுகாப்பு மற்றும்*
*ஆராய்ச்சி ஆய்வகம்*

அருங்காட்சியகத்துறை வெளியீடு

வெளியிடுபவர்:
முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர்,
சென்னை – 600 008.
2000

ஈரோடு மாவட்ட வரிசை 2
முதற்பதிப்பு : 2000
நகல்கள் : 1000

© ஆணையர்,
அருங்காட்சியக இயக்ககம்,
சென்னை-600 008.

*விலை: ரூ. 70/-*

*முன் பக்க அட்டைப்படம்*
*தொண்டீச்சுரம், ஈரோடு*
*பிரப் நினைவாலயம், ஈரோடு*
*திப்பு சுல்தான் கட்டிய மசூதி, தாளவாடி*

**பின்பக்க அட்டைப்படம்**
*நெட்டைக் கோபுரம், விசயமங்கலம்*
*அய்யனார் கோயில், திண்டல்*

**அச்சிட்டோர்:**
*சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு சங்கம்,*
*118, பெரிய தெரு,*
*திருவல்லிக்கேணி,*
*சென்னை - 600 005.*
*தொலை பேசி: 854 6287.*

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை vi
ரா. கண்ணன்

PREFACE viii
R. Kannan

தொகுப்பாசிரியருரை x
வே. ஜெயராஜ்

ஈரோடு மாவட்டக் கோயில்கள்- கருப்பொருளுரை xiv
செ. இராசு

## இந்து சமயக் கோயில்கள்

1. அருள்மிகு விசயாபுரி அம்மன் கோயில் 3
- வீ. சொக்கலிங்கம்

2. ஆதியூர்த் திருக்கோயில்கள் 8
- இரா.ப. கருணானந்தன்

3. ஆர்த்தர கபாலீச்சுவரத் திருக்கோயில் என்ற திருத்தொண்டீச்சுரம் 26
- ம. காந்தி

4. ஈரோட்டுப் புகழ் பெற்ற கோயில்கள் 32
- சி. மூக்கரெட்டி

5. ஈரோடு மாவட்டத்தில் கிராமத் தேவைதகள் 41
- எஸ். தேவகி

6. ஈரோடு மாவட்டத்தில் சித்தர் கோயில்கள் 54
- கா. பழநிச்சாமி

7. காளமங்கலம் குல விளக்கம்மன் கோயில் 63
- ப. செல்வமணி

8. குன்னத்தூர் - கோயில் கல்வெட்டுக்கள் 67
- ஆர். ரங்கராஜ்

| | | பக்கம் |
|---|---|---|
| 9. | கூவலூர்த் திருக்கோயில்கள் - பொன். முகிலன் | 73 |
| 10. | கோட்டமாளம் கோயில் -கோ . ரெங்கராஜூலு | 81 |
| 11. | சங்கமேசுவரர் கோயில் கி. ஸ்ரீதரன் | 83 |
| 12. | சித்தர மேழிக் கோயில்கள் - அ. புவனேசுவரி | 89 |
| 13. | சிவன் மலை - செ. இராசு | 90 |
| 14. | தலையநல்லூர் - பொன்காளியம்மன் கோயில் பெ.கு. சாந்தகுமார் | 98 |
| 15. | திருப்பாண்டிக் கொடுமுடி க.ஆ. திருஞானசம்பந்தம் | 103 |
| 16. | திருவாணி கூடல் - செ. இராசு | 115 |
| 17. | திங்களூர்க் கோயில்கள் பெ. சண்முகம் | 124 |
| 18. | பாரியூர்த் திருக்கோயில் கூ.ச. சென்னியப்பன் | 132 |
| 19. | பூந்துறைக் கோயில்கள் கா. அரங்கசாமி | 140 |
| 20. | பெரிய சேமூர்க் கோயில்கள் அ. பொன்னுசாமி | 148 |

## சமண சமயக் கோயில்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஈரோடு மாவட்டத்தில் சமண சமயக் கோயில்கள் - செ. இராசு | 157 |

பக்கம்

2. விசயமங்கலம் - 'சந்திரபிரப தீர்த்தங்கரர் கோயில்' 169
- வீ. சொக்கலிங்கம்

## இசுலாமிய சமயக் கோயில்கள்

1. ஈரோடு மாவட்டத்தில் இசுலாமிய இறை இல்லங்களும் இறைநேசச் செல்வர்களின் துயிலில்லங்களும் 175
- கே.ஏ.எஸ். அலாவுதீன் சாஹிப்

2. ஈரோடு மாவட்டத்தில் இசுலாமியர்களால் நடத்தப்படும் கல்விக்கூடங்களும் மதரசாக்களும் 181
- ஈரோடு இசுலாமியக்கலாச்சாரக்கழகம்

## கிறித்துவக் கோயில்கள்

1. ஈரோடு மாவட்டக் கிறித்துவக் கோயில்கள் 187
- வே. ஜெயராஜ்

## பொதுக் கட்டுரைகள்

1. ஈரோடு மாவட்டத்தில் சிற்பக்கலை 197
- க. இலக்குமிநாராயணன்

2. கோயிலும் ஒரு மருந்தகமே 204
- பி. லலிதாபாய்

முனைவர் **ரா. கண்ணன்**, பி.காம்., எம்பி.ஏ., சி.ஏ.ஐ.ஐ.பி., பி.எல்., முதுகலை சமூக அறிவியல் (பர்மிங்காம், இங்கிலாந்து), பிஎச்.டி., இ.ஆ.ப.,
அருங்காட்சியக ஆணையர்,

அரசு அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

## முன்னுரை

தமிழ்நாடு மாநிலத்தின் பத்தொன்பதாவது மாவட்டமாக அந்நாளைய பெரியார் மாவட்டம் (தற்போது ஈரோடு மாவட்டம்) கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு 1979 செப்டம்பர் 17-ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது. மாவட்டந்தோறும் அருங்காட்சியகம் என்ற அரசின் கொள்கைக்கேற்ப தமிழ்நாட்டில் அருங்காட்சியகத் துறையின் கீழ் ஐந்தாவது மாவட்ட அருங்காட்சியகமாக ஈரோடு அரசு அருங்காட்சியகம் 1987, அக்டோபர் 7-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

முதலாண்டு நிறைவையொட்டி, ஆய்வாளர்கள் மற்றும் பொது மக்களின் நலனை முன்னிட்டு அருங்காட்சியகத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தவும் கண்காட்சி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. கருத்தரங்கு மற்றும் கண்காட்சித் தலைப்பு "பெரியார் மாவட்டக் கோயில்கள்" என்பதாகும். கருத்தரங்கிற்கு நல்ல வரவேற்பு இருந்தது. பெரியார் மாவட்டக் கோயில்கள் என்ற ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது. பல்வேறு இந்துக்கோயில்கள், மசூதிகள் மற்றும் கிறித்துவக் கோயில்களின் ஓவியங்களும் அவற்றின் விளக்கங்களும் கோயில்களுடன் தொடர்புடைய அரும்பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

1988-இல் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரைகளை ஒரு நூல் வடிவில் கொண்டுவரத்திட்டமிட்டதின் விளைவாக இந்நூல் வெளியிடப்படுகிறது. இத்தொகுதியில் 28 கட்டுரைகள் கட்டடக்கலை, கலை, பண்பாடு மற்றும் சமூகப் பொருட்களில் மாவட்டத்தின் கோயில்களின் தலைப்பில் உள்ளன. இந்துக் கோயில்கள் தொடர்பான தலைப்பில் 18 கட்டுரைகளும், சமணக் கோயில்கள் தொடர்பான தலைப்பில் இரு கட்டுரைகளும்,

கிராமதேவதைகளின் கோயில்கள் தலைப்பில் இரு கட்டுரைகளும், மசூதி மற்றும் பள்ளிவாசல்கள் எனும் தலைப்பில் இரு கட்டுரைகளும் கிறித்துவக் கோயில்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும், கலை, பண்பாடு மற்றும் மருத்துவம் தொடர்பான இரண்டு கட்டுரைகளும் அடங்கியுள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தும் விளக்கக் கட்டுரைகளே. 1991 ஜுலை முதல் 1993 செப்டெம்பர் வரை பெரியார் (ஈரோடு) மாவட்ட ஆட்சித் தலைவராக நான் பணியாற்றிய காலத்தில் இதில் குறிப்பிட்டுள்ள இடங்களில் பெரும்பாலானவற்றை நான் பார்த்தபடியால் இன்றும் என் கண்முன் அவை தோன்றுகின்றன.

இந்நூலைக் கொண்டுவர அந்நாளின் ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியரும் இன்றைய சென்னை அருங்காட்சியக வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகக் காப்பாட்சியருமான முனைவர் வே. ஜெயராஜ் பெருமுயற்சி எடுத்துள்ளார். பேராசிரியர் செ. இராசு அவர்கள் கைப்பிரதிகளைப் படித்து, திருத்தம் செய்வதில் உதவியுள்ளார்.

இந்நூல் பொதுமக்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் பெரிதும் விரும்பப்படும் என நம்புகிறேன். இந்நூல் இத்துறையின் வெளியீடுகளில் பயனுள்ள ஒன்றாக அமையும் என நம்புகிறேன்.

ரா. கண்ணன்

சென்னை - 600 008

கி.பி. 2000

(ரா. கண்ணன்)

**Dr. R. Kannan,** B.Com., M.B.A., C.A.I.I.B., B.L., M. Social Science (Birmingham, U.K.), Ph.D., I.A.S.,
Commissioner of Museums,

**Government Museum,**
**Chennai - 600 008.**

# PREFACE

The then Periyar district was bifurcated out of the then Coimbatore district on 17th September 1979 as the nineteenth district of the State of Tamil Nadu. According to the government policy of having a museum at the head quarters of a district, the Government Museum, Erode came into existence on 7th October 1987 as the fifth district museum under the Department of Museums, Government of Tamil Nadu.

On the event of the first anniversary of the museum, it was decided to conduct a seminar in the museum for the benefit of scholars and the general public along with an exhibition. The topic chosen was **"Temples of Periyar District"**. There was a very good response to the seminar. An exhibition on ***"Temples of Periyar District"*** was also conducted. Drawings of many temples, mosques and churches along with their description and the antiquities used in the related institutions were on display.

There are 28 papers in this volume on the subjects of architecture, art, cultural and social aspects of temples, mosques and churches in the district. Eighteen articles are on Hindu temples, two articles are on Jain temples, two articles are on temples of village deities, two articles are on dargahs and mosques, one article

is on the churches of the district, and two articles are about art and medicine in general. The papers are mostly descriptive. They evoke graphic memories for me since I had occasion to visit several of them as Collector of Periyar District from July 1991 to September 1993.

The editor of the book, Dr. V. Jeyaraj, Curator, Chemical Conservation and Research Laboratory of the Museum and then Curator of the Government Museum, Erode has put in a lot of effort to bring out this book. Prof. S. Raju of Erode has taken great pains to go through the manuscript before the publication was brought out.

I hope this book will be well received both by scholars and the general public. I wish that this should be a useful publication of the Department of Museums.

Chennai - 600 008,
2000 AD

(R. Kannan)

முனைவர் **வே. ஜெயராஜ்,**
காப்பாட்சியர்,

வேதியியப் பாதுகாப்பு மற்றும்
ஆராய்ச்சி ஆய்வகம்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

# தொகுப்பாசிரியருரை

சென்னை அருங்காட்சியகத்தில் வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியராகப் பணியாற்றிய நான் 1986 ஜூலைத் திங்களில் ஈரோடு அருங்காட்சியகம் தொடங்கிடும் பொருட்டு பணி மாற்றம் பெற்றேன். அருங்காட்சியகத்திற்கே இடமில்லாச் சூழ்நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கொண்டே அந்நாளைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அருண்இராமநாதன், இ.ஆ.ப., அவர்களின் பேராதரவாலும், திரு. சின்னச்சாமி, திரு.பி. நடேசன், திரு. து.நா. இராமநாதன், திரு. எஸ்.ஆர். ஞானதாஸ், திரு. ஆல்பர்ட் ஜெகநாதன் ஆகிய மாவட்ட அலுவலர்களின் பேருதவியாலும் நூற்றுக் கணக்காக அரும்பொருட்களைச் சேகரித்து, அருங்காட்சியகத்திற்கென இடம் கிடைக்காதமையால், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே அவை பாதுகாத்து வைக்கப் பட்டிருந்தன.

பின்னர், ஈரோடு நகராட்சித் தலைவர் திரு. அரங்கராசன், நகராட்சி ஆணையர் திரு. பிரடெரிக் மற்றும் உறுப்பினர்களின் உதவியால் ஈரோடு நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கட்டடம் அருங்காட்சியகம் அமைக்கப் பெறப்பட்டது. பொருட்கள் அந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அருங்காட்சியக அலுவலகம் இயங்கியது. பேராசிரியர் சு. ஆ. திருஞானசம்பந்தம், பேராசிரியர் கா. அரங்கசாமி, பேராசிரியர் அ. பொன்னுசாமி, பேராசிரியர் செ. இராசு, முனைவர் பெ. சின்னையன், அமரர் முனைவர் சி. மூக்கரெட்டி போன்றோரின் உதவியுடன் கிராமம் கிராமமாகச் சென்று நூற்றுக்கணக்கான சிற்பங்கள், மட்பாண்டங்கள், ஓலைச்சுவடிகள், கல்லாயுதங்கள், ஓவியங்கள் போன்றவை சேகரிக்கப்பட்டன.

முன்னாள் அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. நீ. அரிநாராயணாவின் ஆலோசனைப்படி 7.10.1987-ல் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டு செயல்பட்டது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு. இரா. கிறித்துதாச காந்தி, இ.ஆ.ப. அவர்களது தூண்டுகோலும் அவரது தனிப்பட்ட ஆர்வமும் நூற்றுக்கணக்கான ஓலைச்சுவடிகள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள், ஆயுதங்கள் போன்றவற்றைச் சேகரிக்க பேருதவியாக இருந்தன.

ஓராண்டு நிறைவையொட்டி "பெரியார் மாவட்டக் கோயில்கள்" என்ற கருத்தரங்கும் கண்காட்சியும் நடத்திட இயக்குநர் ஒப்புதலளித்ததின் பேரில் 7.10.1988 அன்று ஒரு நாள் கருத்தரங்கம் "பெரியார் மாவட்டக் கோயில்கள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. கருந்தரங்கை அருங்காட்சியக இயக்குநர் திரு. நீ. அரிநாராயணா தொடங்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர், நக ராட்சித் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஓவிய ஆசிரியர் திரு. மோகன்ராஜ், ஐம்பை வரைந்த ஏறத்தாழ 30 கோயில்களின் ஓவியங்கள், பலதரப்பட்ட கோயில் அரும் பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றன. பொது மக்களின் வேண்டுகோளின்படி இச்சிறப்புக் கண்காட்சி நீடிக்கப்பட்டது.



புலவர் செ.இராசு கருத்தரங்கக் கருப்பொருளில் உரையாற்றுகிறார். திரு. நீ. அரிநாராயணா மற்றும் முனைவர் வே.ஜெயராஜ் உடனிருக்கின்றனர்.

கருத்தரங்கின் கருப்பொருளில் புலவர் செ. இராசு சிறப்புரையாற்றினார். பேராசிரியர்கள் க.ஆ. திருஞானசம்பந்தம், கா. அரங்கசாமி, எஸ். தேவகி ஆகியோர் கருத்தரங்க அமர்வுகளின் தலைவர்களாக இருந்து சிறப்புற நடத்திக் கொடுத்தனர். கருத்தரங்கக் கட்டுரைச் சுருக்க நூல் ஒன்று தட்டச்சு செய்து வெளியிடப்பட்டது. கண்காட்சி தொடர்பான



கருத்தரங்க அமர்வில் அமரர் முனைவர் சி. மூக்கரெட்டி அமர்ந்திருக்கும் காட்சி


பெரியார் மாவட்டக் கோயில் என்ற கண்காட்சியினை பார்வையாளர்கள் பார்வையிடும் காட்சி

கைப்பிரதி ஒன்றும் தமிழில் வெளியிடப்பட்டது. ஆயிரக் கணக்கான பள்ளி மாணவர்களும் பொதுமக்களும் கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.

கருத்தரங்கு முடிவுற்ற உடனே கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு நூல் வடிவில் வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணியில் 1998-இல் ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியராக இருந்த திரு. அ. பெரியசாமி மற்றும் திரு. ப. காசிலிங்கம் ஆகியோரின் ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியது. அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆர்வமும் ஆலோசனையும் இந்நூல் உரிய காலத்தில் வெளிவர பெரிதும் ஊக்குவித்தன. தற்சமயம் ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. ஜெ. முல்லை அரசு, உதவியாளர் திரு. மு. ஜஹாருல்லா மற்றும் பணியாளர்களின் உதவிகளை மறக்க முடியாது.

கட்டுரைகளைப் படித்து திருத்தம் செய்த பேராசிரியர் செ. இராசு அவர்களுக்கும் ஊக்கமளித்த டாக்டர் வெ. ஜீவானந்தம், ஓவியர் திரு. கே. ஸ்ரீதர் அவர்களுக்கும் வெளியீட்டில் உதவிய திரு. க. இலக்குமி நாராயணன், திரு. ஜா.ரா. அசோகன், திரு. சொ. சீனிவாசன், வேதியியப் பாதுகாப்புப் பிரிவு பணியாளர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் இந்நூல் வெளிவர ஒத்துழைப்பு கொடுத்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் அட்டைப் பகுதியை வடிவமைத்துக் கொடுத்த எனது மகன் ஆபிரகாம் துரைராஜுக்கும் உரிய வேளையில் நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பெரியார் மாவட்டக் கோயில்கள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியிருந்தாலும் தற்சமயம் ஈரோடு மாவட்டமாக பெரியார் மாவட்டத்தின் பெயர் மாற்றப்பட்டு செயல்பட்டு வருவதால் இந்நூலும் "ஈரோடு மாவட்டக் கோயில்கள்" என்ற தலைப்பில் வெளிவருகிறது. இந்நூல் ஆய்வாளர்களுக்கும் ஈரோடு மாவட்டப் பெருமக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

(வே. ஜெயராஜ்)

சென்னை -600 008

கி.பி. 2000

# ஈரோடு மாவட்டக் கோயில்கள்

**புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613005.**

'ஊரானோர் தேவ குலம்', 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'விண் மறைக்கும் கோபுரங்கள் வினை மறைக்கும் ஆலயங்கள்' போன்றவை கோயில்களைப் பற்றிய முன்னோரின் முதுமொழிகளாகும். கோயில்கள் நம் அரும் பெரும் கலைச் செல்வங்களின் வாழ்விடங்களாகவும் பண்பாட்டுப் பெட்டகங்களாகவும் சமுதாயத்தின் மையங்களாகவும் திகழ்கின்றன.

வரலாற்றறிஞர் கே.கே. பிள்ளை அவர்களின் சுசீந்திரம் கோயில் ஆய்வுக்குப் பின்னர் அதனை அடிப்படையாக வைத்துக் கோயில்கள் பற்றிய ஆய்வுகள் ஓரளவு தமிழ்நாட்டில் பெருகியுள்ளன. ஆனால் ஈரோடு மாவட்டக் கோயில்கள் பற்றிய ஆய்வு இன்னும் சரியான அறிவியல் முறையில் முழுமையாகத் தொடங்கப் பெறவில்லை என்றே கூறலாம்.

சிலர் எண்ணுவது போல் ஈரோடு மாவட்டத்தில் கோயில்கள் எண்ணிக்கையிலும், பெருமையிலும், சிறப்பிலும் குறைவு என்று கூறமுடியாது. அவை நீறு பூத்த நெருப்புப் போல், மேகங்களில் மறைந்துள்ள இருசுடர் போல் தம் பெரும் செல்வத்தை, பெருமையை மறைத்து வைத்துள்ளன.

ஆய்வாளர்கள் அதன் புகழை வெளிக் கொணரும் வண்ணம் ஆய்வினை நிகழ்த்த வேண்டும். அம்மாபெரும் இயக்கத்திற்கு இக்கருத்தரங்கு வழிகாட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஈரோடு மாவட்டப் பகுதியில் மிகவும் தொன்மையான கன்னியர் எழுவர், சேட்டை, அய்யனார், மகிசாசுரமர்த்தனி சிற்பங்கள் பல ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. இவ்வழிபாட்டின் தொன்மையைக் கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறிகின்றோம். கி.பி. 7-9ஆம் நூற்றாண்டு வாக்கில் இவ்வழிபாடு இங்கு மிகவும் சிறப்புடன் நிகழ்ந்திருக்க வேண்டும்.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களும், வைப்புத் தலங்களும் இங்கு குறைவாகவே உள்ளன. கொடுமுடியும், பவானியும் பாடல் பெற்றவை. பூந்துறையும், பெருந்துறையும் வைப்புத் தலங்கள். மூவர் பாடலும் மாணிக்கவாசகர் பாடலும் பெற்றது கொடுமுடி. பாண்டியன் வந்து கொடுமுடியில் வழிபட்டதைச் செப்பேடு கூறும். அதனால் கொடுமுடி, பாண்டிக் கொடுமுடி என்று பெயர் பெற்றது.

மாணிக்கவாசகர் பெயரில் கூனம் பட்டியும், விசய மங்கலத்தில் மடமும், சுந்தரர் பெயரால் மருதுறையில் மடமும் இங்கு இன்றும் விளங்குகின்றன. காடையூரான் வலசு, விசயரங்க

வலசு, ஆலாம் பாடி, கத்தாங்கண்ணி, சென்னிமலை, கீரனூர், வள்ளியறைச்சல், பாசூர் போன்ற ஊர்களில் சைவ சமயக் குரவர்கள் சிறப்புடன் திகழுகின்றனர். பேரோட்டிலும், பாசூரிலும் சிறப்புடன் விளங்கிய அகிலாண்ட தீட்சிதர் வழியினர் இன்று பாசூர் பெரிய மடம், பாசூர் சிறிய மடம் என்ற பெயரில் திரு ஆனைக்காவில் சிறப்புடன் வாழ்கின்றனர். அவர்களிடம் செப்பேடுகளும் உள்ளன.

சிவாலயங்களை நிர்வகிக்க 'சமய மந்திரிகள்' இருந்தனர். சிறந்த சிவனடியார்கள் 'சைவ புரந்தரச் சக்கரவர்த்திகள்' என்று அழைக்கப் பட்டனர். 'பன்மாகேசுவரர்', 'கணப் பெருமக்கள்' என்ற அடியார் குழு ஆலயத்தை நிர்வகித்து வந்தது. இருப்பினும் கொங்குச் சோழர், பாண்டியர் நாளில் பூசை செய்யும் சிவாச்சாரியார்களே இப்பகுதியில் பெரும்பாலும் அறக்கொடைகளை ஏற்று, நிர்வகித்து வந்தனர். 'குடமும் குச்சியும் கொண்டு கோயில் உள்புகுவாரே இத்தன்மம் இரட்சிக்க' என்பது கல்வெட்டுத் தொடர். இவ்வழக்கம் வேறு பகுதியில் இல்லாததாகும்.

கொங்கேழு தல யாத்திரையை மக்கள் பலர் மேற்கொண்டனர். ஒரு பாளையக்காரர் ஒரே நாளில் குதிரையேறி, கொங்கேழு தலத்தை வணங்கி வந்தார். மக்கள் அக்குதிரையைக் காணிக்கைச் செலுத்தி வணங்கினராம். காசி யாத்திரை கூடச் சிலரால் மேற் கொள்ளப்பட்டது. அவர்கள் 'கங்கையாடி' என்று அழைக்கப்பட்டனர். சிவாலயங்களில் அம்மனுக்கு என்று தனிச் சந்நிதிகள் முன்பு இல்லை. 'திருக்காமக் கோட்டங்கள்' எனப்படும் அவை, சோழர் காலத்தில் தான் அமைக்கப்பட்டன.

சோழநாட்டுச் சப்த விடங்கத் தலங்கட்கு நிகராக கொங்கு விடங்கீசர் கோயில்கள் இருந்தன. கோயில்கட்கு வெளியே தனியாக மண்டபத்துடன் தீபக்கம்பங்களை அமைப்பது கொங்கு நாட்டின் தனிப்பட்ட அமைப்பு முறையாகும். திருக்கோயில்களில் பாடல்கள் பாடப் பெற்றன.

சண்டிகேசுவரர் ஆலய நிர்வாகத் தலைவராக எண்ணப்பட்டார். தேவார மூவர் பெயரையும், நாயன்மார் பெயரையும் மக்கள் பூண்டனர். சிறந்த தலங்களின் பெயரை மக்கள் பெருவாரியாக வைத்துக் கொண்டனர்.

தலங்களின் பெருமையை விளக்கப் பற்பல புராணக் கதைகள் தோன்றின. தேவர்கள், புராண மாந்தர் தெய்வத் திருமேனிகளோடு தலங்கள் தொடர்புப் படுத்தப்பட்டன. இயற்கையிறந்த நிகழ்ச்சிகள் கோயில்களில் நடைபெற்றதாகக் கூறப்பெற்றன. மக்களை ஈர்க்க இவை தேவைப்பட்டன போலும்.

கோயில் மண்டபங்களில்தான் ஊர், நாட்டு அவைகள் முன்பு கூடின. அரசனும், அலுவலர்களும் ஊருக்கு வரும் போது அங்கே

தங்கினர். நாட்டின் பொது ஆணைகள், அரசன் உத்தரவுகள் பலர் காணவும், பாதுகாப்புக் கருதியும் கோயில் சுவர்களில் கல்வெட்டுக்களாக வெட்டப்பட்டன.

கோயில் பண்டாரத்தின் பணம் ஏழை மக்களுக்கும், ஊர் அவைக்கும், பல்வேறு பொதுப் பணிகட்கும் செலவிடப்பட்டன. அதன் வட்டி மக்கள் கொடுக்கும் சக்திக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டது. பூசை வேளையின்போது வழிப் போக்கர்கட்கும், இரவலர்கட்கும், அடியார்கட்கும் சோறிடப்பட்டது. கோயில் கொடைகள் மிகவும் பெருகின.

அறச்செயல்கள் தொடர்ந்து நடைபெற வேண்டி, கோயில் நிலங்களையும், பிற சொத்துக்களையும் பயன்படுத்துவோர், கோயிலுக்கு அளிக்க வேண்டிய மேல் வாரம் அல்லது வட்டியைத் தவறாமல் செலுத்தினர். விளையிலும் விளையாது ஒழியிலும், ஊர்கேடு போனாலும் காஞ்சாலும், பேஞ்சாலும் கொடுக்கச் சம்மதித்தனர். நெல்லைக் காயவைத்துத் தூத்திக் கல், பதர், மடி, முளை, ஈய வாசி நீக்கி, அளவு குறையாமல், தாமே கொண்டுவந்து தந்தனர்.

கோயில்கட்குக் கொண்டு வரப்படும் நெய் முதலான குடத்தின் முத்திரை நீக்கி, அளந்து, பண்டாரத்தில் சேர்க்கும் வரை அவை கொண்டு வந்த ஆட்களுக்குச் சோறிடப்பட்டது. 11 ஆம் நூற்றாண்டிலேயே ஆலயத் திருப்பணிகள் பற்றிய பல கல்வெட்டுக்களைக் காணுகின்றோம்.

108 வைணவத் தலங்களில் 'கொங்கு' என்ற பழம் பெரும் நாடும் ஒன்று. வைணவ வரலாற்றில் கொங்கு நாட்டுக்குத் தனி இடம் உண்டு. வைணவ ஆலயங்கள் விண்ணகரங்கள், திருப்பதி, மேலைத் திருப்பதி, மேல் கோயில் என அழைக்கப்பட்டன. ஈரோடு மாவட்டத்துத் திருமால் ஆலயங்கள் சில, புகழ் பெற்ற வைணவத் தலங்களோடு ஒப்பிட்டுக் கூறப் பெற்றன.

தாராபுரம் பெருமாள் கோயில் 'ராஜ்ய அபிஷேக விண்ணகரப் பெருமாள் கோயில்' எனப்பட்டது. கோ ரவிகோதை என்ற சேர மன்னன் ஈரோடு பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் அபிஷேகம் செய்து கொண்டான். இது பூந்துறைச் செப்பேட்டால் அறியும் செய்தியாகும்.

சமண சமயம் மிகவும் சிறப்புற்று விளங்கியது. மாவட்டம் முழுவதும் அதன் சின்னங்களைக் காணுகின்றோம்.

சந்தப் பாடலால் இறைவனை வணங்கிய அருணகிரியார் ஊதியூர், கனககிரி, கொடுமுடி, விசயமங்கலம், கதித்த மலை, காங்கேயம், பட்டாலி, சிவன் மலை, சென்னிமலை, கீரனூர் போன்ற பல ஊர்களைப் பாடியுள்ளார். எழுமாத்தூர் மலையில் அருணகிரி நாதர்க்குக் கோயில் உள்ளது.

அருணகிரியார் சென்னிமலை ஆண்டவரிடம் படிக்காசு பெற்றார். இளைய பிள்ளையார், இளைய நயினார், இளைய ஆழ்வார், சுப்பிரமணியப் பிள்ளையார் என முருகன் அழைக்கப் பெறுகின்றார்.

ஊர்கள் தோறும் அம்மன் கோயில்கள் ஏராளமாக உள்ளன. அவை பெரும்பாலும் தனிப்பட்டவர் காணித் தெய்வக் கோயில்களாகவும், சில பொதுக் கோயில்களாகவும் திகழ்கின்றன. காளியம்மன், மாரியம்மன், செல்லாண்டியம்மன் கோயில்கள் மிகுதி. நாட்டராயன், அண்ணன்மார், இராசாக் கோயில் போன்றவைகளும் காணித் தெய்வங்களாக உள்ளன.

முன்முனார் வழிபாடு நடுகல் வழிபாடாகத் திகழ்கிறது. 'பெரும்படை, அல்லது 'இல் எடுத்தல்' 'இற்கொண்டு புகுதல்' என்ற பெயரில் நடுகல் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவை பல ஊர்களில் இன்றும் வழிபாட்டில் உள்ளன. ஒருங்குடன் மாய்ந்த பெண்களும் ஆலயம் எடுத்து வழிபடப் பெறுகின்றனர். தீப்பாய்ந்தாள், வீரமாத்தி கோயில்கள் என அவை அழைக்கப்படுகின்றன.

தங்களைத் தாங்களே ஆண்டவனுக்குப் பலி கொடுத்துக் கொள்ளும் வழக்கம் முன்பு இருந்தது. 'நவகண்டம் கொடுத்தல்' என்று அவ்வழக்கம் கல்வெட்டில் குறிக்கப் பெறும். இங்கு 'சாவான் கோயில்' அல்லது 'சாவாரப் பலிக்கல்' என அந்நினைவுக் கற்கள் வழிபடப் பெறுகின்றன. பல ஓலைப்பட்டயங்கள் இந்நிகழ்ச்சிகளைச் சுட்டிக் கூறுகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் கோயில்கள் சமய-சமுதாய ஒருமைப்பாட்டின் சின்னங்களாகத் திகழ்கின்றன. தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று சிலரால் கூறப்படுகின்ற சமூகத்து வீரன் உயர்சாதி எனப்படுவோரால் அவர்கள் ஆலயத்தினுள் வைத்து வணங்கப்படுகின்றார். ஒரு சமூகத்தின் கோயிலில் பிற சமூகத்து மக்கள் தலைவர்கள் தெய்வமாக வைத்து வணங்கப்·பெறுகின்றனர். ஒரு மதத்தார் பிற மதத்துப் பெண்களை, ஆடவர்களைத் தெய்வமாக வழிபடுகின்றனர். ஒரு சமூகத்துக்குரிய கோயிலில் பிற சமூகத்தாருக்கு நாள் வழிபாட்டிலும், சிறப்பு விழாக்களிலும் முதல் உரிமைகளும், மரியாதைகளும் வழங்கப்படுகின்றன. இவை பற்றிய முழுமையான சமூக ஆய்வு நடைபெற வேண்டும்.

எண்ணற்ற இலக்கியங்கள், சிறு பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், செப்பேடுகள், ஓலைப் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், நாட்டுப் பாடல்கள், முதலியன ஈரோடு மாவட்டக் கோயில்கள் பற்றிய செய்திகளை நமக்கு மிகுதியாக அறிவிக்கின்றன. அவைகளை யெல்லாம் முறையாக ஆய்வு செய்ய வேண்டும்.

# இந்து சமயக் கோயில்கள்

கோயில்கள் அரும்பெரும் கலைச் செல்வங்களின் வாழ்விடங்களாகவும் பண்பாட்டுப் பெட்டகங் களாகவும் சமுதாயத்தின் மையங்களாகவும் திகழ்கின்றன.

# அருள்மிகு விசயாபுரி அம்மன் கோயில்

**புலவர். வீ. சொக்கலிங்கம், விசயமங்கலம்**


இருபத்து நான்கு உள்நாடுகளைக் கொண்ட கொங்கு நாட்டில் குறுப்பு நாடு என்பது உள்நாடு ஆகும். இக்குறுப்பு நாடு முப்பத்திரண்டு ஊர்களைக் கொண்டது. இதன் தலைநகரமாக விளங்கியதுதான் விசயமங்கலம். இவ்விசயமங்கலம் பண்டைக்காலம் தொட்டு, புகழ் மணக்கும் பெருநகரமாக விளங்கி வந்தது. இங்குள்ள அருள்மிகு நாகேசுவரர் ஆலயம் நாற்பது கல்வெட்டுக்களைக் கொண்ட மிகப் பழமை வாய்ந்த சிவாலயமாகும். சித்திரமேழி விண்ணகர் கரிய மாணிக்கப் பெருமாள் ஆலயம் பன்னிரண்டு கல்வெட்டுக்களைக் கொண்ட மிகப் பழமை வாய்ந்த வைணவ ஆலயமாகும். ஊரின் வடபால் காணப்படும் நெட்டைக்கோபுரம் என்னும் சந்திரபிரப தீர்த்தங்கரர் ஆலயம் பல நூற்றாண்டுகளைக் கண்ட மிகப் பழமையான ஐந்து கல்வெட்டுக்களைக் கொண்ட சமணர் ஆலயமாகும். ஊரின் ஈசானத்திக்கில் (வட கிழக்கு) காணப்படும் வடக்கு நோக்கிய இவ்விசயாபுரி அம்மன் ஆலயம் பழமை வாய்ந்த ஆலயம் மட்டும் அல்ல. ஊரின் பெயரையே தனது பெயராகக் கொண்ட துர்க்கை ஆலயமாகும்.

சேரநாட்டு மன்னன் களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் காலத்தில் பொள்ளாச்சியை அடுத்து உள்ள ஆனைமலைப் பகுதியை நன்னன் என்னும் சிற்றரசன் ஆண்டுவந்தான். அவனுக்கும் கோசர்களுக்கும் பகைமை முற்ற, கோசர்கள் நன்னனின் காவல் மரமான மாமரத்தை வெட்டிச் சாய்த்து விட்டார்கள். களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரனின் நட்பைப் பெற்றவர்கள் கோசர்கள் என்பதனால் நன்னன் கோசர்களை எதிர்க்க அஞ்சி ஆனைமலையை விட்டு இப்பெருந்துறைப் பகுதியில் தனது அரசினை அமைத்துக் கொண்டு ஆட்சிபுரியலானான். மாமரத்திற்குப் பதிலாக வாகை மரத்தைக் காவல் மரமாகக் கொண்டு அம்மரத்தை விசயமங்கலம் பகுதியில் வளர்த்துக் காத்து வந்தான். அக்காவல் மரம் வளர்ந்த இந்தப் பகுதிக்கு 'வாகைப்புத்தூர்' என்று புதிதாக ஒரு பெயரிட்டான். வாகை என்ற சொல் வெற்றியைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகும். சமணர்கள் ஆதிக்கம் கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இப்பகுதியில் கொடிக்கட்டி பறக்கலானது. சமணர்கள் நல்ல தமிழ்ப் பெயர்களையெல்லாம் வட மொழி ஆக்கம் செய்த போது வாகைப்புத்தூர் என்ற தூய தமிழ்ப் பெயரை விசயமங்கலம் என்று மாற்றி அமைத்தார்கள். அந்த வகையில் வாகைப்புத்தூரில் வெற்றிச் செல்வியாக அருள் ஓச்சிக் கொண்டிருந்த கொற்றவை விசயாபுரி அம்மன் என வழங்கலாயிற்று.

பண்டைக்காலத்தில் கொற்றவை வழிபாடு தமிழ்நாடு முழுவதும் பரவலாக இருந்து வந்துள்ளது. பஞ்ச பாண்டவர்கள் ஓராண்டு காலம் மறைந்து வாழ்ந்த (அஞ்ஞானவாசம்) பகுதி தாராபுரம், திருப்பூர் முதலான பகுதிகளைக் கொண்ட விராடபுரம் என்னும் இப்பகுதியாகும். அப்போது அர்ச்சுனன் தன்னிடம் இருந்த வில்லான காண்டீபத்தை இங்குள்ள இவ்விசயபுரி அம்மனிடம் அடைக்கலப் படுத்தி வைத்திருந்ததாகக் கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகப்புலவர் பின்வருமாறு கூறுகின்றார்.

'துளைமணி ரத்தின மகுடா சலத்தைவர் சூதில் நொந்தே
கிளையினை நீங்கி வனவாசம் செய்கையில் கீர்த்திபெற்ற
விளைவயல் சூழ்மங்கைப் பத்தினிக் கோட்டத்தில் வெல்விசயன்
வளைவில் அடைக்கலம் வைத்ததுவும் கொங்கு மண்டலமே'.

இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் கிழக்குச் சுவற்றில் விசயன் தேரில் வருவது போன்றும், அம்பிகையிடம் தனது காண்டீபத்தை அடைக்கலப்படுத்திக் கொடுப்பது போன்றும் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. நன்னன் காலத்தில் வாகைப்புத்தூர் என்றாகி வட மொழியில் மொழி பெயர்ப்பில் விசயமங்கலம் என்றாகி அம்பிகையும், ஊரின் பெயரோடு விசயாபுரி அம்மன் என்று ஆகி இருக்க வேண்டும். பல்வேறு காலங்களில் இவ்வூர் மங்கை, தமிழ் மங்கை, செந்தமிழ் மங்கை, ஓங்குபுகழ்சேர் விசயமங்கை என்ற பெயர்கள் பெற்று விளங்கி வந்தமையை ஏடுகளில் பார்க்கக் காணலாம்.



மகாபாரதச் சிற்பம்
அர்ச்சுனன் .விசயமங்கலம் விசயாபுரி அம்மனிடம்
வில்லை அடைக்கலம் வைத்தல்

இவ்விசயாபுரி அம்மன் ஆலயத்தின் முன் பகுதியில் முப்பது அடி உயரம் கொண்ட தீபக்கம்பம் காணப்படுகிறது. அதன் அடியில் தென்புறத்தில் மகிசாசுர மர்த்தினியின் உருவத்தையும், மேற்குப்புறம் சிம்ம வாகனத் துடன் கூடிய அம்பிகை யையும், வட புறத்தில் கூரிய வாளினையும் கேடயத்தையும் தாங்கிய திருக் கரங்களுடன் கூடிய



விசயமங்கலம்
விசயாபுரி அம்மன் கோயில்

கொற்றவையையும், கீழ்ப்புறம் விநாயகப் பெருமானையும் சிற்பங்களாக வடித்திருக்கிறார்கள். இத்தீபக்கம்பம் காணப்படும் குறிஞ்சியின் கல்சுவற்றில் ஒரு கல்வெட்டு மட்டும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. வேறு கல்வெட்டு ஏதும் இவ்வாலயத்தில் இல்லை. வாயில் கதவில் கம்புளியம்பட்டியைச் சேர்ந்த நாகப்பக்கவுண்டர் மன்மத ஆண்டு ஆனிமாதம் பதிமூன்றாம் நாள் உபயமாகச் செய்து வைத்த மரத்தாலான நெடுங்கதவு ஒன்று மேலே கண்ட விபரத்துடன் காணப்படுகின்றது. முன்மண்டபத்தில் நேர்த்தியான அழகிய இரண்டு சிம்மத்தூண்கள் காணப்படுகின்றன. அதனை அடுத்து வரும் மகா மண்டபத்தில் நீலன், நீலி என்ற இரு பூதகணங்கள் வாயில் காவலர்களாகக் காணப்படுகிறார்கள். அவைகளின் தோற்றம் மிகப் பழமையான சிற்பம் என்பதைக் காட்டுகின்றன. அர்த்த மண்டபத்தில் விநாயகப் பெருமானும் கருவறையில் விசயபுரி அம்மாளும் காட்சித்தருகிறார்கள். அம்பிகை எட்டுக்கரங்களுடன் கூடிய சூரனின் உடல்மீது இடது காலை ஊன்றி, வலது காலை மடித்துக் குத்துக்கால் இட்டு ஊன்றிய நிலையில் காட்சித் தருகிறாள்.

இவ்வாலயத்தின் காவல் தெய்வமான கருப்பராயன் கோயிலின் முன்புறம் பெரிதும் சிறிதுமான இரண்டு நவகண்ட சிற்பங்களும் சுற்றுப் பிரகாரத்தில் மிகப்பழமையான ஒரு நவகண்ட சிற்பமும் காணப்படுகின்றன. தனது இனமக்களின் கோரிக்கைகள் நிறைவேறும் பொருட்டோ அல்லது போர்க்களத்தில் அரசனுக்கு வெற்றியை வேண்டியோ அல்லது ஆலயம் சீர்கெட்ட நிலையில் அதன் சீர்மையை வேண்டியோ அவ்வாலயத்தின் மிகத்தீவிரமான பக்தர்கள் தம்மைத் தாமே கழுத்தை அறுத்துக் கொண்டு பலியிட்டுக் கொள்வது உண்டு. அதனை வீரமரணம் என்பார்கள். அந்த வகையில் வீரமரணத்தைத் தழுவியவர்களுக்கு நடுகல் வைப்பது உண்டு. அவர்கள் சிறு தெய்வங்களைப் போன்றே வணக்கத்திற்கு

உரியவர்களும் ஆவார்கள். அச்சிற்பங்களே நவகண்ட சிற்பங்கள் எனப்படும். அத்தகைய மூன்று நவகண்ட சிற்பங்கள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன.

கொங்குநாட்டில் உள்ள பல்வேறு குலத்து மக்களும் இவ் விசயாபுரி அம்மனை குலதெய்வமாகக் கொண்டு வணங்கி, வழிபட்டு வருகிறார்கள். ஈரோடு, கோபிசெட்டிபாளையம், திண்டுக்கல், பழனி, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை முதலான பகுதிகளிலிருந்தும் இவ்வாலயத்திற்கு ஆண்டு தோறும் அன்பர்கள் வந்து வழிபட்டுப் போகிறார்கள். இவ்விசயாபுரி அம்மனுக்கு மட்டுமே இவ்விசயமங்கலத்தில் ஆண்டு தோறும் ஆனி மாதம் பத்து நாட்கள் கொண்ட (மகோத்சவம்) திருத்தேர்விழா நடைபெறுகிறது. அது சமயம் பெரிய மாட்டுச் சந்தையும் நடைபெறும்.

இவ் விசயாபுரி அம்மன் மீது கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஊத்துக்குளியில் வாழ்ந்த சாமிநாதப் புலவர் பாடி அருளிய பதினொரு பாடல்களைக் கொண்ட ஊஞ்சல் பாட்டுப் பதிகம் கிடைத்துள்ளது. அதில் வந்த சில வரிகள் வருமாறு:

அகரவுக ரத்திலிரு கால்கள் நாட்டி
அன்பான சிங்கார விட்டம் போட்டு
சிகரபக ரத்திநடுக் கொக்கி பூட்டி
செயமகர உயர்பணிநல் வடங்கள் தூக்கி
தகமையுடன் ஓங்காரப் பல்கை சேர்த்தி
தானமைந்த ரத்தினப் பொன் னூஞ்சல் மீதில்
செகமகிழ்வ தானவிசைய மங்கை யூரில்
தேவிவிசை யாபுரித்தாய் ஆடீ ரூஞ்சல் !

மாதவனும் வேதியனும் வடந்தொட் டாட்ட
வானவரும் இந்திரனும் வடந்தொட் டாட்ட
போத மிகும் பருதிதிங்கள் வடந்தொட் டாட்ட
பூமகளும் நாமகளும் வடந்தொட் டாட்ட
மூதறிவோர் தவமுனிவோர் இறைஞ்சிப் போற்ற
மூவர்தொழும் தில்லையான் ஈன்றெ டுத்த
சேதியெனும் விசயமங்கை தன்னில் வாழும்
தேவிவிசை யாபுரித்தாய் ஆடீ ரூஞ்சல் !

ஊத்துக்குளி அருகில் உள்ள தளவாய்ப் பாளையத்திலும் ஒரு விசயாபுரியம்மன் கோயில் உள்ளது அக்கோயில் விசயாபுரியம்மன் கோயில் படைத்தலைக் கவுண்டர்கட்கு என்று ஆனவுடன் கொங்கு வேளாளர்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்ட விசயாபுரியம்மன் கோயிலாகும்.

நாட்டுக்குள் உயர்ந்த நன்குறுப்பு நாட்டின் தலை நகரமாக விளங்கிய இவ்விசயமங்கலத்தின் தொன்மையான திருக்கோயில் இவ்

விசயாபுரி அம்மன் திருக்கோயிலாகும். இக்கோயிலின் முதன்மைக் காணியாளர்களாகப் படைத்தலைக் கவுண்டர் சமுதாயத்தவர்கள் இருந்து வருகிறார்கள். இவ்விசயமங்கலம் விசயாபுரி அம்மன் ஆலயம் ஐந்து பங்காளிகள் ஆட்சிக்கு உரியதாக விளங்கி வருகிறது. முதல்பங்கு நடுப்பட்டி, பொருள்தந்த குலத்திற்கும், இரண்டாம் பங்கு ஊத்துக்குளிக் கவுண்டம்பாளையம் மேட்டுப்புதூர் பொருள் தந்த குலத்திற்கும், மூன்றாம் பங்கு பாலக்கரை சுள்ளிப்பாளையம் சீனாபுரம் பொருள்தந்த குலத்திற்கும், நான்காம் பங்கு கம்புளியம் பட்டி சாத்தந்தை குலத்திற்கும், ஐந்தாம் பங்கு சாவடிப்பாளையம், கோபிகவுண்டம்பாளையம், சின்னமல்லாம்பாளையம் மணியன் குலத்திற்கும் உரிமைப்பட்டதாக இருந்து வருகின்றன. ஐந்து பங்காளிகள் பற்றிய செப்பேடு ஒன்று கூனம்பட்டி ஆதீனத்தில் உள்ளது. இவ்விசயமங்கலம் விசயாபுரி அம்மனுக்கு கம்புளியம்பட்டி சாத்தந்தை குலத்தவரான உயர்திரு. கே.சி. நாகப்பக்கவுண்டர் அவர்கள் கி.பி. 1887ல் திருத்தேர் செய்து வைத்துள்ளார். கி.பி. 1763ல் விசயமங்கலம் விசயாபுரி அம்மன் ஆலயக் காணியாளர்களான ஐந்து பங்கு படைத்தலைக் கவுண்டர்கள் ஊத்துக்குளியில் கதித்தமலை ஆலயத்தில் திருப்பணிகள் செய்து அருள்மிகு வேலாயுதசுவாமியை பிரதிஷ்டை செய்தும் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த அழகிய திருத்தேர் ஒன்றினைச் செய்தும் கூனம்பட்டி குருமகா சந்நிதானத்தின் துணை கொண்டு திருக்குட நன்னிராட்டுப் பெருவிழாவும் செய்துள்ளார்கள். விசயாபுரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பிரம்மோத்சவம் மற்றும் திருத்தேர் விழாக்களில் கூனம்பட்டி ஆதீனம் பிரதான மடாதிபதியாகவும் குருஸ்தானமும் கொண்டு ரட்சாபந்தனமும் செய்வித்து விழாக்களைச் சிவாகம விதிப்படி நடத்தி ஆசிர்வதிப்பது இன்றும் உண்டு. இத்திருக்கோயிலின் அம்பிகையின் திருப்பெயரைத் தத்தம் குழந்தைகளுக்கும் இட்டு வழங்கும் வழக்கம் பண்டு முதல் இன்று வரை இக்கொங்கு நாட்டு மக்களிடம் இருந்து வருகின்றது. பஞ்சபாண்டவர்கள் காலத்தில் வில்விசயனுக்கு அருள்பாலித்தும் அவனது காண்டீபத்தை அடைக்கலப் பொருளாகப் பெற்று, காத்து வைத்திருந்து, அவனுக்கு அருளிய இத்திருக்கோயிலின் பெருந் தெய்வமான அருள்மிகு விசயாபுரி அம்மன் பண்டு முதல் இன்று வரை இப்பகுதி மக்களுக்கும் தம்மைக் குலதெய்வமாகக் கொண்ட குலப் பெருமக்களுக்கும் நாளும் இன்னருள் பாலித்து வருவதோடு நாடும் ஏடும் புகழும் இவ்விசயமங்கலத்தின் பெருமைகளை யெல்லாம் நம் பெயருக்குள் ஒடுக்கம் கொண்டு, நாளும் அருள் விரிக்கும் அன்னையாகிறாள்.

# ஆதியூர்த் திருக்கோயில்கள்

இரா.ப. கருணானந்தன், காப்பாட்சியர்,
தொல்பொருள்வைப்பகம், கோயம்புத்தூர்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் ஊர் என்னும் முடிவினை உடைய ஊர்ப் பெயர்கள் சுமார் 100 வரை அறியப்பெற்றுள்ளன.[1] அவற்றுள் ஆதியூர் குறிப்பிடத்தக்கது. ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் பெருமாநல்லூர்-குன்னத்தூர் சாலையில் ஆதியூர் அமைந்துள்ளது. ஆதியூரில் ஆதீசுவரசுவாமி கோயில், ஆதி நாராயணப் பெருமாள் கோயில் முதலிய வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்கள் உள்ளன.

வரலாற்றில் ஆதன், ஆதி என்பதை முன்னொட்டாகக் கொண்டு பல ஊர்கள் உள்ளன. மேற்கானாட்டில் கொள்ளிட ஆற்றின் கரையில் திருநாளைப்போவார் நாயனார் என்னும் நந்தனார் தோன்றிய ஆதனூர் உள்ளது.[2] திருச்சி மாவட்டம் காமரசவல்லி இராசகேசரிக் கல்வெட்டு ஒன்று ஆதனூர் என்னும் ஊரைக் குறிப்பிடுகிறது.[3] ஆதகூர் என்னும் பெயரில் ஊர் ஒன்று உள்ளது.[4] "அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை" என்று திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற ஆதனூர் ஒன்று தஞ்சை மாவட்டம் சுவாமி மலைக்கு அருகில் உள்ளது.[5] முதல் இராசேந்திரச் சோழனின் திருமன்னிவரை மெய்க்கீர்த்தியில் ஆதிநகர் என்னும் ஊர்ப் பெயர் காணப்பெறுகிறது. சுந்தரரால் சிறப்புப் பெற்ற திருவொற்றியூர் ஆதிபுரி என்றும் அழைக்கப்பெற்றது.[6] இதனைத் தொடர்ந்து கொங்குக் குறுப்பு நாட்டைச் சேர்ந்த ஆதியூரைக் குறிப்பிடலாம்.

கொங்கின் முப்பதுக்கும் மேற்பட்ட நாட்டுப் பிரிவுகளுள் குறுப்பு நாடு குறிப்பிடத்தக்க சிறப்புடையது. சங்க இலக்கியப் புகழ் சென்னிக்கோடு என்னும் சென்னிமலை குறுப்பு நாட்டு எல்லையில் உள்ளது.[7] கொங்கின் உள்நாட்டுப் பிரிவுகள் சோழர் காலத்தில் தோன்றின என்றாலும் குறுப்பு நாட்டுப் பிரிவை தேவாரக் காலத்திலேயே அறிய முடிகிறது. "கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்" என்பது சுந்தரர் பாடல் பகுதி.[8] நன்னூல் பவணந்தி முனிவர் பிறந்த சனகாபுரமும் (சீனாபுரம்) பெருங்கதையைத் தமிழில் பாடிய கொங்கு வேளிர் பிறந்த விசயமங்கலமும், சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பிறந்த நிரம்பையூரும் குறுப்பு நாட்டு ஊர்களே.[9]

குறும்பு என்னும் சொல்லுக்குப் புறநானூற்றின் பழைய உரையாசிரியர் சிற்றரண் (சிறிய கோட்டை) எனப் பொருள் கொண்டுள்ளார்.[10] குறும்பொறை ஆகிய சென்னிமலையைக் கருதி குறுப்பு நாடு என்று பெயர் பெற்றிருக்கலாம்.[11] கொங்கு நாட்டில் சங்க காலம் தொடங்கி சோழர், பாண்டியர் காலம் வரை வேட்டுவர், மழவர், குறும்பர் போன்ற பழங்குடிகள் வாழ்ந்தமையைச் சங்க இலக்கியம், தேவாரம், பாண்டியர் செப்பேடு முதலியன தெரிவிக்கின்றன.[12] எனவே குறும்பர் என்னும் இனக்குழு மக்கள் வாழ்ந்த பகுதி என்னும் பொருளிலும் குறுப்பு நாடு என்னும் பெயர் தோன்றியிருக்கலாம். குறுப்பு நாட்டில் ஆதியூர், திங்களூர், விசய மங்கலம், சீனாபுரம், செங்கப்பள்ளி, குன்றத்தூர், திருப்பூர், கொடுமணல் உட்பட 21 வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் உள்ளன.[13] ஆதியூர்க் கல்வெட்டுக்கள் அனைத்தும் ஊர்ப்பெயரை 'குறுப்பு நாட்டில் ஆதியூர்' என்றே அழைத்துள்ளன.

ஆதியூரில் சுமார் 18 கல்வெட்டுக்கள் உள்ளன.[14] 16 கல்வெட்டுக்கள் சிவன் கோயிலிலும், பெருமாள் கோயிலில் ஒன்றும் தனிக்கல்லில் ஒன்றும் ஆக 18 கல்வெட்டுக்கள். அவற்றுள் 15 கொங்குப் பாண்டியன் வெளியிட்டவை. ஒன்று கொங்கு விக்கிரமச்சோழன் காலத்தையும், ஒன்று போசள அரசன் வீரவல்லாளன் காலத்தையும், ஒன்று பிற்காலத்தையும் சேர்ந்தவை. கொங்குப் பாண்டியரின் 15 கல்வெட்டுக்களுள் 11 கல்வெட்டுக்கள் வீரபாண்டியன் ஆட்சியிலும், 4 சுந்தரப்பாண்டியன் ஆட்சியிலும் வெளியிடப்பெற்றவை. ஆதியூர்க் கல்வெட்டுக்களுள் 11 என்னும் மிகுதியான எண்ணிக்கையைக் கொண்ட கொங்கு வீரபாண்டியன் கல்வெட்டுக்கள் ஆதிவூர் என்று பெரும்பாலும் அழைக்கின்றன. ஆதவூர் என்னும் சொல்லாட்சியும் சில கல்வெட்டுக்களில் உள்ளது.

நன்னூல் உடம்படுமெய் நூற்பாவின்படி ஆதி + ஊர் என்பது ஆதியூர் என வருதல் வேண்டும். ஆனால் கல்வெட்டுக்கள் அனைத்தும் ஆதிவூர் என்று அழைத்துள்ளது ஓர் புதிரே. அதிலும் நன்னூல் பவணந்தி முனிவர் ஆதியூர்க்கு அருகில் உள்ள சீனாபுரத்தைச் சேர்ந்தவர் என எண்ணும்போது வியப்பு மிகுதியாகிறது. சில கல்வெட்டுக்கள் 'ஆதவூர்' என்று அழைத்துள்ளமை புணர்ச்சி விதிக்குக் கட்டுப்பட்டுள்ளது.[15]

ஆதி என்னும் வடசொல்லுக்குத் தொடக்கம், பழமை, கடவுள், சூரியன் எனப் பொருள் கூறப்பெற்றுள்ளது.[16] 1800 ஆண்டுப் பழமை உடைய பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் ஆதியூரில் அறியப்

பெற்றுள்ளன. எனவே பழமையான ஊர் என்னும் பொருளில் ஆதியூர் பெயர் தோன்றியிருக்க வாய்ப்பு உள்ளது. சங்க காலத்தில் இவ்வூர் ஆதியூர் என்னும் பெயரில் இருந்ததா என்பதற்குத் தற்போது தகுந்த சான்றுகள் இல்லை. குறுப்பு நாட்டில் சமண சமயம் செல்வாக்குடன் திகழ்ந்ததற்கு அளப்பரிய சான்றுகள் உள்ளன. சமணர் வழிபட்ட தீர்த்தங்கரருள் ஒருவர் ஆதிநாதர்.[17] குறுப்பு நாட்டுச் சனகாபுரத்தில் குடிகொண்டுள்ள அருகக் கடவுள் ஆதிநாதர் என்று அழைக்கப்பெற்றார்.[18] எனவே ஆதிநாதரை வழிபட்ட சமணர்கள் இருந்த ஊர் என்னும் பொருளிலும் ஆதியூர் பெயர் தோன்றியிருக்க வாய்ப்பு உள்ளது. சங்க இலக்கியத்தில் நெடுவேள் ஆதன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆதனோரி, ஆதி என்னும் பெயரில் தலைவர்கள் இருந்துள்ளனர்.[19] எனவே ஆதன், ஆதி என்னும் தலைவர்கள் பெயரால் ஆதியூர் பெயர் தோன்றியது என்று சொல்வதற்கும் சான்றுகள் உள்ளன. ஆதி என்னும் சொல்லுடன் ஊர் என்னும் பின்னொட்டு சேர்ந்து ஆதியூர் தோன்றியதைப்போன்று குடி, துறை என்பது சேர்ந்து ஆதிகுடி, ஆதிதுறை என்ற ஊர்களையும் காணமுடிகிறது.

சோழர், பாண்டியர் நாட்டில் இறைவன் பெயர்கள் பெரும்பாலும் சிறப்பு அடைமொழி இல்லாமலே காணப் பெறுகின்றன. ஊர்ப்பெயருடன் மகாதேவர், உடையார், பரமசுவாமி, பட்டாரகர் என்பது மட்டும் சேர்த்து திருக்கண்டியூர் மகாதேவர், திருப்பூந்துருத்தி உடையார், திருக்குடமூக்கு பரமசுவாமி, திருப்புறம்பியம் பட்டாரகர் என்பது போன்ற கல்வெட்டுக்களில் இறைவன் பெயர்கள் உள்ளன. ஆனால் கொங்கு நாட்டுக்கோயில் இறைவன் பெயர்கள் பண்டைக்காலம் முதல், சிறப்பு அடைமொழியுடன் காணப்பெறுவது கொங்கு நாட்டின் தனித்தன்மைகளுள் ஒன்று. அலங்கியம் கலியுகக் கண்ணீச்சுரமுடையார், முகுந்தனூர் குரக்குத்தளி நாயனார், கடற்றூர் திருமருதுடையார், கருவூர் திருஆநிலை உடையார், பேரூர் திருஆன்பட்டி ஆளுடையார், ஈரோடு திருத்தொண்டீச்சுர முடையார், இடிகரை வில்லீசுவரமுடையார் என்பன சில சான்றுகள்.[20] கல்வெட்டுகளில் அழைக்கப் பெற்ற இறைவன் பெயர்கள் இன்றும் மாற்றமில்லாமல் அழைக்கப் பெறுவதும் கொங்கின் தனிச்சிறப்பு. குறுப்பு நாட்டுத் திங்களூரில் குடிகொண்ட இறைவன் ஊர்ப் பெயருக்கு ஏற்றவாறு சந்திரபுரீசுவரர் என்று அழைக்கப் பெற்றார். இதைப் போன்று ஆதியூரில் எழுந்தருளிய

இறைவன் ஆதீசுவரமுடையார் என்று அழைக்கப் பெற்றார்.

ஆதியூர்க் கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் ஆதீசுவரமுடையார், நாயனார் ஆதீசுவரமுடையார், ஆதீச்சுரமுடையார் என்று பலவாறாக வழங்கப் பெற்றுள்ளது. கோயிலின் பெயர் ஆதீச்சுரமுடையார் திருக்கோயில் என்று அழகாக அழைக்கப் பெற்றுள்ளது. கல்வெட்டுகளில் நாயனார் ஆதீஸ்வரமுடையார் என்பதே பெரும்பான் வழக்கு. காங்கயம் அருகில் உள்ள கீரனூர் இறைவன் ஆதிநாதேசுவரசுவாமி என்றும்,[21] பெரியகளந்தை இறைவன் ஆதீசுவரர் என்றும் ஆதியை ஆதியாகக்கொண்ட இறைவன் பெயர்கள் சிலவற்றையும் காண இயல்கிறது. மால் சமயத்தார்க்கு அருள் செய்யும் ஆதியூர்ப் பெருமாள் ஆதிநாராயணப் பெருமாள் என்று அழைக்கப் பெறுகிறார். இக்கோயில் போசளர் கலைப்பண்பில் அமைந்த போசளர் காலத்துக் கோயில்.

சேரர், கங்கர், சோழர், கொங்குச் சோழர் ஆட்சியைத் தொடர்ந்து கொங்கு நாட்டைக் கொங்குப் பாண்டியர் சிலர் ஆட்சி செய்துள்ளனர். ஆதியூரில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் என இரு கொங்குப் பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. கொங்கு வீரபாண்டியனின் முதல் ஆட்சியாண்டு தொடங்கி 27வது ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுக்கள் ஏறத்தாழ கொங்கு நாடு முழுவதும் காணப் பெறுகின்றன.[22] கொங்குப் பாண்டியர் ராசகேசரி, பரகேசரி என்று சோழர் விருதுகளைத் தம்பெயருடன் இணைத்தனர். கல்வெட்டுக்கள் கோவிராசகேசரி வீரபாண்டியன் என்றே காணப்பெற வெஞ்சமாங்கூடல் குன்றத்தூர்[23] கல்வெட்டுகளில் பரகேசரி வீரபாண்டியன் என்ற சொல்லாட்சியையும் காண முடிகிறது.

வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் கொங்கில் பல திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. வடபரிசார நாட்டைச் சேர்ந்த வெள்ளா நாட்டார், பூலுவநாட்டார் என்னும் சமுதாய அமைப்பினர் சேவூர், அவினாசி போன்ற இடங்களில் பல திருப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.[25] குன்றத்தூரில் பெருமாள் கோயில் அமைக்கப்பெற்று, வீரபாண்டிய விண்ணகர லக்குமிநாராயணப் பெருமாள் கோயில் என்று அழைக்கப் பெற்றது.[26] விசயமங்கலம் திருக்காமக்கோட்ட நாச்சியார்க்கு அரசன் வாகைப்புத்தூரில் அழிவுபட்ட ஏரியைத் திருத்தி வீரபாண்டியப்

பேரேரி எனப் பெயர் சூட்டி வழங்கப் பெற்றுள்ளது.[27] முகுந்தனூர் குரக்குத்தளி கோயிலில் வீரபாண்டியன் பெயரால் திருவிழா ஒன்று நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றது.[28] வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் சோழநாட்டுக் கண்டியூரைச் சேர்ந்த விளக்கத்தரையன் என்பான் பெரும்பழன நல்லூரில் (பெருமாநல்லூர்) க்ஷேத்திரபாலர் கோயிலைப் புதுப்பித்துள்ளான்.[29] சேவூர் உட்பட பலகோயில்களுக்கு வீரபாண்டியன் ஆட்சியில் செப்புத்திருமேனிகள் செய்தளிக்கப் பெற்றன.[30] வீரபாண்டியனின் சிற்பம் ஒன்று இடிகரை சிவன் கோயிலில் இருந்ததாக அறியப்பெறுகிறது.[31] இவ்வாறு கொங்கில் பல திருப்பணிகளை மேற்கொண்ட வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் ஆதியூர் ஆதீசுவரர் கோயில் கற்றளி அமைப்புப் பணி மேற்கொள்ளப் பெற்றது வியப்புக்குரியது அல்ல. வீரபாண்டியன் கல்வெட்டைத் தவிர்த்து ஆதியூரில் விக்கிரமச் சோழன், சுந்தரபாண்டியன், போசாளன் வீரவல்லாளன் முதலியோர் கல்வெட்டுகளும் உள்ளன. ஆதியூர் விக்கிரமச் சோழன் கல்வெட்டு விசையமங்கலத்து அத்தாணீச்சுரமுடையார் கோயில் பற்றிப் பேசுகிறது. இக் கல்வெட்டு பின்னாளில் அமைக்கப் பெற்ற மகாமண்டபம் (சிவன் கோயில்) திருநிலைக்காலாக வைத்து பதிக்கப் பெற்றுள்ளது. எனவே விக்கிரமச் சோழனின் இக்கல்வெட்டு ஆதியூரைச் சேர்ந்ததா அல்லது விசயமங்கலம் கோயிலைச் சேர்ந்ததா என்ற கேள்விக்கு உரியது.

மாமல்லை குடைவரைக் கோயில் ஒன்று பக்திப் பெருக்கினாலும், பரமனை பூசிக்க வேண்டும் என்ற அவாவினாலும் பல்லவ அரசனால் அமைக்கப் பெற்றதை வரலாறு பேசுகிறது. குடிமக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் உலகின் நன்மைக்காகவும் கைலாசநாதர் கோயில் அமைக்கப் பெற்றதையும் அறிய முடிகிறது.[32] தென்னகத்து மேரு எனத் தஞ்சையில் கோயிலை எடுத்த இராசராசன் தாம் எடுப்பித்த திருக்கற்றளி எனப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறான். சேரர், கங்கர் ஆட்சிக் காலத்தில் கொங்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த கோயில்கள், சோழர்கள் ஆட்சியில் பெருகத் தொடங்கின.[33] சோழர்களைத் தொடர்ந்து பாண்டியர்களும் கொங்கில் புதிதாக ஊர் அமைக்கும் பணியிலும், கோயில்கள் அமைக்கும் பணியிலும் பெரிதும் ஆர்வம் காட்டினர். குறிப்பாக கொங்கு வீரபாண்டியன்

காலத்தில் கொங்கு நாட்டில் சிவன் கோயில், பெருமாள் கோயில் எனப் பலக் கோயில்கள் தோன்றின.

பழமை உடைய பெருங்கற்காலச் சின்னத்தைத் தொடர்ந்து ஆதியூரின் பழமையை நிலைநாட்டுவது ஆதீசுவரர் கோயிலே. ஆதீசுவரர் கோயிலில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த வீரபாண்டியன் கல்வெட்டில் இருந்து தொடங்கினாலும் கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஜேஸ்டா' (மூதேவி) சிற்பம்[34] ஒன்றும், வீரபாண்டியனுக்கு முன் ஆட்சி செய்த விக்கிரமச் சோழன் கல்வெட்டு ஒன்றும் ஆதியூர்க் கோயிலில் உதிரியாக இருப்பதால் வீரபாண்டியன் ஆட்சிக்கு முன்னால் ஆதியூர் சிவன் கோயில் செங்கல் கட்டிடக் கோயிலாகவோ அல்லது மரத்தடிக் கோயிலாகவோ இருந்திருக்கலாம் என்று யூகிக்கலாம். இக் கருத்துக்கு வலு சேர்க்குமாறு கோயில் கற்றளி அமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே ஆதீசுவரர்க்கு வெள்ளாளன் ஒருவன் விளக்குக் கொடை அளித்ததைப் பற்றியக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது.

ஆதீசுவரர் கோயில் கற்றளி அமைப்புப் பணி வீரபாண்டியனின் 4வது ஆட்சியாண்டில் தொடங்கி, 7வது ஆட்சியாண்டில் நிறைவுபெற்றது. கி.பி. ஆண்டில் சொல்வதாக இருந்தால் கி.பி. 1268ல் தொடங்கிய கற்றளி அமைப்புப் பணி சுமார் 4 ஆண்டுகள் வரை நடைபெற்றுள்ளது. ஆதியூரைச் சேர்ந்த வெள்ளாளர்கள் அதிலும் குறிப்பாக வண்ணக்கர், குண்டெலிகள் கூட்டத்தைச் சேர்ந்த நால்வர் ஒன்றாகச் சேர்ந்து அமைத்த கோயில் ஆதீசுவரர் கோயில்.[35] எனவே நால்வர் எழுப்பிய திருக்கோயில் என்றும் சொல்லி மகிழலாம். ஒரு கல்வெட்டு மட்டும் ஆதியூரில் இருக்கும் தானத்தார் கோயில் அமைப்புப் பணியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கிறது.

வீரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டில் ஆதியூர் வெள்ளாளன் வண்ணக்கரில் பிள்ளையாழ்வான் கரும்பறையன் என்பான் கருவறை திருநிலைக்கால் இரண்டையும் படி இரண்டையும் கொடையாக வழங்கி கோயில் திருப்பணியைத் தொடங்கி வைத்தான்.[36] வீரபாண்டியனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் திருக்கட்டளை (கருவறை) இரண்டாம்கால் அகவாய் புறவாய் (அடிச்சுவர் உள்ளும் புறமும்) அமைக்கப் பெற்றது. ஆறாம் ஆட்சியாண்டில் அர்த்த மண்டபத்து இரண்டாங்கால் அகவாய் புறவாய் (அர்த்த மண்டபம் அடிச்சுவர்) செய்யப் பெற்றது.

வீரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டில் ஆதிவூர் தானத்தாரால் திருக்கட்டளை அர்த்த மண்டபம் இரண்டினுடைய முதல்கால்படை (மேல் சுவர்) உள்ளும் புறமும் அமைக்கப் பெற்று, கற்றளி அமைப்புப் பணி நிறைவுபெற்றது.[37]

கொங்கு நாட்டுக் கோயில்களில் சோனாட்டுக் கோயில்களைப் போன்று கருவறை மீது விமானம் அமைப்போ, கருவறை அர்த்த மண்டபச் சுவர் கோட்டங்களில் கோட்டச் சிற்பங்களோ பெரும்பான்மையும் அமைக்கும் வழக்கம் இல்லை. ஆதியூர் சிவன் கோயிலும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கருவறை மீது தற்போது உள்ள செங்கல் கட்டிட நாகர விமானம் பின்னாளில் அமைக்கப் பெற்றது. சுவர்களில் கோட்டச் சிற்பங்கள் வைப்பதற்கு ஏற்றவகையில் பெரிய கோட்ட அமைப்பு இல்லை. கொங்குக் கோயில்கள் கோட்டச் சிற்பங்கள் அமைப்பு இல்லை என்றாலும் கொடுங்கைச் சிற்பங்களைக் காண முடிகிறது. கொடுங்கையில் தலபுராணச் சிற்பங்கள் அடங்கிய சிறுசிற்பங்களைக் காணலாம். கருவறை அதிட்டானத்தில் சிறு சிற்பங்கள் அமைப்பை வெள்ளளூர், மன்னியூர் போன்ற கொங்கின் பண்டைய கோயில்களில் காண முடிகிறது. ஆதியூர் சிவன் கோயிலில் கொடுங்கைச் சிற்பங்களோ, அதிட்டானச் சிற்பங்களோ இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக சுவர்க் கோட்டங்களில் மேலே அமைக்கப் பெற்றுள்ள மகர தோரணங்களின் நடுவே காணற்கு அரிய அழகிய சிறு சிற்பங்களைப் பார்க்க முடிகிறது. லிங்கத்திற்கு மலர் சூட்டும் மயில், மாலை சூடும் குரங்கு, தும்பிக்கை மலரால் லிங்கத்தை வழிபடும் யானை முதலியவாறு விலங்குகள் லிங்கத்தை வழிபடுவது போன்ற சிறு சிற்பங்கள் கண்களுக்குப் பெருவிருந்து. அர்த்த மண்டபம் வடக்குக் கோட்டத் தோரணத்தில் அவினாசிப் புகழ் முதலைவாய்ப் பிள்ளை சிறு சிற்பம் உள்ளது ஆதியூர் என்பதால் விலங்குகள் இறைவனை வழிபடுவது போல் சிற்பங்கள் அமைத்தனரோ எனும் எண்ணமும் எழுகிறது.

வேள் என்னும் சொல்லுக்கு மண் எனப் பொருள் உள்ளது. மண்ணை உழுது வேளாண்மை செய்வோர் வேள், வேளிர், வேளாளர், வெள்ளாளர் எனப்பெற்றனர்.[38] கொங்கு வெள்ளாளர்களில் காணப்பெறும் குலப்பெயர்கள் தனித்தன்மை உடையவை. கிபி. 17ஆம் நூற்றாண்டச் சேர்ந்த போசாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி ஓதாளர் முதல் பெருங்குடிவரை 70 வேளாளர் குலப் பெயரைத் தருகிறது.[39] கொங்கு வேளாளர்

குலத்துப்பாடல் ஒன்று வெள்ளாளர் 96 கீர்த்தியுடைய குலத்தினர் என்கிறது.[40] ஊர் என்னும் சொல்லுக்கு வேளாண் மக்கள் குடியிருப்பான கிராமம் எனச் சொல்லப் பல்கலைக் கழக அகர முதலி பொருள் தருகிறது. நிலத்தை ஊர்ந்து வேளாண்மை செய்யப் பயன்படும் நிலப்பகுதி ஊர் எனப்பெயர் பெற்றது என்றும் கூறலாம். ஆதி என்னும் வெள்ளாளர் குலத்தினர் ஊர் ஆதியூர் என்றும் சொல்ல இயலும்.[40 அ]

கொங்கில் மிகுதியாக வாழ்பவர் வெள்ளாளர். வெள்ளாளர் சோணாடு, தொண்டை நாட்டிலிருந்து இங்குக் குடியேறியவர் என்றும், கொங்கில் பண்டைக் காலம் முதல் வாழ்ந்து வருபவர் என்றும் இரு கருத்துக்கள் உள்ளன. இரு கருத்துக்களுக்கானச் சான்றுகளும் இருக்கின்றன. எனவே வெள்ளாளரில் சில பிரிவினர் கொங்கில் புதிதாகக் குடியேற, பல பிரிவினர் இங்கேயே வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.[41] ஆதியூர் வெள்ளாளர்கள் ஆதியூரில் கோயிலை உருவாக்க, வணிகப்பெருமக்கள் கோயிலில் திருவிழா நிகழ்ச்சிகள் முதலியன நடைபெற ஏற்பாடு செய்தனர். இதன் மூலம் அக்காலத்தில் வெள்ளாளர்க்கும் வணிகர்க்கும் இடையே இருந்த உறவு நன்கு புலப்படுகிறது.

ஆதியூர்க் கொங்குப் பாண்டியர் கல்வெட்டுக்களுள் 6 கல்வெட்டுக்கள் கற்றளி அமைப்பிற்கு வழங்கிய கொடை பற்றியும், 8 கல்வெட்டுக்கள் கோயிலில் சந்தியாதீபம் எரிக்க ஏற்பாடு செய்தது பற்றியும், ஒன்று திருப்பள்ளி எழுச்சி விளக்கு எரிக்க ஏற்பாடு செய்தமைப் பற்றியும், மற்றொன்று இறைவனின் திருப்பள்ளி எழுச்சி அமுதுபடிக்கு 40 பணம் கொடையாகக் கொடுத்தது பற்றியும் பேசுகின்றன.

ஆதியூர்க் கோயிலில் வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் 6 சந்தியாதீபவிளக்கும், சுந்தரபாண்டியன் ஆட்சி காலத்தில் 2 சந்தியா தீப விளக்கும் எரிக்க ஏற்பாடு செய்யப்பெற்றன. கொடைகளுள் உயர்ந்தது விளக்குக் கொடை. சந்தியா தீபம் என்பது இறைவன் திருமுன் மாலையில் ஏற்றி வைக்கப்பெறும் விளக்கு. விளக்கை எரிப்பதற்காக விளக்கு வைத்த கொடையாளர்கள் ஒவ்வொருவரும் விளக்கு ஒன்றுக்கு ஒரு அச்சு வீதம் 8 விளக்கிற்கு 8 அச்சுக் காசினைக் கொடையாக அளித்துள்ளனர்.[42]

அச்சு என்பது கி.பி. 12ஆம் நூற்றாண்டு தொடங்கி வழக்கில் இருந்த காசு வகை. சுசீந்திரம் கல்வெட்டு ஒன்று 'புதுப்பொன் அச்சு' என்று குறிப்பிடுவதால் அச்சு என்பது விலைமதிப்புமிக்க தங்கக்

காசு எனக் கொள்ளலாம். தலைக் காடு கங்க அரசர்களால் முதலில் வெளியிடப்பட்ட அச்சுக் காசுகள் கொங்கு நாட்டில் சேரர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்று, கொங்குச் சோழர் பாண்டியர் காலம் வரை வழக்கில் இருந்தது. அச்சுக் காசுகள் கல்வெட்டுகளில் அச்சு, ஆனை அச்சு, பழஞ்சலாகை அச்சு, புதுச்சலாகை அச்சு, இடைச்சலாகை அச்சு என்று பலவகை வழக்கில் காணப் பெறுகின்றன. தற்போது கிடைக்கின்ற பண்டைய நாணயங்களில் ஒருபுறம் யானையும் மறுபுறம் வில்பனைப் பொறித்துள்ள காசு வகைகளைக் கல்வெட்டுக் குறிப்பிடும் அச்சுக் காசுகள் எனக் கொள்வதில் பிழையில்லை.[43] கோயில்களில் விளக்கு எரித்தல் முதலிய பணிகளுக்காக கொங்கு நாடு முழுமையும் அச்சுக் காசுகள் கொடையாக அளித்துள்ளமையை கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. சேவூர் வீரராசேந்திரனின் 20 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று ஆண்டு முழுமையும் கோயிலில் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்காகப் பொன் கழஞ்சு கொடுத்ததாகத் தெரிவிக்கிறது.[44] வெஞ்சமாங் கூடல் வீரராசேந்திரன் கல்வெட்டு இதே கருத்தைத் தெரிவிக்கிறது.[45] வீரராசேந்திரன் 28 ஆம் ஆட்சியாண்டு சேவூர்க் கல்வெட்டு இதே போன்று சந்திவிளக்கு எரிப்பதற்காக அச்சு ஒன்று கொடையாகக் கொடுக்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது.[46] எனவே அச்சும் பொன் கழஞ்சும் சரிமதிப்புடையவை என்ற கருத்து பெறப்படுகிறது. அச்சும் கழஞ்சும் ஒரே மதிப்புக் கொண்டவை என்று அறிஞர் கோவைக்கிழார் அவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்.[47] மேலும் சில கல்வெட்டுக்கள் சந்தியா விளக்கு எரிப்பதற்காகப் பணம் 10, வராகன் பணம் 10 வழங்கப் பெற்றதாகத் தெரிவிக்கின்றன.[48] எனவே கி.பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் ஒரு அச்சு என்பது 10 பணம் கொண்டது என அச்சுக்களின் மதிப்பை வரையறை செய்யலாம். 30 அச்சு கொடுத்து நிலம் ஒன்று விலைக்கு வாங்கப் பெற்றதைச் சோழமாதேவிக் கல்வெட்டு செப்புகிறது. ஆதியூர்க் கோயிலுக்கு வழங்கப் பெற்ற 9 அச்சுக் காசுகளுள் ஒரு அச்சு மட்டும் திருப்பள்ளி எழுச்சி விளக்கு எரிக்கப் பயன்படுத்தப் பெற்றது.

குறுநகர நாட்டுப் பொதுக்கயம் ஊரைச் சேர்ந்த இருவணிகர், காங்கயம் நாட்டுக் காறையூர் வியாபாரி, கீழ்கரைப் பூந்துறை நாட்டு கொண்கப்பாடி ஊரைச் சேர்ந்த வெள்ளாளன் என்ற வேற்று ஊரினரும் ஆதியூர்க் கோயிலுக்குக் கொடைகள் வழங்கியுள்ளனர்.[49] கொடையாளர் இவர்களைத் தவிர பிற அனைவரும் ஆதியூரைச்

சேர்ந்தவர்களே. ஆதியூர்க் கோயிலுக்கு ஒரே வியாபாரி இரண்டு கொடைகள் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. சுந்தரபாண்டியன் ஆட்சியில் குறுநகர நாட்டுப் பொதுக்கயமான சோழபாண்டிய புரத்து வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையான் என்பான் திருப்பள்ளி எழுச்சி விளக்கு எரிக்க அச்சு ஒன்றையும், திருப்பள்ளி எழுச்சி அமுதுபடிக்கு 40 பணத்தையும் கொடையாகக் கொடுத்துள்ளான். இவ்விரு செய்திகளும் தனித்தனிக் கல்வெட்டில் பொறிக்கப் பெற்றுள்ளன. இவ் வியாபாரியின் திருச்செயலால் ஆதியூர்ச் சிவன் கோயிலில் சுந்தரபாண்டியர் ஆட்சிக் காலத்தில் திருப்பள்ளி எழுச்சி நிகழ்ச்சி செவ்வனே நடைபெற்றது எனலாம்.

கோயிலுக்கு வழங்கப் பெற்ற கொடைகள் கொங்கிலோ அல்லது ஆதியூரிலோ அனைத்துமே காசுக் கொடைகளே. சோழர், பாண்டியர் நாடுகளில் கோயில்களில் விளக்கு எரித்தல் முதலிய பணிகளுக்காகக் கால்நடைகள் சாவா மூவாப் பேராடு என்னும் பெயரில் வழங்கப்பெற்றன. ஆனால் கொங்கில் கால்நடைக் கொடைகள் அருகியே காணப் பெறுகின்றன. கால்நடை வளர்ப்பில் சிறப்புற்றிருந்த கொங்கில் கோயில்களுக்குக் கொடையாகக் கால்நடைகள் வழங்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க முரண்பாடாகும். கருநாடகத்திலும் கால்நடைக் கொடை அருகியே உள்ளது. சோழர் காலத்துக் கொங்கு நாட்டில் வேளாண்மை வளர்க்க வேண்டிய நிலை இருந்தது. எனவே வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் கொங்கில் கால்நடைகளைக் கோயிலுக்கு அளிக்கவில்லை எனலாம்.[50] பிற பகுதிகளில் கால்நடைக் கொடைகள் தேவரிடைச் சான்றார் என்னும் சமுதாயத்தாரிடம் ஒப்படைக்கப் பெற்றன. சோழர், பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கொங்கின் வேளாண்மையை மிகுதிப்படுத்துவதற்காகப் புதியவேளாண் குடியிருப்பு ஊர்கள் புதிதாக ஏற்படுத்தப் பெற்றன. ஏற்படுத்தப் பெற்ற ஊர்களில் ஊர் நலன் கருதி கோயில்களும் அமைக்கப் பெற்றன. கோயில் பணி செய்வதற்காக கொங்கில் பிராமணர்களின் குடியேற்றமும் நடைபெற்றது. கோவிலுக்கு வழங்கப்பெறும் கொடைகள் பிறபகுதிகளைப் போன்று தேவரிடைச் சான்றார் (இடையர்) முதலியோரிடம் ஒப்படைக்கப் பெற்றால் அது கோயில் பணி செய்யும் பிராமணப் பெருமக்களுக்கு உதவியாக இராது. எனவே பிராமணர்களால் நிர்வகிக்கத்தக்க காசுக் கொடைகளே கொங்கில் ஊற்சாகப்படுத்தப் பெற்றன எனவும் கூறலாம். (இதன் காரணமாக, கொடையைப் பெற்று நடத்துபவர்

பிராமணர் அல்லாதாராக இருந்து தர்மத்தை சரியான முறையில் செலுத்தத் தவறினால் மண் கலம் தந்து வெண்கலம் பறித்துக் கொள்ளப் பெறுவாராக என்ற கடுமையான தண்டனைகளையும் அதே சமயத்தில் தர்மத்திற்குரிய கொடையைப் பெறுபவர் பிராமணராக இருந்தால் இத்தகு கடுமையான தண்டனைகள் இன்றி அறம் மறவாமல் செய்க என்பது போன்ற சொல்லாட்சியைக் கொங்குக் கல்வெட்டுக்களின் வழி காணலாம்).

ஆதியூர்க் கோயிலைப் பொறுத்தவரை பிராமணர்களுள் கொடையைப் பெற்றுக் கொண்டோர் அனைவரும் வாச்சிய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஆதியூர் ஆதீசுவரர் கோயிலில் சந்தியா தீப விளக்கு எரிப்பதற்கும், திருப்பள்ளி எழுச்சி விளக்கு எரிப்பதற்கும் பிராமணர்கள் கொடையாளர்களிடமிருந்து கொடையைப் பெற்றுள்ளனர். சந்தியா தீபம், திருப்பள்ளி எழுச்சி விளக்கினை ஆண்டுதோறும் நாள் தவறாமல் எரிப்பதற்காக, ஒவ்வொரு விளக்கிற்கும் தனித்தனியாக அச்சு ஒன்றினைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு அச்சுக் காசின் வட்டித் தொகையைக் கொண்டு நாள்தோறும் கோயிலில் பணிக்கப் பெற்ற விளக்கினை கொடைபெற்ற பிராமணர் ஏற்றி வைத்துள்ளனர்.

கோயில் பணி செய்த பிராமணர் .குடங்கொடு கோயில் புகுவார் என அழைக்கப்பெற்றனர். ஆதியூர்க் கல்வெட்டுக்கள் இப்பிராமணரை காணியுடைய சிவப்பிராமணர் என்றும் அழைத்துள்ளன. பல்கலைக்கழக அகர முதலி காணி, காணியாட்சி என்பதற்குப் பரம்பரையாக அனுபவிக்கும் உரிமை எனப்பொருள் கொண்டுள்ளது.[51] கொங்குக் கல்வெட்டுக்களில் காணியுடைய பிராமணர், காணியுடைய வேட்டுவர், காணியுடைய குறும்பர் உள்ளனர்.[52] பெருந்தலையூர் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்று காஞ்சிக் கூவல் நாடு, வடகரை நாடு, பூந்துறை நாட்டில் காணி பெற்ற வேட்கோவன் பற்றிக் கூறுகிறது.[53] சர்க்கார் பிராமணன் ஒருவன் கொங்கு வீரராசேந்திரச் சோழனிடம் முப்பது பொன் கொடுத்து முகுந்தனூர் கோயிலையும், தென்னூர் கோயிலையும் காணியாகப் பெற்றதைச் சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு பேசுகிறது.[54] எனவே காணி வழங்கும் உரிமை அரசனிடம் இருந்தது என்றும், காணி வேண்டுவோர் அரசனிடம் பொன் முதலியன கொடுத்து காணியைப் பெற்றுள்ளனர் எனவும் அறிகிறோம். ஒரு கோயில் காணியுடைய சிவப்பிராமணர் வேறு கோயில்களின் காணியாட்சி உரிமையையும் கேட்டுப் பெற்றுள்ளனர்.

கவையன்புத்தூர் (கோயில் பாளையம்) கோயில் காணி பெற்றிருந்த பிராமணன் பரம்பரை அற்றுப்போக, அக்காணியாட்சி மீண்டும் அரசனுக்கே சேர்ந்தது. அக் காணியாட்சி உரிமையை அரசன் வேறு ஒரு பிராமணனுக்கு வழங்கினான்.[55] கோயில் பாளையத்தில் உள்ள மற்றுமொரு கல்வெட்டு நல்லூர்க்காநாடு, காவடிக்கால்நாடு, வாயறைக்கால் நாடு மற்றும் வடபரிசார நாட்டைச் சேர்ந்த இடிகரை, துடியலூர், கூடலூர், கவையன்புத்தூர், சூரலூர் (சூலூர்) முதலிய நாட்டு ஊரைச் சேர்ந்த கோயில்களின் பூசை முதலியவற்றைக் காணி பெற்ற பிராமணர்கள் செவ்வனே செய்ய வேண்டும் எனப்பணிக்கிறது.[56] ஆதியூர்க் கோயிலில் 8 சந்தியா தீபம் எரிப்பதற்கும், ஒரு திருப்பள்ளி எழுச்சி விளக்கு எரிப்பதற்காகவும் ஆதியூரைச் சேர்ந்த காணியுடைய சிவப் பிராமணர்கள் 9 அச்சுக் காசுகளைக் கொங்குப் பாண்டியர் காலத்தில் பெற்றிருந்தனர். இக்காசுகளும் தனியாக ஒரு பிராமணரிடம் வழங்கப்பெறாது இருவர், மூவரிடமே வழங்கப் பெற்றது. கொங்கு நாட்டுச் சிவப் பிராமணர் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் கொங்கில் குடியேறினர் என்றும் ஒரு கருத்துள்ளது.[57]

விளக்கு எரிப்பதற்காகக் காசினை பிராமணர்கள் பெற, ஆதீஸ்வரர் திருப்பள்ளி எழுச்சி திருஅமுதுக்காக வழங்கப்பெற்ற 40 பணம் பிராமணர்களிடம் வழங்கப் பெறாமல், ஆதியூர் ஊரைச் சேர்ந்த ஊர் என்னும் அமைப்பினரிடமும் ஊராளிகளிடமும் வழங்கப் பெற்றது. ஊர் என்பது 'வேளாண்மைகளையும், ஊராளிகள் என்பது அரசு அலுவலர்களையும் குறிக்கும். திருஅமுதுக்கான நெல்லினை வேளாண் மக்கள்தான் வழங்க இயலும் என்ற அடிப்படையில் ஊர், ஊராளிகளிடம் இக் கொடை ஒப்படைக்கப் பெற்றது எனலாம்.

ஆதியூர்க் கோயில் கல்வெட்டுக்களின் அமைப்பு குறிப்பிடத்தக்க ஒன்று. போசாள அரசன் கல்வெட்டைத் தவிர்த்து விக்கிரமச் சோழன் கல்வெட்டு உட்பட பெரும்பாலும் அனைத்துக் கல்வெட்டுக்களிலும் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்னும் வடமொழித் தொடரும் அதற்கு நிகரான 'நன்மங்கலம் சிறக்க' என்னும் தமிழும் கல்வெட்டுக்களின் தொடக்கமாக உள்ளன. கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களின் தனித்தன்மையில் ஒன்றாகிய நன்மங்கலம் சிறக்க என்னும் இத்தமிழ்த் தொடரை ஆதியூர் மக்கள் கல்வெட்டுக்களில் இடம்பெறச் செய்தமை போற்றத்தக்கது. அரசனின் ஆட்சியாண்டைக் குறிப்பிடும்போது 'திருவெழுத்திட்டுச் செல்லா

நின்ற திருநல்லியாண்டு' என்ற அழகிய தொடரையும் காண இயல்கிறது.

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளின் முடிவுகளும் புதுமையானவை. கணக்கம்பாளையம் குலோத்துங்கன் கல்வெட்டு 'அறம் மறவற்க' என முடிகிறது.[58] இலுப்பநத்தம் வீரவல்லாளன் கல்வெட்டு 'இத்தன்மத்தைக் குறைத்தான் தன்தாய்க்குத்தான் மணாளன்' என எச்சரிக்கிறது.[59] பெருந்தலையூர் சுந்தரபாண்டியன் கல்வெட்டு முடிவில் 'இது காத்தவன் ஸ்ரீபாதங்கள் எங்கள் தலை மேலதாகவும் இத்தர்மத்துக்கு அழிவு சொன்னவர் உண்டாகில் வழி ஏழெச்சம் அறுவான்' என விவரிக்கிறது. "இத்தர்மத்துக்கு விகர்தம் சொன்னவர் உண்டாகில் சிவத்துரோகியும் ராசத்துரோகியும் நாட்டுத் துரோகியும் பட்டது படுவார்களாகவும்" என்று மேலே ஒரு படி சென்றும் அச்சுறுத்துகிறது.[60]

கற்றளி அமைப்புப் பணியைக் கூறும் ஆதியூர்க் கல்வெட்டுக்கள் படி இரண்டும் தர்மமாகச் செய்வித்தேன் என்பது போன்று முடிகின்றன. தானத்தைப் பெற்றவர் பிராமணராக இருந்தால் 'சந்திராதித்தவரை குடங்கொடு கோயில் புகுவான் செலுத்துவானாகவும் இது பன்மாஹேசுவரர் ரக்ஷை' என முடிகிறது. பிராமணர் தானம் பெறும் கல்வெட்டில் மட்டும் தர்மத்தைச் செய்யத் தவறினால் பெறும் தண்டனைச் சொல்லப் பெறுவது இல்லை. ஆதியூரைச் சேர்ந்த ஊரும் ஊராளிகளும் தானம் பெற்ற கல்வெட்டின் முடிவு, "இரு கலனே தூணி நெல் அளக்கக் கடவோமாக. அளக்குமிடத்து விலக்கினார் உண்டாகில் மாகேசுவரர் வதைத்தாலே படக் கடவோமாகவும், பட்டு புதுப்படி குறைபடாமலே நடத்தக் கடவோமாகவும்" என்ற உறுதி மொழியுடன் நிறைவு பெறுகிறது.

ஒரு நாட்டைப் பற்றிய, ஒரு நாட்டின் சமுதாயம் பற்றிய ஆய்வுக்கு ஊரைப் பற்றிய மற்றும் ஊரில் உள்ள கோயிலைப் பற்றிய ஆய்வு முதற்படி. அந்த வகையில் ஆதியூர்க் கோயிலைப் பற்றிய ஆய்வு கொங்கு நாட்டு வரலாற்றில் தனித்த இடத்தைப் பெறுகிறது.

**மேற்கோள் நூல்கள்:**

1. 1) ஆதியூர் 2) பெரும்பழன நல்லூர் 3) புலரியூர் 4) கலையமுத்தூர் 5) இளமாடத்தூர் 6) வடகரை ஆத்தூர் 7) ஆனங்கூர் 8) குத்தளூந்தூர் 9) கூகலூர் 10) பறையூர் 11) மருதூர் 12) பெருந்தலையூர் 13) கொற்றனூர் 14) காடையூர் 15) கரையூர் 16) கீரனூர் 17) புத்தூர் 18) அயிலூர் 19) புகழியூர் 20) நெருவூர் 21) திங்களூர் 22) குன்னத்தூர்

23) கொளப்பலூர் 24) தேனூர் 25) தேரையூர் 26) நிரம்பையூர் 27) நல்லூர் 28) முகுந்தனூர் 29) யானை நல்லூர் 31) கோட்டூர் 32) துருவலூர் 33) கலையனூர் 34) கொங்கூர் 35) பொங்கலூர் 36) கானூர் 37) உற்றத்தூர் 38) வலுவூர் 39) ஊஞ்சலூர் 40) வெங்கம்பூர் 41) எழுமாத்தூர் 42) சேமூர் 43) அங்கூர் 44) நசியநல்லூர் 45) அரச்சலூர் 46) சாட்டம்பூர் 47) சேவூர் 48) உசனூர் 49) பிடாரியூர் 50) பற்றூர் 51) சிற்றூர் 52) தேவூர் 53) கோகூர் 54) எழூர் 55) தூசியூர் 56) ஆலத்தூர் 57) தலையூர் 58) நீலம்பேரூர் 59) கொற்றனூர் 60) முகிலனூர் 61) அகரம்புத்தூர் 62) சோழமாதேவி நல்லூர் 63) கணியூர் 64) கண்ணாடிப்புத்தூர் 65) கடற்றூர் 66) நரையனூர் 67) மானூர் 68) கோனூர் 69) புல்லூர் 70) தோளூர் 71) அந்தியூர் 72) சிலம்பூர் 73) ஆலத்தூர் 74) குடக்கோட்டூர் 75) புக்கொளியூர் 76) கவையன்புத்தூர் 77) மன்னியூர் 78) சேமூர் 79) தென்னூர் 80) வெள்ளளூர் 81) துளூர் 82) கருவலூர் 83) கூடலூர் 84) பேரூர் 85) வெள்ளனூர் 86) கோலூர் 87) கோவன்புத்தூர் 88) குனியமுத்தூர் 89) சூரலூர் 90) புத்தூர் 91) தென்னூர் 92) கீழ்மலையூர் 93) நன்னனூர் 94) வெண்டையூர் 95) வடக்கிலூர் 96) ஆற்றூர் 97) கருவூர் 98) நல்லியூர் 99) வெள்ளூர் 100) பக்கூர் 101) ஆரியூர் - K.S. Vaidyanathan - The Ancient Geography of the Kongu Country (1983) நூலிருந்து சேகரிக்கப்பெற்றவை.

2. திருத்தொண்டர் புராணம் உரைநடை - திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு (1981) பக்கம் 125.

3. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் (1966) பக்கம் 325.

4. மேலே கண்ட நூல் பக்கம் 204.

5. ராய. சொக்கலிங்கம் - திருத்தலப்பயணம் - பக்கம் 292.

6. அருணகிரிநாதர் - திருப்புகழ் 633.

7. தேனோலை - 28 (1981 ஏப்ரல்) சென்னிமலை என்னும் கட்டுரை. நற்றிணை - 28, குறுந்தொகை - 144ம் பாடல் கூறும் சென்னிக்கோடு என்பதனைச் சென்னிமலை எனக் கொள்வது ஏற்புடையதே.

8. சுந்தரர் தேவாரம் - ஊர்த்தொகை பாடல் எண் 2.

9. கார்மேகக் கவிஞர் - கொங்கு மண்டல சதகம், பாடல் எண்கள்: 47, 95

10. புறநானூற்றுப் பாடல் எண்: 97, 177, 386 பழைய உரைப்பகுதி

11. K.S. Vaidyanathan - The Ancient Geography of the Kongu Country (1983) Page 134.

12. க.அ. புவனேசுவரி - அன்னூர் வரலாறு (1987) பக்கம் 2

13. 1) குளப்பலூர் 2) அயிலியூர் 3) திங்களூர் 4) தாளூன்றி 5) விசய மங்கலம் 6) தென்னூர் 7) நிரம்பையூர் 8) செங்கப்பள்ளி 9) குன்றத்தூர் 10) முகுந்தனூர் 11) தேரையூர் 12) ஆதியூர் 13) பாலத்தொழு 14) கொடுமணல் 15) சீனாபுரம்-16) கற்றங்காணி 17) ஊத்துக்குழி 18) திருப்பூர் 19) நல்லூர் 20) மன்னறை 21) வெள்ளிரவள்ளி

14. கல்வெட்டுக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியரால் நேரில் பார்த்துப் பார்வைப்படி எடுக்கப் பெற்றவை. தென்னிந்திய கோயில் சாசனங்கள் தொகுதி 2ல் கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ARE 150-68/1968 224-225/1968ல் கல்வெட்டுக் குறிப்புகள் வெளியிடப் பெற்றுள்ளன.

15 உடம்படுமெய் இலக்கணத்திற்கு உட்பட்ட கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்கள் சில: அந்தியூர், ஆரியூர், நல்லியூர், மன்னியூர், தேரையூர், நெருவூர், சேவூர், தேவூர், கருவூர்

16. Tamil Lexicon, Vol. I (1982).

17. "போதுசாந்தம் பொற்ப ஏந்தி
ஆதிநாதன் சேர்வோர்
சோதி வானம் துன்னு வோரே" - பெருந்தொகை பாடல் எண்: 135.

18. "கொங்கில் குறும்புதனில் ஆதிநாத குருவிளங்கு
மங்குல் பொழில்சன காபுரமும் கொங்கு மண்டலமே
-கொங்குமண்டல சதகம் பாடல்-எண்: 47

19. லால்குடிக்கு அருகில் உள்ள சிவத்தலம் ஆதிகுடி: அப்பர் சேஷத்திரக் கோவையின் உள்ள வைப்புத்தலம் ஆதிதுறை - ரா. ஸ்ரீநிவாச அய்யர் - சிவ விஷ்ணு க்ஷேத்திரவிளக்கம் (1938) ப. 141, 173.

20. கல்வெட்டுக்களில் உள்ள மேலும் சில இறைவன் பெயர்கள்:

1) கண்ணாடிப்புத்தூர் திருவநந்தீசுவரர் 2) நம்பியூர் தான்தோன்றீசுவரர் 3) வள்ளி எறிச்சில் மாந்தீசுவரர் 4) கவையன்புத்தூர் காலகாலீச்சுரர் 5) சேவூர் கபாலீச்சுரர் 6) நன்னனூர் அனந்தீசுவரர் 7) பெருந்தலையூர் திருமகிழ்வனமுடையார் 8) கொடுவேலி திருமுன்னை ஆண்டார் 9) வயிரம்பள்ளி உத்தம சோழீசர் 10) முட்டத்து நாகீச்சுரர் 11) வடக்கிற்பள்ளி (நடுவச்சேரி) கோதைப் பிராட்டீச்சுரர் 12) வெள்ளாதி வீரசங்காத்திரமுடையார் 13) பெருந்தொழு பிரமேசுவரர்

21. ARE 247/1920.

22. வீரபாண்டியனின் முதலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பெருமா நல்லூரிலும், 20 ஆம் ஆண்டு கல்வெட்டு ஈரோட்டிலும் உள்ளன. அலங்கியம் கல்வெட்டினை வீரபாண்டியன் கல்வெட்டு

எனக்கொண்டால் வீரபாண்டியன் கொங்கினை 27 ஆண்டுகள் ஆண்டுள்ளான் எனல் வேண்டும். (அலங்கியம் கல்வெட்டு காண்க: தேனோலை 8).

23. ARE 150/1905

24. இரா.ப. கருணானந்தன் - கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் கைப்பிரதி, கல்வெட்டு எண்: 168

25. மேற்படி கைப்பிரதி கல்வெட்டு எண்கள்: 62/24/ 84

26. மேற்படி கைப்பிரதி கல்வெட்டு எண்: 169

27. ARE 569/1905

28. மேற்படி கைப்பிரதி கல்வெட்டு எண்: 58

29. மேற்படி கைப்பிரதி எண்: 223

30. மேற்படி கைப்பிரதி எண்: 62/23

31. சோ.ம. இராமச்சந்திரன் - கொங்கு நாட்டு வரலாறு II (1972) ப. 49.

32. இரா. நாகசாமி தமிழகக் கோயிற்கலைகள் ப. 24-25.

33. கொங்கு நாட்டுக் கோயில்கள் வரலாற்றைக் கூறும் சோழன் பூர்வ பட்டயம் நூல் சோழர் காலத்தில் கரூர் முதல் முட்டம் வரை கோயில்கள் அமைக்கப் பெற்றதை விரிவாகக் கூறும்.

34. தேவாரக் காலத்திற்கு முன் 'ஜேஸ்டா' என்னும் மூதேவி வழிபாடு இருந்தது. தேவார ஆசிரியர்கள் மூதேவியை வழிபடுதல் ஆகாது என்று கூற ஜேஸ்டா வழிபாடு மக்களால் கைவிடப்பட்டது. பெரும்பாலான சோழநாட்டுக் கோயில்களில் வழிபாடற்ற ஜேஸ்டா சிற்பங்கள் கிடப்பதைக் காணலாம். இவற்றுள் சில தஞ்சை இராசராசன் அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு வழிபாடற்ற மூதேவி சிற்பங்கள் கொங்கில் கடத்தூர், முத்தூர், வள்ளி எறிச்சில் முதலான ஊர்களிலும் காண இயலும்.

35. ஆதியூர் சிவன் கோயிலை அமைத்த நால்வர்:

1. ஆதியூர் வெள்ளாளன் வண்ணக்கரில் பிள்ளையாழ்வான் கரும்பறையன்

2. ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் கருங்காள மண்டல சுவாமியான மன்றுநாடுவான்

3. ஆதியூர் வெள்ளாளன்... பூமகன்...

4. ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகள் சாத்தாண்டான்

36. கோயில் திருநிலைக்கால், படி, தூண் முதலியவற்றைத் தனியார் கொடையாக வழங்கியதை பேரூர், முட்டம், பெரியகளந்தை, சேவூர், வெஞ்சமாங்கூடல், கடத்தூர் முதலான கோயில் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.

37. மேலே உள்ளது.

38. இரா. நாகசாமி - யாவரும் கேளிர்

39. வி. இராமமூர்த்தி - கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் (1977).

40. கொங்கு மண்டல சதகங்கள் - பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடம் வெளியீடு

40அ. S.P. Kandaswamy - Totemic Influence on Place Names.

41. க.அ. புவனேசுவரி - அன்னூரர் வரலாறு (1987) ப. 72.

42. சந்தியா விளக்குக் கொடையளித்த எண்மர் பட்டியல்:

1) ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் பிள்ளையாண்டான் சிலம்பன் 2) காங்கேய நாட்டுக் காறையூர் வியாபாரி தொக்கன் மனைக் கிழத்தி 3) ஆதிவூர் வியாபாரி மாணபரகுடையார்களில் சுந்தரன் ஆதீசுவரமுடையான் 4) ஆதியூர் வியாபாரி தவலயசெட்டி 5) கீழ்கரைப் பூந்துறை நாட்டு கொண்கப்பாடி வெள்ளாளன் தூறன் 6) ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் காளிலென் 7) ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் கானதானயான காலிங்கராயன் 8) குறுநகர நாட்டு பொதுக்கயமான சோழ பாண்டியபுரத்து வியாபாரி சிக்கலுடையான் தனதுறையாண்டையன்.

43. R. Nagaswamy - Tamil Coins - A Study, pp. 19 to 21.

44. மேற்படி கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் - கைச்சுவடி கல்வெட்டு எண்: 62/3.

45. ARE 147/1905

46. மேற்படி கைப்பிரதி, கல்வெட்டு எண்: 62/3.

47. கோவைகிழார் - அன்னியூர் தலபுராணம் - அன்னியூர் சிலாசாசன ஆராய்ச்சி ப.12.

48. ARE 206/1909; 14/1923

49. குறுநகர நாடு என்பது சிலரால் குறுப்பு நாடு என்றே கொள்ளப் பெற்றுள்ளது. குறு நகர நாடு என்பது கரூர் பகுதியில் உள்ள நாடாதல் வேண்டும். காறையூர் என்பது காங்கயம் அருகில் உள்ள நத்தக்காடையூர். கொங்கில் காவிரியின் கிழக்குக் கரைப்பகுதி கீழ்கரைப் பூந்துறை நாடு என்றும், மேற்குக் கரைப்பகுதி மேல் கரைப் பூந்துறை நாடென்றும் அழைக்கப் பெற்றது. காவிரியின் கிழக்குக் கரையில் திருச்செங்கோடு பகுதி கீழ்கரைப் பூந்துறை நாடாகும்.

50. க.அ. புவனேசுவரி - அன்னூரர் வரலாறு ப.91.

51. Tamil Lexicon

52. க.அ. புவனேசுவரி - அன்னூர் வரலாறு ப 75.

கொடுமுடி சண்முகம் அவர்கள் தேனோலை - 28ல் (1981 ஏப்ரல்) காணியுடைய வேட்டுவர் பற்றிய மருதூர்க் கல்வெட்டு ஒன்றைப் பதிப்பித்துள்ளார்.

53. மேற்படி கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் - கைச்சுவடி கல்வெட்டு எண்: 81 (ARE 370/1955)

54. சர்க்கார் பெரியபாளையம் வீரராசேந்திரன் கல்வெட்டுத் தொடர் பகுதி:

வடபரிசார நாட்டு மன்னியூரில் ஆளுடைய நாயனார் கோயில் காணியுடைய பிராமணரில் அப்பன் வீரராசேந்திர சோழச் சக்கரவர்த்தி காணி தரவேணும் என்று நமக்குத் தந்த பொன் முப்பது - இப்பொன் முப்பதுக்கும் இவனுக்கு நாம் குடுத்த காணியாவது முகுந்தனூர் நாயனார் கோயிலும், தென்னூர் நாயனார் கோயிலும் காணியாகக் குடுத்தோம். இக்கோயிற் காணி முப்பது வட்டமும் அனுபவிப்பானாகவும் ... இந்நாயனார் திருமடைவளாகத்தில் தான் வேண்டின குடியும் ஏற்றி மன்றாட்டு முதன்மை பெறுவானாக.. இக்கோயில்களில் இவன் எழுதினபடி செலவழிவதாகவும் இன்னாயன்மார் தேவதானங்களில் இவனும் ஓர் நன்செய் புன்செய் பட்டியும் தோட்டங்களும் இந்நிலங்களுக்கு இறையிலியாவதாகவும் மற்றும் இக்கோயில் தேவதானங்களால் எப்பேர்பட்ட சுவந்திரியங்களும் பெற்று அனுபவிப்பானாக நாம் குலை குடுத்தோம்.

55. ARE 646/1922

56. ARE 643/1922

57. மேற்படி அன்னூர் வரலாறு ப.76.

58. மேற்படி கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் கைச்சுவடி கல்வெட்டு எண்: 81.

59. மேற்படி கைப்பிரதி, கல்வெட்டு எண்: 159.

60. மேற்படி கைச்சுவடி, கல்வெட்டு எண்: 81/3 (ARE 372/1955) எழுத்துரை வடிவம் பெற ஆலோசனை வழங்கிய கல்வெட்டு அறிஞர் ஆர். பூங்குன்றன் அவர்களுக்கு நன்றி உரியது.

# ஆர்த்தர கபாலீச்சுவரத் திருக்கோயில் என்ற திருத்தொண்டீச்சுரம்

ம. காந்தி, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர் - 632004.

*ஈரோடு நகரம் "ஈரோடை" என்றும் அழைக்கப் பெறுகிறது. பிச்சைக்காரன் பள்ளம் என்ற ஓடைக்கும், பெரும்பள்ளம் என்ற ஓடைக்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ளதால் ஈரோடை என்று கூறுகின்றனர். ஈரோடு நகரம் உறந்தை, மறந்தை, மயிலை, கபாலபுரி என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. சோழ மன்னர்கள் ஈரோட்டுக் கோயில்களில் திருப்பணி செய்ததினால் உறந்தை என்றானது. பிரம்மதேவன் தன்னை மறந்து தவஞ் செய்த காரணத்தால் மறந்தை எனப்படுகின்றது. சிவபெருமான் பிரம்ம மந்திரத்தை உபதேசிக்கும் போது அம்மன் கவனியாதிருந்த காரணத்தால் இறைவி சாபம் பெற்றார். அந்த சாபம் நீங்க இறைவி மயில் வடிவமாய் இவ்வூரில் பூசனை புரிந்ததால் மயிலை என்றும், ஈரமான தலை ஓட்டை உடைய சிவன் (ஆர்த்தர கபாலீசுவரர்) எழுந்தருளியுள்ள காரணத்தால் (ஆர்த்தர) கபாலபுரி என்றும் இவ்வூர் பல காரணப் பெயர்களைப் பெற்றது. ஆர்த்தர கபாலீச்சுவரத் திருக்கோயில் ஈரோடு நகரத்தின் நடுவில் அமைந்துள்ளது.*

*ஈரோட்டின் தலபுராணம் ஈரோட்டிற்கு ஈரோடு என்று பெயர் வரக் காரணம் கூறுகிறது. காளி பிரம்மாவின் தலையை உடைத்தாள். தலை நான்காகச் சிதறி நான்கு இடங்களில் விழுந்ததென்றும், ஈரஓடு விழுந்த இடம் ஈரோடு என்றும், வெள்ளை ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்றும், சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு என்றும், பெரிய ஓடு விழுந்த இடம் பேரோடு என்றும் பெயராயின என்பர்.*

*1,500 ஆண்டுகளுக்கு முன்பு இலட்சுமி காந்தன் என்ற அரசன் சூரன்பட்டியில் இருந்து அரசாட்சி செய்து வந்தான். நாள்தோறும் இடையர்கள் அரசனுக்குப் பால் எடுத்துச் செல்வார்கள். ஒருநாள் அவர்கள் செல்லும் வழியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தடுக்கி விழுந்தார்கள். இது பல நாட்கள் நிகழ்ந்தது. ஆகையால் இடையர்கள் வரும் வழியில் தடுக்கும் பொருளை அரசன் அகழ்ந்தான். அப்பொழுது மூர்த்தி வெளிப்பட்டது. இது புராணம் கூறும் நிகழ்ச்சியாகும்.*

*இந்த ஆர்த்தர கபாலீசுவரர் திருக்கோயில் தொண்டீச்சுரம் என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றது. இத் திருக்கோயிலில் இருந்து அருளும் இறைவனைக் கல்வெட்டுக்கள் தொண்டிச்சுரமுடைய மகாதேவன் என்றும், தொண்டீச்சுரமுடைய தம்பிரானார் என்றும் கூறுகின்றன. மேலும் தொண்டநாயனார், தொண்டியப்பர் என்ற பழம் பெயர்களாலும், ஈரோடையப்பர், ஈர ஓடையப்பர், ஆர்த்தர கபாலீசுரர் என்றும் அழைக்கப்படுகின்றார். தொண்டர்களுக்கு அருள் புரிந்ததால் தொண்டீச்சுரர் என்றும், ஈரமான தலை ஓட்டை கையில் ஏந்தியுள்ளார் என்பதால் ஆர்த்தர கபாலீச்சுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.*

*தேவமாதர்களான பெருநல்லாள், சிறு நல்லாள் என்ற இருவரும் தங்கள் சாபம் நீங்க இத்தலத்திற்கு வந்து திருத்தொண்டீச்சுரரை வழிபட்டனர். இவர்களின் பக்தியைப் போற்றி தேவர்கள் பூமாரிப் பொழிந்தனர். இந்நிகழ்ச்சி சரவண முனிவர் எழுதிய சென்னிமலைத் தலப்புராணத்தில் புட்பகிரி மான்மியத்திலும், கொங்குமண்டலச் சதகத்திலும் உள்ளது.*

*கைக்கோளரான தாண்டவன் முதலியார் இறைவழிபாடே தன் குறிக்கோளாகக் கொண்டவர். ஒருநாள் தாண்டவன் மாலையில் தன் நெசவுத் தொழிலை முடித்துக் கொண்டு இறைவனை வணங்கச் சென்றார். வழியில் வயது முதிர்ந்த கோலத்தில் இறைவன் இரண்டு முழத்துண்டு வேண்டினார். அவ்வாறே முதலியாரும், தனக்குக் கூலியாக ஒரு துண்டு பெற்று அம்முதியவருக்குக் கொடுத்தார். மறுநாள் கோயிலைத் திறந்து பார்த்த அர்ச்சகர் இறைவனுக்குப் புதிய பரிவட்டம் இருப்பதைக் கண்டார். பரிவட்டத்தின் அமைப்பை அறிந்து தாண்டவ முதலியார் நெய்தது என்றும், அனுமதியின்றி இரவில் கோயிலைத் திறந்து தானே பரிவட்டத்தைச் சாத்தினார் என்றும் குற்றம் சாட்டினார். ஊரார் அடித்தனர். அசரீரியாக இறைவன் உண்மையை வெளிப்படுத்தினார். இது ஈரோட்டுப் பதிகத்தில் பின்வருமாறு குறிக்கப்படுகின்றது:*

*"தாண்டவன் எனும் பெயரான் தனிநாதனை வணங்கி வந்தான்<br>ஆண்டவன் ஆட்கொண்டார் இந்த அன்பினை யார் பெறுவார்<br>நீண்டநாள் வாழகில்லீர் நெடுமாலொடு அயன்வணங்கும்<br>இன்தரும் உறந்தை நகர்திருத் தொண்டீச்சுரத்தானே?"*

*மூர்த்தியின் உயரம் 2 அடி, ஆவுடையாரும் பீடமும் ஒன்றரை அடி. அதன் மீது அரை அடி உயரத்தில் சிவன் காட்சியளிக்கிறார்.*

திருத்தொண்டீச்சுரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தேவியின் பெயர் வாரணியம்மை. இவ்வம்மையை வடமொழியில் குஜமஸ்த் குஜமஸ்தன அம்பிகை என்கின்றனர். இப்பெயருக்கு தர்ப்பையாலான கச்சையை அணிந்த தேவி எனப் பொருள்படுகின்றது. தேவி அமைதியே உடைய முகத்துடன் கருணை வழங்கும் கண்களை உடையவளாக இருக்கிறாள். தேவியின் உயரம் நான்கு அடி. நான்கு கைகள் இருக்கின்றன. இவ்வழகிய தேவியை, கரூர் முத்துக்கருப்பன் புலவர் தன்னுடைய ஐயனாரப்பன் பள்ளுவிலும், இர. வையாபுரியார் பதிகம் பாடியும் போற்றி உள்ளனர்.

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கொங்குச் சோழன் என்பவன் இராசராசபுரம் என்ற தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பொழுது இத்திருக்கோயில் கட்டப்பெற்றது என்பர். அதன் பிறகு இத்திருக்கோயில் பல பகுதிகளைத் தன்னகத்தே சேர்த்துக் கொண்டுள்ளது. கருவறையும் அதை அடுத்தப் பகுதிகளான அர்த்த மண்டபம், முன்மண்டபம் ஆகியவை பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்டுள்ளன. இவை பிற்காலச் சோழர் பாணியைத் தாங்கி உள்ளன. கருவறையைச் சுற்றிலும் உள்ள தேவகோஷ்டங்களில் தெற்குப் பக்கத்தில் நடனவிநாயகரும், மேற்குப் பக்கத்தில் லிங்கோத்பவரும், வடக்குப் பக்கத்தில் பிரம்மாவும், துர்க்கையும் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் துர்க்கையின் திருவுருவம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். கருவறையின் மீது சிறிய விமானம் உள்ளது.

உள் திருச்சுற்றின் தெற்குப் பகுதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களும் இருந்து இறைவனை வணங்குகின்றனர். இவர்களின் நட்சத்திரம், காலம், ஊர்ப்பெயர், பெயர் முதலியன எழுதப்பட்டிருக்கின்றன. நாயன்மார்களைத் தெரிந்து கொள்ள இம்முறை எளிதாகும். இச்சுற்றின் மேற்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கியவாறு வினாயகரும், சுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளனர். இவ்விரு சந்நிதிகளுக்கு இடையில் பஞ்சபூத லிங்கங்களும் ஜுரகர ஈஸ்வரரும் இருக்கின்றனர். இதே திருச்சுற்றில் கபாலதீர்த்தம் காணப்படுகின்றது. இதன் தீர்த்தம் இறைவனுடைய அபிஷேகத்திற்குப் பயன்படுகிறது. கருவறையைச் சுற்றியுள்ள உள் திருச்சுற்றில் 37 கல்தூண்களால் ஆன மண்டபம் கட்டப் பட்டுள்ளது இம் மண்டபம் விசய நகர காலத்தில்


கட்டப்பட்டிருக்கலாம். பேரம்பலத்திற்கு மேற்கில் ஒரு மண்டபம் இணைந்தாற்போல் அமைந்துள்ளது. இது ஆறு கம்பங்களால் ஆனது. இவற்றுள் நடுவில் உள்ள இரண்டு தூண்கள் முழுத்தூண்களாகவும் மற்ற நான்கும் அரைத் தூண்களாகவும் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் மேல் உள்ள பூமுனைகள் கூர்மையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இராசகோபுரத்தை அடுத்து பெரிய நெடிய 42 தூண்களால் ஆன மண்டபத்தை பேரம்பலம் என்கின்றனர். கிழக்குப் பகுதியில் கோபுரத்தை அடுத்து உள்ள இரண்டு வரிசைத் தூண்களை உருளையாகச் செதுக்கியுள்ளனர். மற்ற தூண்களின் அடிப்பகுதி, நான்குப் பட்டைகளாகவும், அதற்கடுத்த மேல்பகுதி பதினாறு பட்டைகளாகவும், உச்சிப் பகுதி நான்கு பட்டைகளாகவும் உள்ளன. கல்தூணில் உச்சியில் பூமுனை மொட்டையாகச் செதுக்கப் பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் நடு வடக்குப் பகுதியில் இரண்டு தூண்கள் இரட்டைத் தூண்களாகக் காணப்படுகின்றன. அவற்றிற்கு முன் உள்ள இரண்டு எதிர் எதிர் தூண்களிலும் திருவாலங்காட்டு காளியும் ஊர்த்தவ தாண்டவரும் கம்பீரமாகவும், அழகாகவும் செதுக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றனர். இந்த மண்டபம் இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் கட்டப்பட்டது என்று சிவகளை சுப்பையா கூறுகின்றார்.

பாண்டிய நாட்டின் சிவன் இறைவியைத் தன்னுடைய வலப்பக்கம் வைத்து அகத்தியருக்குத் திருமணக் கோலத்தைக் காட்டியதாகப் புராணங்கள் கூறுகின்றன. அதேபோல், ஈரோட்டிலும் இறைவன் தன்னுடைய திருமணக் கோலத்தை அகத்தியருக்குக் காண்பித்தார் என்பது நம்பிக்கை. ஆகவே, வாரணாம்பிகைக்கு சிவனுடைய வலப்புறத்தில் தனி சந்நிதி உள்ளது. இவ்வாறு அமைந்திருப்பது மெல்லியலார் பெற்ற பெருமதிப்பாகும் என்பர். தேவியின் கருவறைக்கு முன் ஒரு அழகிய மண்டபம் இருக்கின்றது.

ஒவ்வொரு ஆண்டிலும் மாசித் திங்கள் 25, 26, 27 ஆகிய நாட்களில் உதய சூரியனின் கதிர் தொண்டீச்சுரரின் மீது படுகின்றது. சூரியனின் காலைக் கதிர் தொண்டீச்சுரர் மீது படுமாறு கருவறையும் கோயிலின் மண்டபங்களும் சிறப்பாகச் செவ்வனே கட்டப்பட்டுள்ளன.

மூன்று நிலைகளைக் கொண்டு விளங்கிய இராச கோபுரம் 1960-ஆம் ஆண்டு முதல் ஐந்து நிலைகளாக உயர்த்திக் கட்டப்பட்டு திகழ்கின்றது.



இராசகோபுரம், தொண்டீச்சுரம், ஈரோடு

வெளிப்பிரகாரத்தின் பின்பக்கத்தில் இத்தலத்தின் தலவிருட்சமான வன்னிமரம் இருக்கின்றது. இதற்கு அழகிய மேடை கட்டப்பட்டுள்ளது. திருத்தொண்டீச்சுரத்திற்கு முன் ஒரு கருடக் கம்பம் உள்ளது. கருடக் கம்பம் கொங்கு நாட்டுத் திருக் கோயில்களுக்கே உரியதாகும். கார்த்திகை மாதத்தில் இந்தக் கருடக் கம்பத்தில் தீபம் ஏற்றுவர்.

இத்திருக்கோயிலில் மொத்தம் பதினாறு கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. அவற்றுள் கோராசகேசரிவர்மன் என்ற இரவிக்கோதை என்ற கோகலி மூக்கன் என்பவனுடைய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இதில் ஒரு கல்வெட்டு தொண்டீச்சுரருக்கு நிலம் தானமாக அளிக்கப்பட்டதைக் கூறுகின்றது.

அடுத்து கி.பி. 1265 முதல் 1281 வரை கொங்கு நாட்டில் அரசாட்சி செய்த கோராசகேசரிவர்மன் என்ற பாண்டியனுடைய காலத்தைச் சேர்ந்ததாகும். இக்கல்வெட்டு பூந்துறை நாட்டைச் சேர்ந்த மக்கள் ஒரு கிராமத்தை இக்கோயிலுக்குத் தானம் செய்ததைக் காண்பிக்கின்றது.

விசயநகர மன்னனான வீரவேங்கடபதிராயனுடைய இரண்டு கல்வெட்டுக்களில் ஒன்று பூந்துறை நாட்டு மக்கள் 102 வேலி நிலத்தைத் தொண்டீச்சுரருக்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் தானமாக அளித்ததைத் தெரிவிக்கின்றது.

போசள அரசன் மூன்றாம் வீரவல்லாளருடைய கி.பி. 1292-1340 காலத்திய இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு கல்வெட்டு, பூந்துறை நாட்டு மக்கள் பொன் பெத்தனூர் என்ற கிராமத்தைத் தொண்டீச்சுரருக்குத் தானம் செய்ததைக் காட்டுகின்றது.

கி.பி. 1504-ல் வீரராய தேவக்கமாரக்க நாயக்கன் (அரசியல் அதிகாரி) என்பவன் காலத்துக் கல்வெட்டில் ஈரோட்டுத் தொண்டீச்சுரருடைய மகாதேவர் கோயிலைச் சீர்செய்யவும், அக்கோயிலில் திருவிழா நடக்கவும் நிலம் தானமாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது. விசயநகர அரசன் பர்வத ராகுத்தர் என்பவனுடைய ஆட்சிக் காலத்தில் உம்மத்தூர் சீமையைச் சேர்ந்த ஒரு கவுண்டன் கொங்குமண்டலத்தைச் சேர்ந்த மேல்கரை நாட்டின் பகுதியான காஞ்சித்தண்டத்தில் இருக்கின்ற ஈரோட்டில் உள்ள தொண்டியப்பர் அல்லது தொண்டீச்சுரருடைய தம்பிரானாரின் பூசைக்கு பொற்காசுகள் கொடுத்தச் செய்தியை ஒரு கல்வெட்டு காட்டுகின்றது. மேலும் இவை மட்டுமல்லாமல் குன்றத்தூர், திருச்செங்கோடு, வெள்ளோடு ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் ஈரோடு பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன.

# ஈரோட்டுப் புகழ் பெற்ற கோயில்கள்

முனைவர் சி. மூக்கரெட்டி, ஸ்ரீவாசவிக் கல்லூரி, ஈரோடு

*முன்னுரை:*

*நிலவளத்தாலும், நீர் வளத்தாலும், வணிக வளத்தாலும், வாழ்க்கை வளத்தாலும் சிறப்புற்று விளங்குகின்ற ஈரோடு மாவட்டம் திருக்கோயில்களின் பொலிவாலும், திருவருட் பெருக்காலும் புகழ்பெற்று விளங்குகின்றது. இம்மாவட்டத்தில் பெருமாள் கோயில்களும், சிவாலயங்களும், சக்தி ஆலயங்களும், குன்றுதோறாடும் குமரன் கோட்டங்களுமாகப் பலத் திருக்கோயில்கள் அமைந்து, அருள் நலத்தால் சிறந்து விளங்குகின்றன. இம்மாவட்டத்தின் தலைநகரம் ஈரோடு என்னும் பெரு நகரமாகும்.*

*இந்த ஈரோடு நகரம் காவிரிக் கரையில் அமைந்து கை புனைந்தியற்றாக் கவின் பெரு வனப்போடு விளங்குகின்றது. இந்நகரம் தொழில்துறை, வாணிகத்துறை ஆகியவற்றில் விரைந்து முன்னேறி வரும் நகரமாகும்.[1] ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்ட நகரமாகும். இத்தனைச் சிறப்புடைய இந்நகரத்தில் உள்ள புகழ் பெற்ற கோயில்கள் மூன்றாகும். அவை (1) மகிமாலீசுவரர் கோயில், (2) தொண்டீச் சுவரர் கோயில், (3) கஸ்தூரி அரங்கநாதர் கோயில் என்பவையாகும். அவைகளின் பெருமைகளை ஈண்டு விரித்துரைப்போம்.*



*அலங்கரிக்கப்பட்ட ஈசுவரர்*

### *1. மகிமாலீசுவரர் கோயில்:*

*ஈரோட்டில் உள்ள மிகமிகப் பழமையான கோயில் மகிமாலீசுவரர்*



அலங்கரிக்கப்பட்ட தேவி

கோயிலாகும். இச்சிவன் கோயில் நகரின் நடுவே பழைய மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலை மாலி, சுமாலி, மகிமாலி என்னும் அசுரர்கள் (இராவணனின் முன்னோர்கள்) அமைத்தனர் என்று தலபுராணம் கூறும். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர் மகிமாலீசுவரர். இறைவியின் திருப்பெயர் மங்களாம்பிகை. இக்கோயிலில் 2மீ விட்டமுள்ள ஆவுடையாரில் 1மீ உயரமுள்ள சிவலிங்கம் பெரிய அளவில் காட்சியளிக்கின்றது. துவார பாலகர்கள் பல்லவர் காலத்துக்குச் சமகால அரசர்களான கொடும்பாளூர் இருக்குவேள் மன்னர்களின் காலத்தவை.

இக்கோயிலும், கோபுர அமைப்பும் பல்லவர் காலத்தவையே என்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் இக்கோயிலைக் கொடும்பாளூர் வேளிர் மரபினைச் சேர்ந்த மகிமாலி என்பவர் கட்டினார் என்றும், இக்கோயில் கொடும்பாளூரில் உள்ள 'மூவர் கோயில்' மாதிரியில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர். இக்கோயிலில் உள்ள தூண் ஒன்றில், சுந்தரர் தாடியுடனும் பரவை, சங்கிலியாருடனும் காட்சியளிக்கின்றார். இவருக்கு சேரமான் கவரி வீசுகின்றார். அருகில் மெய்க்காவலன் வில் ஏந்தி நிற்கிறான். இச்சிற்பக் காட்சி கண்டு இன்புறத் தக்கது. இக்கோயிலில் கல்வெட்டுக்கள் ஏதும் இல்லை. எனினும் இக்கோயிலைத் திருச்சி மாவட்டம், முசிறிவட்டம், சீனிவாசநல்லூரிலுள்ள முதலாம் ஆதித்தச் சோழனால் கட்டப்பட்ட குரக்குத்தளி என்னும் சிவன் கோயிலுடனும், கொடும்பாளூர் மூவர் கோயிலுடனும், பல்லவர் காலக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இதனது பெருமை விளங்கும்.

### 2. தொண்டீசுவரர் கோயில்:

*ஈரோடு நகரின் நடுநாயகமாக அமைந்திருப்பது தொண்டீசுவரர் கோயிலாகும். ஈரோட்டுத் தொண்ட நாயனார் கோயிலுக்குத் தொண்டீச்சுரம் என்னும் பெயரை நம் முன்னோர்கள் வழங்கி வந்துள்ளனர்.*

*இத்தொண்டீசுவரத் திருக்கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் (கி.பி. 1146ல்) கொங்குச் சோழ மன்னரான கரிகாலன் இராசராசபுரம் என்னும் தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட போது கட்டப்பெற்றது. அதன் பிறகு பல்வேறு காலக் கட்டத்தில் திருப்பணியும், குடமுழுக்கும் நடைபெற்றுள்ளன. இப்பொழுது ஐந்து நிலைகள் கொண்ட இராசகோபுரம் 1960 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. இக்கோபுரத்தின் முன் கொங்கு நாட்டிற்கே உரித்தான கருடக்கம்பம் நிற்கின்றது. வேறெந்த நாட்டிலும் கோயிலின் முன்பு கருடக்கம்பம் இல்லை. இக்காலத்தில் கார்த்திகைத் தீபம் வைப்பதற்கு இக்கருடக்கம்பம் பயன்படுகின்றது.*

*இக்கோயிலின் வெளிமண்டபம் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பெற்றது. இம்மண்டபத்தினுள்ளே பேரம்பலமும், சிற்றம்பலமும் அமைந்துள்ளன. பேரம்பலத்தின் கற்தூணில் காணப்படும் ஆலங்காட்டுக் காளியம்மை அண்மைக் காலத்திருப்பணி, இருபதாம் நூற்றாண்டின் சிற்பக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். இங்குள்ள சிற்றம்பலத்தின் நடுவில் நடராசப் பெருமாள் திருநடம் புரிந்தருள்கின்றார். ஆடலரசின் அருகில் ஆனந்தக் கூத்தைக் கண்டு களித்து நிற்கின்றாள் அன்னை சிவகாமி.*

*இக்கோயிலின் தென் சுற்றுப் பிரகாரத்தில் அறுபத்து மூவர் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் சிவநெறி பரப்பிய சிவனருட்செல்வர்களான அறுபத்து மூவரும் சிலை வடிவில் காட்சியளிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவடைய குலம், நட்சத்திரம், காலம், ஊர், பெயர் ஆகிய விவரங்கள் தனித் தனியே எழுதப்பட்டுள்ளன. இங்கு இறைவன் விடைமீதமர்ந்து அறுபத்து மூவருக்கும் காட்சியளிக்கிறார். அறுபத்து மூவர் மண்டபத்துக்கு எதிரில் கல்லாலின் அருகில் அமர்ந்து நான்மறையின் உட்பொருளைச் சொல்லாமற் சொல்லிய தட்சிணாமூர்த்தியின் திருவுருவம், கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மையில் காட்சியளிக்கின்றது.*

*இத்திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரச் சுவரில் பஞ்சபூத தலங்களான காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை,*

காளகஸ்தி, சிதம்பரம் ஆகிய தலங்களின் சித்திரங்கள் அழகுமிக வரையப்பெற்றுள்ளன. இவற்றின் முன்பு பஞ்சபூத லிங்கங்கள் உள்ளன. ஜுரகரஈசுவரரும் இங்குக் காட்சித் தருகின்றார். அடுத்து முருகப் பெருமான் வள்ளி - தெய்வயானையுடன் எழுந்தருளிக் காட்சி தரும் திருச்சந்நிதி அமைந்துள்ளது. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும் அதற்கு அடுத்தாற்போல் கபால தீர்த்தமும் அமைந்துள்ளன. இக்கபாலத் தீர்த்த நீரே இறைவனுக்கு எடுத்துப் பயன்படுத்தப்படுகிறது.

இங்குக் கருவறையில் சிவலிங்கத்திருமேனியராக எழுந்தருளித் திகழும் இறைவனைக் கதிரவன் மாசித் திங்கள் தோறும் 25, 26, 27ஆம் நாட்களில் தன் ஒளிக் கிரணங்களால் தொட்டுப் பூசனை புரிந்து செல்கின்றான்.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவியின் திருப்பெயர் வாரணியம்மை. இங்குத் திகழும் இறைவி வாரணி, சாந்தம் தவழும் முகமும், கருணை பொழியும் கண்களும், நான்கு திருக்கரங்களும், நல்லழகுத் திருமேனியும் கொண்டு காட்சி தருகின்றார்.

இத்தலத்தின் புனிதமரம், வன்னிமரமாகும். இப்புனிதமரம் வெளிப்பிரகாரத்தில் உள்ளது. இவ்வன்னி மரத்தின் கீழ்ப் பழுதுபட்ட பழைய வாரணியம்மை நிற்கின்றாள். இவ்வம்மையின் உருவம் சிதைந்தாலும், அழகு சிதையவில்லை.

தண்ணார் தமிழளிக்கும் தனிப் பாண்டி நாட்டின் பெண்ணாளும்பாகன், தன் வலப்புறம் இறைவியை வைத்து அகத்தியருக்குத் திருமணத் திருக்கோலம் காட்டியதாகப் புராணங்கள் கூறும். அதற்கேற்ப பாண்டி நாட்டில் பல தலங்களில் திருச்சந்நிதி இறைவனுக்கு வலப்புறத்தில் இருக்கக் காணலாம். அவ்வாறே இத்தலத்திலும் அகத்தியருக்குத் திருமணக் காட்சி நல்கியதாக ஐதீகம். அதற்கேற்ப, இறைவன் திருச்சந்நிதிக்கு வலப்புறத்தில் தனிக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழ்கின்றாள். கல்யாணப் பெண் கன்னியாகவே காட்சியளிக்கின்றாள். பெண்ணினுடைய இடப்பாகத்தே கொண்ட பெருமாள், அவளுக்கு வலப்பாகம் கொடுத்தத் தலங்களில் அன்னையின் அருளாட்சி மேலோங்கிச் சிறக்கக் காண்கின்றோம்.

முத்துக்குமரப்பன் புலவர் இயற்றிய 'ஐயனாரப்பன் பள்ளு' என்னும் நூலில், "திறமையாகிய கோபுர வாசலும் - தேவி வாரணிநாதர் தம் கோயிலும்" என இத்தலம் குறிப்பிட்டுப் போற்றப்


பெற்றுள்ளது. இதில் இறைவியின் திருப்பெயர் கூறி அவளது நாதர் என இறைவன் குறிக்கப் பெறுதலால், இறைவிக்கு ஏற்றம் குறிக்கப் பெற்றுள்ளது. இதுவன்றி பேரூர் வையாபுரியார் பதிகம் பாடி இங்கு எழுந்தருளியுள்ள வாரணியம்மையைப் பே [illegible] யியுள்ளார்.

தொண்டீசுவரர் கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளுள் மிகப்பழமையானது மகா மண்டபத்தின் தென் சுவரில் மேற்குப்பக்கச் சுவர்ப்படையில் உள்ளது. இது கொங்கு மன்னரான கோவிராசகேசரிவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீஇரவிகோதையான கோக்கலிமூர்க்கருடைய நான்காம் ஆண்டில் பூவானிய நாட்டு ஆவணிப் பேரூரில் வெள்ளாளன் பிள்ளர்களில் சொக்கன் விக்கிரம சோழியரையன் தன் மகன் அக்கன் சோமன் மாமணியாழ்வார் திருநாமஞ் சாத்தினமையால் பேருடைச் சிறப்புக்கு நிலம் அளித்தச் செய்தியைத் தெரிவிக்கிறது.[2] இதே மன்னனுடைய மற்றொரு கல்வெட்டானது கர்ப்பக்கிருகத்தின் மேற்குப் புறத்தில் உள்ளது. இது இவரது இருபத்திரண்டாம் ஆண்டில் ஈரோட்டில் திருத்தொண்டீசுவரருடைய பிடாரர்க்கு அவிப்பலி, அர்ச்சனை, திருநாள் செலவுக்காக வடகடை நாட்டில் அந்தியூரில் நிலம் அளித்தச் செய்தியைத் தெரிவிக்கின்றது.[3]

இதே இடத்தில் மேற்குப்பட்டி வரியில் உள்ள மற்றொரு கல்வெட்டானது போசள மன்னர் புஜபல வீர வல்லாள தேவன் காலத்தில் (சகம் 1262 = கி.பி. 1340) பூந்துறை நாட்டவர் வெள்ளோட்டில் கூடியிருந்து, நாயனார் தொண்டர்கள் நாயனாருக்குத் 'தண்டல்' என்னும் கிராமத்தைத் தானம் செய்த விவரத்தைக் கூறுகிறது.[4]

மகா மண்டபத்தில் பிரகாரப் பட்டிகையின் வரியில் உள்ள கல்வெட்டு கி.பி. 1504 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் நாள் வீரய்ய தவக்க மாரய்ய நாயக்க உடையார் காலத்தது. இது மேல்கரைப் பூந்துறை நாட்டில் காஞ்சித் துண்டத்தில் ஈரோட்டில் உள்ள தொண்டீசுவரமுடைய மகாதேவருக்குத் திருப்பணி திருனாளுக்கு நடப்பதாக இரு 'மா' நிலம் விட்ட செய்தியைக் கூறுகிறது.[5] முன்மண்டபத்தில் உள்ள வேறொரு கல்வெட்டானது பரிவத ராகுத்தர் (கி.பி. 1510) ஒருநேரத்துப் பூசைக்கு கட்டளைக்கும், திருனாளுக்கும் கொடுத்த நிலத்தைப் பற்றிக் கூறுகிறது.[6] மகா மண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு விசயநகர மன்னர் வீரவேங்கடபதிராயர் (கி.பி. 1579) காலத்தில்

காஞ்சித்துண்டத்து ஈரோட்டில் தொண்டீசுவரமுடைய தம்பிரானார்க்கும் பள்ளி கொண்ட பெருமாளுக்கும் வீரப்பநாயக்கன் அய்யன் தர்மமாக பூஜை நைவேத்தியம் திருநாள் திருப்பணிக்கும் நிலம் அளித்தச் செய்தியைத் தெரிவிக்கிறது.[7]



தந்தை பெரியார் குடும்பத்தினர் திருப்பணிக் கல்வெட்டு, ஈரோடு பெருமாள் கோயில்

இத்தொண்டீசுவரத் திருக்கோயிலில் வைகாசி விசாகத்தில் இறைவனுக்கு பத்துநாள் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இக்கோயிலில் திருமுறை விழா, திருவாசக விழா சிறப்பு மிக்கவையாகும்.

**3. கஸ்தூரிரங்கப் பெருமாள் கோயில்:**

இந்நகரில் நடுநாயகமாக அமைந்திருப்பது (தொண்டீசுவரர் கோயிலுக்கு அருகில்) கஸ்தூரிரங்கப் பெருமாள் கோயில் ஆகும். இக்கோயிலின் நுழை வாயிலில் இராசகோபுரம் இல்லை. மாறாக, முகப்பில் திருமாலின் பள்ளிகொண்ட திருக்கோலம் சுதைச் சிற்ப உருவில் காணப்படுகின்றது. இவ்வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், வெளிப் பிரகாரத்தின் ஆரம்பத்தில் ஒரு குத்துக்கல் காணப் படுகின்றது. இந்தக் குத்துக்கல்லில் ஈ. வேங்கடாசல நாயக்கர் மனைவியார் சின்னத் தாயம்மாள் (திரு. ஈ.வேரா. அவர்களின் தாயார்) தன் சிறுவாட்டுப் பணத்தால் கடப்பைக்கல் பாவிய செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அடுத்துக் காணப்படுவது திருவேங்கடமுடையான் திருச்சந்நிதி. இச்சந்நிதியில் வணங்கி வழிபடுதல் வேண்டும். இச்சந்நிதியின் நிலைப்படியில் தயாகு சாத்தன் செய்வித்த நிலைவு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. தாயார் திருச்சந்நிதி, பெருமாள் திருச்சந்நிதிக்குப் பின்புறமாக அமைந்து விளங்குகின்றது. இத்திருச் சந்நிதியில் எழுந்தருளியுள்ள தாயாரின் திருநாமம் கமலவல்லி நாச்சியார். மூலவரும் உற்சவரும் அருகருகே எழுந்தருளியுள்ளனர்.

நான்கு திருக்கரங்கள்-இருந்த திருக்கோலம்-அழகே உருவான திருத்தோற்றம்

தாயார்த் திருக்கோயிலுக்கும் பெருமாள் திருச்சந்நிதிக்கும் இடையில் புதிதாகக் கட்டப்பட்டிருப்பது ஆண்டாள் திருக்கல்யாண மண்டபமாகும். இதன்முன் உள்ள கிழக்குப் பிரகாரத்தில் சுற்றி வரும் போது விசுவத்சேனரையும், திருப்பாதங்களையும் கண்டு சேவிக்கலாம். ஆழ்வார்கள் எழுந்தருளிய மண்டபம் அருகில் அமைந்துள்ளது. அதன் அருகில் ஆஞ்சநேயர் திருச்சந்நிதியும் அமைந்துள்ளது. இந்த ஆஞ்சநேயர் 120 செ.மீ. உயரம் உடையவராக, குங்கிலியத்தால் அமைந்துள்ளார்.

அடுத்துக் காணப்படுவது மகாமண்டபம். இம்மண்டபத்தின் வெளியே கருடாழ்வாரும் உள்ளே ஆண்டாளும் காட்சித் தருகின்றனர். இம்மண்டபத்தில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இப்பெருமாள் கோயிலில், கொண்டமல்லி கங்கய்ய நாயக்கர் மகன் சின்னமுராரி நாயக்கர் நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு செய்த திருப்பணியையும், இலக்காபுரம் முத்துக் குமரக்கவுண்டர் செய்த முன்மண்டபத்திருப்பணியைப் பற்றியும் அவை கூறுகின்றன.

மகா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் கருவறையில் முன் அமைந்துள்ள அர்த்த மண்டபத்துச் சுவரில் புன்னை வனக்கிருட்டிணன் மூன்று பசுக்களுடனும், ஓர் இடையனுடனும் நிற்பதைக் காணலாம். இந்த அர்த்த மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் காணப்படுவது கருவறை. இக்கருவறையின் உள்ளே மூலவர் பள்ளிகொண்ட நிலை - அதாவது கிடந்தத் திருக்கோலக்காட்சி. இப்பள்ளிகொண்டப் பெருமானின் திருநாமம் கஸ்தூரிரங்கநாதர். திருவரங்கத்து இன்னமுதர் போன்றவர். இப்பெருமாளும் குழல் அழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழ் அழகர் எனப்படும் இப்பேரழகர் 3 மீட்டர் நீளத்தில் காட்சியளிக்கிறார். ஆதிசேடன்மீது அரிதுயில் கொள்ளும் இப்பெருமானின் திருப் பாதங்களில் ஜய, விஜய என்னும் வாயிற் காப்போர்கள் மெய்க்காப்பாளர்களாக உள்ளனர். இவர்கள் 2 மீ உயரம் உடையவர்கள்.

பெருமாளின் திருப்பாதங்களின் அருகில் பூதேவியும், திருமுடி அருகில் சீதேவியும் காட்சித் தருகின்றனர். திருமுடியருகில் துருவாசரும் உள்ளார். பெருமாளின் இடது திருக்கரம் அபயமளிக்கின்றது. இதன் மீது நான்முகன் பிரம்மன் உள்ளார். பெருமாளின் வலது கரத்தில் சக்கரம் உள்ளது.

பெருமாளின் திருமேனி சுதையாலானது. எனவே, இவருக்குத் திருமஞ்சனமில்லை. ஆனிமாதந்தோறும் தைலக்காப்பு சாத்துகின்றனர். இப்பதியில் திருமஞ்சனமெல்லாம் உற்சவர் கலியுக வரதராசப் பெருமாளுக்குதான். இக்கலியுக வரதர் மழை பொழியச் செய்து மக்களைக் காக்கும் மாண்புடையவர் என்பதை,

"கலியுக வரதரே மழை தாராய் - எங்கள்
கமலவல்லித் தாயே மழை தாராய்"

என்று பள்ளர்கள் பாடி, ஆடி, மழை வேண்டிப் பெற்றதாக ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு கூறுகிறது.[8]

இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் இருபுற நிலைக் கல்லில் உள்ள கல்வெட்டு, தஞ்சைப் பேரரசரான மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மரான முதலாம் பராந்தகச் சோழனுடைய பதினைந்தாவது ஆண்டில் (கி.பி. 886) வெட்டப் பெற்றதாகும்.[9] இது ஈரோட்டில் பள்ளி கொண்ட ஆழ்வார் கோயிலில் வெண்ணெய் கூத்த நாயனாற்கு எழுகரைத் திருவாய்பாடி நட்டாவரோம் திருவாறாதனை அமுதுபடி, சாத்துபடி, திருநாள்படிக்கு ஆகும் செலவிற்காகக் கொடுக்கப்பட்ட கொடையைப் பற்றிக் கூறுகின்றது. இக்கோயில் கருவறையின் மேற்குப் பட்டியில் உள்ள கல்வெட்டானது கொங்கு மன்னரான இராசகேசரி திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியதேவர் ஆட்சியின் இருபதாம் ஆண்டில் பூந்துறை நாட்டாவரோம் எங்கள் நாட்டில் மூவேந்தர் சதுர்வேதி மங்கலத்து நயினார் பள்ளி கொண்ட பெருமாளுக்கு ஜெய முனியான அறமத்தூர் வல்லி சதுர்வேதி மங்கலத்தைக் குடிநீங்கா தேவதானமாகக் கொடுத்தச் செய்தியைக் கூறுகிறது.[10]

இக்கோயில் ஸ்ரீபாத மண்டபம் தாசி உபய மண்டபத்தில் உள்ள கல்வெட்டானது "மதுரை நாயக்கர் விசயரங்க சொக்கலிங்க நாயக்கர் காலத்தது (சகம் 1342 = கி.பி. 1460). இது 'ரெங்கனாதசுவாமி ஊளியத்துக்கு ஆகவும் உபய மண்டபத்துக்கு ஆகவும் தேவஸ்தானம் பூமியில் மாச்சனாயக்கன் குட்டையில் ஒறுமா நெலமும் அனுபவித்துக் கொண்டு பணிவிட செய்து கொண்டு .... இறுக்கப்பட்டகனிறது அம்மை அப்பன் குமாரத்தி முத்துப் பொன்னி, சின்னப் பொன்னி தங்கச்சி பள்ளி கொண்டான்' என்று கூறுகிறது. இக்கல்வெட்டு இக்கோயிலுக்குப் பணிவிடை செய்வதற்காகத் தலா ஒரு 'மா' நிலம் கொடுத்து இத்தேவதாசிகளை நியமித்ததைக் கூறுகிறது.[11]

*முடிவுரை:*

*தில்லைக் கூத்தனும், தில்லைக் கோவிந்தராசப் பெருமானும் தில்லையம்பதியிலே அடுத்தடுத்தே எழுந்து அன்பர்கட்குக் காட்சியளிப்பது போன்றே இந்த ஈரோட்டுப்பதியிலும் ஈசுவரனும், பெருமாளும் அடுத்தடுத்தே திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திருவருள் பாலிக்கின்றனர். இத்திருப்பதியில் சிவன் கோயிற் பெருவிழாவை யொட்டியே வைகாசி விசாகத்தில் பெருமாளுக்கும் பிரமோத்சவம் - தேர்த்திருவிழா நடைபெறுகிறது.*

*மேற்கூறிய ஈரோட்டின் புகழ்பெற்ற கோயில்கள் வரலாற்றுப் பெட்டகங்கள்! காலக்கணக்கை மௌனமாய்ப் புன்னகையுடன் நமக்குச் சொல்லிவரும் அருங்காட்சியகங்கள்! ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட - நமது பழங்கால வரலாறு, பொருளாதாரம், சமூகம், சமயம், பண்பாடு போன்றவற்றை நமக்கு உணர்த்தும் நினைவுச் சின்னங்கள். அவற்றை நாமும் நமது வருங்கால சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா! எனவே அவைகளைப் பேணிக்காப்போம்! பெருமை அடைவோம்!*

**மேற்கோள் நூல்கள்:**


1. *மணிமேகலைப் பிரசுரம், தமிழக மாவட்ட நூல்வரிசை, பெரியார் மாவட்டம், சென்னை, பக்கம் 28.*
2. SITI. I. 241; S11, IV, 413.
3. *Ibid;* 244; S11, IV, 416.
4. *Ibid;* 242; S11, IV, 415.
5. ARE, 168 of 1910; SITI, I, 239.
6. ARE, 169 of 1910; SITI, I, 240.
7. SITI, I, 243.
8. *மணிமேகலைப் பிரசுரம், தமிழக மாவட்ட நூல்வரிசை, பெரியார் மாவட்டம், சென்னை, பக்கம் 75.*
9. ARE, 167 of 1910; SITI. I. 247.
10. ARE, 168 of 1891; SITI, I, 246.
11. SITI, I, 248

# ஈரோடு மாவட்டத்தில் கிராமத் தேவதைகள்

முனைவர் எஸ். தேவகி, வேளாளர் மகளிர்க் கல்லூரி, ஈரோடு

பொதுவாக, தமிழ்நாடு கோயில்கள் மிகுந்த பகுதி. நம் இந்தியாவில் மட்டும்தான் கோயில் சின்னம் மாநிலச் சின்னமாக அமைந்திருக்கிறது. பெரும்பாலும் மக்கள் தெய்வ பக்தி மிக்கவர்களாகவும், கடவுளுக்குப் பயந்தவர்களாகவும் விளங்குகிறார்கள். ஆரியர் கடவுள் தவிர வேறு சில தெய்வங்கள், அம்மன் ஆகியவற்றுக்கும் மக்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே பயபக்தியுடன் வழிபாடு செய்கிறார்கள்.

கலைகளை வளர்க்கவும், வியாபாரத்தைப் பெருக்கவும் கூட திருவிழாக்கள் இன்றியமையாதன. பிரிந்திருக்கும் குடும்பத்தினர் மீண்டும் கூடுவதற்கு ஒரு வாய்ப்பைத் திருவிழாக்கள் நல்குகின்றன. தனிப் பட்டவர்கள் மகிழ்ச்சி, குடும்பத்தார் களிப்பு, சமுதாயத்தில் குதூகலம் இவைதான் திருவிழாக்களின் குறிக்கோள்.

கற்காலத்தில் மனிதன் இயற்கையை வழிபட்டான். அவற்றில் ஒன்றான நெருப்பைத் தெய்வமாகக் கருதி வழிபட்டான். பிறகு நாகரீகம் வளர, வளர நெருப்பிற்கு உருவம் கொடுத்து அதை லிங்க உருவத்தில் வழிபட்டான். இப்படி சிவபெருமானுக்கு லிங்க வடிவம் கொடுத்து மக்கள் வழிபட ஆரம்பித்தனர்.[1] ஒரு நாட்டின் அரசனுக்குப் பரிவாரங்கள் இருப்பது போல் முக்கண்ணனான சிவபெருமானுக்கும் பரிவாரம் இருப்பதாக மக்கள் எண்ணத் தொடங்கினர். இப்பரிவாரங்களே நாளடைவில் கிராமத் தேவதைகள் என்று அழைக்கப்பட்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பெரும்பாலும் சக்தி என்ற காளி தெய்வத்தைக் குல தெய்வமாகப் போற்றி வணங்கி வருகின்றனர். கொங்கு வேளாளர்கள், பொன்னர், சங்கர், அருக்காணி ஆகியவர்களையும் தெய்வமாக வணங்குகின்றனர். இம்மாவட்ட மக்களின் முக்கியத் தொழில் பயிர்த்தொழில். காளியைத் தெய்வமாகக் கொண்டு வேளாளர்கள் வணங்குகிறார்கள். வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு ஈரோடு மாவட்டத்திற்கு அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு கோயில் அமைத்து, மக்கள் ஒருங்கிணைந்த வாழ்க்கையை வாழ்கிறார்கள்.[2] காலங்காலமாக நம் முன்னோர்கள் மேற்கொண்டு வரும் தெய்வ வழிபாட்டை இன்றைய

இளைய தலைமுறையினரும் அப்படியே பின்பற்றி வருகின்றனர். மக்களைப் பாதுகாத்து, விளைச்சலையும் பெருக்கிக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சிறு தெய்வ வழிபாட்டு முறைக்கு ஈரோடு மாவட்டத்தில் வாழும் கொங்கு வேளாளர்கள் இன்றும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.[3]

சிற்றூர்களைக் கிராமங்கள் என்ற பெயரால் குறிப்பிடலாம். சிற்றூர் மக்கள் தங்கள் ஊர்களிலோ அல்லது மற்ற இடங்களிலோ வைத்து வழிபடும் தெய்வங்களைக் கிராமத் தேவதைகள் என்று கூறலாம். இவை சிறு தெய்வங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவற்றை ஆண்பாற் தெய்வங்கள், பெண்பாற் தெய்வங்கள் என்று இரு வகைப்படுத்தலாம். முனியப்பன், கருப்பண்ணன், சாமுண்டியப்பன், ஐயனார், அண்ணமார் ஆகியவை ஆண்பால் தேவதைகள். மாரியம்மன், காளியம்மன், பிடாரியம்மன், கொங்காலம்மன், வீரமாத்தி, பொங்கியம்மன், வனகாளி, பத்ரகாளி, துர்க்கையம்மன், கன்னிமார், போன்றவை பெண்பால் தேவதைகள்.[4] இவற்றுள் ஆண் தேவதைகள் பெரும்பாலும் மரத்தடியில் கோயில் கொண்டு உள்ளன. கற்களால் மேடையமைத்துள்ளனர். பெரும்பாலான பெண் தேவதைகளுக்கு நல்ல முறையில் கோயில்கள் கட்டி மக்கள் வழிபடுகின்றனர். ஈரோடு மாவட்ட வேளாளர்கட்குக் குல தெய்வங்களாக விளங்குபவை பெரும்பாலும் பெண் தேவதைகளாகும்.[5] சிறுபான்மை ஆண்பால் தேவதைகளும் குல தெய்வங்கள் ஆக உள்ளன. மதுரைவீரன் தெலுங்கு பேசும் ஆதி திராவிடர் என்ற இனத்தைச் சேர்ந்த கிராமப்புற மக்களுக்கே உரிய சிறப்பான தெய்வமாகும். வீரமாத்தி என்பது இறந்தோரின் நினைவாகக் கல் நட்டு வழிபடும் முறையில் அமைந்தது. வீரமாத்தி வைத்து வழிபடுவோர் நாயக்கர், ஆதிதிராவிடர் ஆகியோராவர்.[6] சில இடங்களில் கொங்கு வேளாளர்கட்கும் வீரமாத்தி கோயில்கள் உண்டு.

இவை தவிர பாம்பு, பருந்து, நரி, போன்றவற்றிற்கும் கிராமங்களில் வழிபாடு நடக்கிறது. பாம்புகளை நாகர் என்று பெயரிட்டு நாகர் பொங்கல் என்ற பெயரால் கோழிச் சேவல் பலி யிடுவதும், புற்றுகளுக்குப் பாலூற்றுவதும் நடைமுறையிலுள்ளன. பருந்து இறந்து விட்டால் அதைப் புதைத்து, அவ்விடத்தில் கல் நட்டு வழிபடுவர்.[7] இதை பெருமாள் கோயில் என்று அழைப்பது உண்டு. இறந்த நரியைப் புதைத்து அவ்விடத்தில் கல் நட்டு, நரிச்சாமி என்று பெயரிட்டு ஆண்டுதோறும் பொங்கலிட்டு ஆட்டுக் கிடா

பலி கொடுத்தனர். (நரிச்சாமி கோயில் ஈரோட்டிலிருந்து சங்ககிரி செல்லும் சாலையில் நாட்டாம்பாளையத்திலிருந்து 1 வது பர்லாங்கில் பாதையோரம் இடதுபுறமாக உள்ளது).

**ஆண்பால் தேவதைகள்:**

முனியப்பன், கருப்பண்ணன், அய்யனார், சாமுண்டியப்பன், ஆகிய ஆண் தேவதைகள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள காட்டுப் பகுதிகளிலேயே இடம் பெற்றுள்ளன. இவை உயிர்ப்பலி ஏற்கும் தேவதைகளாகவே உள்ளன. முனியப்பன் அதிகமான மக்கள் தொகையுள்ள பெரிய கிராமங்ககளைச் சார்ந்த காட்டுப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன.[8]

**முனியப்பன்:**

முனியப்பனுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பொங்கலிட்டு ஆட்டுக் கிடாக்கள் பலி கொடுப்பர். அக்கம் பக்கத்திலுள்ள பல சிற்றூர் மக்கள் ஒன்று சேர்ந்து முனியப்பனுக்குப் பொங்கலிடுவர். ஆட்டுக்கிடா கொடுக்க முடியாதவர்கள் கோழிச் சேவல் பலி கொடுப்பதுண்டு.[9] ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு பொங்கலும், ஒரு பலியும் இட்டாலும் சில குடும்பத்தினர் இரட்டைப் பொங்கல், இரட்டைக்கிடா கொண்டு வருவது உண்டு. கோயிலிலேயே கிடாக்களை வெட்டுவர். ஆடு வெட்டுவது பரம்பரையாக ஒரு குடும்பத்தைச் சார்ந்தது. ஆட்டை ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்க வேண்டும். இல்லை எனில் அந்த குடும்பத்திற்கோ, ஊருக்கோ கெடுதல் வந்து விடும் என்ற நம்பிக்கை உண்டு. சித்திரை, ஆடி, ஐப்பசி, இவற்றுள் ஏதேனும் ஒரு மாதத்தில் முறையாகச் சிறப்பு வழிபாடு நடைபெறும். திங்கள், புதன், வியாழன், இவற்றுள் ஒரு நாள் பொங்கல் வைத்து வழிபடுவர். ஆண்டுதோறும் குறிப்பிட்ட மாதமும், கிழமையும், மாறாது கடைபிடிக்கப்படும்.[10] ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஊர் மக்கள், கொத்துக்காரர் தலைமையில் ஒன்று கூடி முனியப்பன் பொங்கலுக்குரிய நாளை முடிவு செய்வார்கள். ஊரிலேயே குடியிருக்கும் ஆண்டி அல்லது பண்டாரம் முனியப்பனுக்குப் பூசை செய்து தீபாராதனை காட்டித் தீர்த்தம் தெளித்து, தெய்வத்தின் பிரதிநிதியாக விளங்குவார். பூசை தொடங்கும் முன்பாக எல்லாப் பொங்கல் பாத்திரங்களிலிருந்தும் பொங்கல் சோறு ஒரு கரண்டி எடுத்து அவற்றைத் திரட்டி முனியப்பனுக்கு முன்பு படைப்பர். பூசை முடித்த பின்னர், ஆட்டுக் கிடாக்களுக்குத் தீர்த்தம் தெளித்து, கிடா துளுக்கிய பின் (தலையை ஆட்டுதல்) பெரிய வெட்டரிவாளால் அதன் கழுத்துப் பகுதியில் ஒரே வெட்டாக வெட்டித் தலையைத் துண்டிப்பர்.[11]

கிடாத்தலைகளைக் கோயில் பூசாரியும், வழிபாட்டின் போது மாத்து (வெள்ளைத்துணி) கொடுக்கும் உள்ளூர் சலவைத் தொழிலாளியும் பங்கிட்டுக் கொள்வர். இப்போது பெரிய ஊர்களால் சூழப்பட்டு ஊருக்கு நடுவாக அமைந்துள்ள கோயில்களில் காலையிலிருந்து மாலை வரை பொங்கலிட்டுக் கொண்டு இருப்பர். தங்கள் வீடுகளிலேயே கிடா வெட்டிக் கொள்வர்.[12] ஆனால் கிராமங்களில் மாலை நேரத்தில் எல்லோரும் ஒரு சேரப் பொங்கலிட்டுக் கோயிலிலேயே கிடாவை வெட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்வர். ஊரில் இருந்தும் விலகியுள்ள தொலைதூரக் கோயில்களுக்குச் செல்வோர் காலையிலேயே பொங்கலிட்டு கிடா வெட்டி அங்கேயே பக்குவம் செய்து விருந்தினர்களுக்கும் படைத்துத் தாங்களும் உண்டு வருவதுண்டு. முனியப்பனுக்கு ஏரி முனியப்பன், கோட்டை முனியப்பன், செங்கமா முனியப்பன், எல்லை முனியப்பன் எனப்பல பெயர்கள் உண்டு.

**கருப்பண்ணன்:**

கருப்பண்ணசுவாமி கோயில்கள் பெரும்பாலும் கிராமங்களிலுள்ள புஞ்சைக்காடுகளில் மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. கற்களால் மேடையெழுப்பிக் கற்களையே கருப்பண்ணனாக நட்டு வழிபடுவர். மேடையில் முன் பகுதியில் சிறிய விளக்குக் கூடம் வைக்கப்பட்டிருக்கும்.[13] ஓரிரு வேல்கள் கோயிலின் முன்னால் நடப்பட்டிருக்கும். இத்தெய்வத்திற்கும் ஆண்டுக்கு ஒரு முறையே பொங்கலிட்டு ஆட்டுக்கிடா பலி கொடுப்பர். காட்டுக் கருப்பண்ணன் கோயில் குடும்பக் கோயில் போல் அமைத்து குறிப்பிட்ட குடும்பத்தினர்களால் மட்டும் வழிபடுவதாக உள்ளது. இக்கோயிலில் குடும்பத்தின் மூத்தவர் வாயில் வெள்ளைத் துணியைக்கட்டி ஒரு பூசை செய்வார். குறிப்பிட்ட புஞ்சை நிலத்திலிருக்கும் கருப்பண்ணருக்கு அந்த நிலச் சொந்தக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆண்டுக்கு ஒரு முறை, ஆனி, ஆடி, ஆவணி, ஐப்பசி இவற்றில் ஏதாவதொரு மாதத்தில், தொடர்ந்து பொங்கலிட்டு ஆட்டுக்கிடா பலியிட்டு விருந்தினர்களுடன் பகிர்ந்துண்பர்.[14] பல ஊர் மக்கள் திரண்டு வந்து விழாக் கொண்டாடும் வகையிலும், அமைந்துள்ள கருப்பண்ண சுவாமி கோயில்களும் உண்டு. இக்கோயில்களில் மண்ணால் குதிரைகள் செய்து, கோயில் மேடை பெரிதாகச் சுற்றுச் சுவருடன் அமைக்கப்பட்டிருக்கும். மக்கள் நேர்த்திக் கடனாகச் செலுத்திய வேல்கள் பல கோயிலின் முன்னால் நடப்பட்டிருக்கும். சுதையால் ஆன பெரிய உருவங்களுடன், பெரிய மீசையுடனும் ஒரு காலை சப்பளமிட்டமர்ந்து கையில் பெரிய வெட்டரிவாள் கத்தியுடன் இத்தேவதைகள் காட்சியளிக்கும்.[15]

**சாமுண்டியப்பன்:**

படையாச்சிக் கவுண்டர், வன்னியர் என்ற பெயர்களால் குறிக்கப்படும் தமிழ்நாட்டு வன்னியர்களின் குல தெய்வமாக உள்ளது சாமுண்டியப்பன். சாமுண்டியப்பன் கோயில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் ஒன்று சங்ககிரி வட்டம் ஐவேலி கிராமத்தருகிலுள்ள ஏரிக்காட்டில் அமைந்துள்ளது.[16] ஆண்டுக்கொருமுறை வன்னிய சமுதாயத்தினர் தங்களுடைய மணமான பெண்களை எல்லாம் அழைத்து அவர்களுக்குப் புதுப்பானையும், ஆட்டுக் கிடாவும் சீதனமாகக் (பொங்கல்சீர்) கொடுத்துத் தாங்களும் கொண்டாடுகின்றனர். இக்கோயில் மரத்தடியில் அமைந்துள்ளது.

**மதுரைவீரன்:**

மதுரை வீரனை ஆதி திராவிட மக்கள் வழிபடுகின்றனர். அவர்கள் குலதெய்வமான மதுரை வீரனுக்கு ஆண்டு தோறும் பொங்கலிட்டுக் கிடா பலியிடுகின்றனர். இக்கோயில்கள் பெரும்பாலும் அவர்கள் வாழும் சேரிப் பகுதியிலேயே அமைந்துள்ளன. வெள்ளையம்மாளைச் சிறை எடுத்த மதுரைவீரனின் நினைவாக உண்டாக்கப்பட்ட கோயிலே மதுரை வீரன் கோயிலாகும்.[17]

**வீரமாற்றி (வீரமாத்தி):**

வீரமாத்தி என்று கிராமப்புற மக்களால் வழங்கப்படும் இதனைக் கோயில் என்று சொல்வதைவிட நடு கற்களின் தொகுப்பு என்றே கூற வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல நாயக்கர், ஆதிதிராவிடர் ஆகியோர் தங்கள் இனத்தில் மரணமடைந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் தாங்கள் ஏற்கனவே பயன்படுத்தி வரும் தங்களுக்குத் தனியாக ஊரில் உள்ள இடத்தில் கல் நட்டு வழிபடுவர்.[18] இது தவிர ஆண்டுக்கு ஒரு முறை அவ்வினத்தவர்கள் தத்தமக்குரிய வீரமாத்தி கோயிலுக்குச் சென்று, பொங்கலிட்டுக் கிடாபலியிட்டு உறவினருடன் விருந்து உண்பதுண்டு. பழங்காலத்தில் போரில் இறந்த வீரனின் நினைவாக உண்டாக்கப்பட்ட நடுகல் வழக்கும் இன்றும் வீரமாத்தி என்ற பெயரில் நடைமுறையில் இருந்து வருவதை இவ்வழிபாடு உணர்த்துகிறது. மேலும் வீரமாத்தி வழிபாடுடைய மக்கள் வீரப் பரம்பரையில் வந்தவர்கள் என்பதும் விளங்குகிறது.

**அய்யனார்:**

ஈரோடு மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் நிச்சயமாக அய்யனாருக்கு ஒரு கோயில் இருக்கும். பல ஏரிகள், கண்மாய்கள்

ஆகியவற்றின் கரையில் அந்தந்த நீர் நிலைகளின் பெயரைத் தாங்கிய அய்யனார் திருவுருவங்கள் உண்டு.[19] அய்யனாருடைய அருளைப் பெறத் தீ மிதித்தல், பால் குடம் சுமத்தல், கிடா, கோழி வெட்டுதல் போன்ற விழாக்களை எடுப்பார்கள். கண், கால், கை, போன்ற எந்த உறுப்பு உடம்பில் பாதிக்கப் படுகிறதோ, அந்த நோய் தீர்ந்த பின், அய்யனார் கோயிலுக்கு காணிக்கை கொடுப்பது மரபு. அய்யணார் கோயில் முற்றத்தில் மண் குதிரை செய்து வைப்பதும், ஒரு வகைப் பிரார்த்தனையே ஆகும். பழங்காலப் போர் முறைகளில் வெற்றி பெறக் குதிரைப்படைகள் பெரிதும் உதவின.[20] ஆகையால் அய்யனார் கோயில்களில் குதிரைகளை வழிபடும் பழக்கம் பரவி இருக்கலாம். குதிரைப்படையின் தளபதியின் பிரதிநிதியாக அய்யனார் கருதப்படுகிறார். ஆகவே ஈரோடு மாவட்டத்தில் பெரிய, பெரிய குதிரைச் சிலை களையும் அத்துடன் அய்யனார் சிலை களையும் அதிகம் காணலாம்.



அய்யனார் கோயில், திண்டல்

அய்யனார் திருட்டு, தொற்றுநோய், பேய், பூதங்கள், புயற்காற்று, வெள்ளம் முதலிய இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் கிராமத் தேவதை என்று ஈரோடு மாவட்ட மக்கள் எண்ணுகிறார்கள்.[21] அய்யனார், கிராமம் முழுவதற்கும் செல்வச் செழிப்பினை வழங்குகிறது என்றும் தீராத நோய்களிலிருந்து மக்களைக் காக்கும் என்றும், குழந்தைச் செல்வங்கள் இல்லாதவர்களுக்குக் குழந்தைப் பேறு கிட்டும் என்றும், கிராமத் தேவதை பற்றிய நம்பிக்கை மக்களிடம் பரவலாக உள்ளது

**அண்ணன்மார்:**

சின்னண்ணன், பெரியண்ணன் அல்லது பொன்னர், சங்கர் என்று கொங்கு நாட்டில் வழங்கப்படும் வேளாளர் குல முன்னோர்களான வீர உடன் பிறப்புக்களையே அண்ணமார்

(அண்ணன்மார்) என்ற பெயரில் கோயிலமைத்து வழிபடுகின்றனர்.[22] கொங்கு நாட்டில் வேளாளர்களுக்கும், வேட்டுவர்களுக்கும் உண்டான போராட்டத்தில் வேட்டுவர்களை வென்று கொங்கு வேளாளர்களைக் காத்த அண்ணன்மார்களின் பெருமையை மாசி மாதம் சிவராத்திரியின் போது நடித்துக் காட்டி விழாக் கொண்டாடுகின்றனர்.

**தம்பிக்கலை அய்யன் கோயில்:**

தம்பிக்கலை அய்யன் கோயில் காஞ்சிக்கோயிலில் உள்ளது. ஒருவருக்கு பாம்பு கடித்து இங்கு வந்தால் வைத்தியர்களால் கூடத் தீர்க்க முடியாத சிக்கலான பாம்பு கடித்தவர்களைப் பிழைக்க வைத்திருக்கிறார்கள். புனிதத் தண்ணீரை ஒரு மண் பாண்டத்தில் அர்ச்சகரிடம் கொடுத்து அர்ச்சனை செய்தபிறகு பாதிக்கப்பட்டவர்கள் அப்புனிதத் தண்ணீரைப் பாம்பு கடித்த இடத்தில் தேய்த்து தீர்த்தம் அருந்துகிறார்கள்.[23] உடனே பாம்புக் கடியிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். இங்கு வெள்ளிக்கிழமை, அமாவாசை, பௌர்ணமி முதலிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் உண்டு. சர்ப்பத்திற்காக ஒரு தனிக்கோயில் ஈரோடு மாவட்டத்திலேயே ஏன் கொங்கு நாட்டில் இல்லை என்றும் கூறலாம்.

**வேட்டமார் கோயில் (வேடுவமார் கோயில்):**

அண்ணன்மார் கோயில் வழிபாட்டில் பொன்னர், சங்கர் ஆகிய கொங்கு வேளாள வீரத்தளபதிகள் வேடுவரை வெற்றி கொண்டதன் அடையாளமாகச் சிறப்பிக்கப்படுவது போல, வேடுவர்கள் அவ்வப்போது தாங்கள் கொங்கு வேளாளப்படையை வெற்றி கொண்டதைக் கொண்டாடும் பொருட்டு வேடுவத் தலைவர்களுக்குக் கோயில் அமைத்து வழிபட்டனர். அக்கோயில் இன்றும் வேட்டமார் கோயில் என்று நிலவி வருவதை சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மோடமங்கலம் கிராமம் தண்ணீர்ப்பந்தல் பாளையத்திற்கு அருகில் உள்ள சென்றாய்க்கல் கரட்டில் உள்ள கோயில் புலப்படுத்துகிறது. இக்கோயிலில் வேடுவத் தலைவர்கள் மேலே இருக்க அண்ணன்மார்கள் கீழே இருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலிலும் வேல்கள் நடப்பட்டுள்ளன.[24] சுதையால் ஆன இரண்டு பெரிய குதிரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர மண் குதிரைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்கு ஆடி மாதம் புதன்கிழமை திருவிழாக் கொண்டாடுகின்றனர்.

**பெண்பால் தேவதைகள்:**

பெண்பால் தேவதைகள் பெரும்பாலும் அம்மன் என்று முடிகின்ற பெயரைக் கொண்டுள்ளன. சில அம்மன்கள்

ஊர்ப்பெயரை முன்னால் கொண்டு அழைக்கப்ப டுகின்றனர். வேறு சில அம்மன் அவர்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டுள்ளனர்.[25]


**மாரியம்மன்:**

மாரியம்மன் இரு வகைப்படும். அவை கம்பத்து மாரி, கும்பத்து மாரி எனப்படும் கம்பத்து மாரி 15 நாட்கள் பூச்சாட்டாகவும், புதன் கிழமையில் பொங்கல் இடும்படி வரும்.[26] பிறகு இம் மாரிக்கு ஆட்டுக் கிடா பலியிடுதல் முறை. ஆண்டி, சாமிக்கு பூஜை செய்யும் 15 நாட்களும் நோன்பு இருக்க வேண்டும். பொங்கலுக்கு மறு நாள் கம்பத்தை எடுத்துக்கொண்டு ஊர்ப் பொதுக் கிணற்றில் போட்டு விடுவார்கள். கும்பத்து மாரி 9 நாட்கள் பூச்சாட்டு. புதன் கிழமை பொங்கல் இடுவார்கள். ஆனால் ஆட்டுக்கிடா எதுவும் வெட்ட மாட்டார்கள். இதற்குப் புது கும்பத்தில் நீர் எடுத்து வேப்பிலையை அதற்கு மேல் வைத்துக் கோயிலை மும்முறை வலம் வருவார்கள். பொங்கலுக்குப் பிறகு கும்பத்தைக் கிணற்றில் போட்டு விடுவார்கள்.[27]



- மாரியம்மன் கோயில், விசயமங்கலம்

ஈரோடு மாநகரத்தில் வெகு சிறப்பாக எல்லா மதத்தினராலும் கொண்டாடப்படும் தெய்வம் மாரியம்மன். கோயமுத்தூரில் கோணி அம்மன், சமயபுரத்தில் மாரியம்மன் போல் ஈரோட்டில் மூன்று மாரியம்மன்கள் பெரிய, சிறிய, வாய்க்கால்கரை மாரியம்மன் என்று அழைக்கப் படுகின்றனர். பங்குனி மாதத்தில் 20 நாட்கள் இம் மாரியம்மனை மக்கள் சிறப்பாக வழிபடுகிறார்கள். அதில் பூச் சாட்டல், கொடி ஏற்றம், கம்பம் நடுதல், தேர் இழுத்தல், கம்பத்தைப் பிடுங்குதல், மிகவும் விசேஷ மாக மக்களால் கருதப்படுகிறது. கம்பம்



நடுமாரியம்மன் கோயில், ஈரோடு

என்பது வேப்பிலைக் கொம்புகளைக் கொண்டு இருக்கும். இக்கம்பம் மண்டபத்தில் எதிரில் பூசாரி வைப்பார். இம்மாதிரி புனித கம்பத்தை மூன்று மாரியம்மன் கோயிலிலும் வைப்பார்கள். மக்கள் இக்கம்பத்தை மாரியம்மனின் கணவன் மார்களாகக் கருதுகிறார்கள்.[28] பத்தொன்பதாம் நாள் மூன்று கம்பங்களைச் சாத்திர சம்பிரதாய முறைப்படி பிடுங்கி, ஈரோடு நகரில் உள்ள காரைவாய்க்கால் என்னும் இடத்தில் மிதக்க விடுவார்கள். மாரியம்மனின் கணவன் இறந்து, மாரியம்மன் விதவையாகி விடுவதாக ஐதீகம்.

தொற்று நோய் பரவினால் ஈரோடு மாவட்டப் பெண்கள் இளநீரும், பனைவெல்லமும் வைத்து மாரியம்மனுக்குப் படைப்பார்கள். உடல் நலம் தரும் இறைவி மாரியம்மன் என்று மக்கள் பரவலாக எண்ணுகிறார்கள். அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவாள்.[29] கேப்பைக் கூழை மாரியம்மனுக்குப் படைப்பது மரபு. தீ மிதி விழா மாரியம்மன் கோயில்களில் பெரிய அளவில் நிகழும். இதை மலர்களில்மீது நடப்பது என்ற பொருளில் பூ மிதித்தல் என்று சொல்லுவர். உடல் நிறையத் திருநீறு பூசிய ஆடவர்கள் கக்கும் நெருப்பின் மீது மூன்று நான்கு மீட்டர் தூரத்தைப் பல தடவை கடந்து செல்வார்கள். அவர்களுடைய மனம் உறுதிப்பாட்டால் நெருப்பின் சூடு அவர்களைத் தாக்குவதில்லை என்ற நம்பிக்கை ஈரோடு மாவட்ட மக்களிடம் பரவியுள்ளது.[30] இந்த வேண்டுதலை நிறைவேற்றுபவர்கள் பல விரதங்கள் மேற்கொள்ள வேண்டும். ஒரு வேளை தான் சாப்பிட வேண்டும். தரையில் தான் படுக்க வேண்டும். சிற்றின்பம் அனுபவிக்கலாகாது.

பெண்கள் தங்கள் தலைமீதும், பெண் குழந்தைகள் தங்கள் உள்ளங்கைகளிலும் அக்கினிச் சட்டியை ஏந்திச் செல்வது

மாரியம்மன் கோயில்களில் நிகழும் பிரார்த்தனை ஆகும். கோயில் திருவிழா தொடங்கி விட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும் அன்று முளைப்பாரி கொட்டுதல் என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறும். கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும், குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒரு குடத்தில் நெல் தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள். எட்டாம் நாள் அந்த குடங்களைக் கோயிலுக்குக் கொண்டு செல்வார்கள்.[31] திருவிழாவின் இறுதியில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்து விடுவார்கள். பச்சரிசியுடன் வெல்லத்தை கலந்து, மாவிளக்கு ஏந்திக் கோயில் வாயிலில் அதை எரிய வைப்பதில் பெண்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். கடவுளின் பிரசாதமாக இறுதியில் இதை உண்பர்.

காலரா, அம்மை முதலிய நோய்களைத் தடுக்கவும், அந்த நோய்வாய்ப்பட்டவர்கள், உடல், நலம் பெற்றதற்காக மாரியம்மனுக்கு நன்றி கூறவும் திருவிழா நாட்களில் சிலர் தங்கள் உடலில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கொள்கின்றனர்.[32]

**காளியம்மன்:**

இத்தெய்வம் கரியகாளியம்மன், கொங்காலம்மன், வெங்காளியம்மன், பத்ரகாளி, வனகாளி போன்ற பலவகைப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இத்தகைய அம்மன்கள் கொங்கு வேளாளர்களின் குல தெய்வங்களாக உள்ளன. இவ்வகை அம்மன் கோயில்களில், பூச்சாட்டு, பொங்கல், வான வேடிக்கை, முப்பாடு, குதிரைதுளுக்கு விடுதல், மகமேறு கோயிலைச் சுற்றி வருதல் போன்ற நிகழ்ச்சிகள் உள்ளன.[33] முதல் திருநீறு பெறுதல், தேவதாசிகள் தாலாட்டுப்பாடுதல், மறு பூஜை போன்றவைகளும் உண்டு. பத்ரகாளியம்மன் கோயில்களில் குண்டம் மிதித்தல் அல்லது பூ மிதித்தல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். அத்தனூர், குல விளக்கு அம்மன் போன்ற ஊர்ப் பெயர்களை முன்னே கொண்ட அம்மன்களும் உண்டு.

துர்க்கையம்மன், பிடாரியம்மன் போன்றவை தம் பண்பு வழியாக பெற்றப்பெயர்கள் ஆகும். சக்தி (அல்லது) உடமை வெவ்வேறு வடிவங்கள் கொண்டு தீயவர்களை அழித்ததாகச் சிலப்பதிகாரத்தில் உள்ளன. அந்த அடிப்படையில் இத்தெய்வங்களைக் கிராமங்களில் தீமையையும், தீயவர்களையும் அழித்து நல்லவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு வழிபடுகின்றார்கள்.[34]

**கன்னிமார்:**

இவர்கள் சப்த கன்னியர் என்று அழைக்கப்படுகின்றனர். தேவலோகத்தில் உள்ள ஏழு வகைப்பெண்கள் நினைவாகப் பூலோகத்தில் முனியப்பன், கருப்பண்ணன், பொட்டுசாமி, ஊர்க்காவல் தெய்வம் போன்ற கோயில்களில் ஏழு கற்களைக் கன்னிமார்களின் அடையாளமாக வைத்து வழிபடுகின்றார்கள். இவர்களுக்கு கிடா வெட்டுவது போன்ற நிகழ்ச்சி இல்லை. இவர்களுடன் இருக்கும் மற்ற தெய்வங்களுக்குக் கிடா பலியிடும் பொழுது இவர்களைக் கூடையைப் போட்டு மூடி, வெள்ளைத்துணியால் மறைத்து வைத்துப் பிறகுதான் பலி யிடுவார்கள். சிலப்பதிகாரத்தில் கண்ணகி சோழநாட்டுப் பெண்களின் கற்புத்திறமை பற்றிக்கூறும் பொழுது புகார் நகரின் ஏழுவகைப் பத்தினி பெண்களைப் பற்றி குறிப்பிடுவது இங்கே எண்ணுதற்குரியது.[35]

கிராமப்புற மக்கள் கோயில்களில் தேவதைகளுக்குப் படைக்கிறார்கள். இவர்களுக்கு மாமிசப் பழக்கம் உள்ளதால் சாமிக்கு மாமிசம் வைத்துப் படைக்கிறார்கள். காட்டுக் கருப்பண்ணன் சாமிக்கு சாராயத்தை வைத்துப் படைக்கிறார்கள்.[36] மேலே கண்ட வழிபாடுகளால் தங்களுக்கு அச்சத்தை ஊட்டும் முனி, கருப்பு போன்ற தேவதைகளுக்குத் தாங்கள் பலியாவதில் இருந்து தற்காத்துக் கொள்ள ஈரோடு மாவட்ட மக்கள் வழிபடுகிறார்கள். வீர வழிபாடு எதிரிகளை அழிக்கவும் காளி வழிபாடு வெற்றிகளைத் தேடித்தரவும் நடத்தப்படுகின்றன.

நோய் நீங்கவும் குழந்தை வரம் கிடைக்கவும் மழை பெய்யவும் எடுத்த காரியம் சுலபமாக முடியவும், ஊர் மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் எனவும் மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.[37]

**சித்தோடு – கொளாநல்லி:**

ஈரோடு மாவட்டத்தில் சித்தோடு கிராமத்தில் காவல் தெய்வங்களாகக் கன்னிமார், சப்தமாதர், அண்ணன்மார், தங்காயி, கருப்பண்ணன்சாமி, மகாமுனி, முதலிய தெய்வங்களை மக்கள் வணங்குகிறார்கள்.[38]

ஈரோடு மாவட்டத்திலுள்ள கொளாநல்லி கிராமத்தில் செம்மடை அண்ணன்மார் கோயில் உள்ளது. இங்கு பொன்னர், சங்கர், அருக்காணி ஆகியவர்களுக்கு உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகக் கால் நடைகளுக்குப் பிணி ஏற்பட்டால் அதைப்போக்க மக்கள் இங்கு வேண்டிக்

கொள்கிறார்கள். இங்கு 15 அடி உயரத்தில் மகாமுனி சிலையும், ஆத்தூர் முனியும் அதற்கு அருகில் பெண்முனி சிலையும் கட்டப்பட்டுள்ளன.[39] இங்கு பசு, காளை, வேட்டை நாய் முதலிய உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**பகவதி அம்மன் கோயில்:**

காங்கேயத்திலிருந்து, கரூர் செல்லும் சாலையில் பகவதி அம்மன் கோயில் அமைந்துள்ளது. பகவதி அம்மனுக்கும், அழகு நாச்சி அம்மனுக்கும் தனித்தனிக் கருவறைக் கோபுரங்களுடன் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.[40] இரண்டு கோயில்களுக்கும் ஒரே மகா மண்டபம் உள்ளது. பகவதி அம்மன் சிலை எட்டுக் கைகளுடன், சிம்ம வாகனத்தில் அழகாகக் காட்சித் தருகிறது. அழகு நாச்சியையும், கன்னிமார் சிலைகளையும் மக்கள் வழிபடுகின்றனர்.

"ஊரானோர் தேவகுலம்" என்னும் முதுமொழிக் கிணங்க ஈரோடு மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கோயில் அமைந்துள்ளது. அத்துடன் வேறுசில தெய்வங்களும் குடி கொண்டுள்ளன. அன்பின் அடிப்படையில் அத்தெய்வங்கட்கு மக்கள் பல சடங்குகளைச் செய்து அருளைப் பெறுகின்றனர். அச்சிறு தெய்வங்கள் மக்களின் நம்பிக்கை வீண் போகாதவாறு "நம்பினார் கெடுவதில்லை" என்பதற்கேற்ப அவர்களுக்கு விளைச்சலைப் பெருக்கிக் கொடுத்தும் நோய் நொடி வராமல் பாதுகாத்தும் வருகின்றன. இச்சிறு தெய்வ வழிபாடு சமூக ஒருமைப் பாட்டையும் வளர்க்க உதவுகிறது.

**குறிப்புக்கள்:**

1. தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - சோமலெ - ப. 18.
2. பொன்னார் சங்கர் வரலாறு – அ. பழனிசாமி, ப. 15.
3. *Ibid.*, p.17.
4. தினமலர், 9 மற்றும் 13 மார்ச் 1984.
5. *Religious Art and Culture* - S. Venkatasubramaniam, p.98.
6. *Studies in the History of India with Special reference to Tamilnadu* - K.K. Pillay, p.30.
7. *Kongunattu Varalaru* - Ramachandra Chetty, p. 35.
8. தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - சோமலெ, ப. 120.
9. கொங்கு நாட்டு வரலாறு - குழந்தை, ப. 26.
10. Antiquirian Festivals of Tamilnadu - A. Subramaniam, p. 336.
11. *Ibid.*, p. 337.
12. *Pamphlet* by Mariamman Devasthanam
13. பொன்னார் சங்கர் வரலாறு - அ. பழனிசாமி, ப. 160.

14. *Studies in the History of India with Special reference to Tamilnadu* - K.K. Pillay, p. 432.
15. *Ibid.*
16. *இந்திய ஆலயங்கள், தெய்வ தமிழ்மணி, ப. 48.*
17. *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - சோமலெ, ப. 132.*
18. *Ibid.*
19. *Ibid.*, p.140.
20. *Ibid.*, p.180.
21. *Temple and its Significance* - Veerasamy, p.118
22. *Information gathered* from P.S. Perumal Gounder, Thambikalai Amman Koil Trustee
23. *Ibid.*
24. *பொன்னார் சங்கர் வரலாறு - அ. பழனிசாமி, ப. 165.*
25. *Antiquirian Festivals of Tamilnadu* - Rituals in India, p.335.
26. *Ibid.*
27. *Ibid.*
28. *Ibid.*
29. *Ibid.*
30. Interview with K. Varadharajan - Executive Trustee, Mariamman Temple Devasthanam.
31. *Ibid.*
32. *Ibid.*
33. *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் - சோமலெ, ப. 120.*
34. *பொன்னார் சங்கர் வரலாறு - அ. பழனிசாமி* Vol. 113.
35. *Ibid.*
36. Interview with Marappan, Perodu.
37. *இந்திய ஆலயங்கள் - ந. முத்துப்பிள்ளை, ப. 102.*
38. *Ibid.*
39. *கொங்கு நாட்டு கோயில்கள் - எம். சுப்பய்யாசிவப்பிள்ளை, ப 120.*
40. *Ibid.*

# ஈரோடு மாவட்டத்தில் சித்தர் கோயில்கள்

**டாக்டர். கா. பழநிச்சாமி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்,**
**ஈரோடு மாவட்டம், ஈரோடு**

*முன்னுரை:*

*தமிழகத்தில் கலைக்கூடங்களாகவும், சமயச் சின்னங்களாகவும், பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்ற அரங்குகளாகவும், பிணிபோக்கும் மருந்தகங்களாகவும், கோயில்கள் தொன்று தொட்டு தமிழக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து வளர்ச்சி பெற்றுள்ளன.*

*"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிறானுர்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப்புலனைந்தும் காணா மணிவிளக்கே" - ........... (1)*

*என வரும் திருமூலர் பாடல் கோயிலையும், உடலையும் உருவகப்படுத்துவதிலிருந்து கோயில் மனிதனோடு பிரிக்க முடியாத ஓர் உறவைக் கொண்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.*

*நாவுக்கரசர் கோயில் இல்லாத ஊரை காடு என்றுதான் கூறுகிறார்.*

*இதை,*

*"திருக்கோயில் இல்லாத திருவிலுரும்" எனும் பாடலில் .......... (2)*

*(அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும் பாட்டு 368)*

*கோயில் இல்லாத ஊரெல்லாம் அரவிக்காடே என்ற வரிகளால் அறியலாம். எனவே மக்கள் தங்களுடைய பல்வேறு நோக்கங்களுக்காக கோயிலை அமைத்தனர்.*

***சித்தர்:***

*"சித்" என்றால் அறிவு என்று பொருள். அறிவுடைய பெருமக்களை சித்தர்கள் என அழைக்கிறோம். இவர்கள் சிவ நெறியைப் பூண்டு ஒழுகிய தமிழர்களாவர். இவர்கள் காரணகாரிய வகைகளால் உடம்பைச் சோதித்து எந்தெந்த வகைப் பொருட்களால் உடல் வளர்ந்து, அழிகின்றது என்பதை, தங்கள் முயற்சியாலும் கண்டறிந்து, இவ்வூன் உடம்பை பொய்யென்று சொல்லாமல், மெய்யென்ற சொல்லுக்குப் பொருள் கண்டு சிலப்பதிகாரத்தில் கூறியபடி எட்டுவித சித்திகளை அடைந்தார்கள்*

மேலும் தங்களுடைய உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால் பிறப்பு, இறப்பு இன்றி வாழலாம் என உணர்ந்து அநேககாலம் உயிருடன் இருக்கக் கூடிய நித்திய வாழ்வைப் பெற்ற மகான்களாவார்கள். இவர்கள் காயகற்ப வழியாலும், யோக சாதனைகளாலும், மிகுதியான சக்தியை வளர்த்துக் கொண்டார்கள். மேலும் இவர்கள் மூச்சை அடக்கிப் பிடித்து மூலக்கனலாகிய குண்டலினி சக்தியை எழுப்பி, மணிமந்திர மருந்துகளின் உதவியால் மாறாதமதி அமிர்தம் உண்டு, நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய இவைகளை வென்று உடம்பைப் பெற்றவர்கள். மேற்கண்ட சக்திகளால் நினைத்த இடத்திற்கு சென்று வரமுடிந்தது. உலகின் பல்வேறு இடங்களில் நடக்கின்ற செய்திகளை (நிகழ்ச்சிகளை) ஓர் இடத்திலிருந்து அமர்ந்தபடியே தெரிந்து கொண்டார்கள் இவர்கள் மருத்துவம் செய்ததுடன் அல்லாமல் வாத வைத்தியமும் (இரசவாதம்) அறிந்திருந்தார்கள்.

“நிலத்தில் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்தில் திரியும் ஓர் சாரணன்” என மணிமேகலையும் ...(3)
“கந்துக மதக்கரியை வசமாக நடத்தலாம்
கரடி வெம்புலிவாயையும்
கட்டலாம் ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்து ஆட்டலாம்
வெந்தழனின் ரதம் வைத்தைந்துலோகத்தையும்
வேதித்துவிற்றுண் ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம், கனல் மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற ” .........(4)

என்று தாயுமானவர் சுவாமிகள் பாடலில் சித்தர்களைப் பற்றி மேற்கண்டவாறு கூறுகின்றார். உடலையும், உள்ளத்தையும் தாங்கள் விரும்புகின்றபடி ஒரு நிலைப்படுத்தி செயல்களைச் செய்கின்றவர்களைச் சித்தர்கள் என அழைக்கின்றோம். இச் சித்தர்கள் அலைபாயும் மனத்தை ஒருநிலைப்படுத்தி தாங்கள் நினைத்ததையும் வெற்றி கொண்டார்கள் என அறியலாம். இதே கருத்தை பின்னால் வந்த வள்ளல் பெருமானும்,

*"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்*
*மனமது செம்மையானால் வாசையை அடக்க வேண்டாம்" - எனப் பலவாறாகக் கூறுவதனால் ஒருநிலைப்படுத்துவதால் பல்வேறு காரியங்களைச் செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறார்கள் எனவே இவ்வரிய செயல்களைச் சித்தர்கள் செய்து வெற்றி கண்டார்கள் என்பது தெள்ளத்தெளிவு.*

***சித்தர்களின் தொண்டு:***

*இச்சித்தர்களாகிய பேரறிவுடைய அறிவியலார்கள் தாங்கள் மட்டும் நலமுடன் வாழ எண்ணாது "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற குறிக்கோளுக்கு இணங்க தகுதியுடைய மக்களுக்குத் தொட்டுக் காட்டினார்கள். இவர்கள் முதலில் நோய்வராமல் பாதுகாத்தும், பின்பு வந்த நோயை போக்கியும் துணை நின்றார்கள். தங்களுடைய ஞானத்தாலும், மருத்துவ அறிவாலும் மக்களின் உள நோயையும், உடல்நோயையும் போக்கினார்கள். காலப்போக்கில் அவைகளே சித்தர் மருத்துவம் எனப் பெயர் பெற்றன. இச்சித்த மருத்துவம் மதி, மந்திரம், மருந்து என்று மூன்று பெரும் பிரிவுகளை உடையது. மருந்து என்பது உள்மருந்து, வெளி மருந்து என்ற இருபெரும் பிரிவுகளை உடையது. இம்மருத்துவப் பொருட்கள், மூலிகைகள், உலோகங்கள், உப்புக்கள், கடல்படு திரவியங்கள், விலங்கினப் பொருட்கள் ஆகியவைகளால் செய்யப்பட்ட மருந்துகளைக் கொண்டு பிணியைப் போக்கினர். அவர்களுடைய மருத்துவக் குறிப்புகள் எல்லாம் திராவிட மொழியாம், தமிழிலேயே எழுதப் பெற்றவைகளாம்*

*பேரறிவாளர்களான சித்தர்கள் காலம், திராவிட நாகரிகம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழைமையானது. இப்பெருமக்கள் இங்கு மட்டுமல்லாமல் சைனா, துருக்கி, கீழ்த்திசை நாடுகள் போன்ற மற்ற நாடுகளுக்கும் சென்று வந்தனர் என்பதற்கு அகச்சான்றுகள் விடை பகர்கின்றன.*

***சித்தர்களின் கொள்கைகள்:***

*சித்தர்கள் ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற கொள்கையை ஆணித்தரமாக மக்களிடையே பரப்பி வந்தார்கள். அதை வலியுறுத்தும் வகையிலேயே, சிவவாக்கியர் சித்தர் கீழ்வருமாறு கூறுகிறார்:*

*"சாதி ஆவது ஏதடா? சலந்திரண்டி நீரெல்லாம்*
*பூதவாசல் ஒன்றலோ, பூதனைந்தும் ஒன்றலோ*
*காதில் வாளி, காரை, கம்பி, பாடகம், பொன் ஒன்றலோ*
*சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?" .....(5)*
*(சிவவாக்கியர் சித்தர் பாடல்கள்)*

இதே கருத்தை பின்னால் வந்த வள்ளல் பெருமானும் "ஒன்றே குலம்" என்பதை வலியுறுத்திக் கூறினார்.

**சித்தர் முறை:**

சித்தர்கள் வழிப்படி இவ்வுலகத்திற்கும் மனிதர் உடலுக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. உண்மையிலேயே மனிதன் அண்டத்தில் சிறிய உருவமே அல்லாது வேரல்ல.

ஒவ்வொரு பொருளிலும், ஐம்பூதக் கூறுபாடுகள் காணப்படுகின்றன. எவன் ஒருவன் இவ்வைம்பூத ரகசியங்களையும், கோட்பாடுகளையும் அறிகின்றானோ, அவன் ஓர் உலோகத்தை பிறிதொரு உலோகமாக மாற்றக் கூடியவன்.

இரண்டாவதாக, நோய்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்தார்கள். அவை வலி, அழல், ஐயம் என்பனவாகும். மனிதனின் குணங்களும், இம்முப்பிணிகளும் பிரிக்க இயலாது. சித்தர் பதார்த்தகுண நூலும், இம்முப்பிணியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

உடல் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்துகொண்டு, உயிர்க்காற்றை, சுவாசத்தின் மூலம் உட்கொண்டுள்ள போதுதான் அவன் தன்னுடைய செயல்களைத் திறம்பட செயல்படுத்த முடிகிறது. மூச்சு இல்லாவிடில் உயிர் இல்லை. இதன் முக்கியத்துவம் கருதி சித்தர்கள், தங்களுடைய மாணாக்கர்களுக்கும், மக்கட்கும் சரப்பயிற்சியின் (பிராணாயாமம்) முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி நோய் வராமல் பாதுகாக்கவும், வந்த நோயை போக்கவும் வழிவகை செய்தார்கள்.

நான்காவதாக வாதமுறை தெரிந்து இருந்தால்தான் ஒருவன் மருத்துவனாக இருக்க முடியும் என்பதை தெளிவாகத் தெரிந்திருந்தார்கள். எனவே குறைந்த மதிப்புள்ள உலோகங்களை உயர்ந்த மதிப்புள்ள தங்கம் போன்ற உலோகங்களாக மாற்றி, மக்கள் நோய்களைப் போக்கி வந்தார்கள். பொருளுக்காக ஒருபோதும் இரசவாதத்தை அவர்கள் செய்ததில்லை. எனவே தான் வாதிமகன் வைத்தியன் என்பது பழமொழியாக விளங்குகிறது.

சித்தர்களுக்கு மரணத்தைப் பற்றிய பயம் இல்லாது இருந்தது. அவர்கள் தங்களுடைய சித்துக்களால் மரணத்தை வென்றவர்களாகத் திகழ்ந்தார்கள்.

கடைசியாக மந்திரத்தால் பலநோய்களையும் போக்கி வந்தார்கள். எனவே இப்பேரருளுடைய அறிவுடைய சித்தர்கள்

பலவழிகளிலும் மக்களைச் சீர்படுத்தி, சரியான வழியில் நடத்திச் சென்றார்கள்.

**பதினெண் சித்தர்களும் சமாதிகளும்:**

சித்தர்களில் சிறப்பாக பதினெண்மரைக் குறிப்பிடுவர். அவர்கள் நந்தி, அகத்தியர், திருமூலர், பிண்ணாக்கீசர், புலத்தியர், பூனைக்கண்ணன், இடைக்காடர், போகர், புலிக்கையீசர், கருவூரர், கொங்கணர், காளங்கி, அழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி, தேரையர், கும்பமுனி, தட்டநாதர் என்பவர்களாவர்.

இச்சித்தர்களுக்கும் தமிழகத்திலுள்ள முக்கியமான கோயில்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும், சில கோயில்களில் அவர்களுடைய சமாதிகள் இருப்பதாகவும் தெரிகிறது. அவைகளில் சில:

| | | |
|---|---|---|
| தில்லைச் சிதம்பரம் | - | திருமூலர் |
| அழகர் மலை | - | இராமதேவர் |
| திருவண்ணாமலை | - | இடைக்காடர் |
| வைத்தீஸ்வரன் கோயில் | - | தன்வந்திரி |
| மாயவரம் | - | குதம்பைச் சித்தர் |
| திருவாரூர் | - | கமலமுனி |
| பழநிமலை | - | போகர் |
| திருப்பரங்குன்றம் | - | மச்சமுனி |
| திருப்பதி | - | கொங்கணர் |
| கரூர் | - | காங்கேயர் |

சித்தர்கள் பலர், பல இடங்களில் தோன்றி, மக்களுக்குச் சேவை செய்து வந்தார்கள் என்பது தெளிவு. அப்பெருமக்களில் ஈரோடு மாவட்டத்தில் சிறந்து விளங்கியவர்கள் இருவர். அவர்கள் 1. கொங்கணர், 2. பிள்நாக்குச்சித்தர் (பிண்ணாக்குச்சித்தர்)

**கொங்கணர்:**

இவர் அகத்தியருடைய மாணவர் என்பது அகச்சான்றுகளால் தெரியவருகிறது. இவர், ஞான, யோக நூற்களோடு இரசவாதம் பற்றிய நூல்களும் அதிகமாகச் செய்துள்ளார் என்பதற்கு நூல் ஆதாரங்கள் பல இருக்கின்றன. தன்னுடைய அறிவுத் திறனால் குறைந்த மதிப்புள்ள தாமிரத்தை, அதிக மதிப்புள்ள தங்கமாக மாற்றி, அதை மருந்தாக்கி, மக்கள் பிணிபோக்கியுள்ளார். இவருடைய பெயரைக் கொண்டே இவர் கொங்கு நாட்டுக்குச் சொந்தமானவர் என்பது தெள்ளத்தெளிவாகும். இவர்

காங்கேயத்திற்கு அருகிலுள்ள பொன் ஊதியூர் என்ற மலையில் வசித்து வந்ததாகவும் இங்கு இருக்கின்ற, சில மூலிகைகளைக் கொண்டு இரசவாதம் செய்தவர் என்றும் பலர் கூறுகின்றனர். இவர் இரசவாதம் செய்த காரணத்தினாலேயே இவ்வூருக்கு பொன் ஊதியூர் எனப் பெயர் வரலாயிற்று. இன்றும் அம்மலையில் குகையும் கொங்கணர் கோயிலும் இருப்பதைக் காணலாம். மலையின் உச்சியில் குகை உள்ளது. குகையின் உள்ளே புகுந்து பார்த்தால் துருத்தி வைத்து உலோகங்களை உருக்கியதற்கான அடையாளங்கள் அங்கே காணப்படுகின்றன. உள்ளே அமர்ந்து, தொடர்ந்து இரசவாதம், செய்வதற்கு ஏற்றவாறு மழை, வெய்யில், குளிர் ஆகியவைகளின் தாக்கம் இல்லாதவாறு அக்குகை அமைந்துள்ளது. அதற்கு இரண்டு வழிகள் உள்ளன. உள்ளே அமர்ந்து மருந்து அரைப்பதற்காக நன்கு செதுக்கப்பட்ட கல் ஒன்றும் அங்கு காணப்படுகிறது. இக்குகையானது இயற்கையிலேயே, கற்குன்றுகளால் அமைந்ததாகக் காணப்படுகிறது.

அதற்கு, ஒரு பர்லாங் தூரத்திலேயே, இக்கொங்கணருடைய கோயில் காணப்படுகிறது. இக்கோயில் சுமார் 3 அடி உயரத்திற்கு சமசதுரமான கற்களால் அமைந்த பீடத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பலநூறு ஆண்டுகளுக்கு முந்தியது என்று கூறுவர். கட்டடம் எழுப்பியது 200 ஆண்டுகளுக்கு முன்புதான் என்று தெரிகிறது. உள்ளே இருக்கிற கொங்கணருடைய சிலை அமர்ந்த நிலையில் உள்ளது. பிற்காலத்தில் வந்த ஆங்கிலேயர் இச்சிலையின் அடியில் இரகசியங்கள் இருக்கலாம் எனக்கருதி இச்சிலையைத் தூக்க முயன்று இருக்கிறார்கள். முடியாது போகவே முயற்சியை கைவிட்டுள்ளார்கள்.

இதன் பக்கத்தில் ஒரு கிணறு உள்ளது. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இடிவிழுந்ததால் உண்டான கிணறு. இக்கிணற்றில் இருந்துதான் கோயில் பூசைக்கு தண்ணீர் எடுக்கிறார்கள். இத்தண்ணீர் சுவையாக உள்ளது.

**மலைவிபரம்:**

ஊதியூர் மலை இராமாயணத்தோடு தொடர்புடையதாகக் கூறுகிறார்கள். அனுமன் எடுத்துவந்த சஞ்சீவி மலையின் ஒருபகுதி என்று கூறுவர் சிலர். இம்மலையில் உள்ள மூலிகைகளைக் கொண்டு செட்டித்தம்பிரான் என்ற வழிப்போக்கன் செப்பு நாணயத்தை ஊதி தங்கமாக மாற்றியதால் இதற்கு பொன் ஊதியூர் என்று பெயர்

வந்தது என்று கூறுவர். இம்மலை தாராபுரத்தில் இருந்து ஈரோடு செல்லும் வழியில் 21 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காங்கேயம் பகுதியைச் சார்ந்தது. இம்மலையானது மூலிகைகள் மட்டுமல்லாமல் விலை உயர்ந்த பல்வேறுபட்ட நிறக் கற்கள் உடையதாகக் காணப்படுகிறது. மேலும் கற்கால மனிதர்கள் பயன்படுத்திய சில பொருட்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். கடுமையான கோடையில் கூட மலைப் பகுதி குளிர்ச்சியாக இருக்கும். பொன்ஊதியூர் மலை 7 மலைப்பகுதிகளைக் கொண்டதாக இருக்கிறது. அவை உச்சிப்பிள்ளையார்கோயில் மலை, மொட்டைமலை, சுண்டைக்காய் தட்டிமலை, மோளமலை,, காணாச்சுனைமலை, பிராந்திக்கல் மலை என்பன ஆகும். இவைகளில் நம்மை வியப்பில் ஆழ்த்தும் மலை சுண்டைக்காய் மலையாகும். ஏனெனில் இது இந்த மலையின் உச்சியில் தனித்து நிற்பது போலத் தோற்றம் உடையதாக இருக்கும். கொங்கணச் சித்தர் அரசராக இருந்தபோது மலையில் வேட்டையாட வந்திருக்கிறார். அப்போது பிராணிகளை வேட்டையாடிவிட்டு அருவிநீரில் இரத்தத்தைக் கழுவியபின், அம்பைக் கழுவும்போது, அப்பிராணிகள் உயிர் பெற்று எழுந்து ஓடியதாகக் கூறுவார்கள். அதன்பின் அவர் அரசபதவியைத்துறந்து சித்தராக மாறி பொன்ஊதியூரிலேயே வாழ்ந்து வந்தார் என்றும் கூறுவார்கள்.

ஊதியூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் மரவபாளையம் பரமேசுவரர் கோயிலுக்கும், இம்மலைக்கும் தொடர்பு இருந்து வந்திருப்பதாகக் கூறுகிறார்கள். அக்காலத்தில் இவை இரண்டும் ஒரே வனமாக இருந்ததாகவும், மரவ பாளையத்தில் உள்ள அமராவதி ஆற்றின் மேல் துறையில் கொங்கணச் சித்தர் குளித்துவிட்டு ஊதியூர் வந்து இந்தக் கோயிலில் இருந்து தவம் செய்து வந்திருப்பதாகக் கூறுவர்.

இவருடைய சமாதி திருப்பதியில் உள்ளதால் இவர் எங்கெங்கு இருந்தாரோ, அங்கெல்லாம் மக்கள் கோயில் எழுப்பியிருப்பார்கள் என எண்ண இடம் இருக்கிறது.

**பிண்ணாக்குச் சித்தர்:**

குமரன் குடிகொண்டுள்ள சென்னிமலை என்னும் புண்ணியத் தலத்தில் அம்மன் கோயிலிலிருந்து மலை உச்சிக்குச் செல்லும் வழியில் இடப்புறமாக இருக்கும் கோயிலைச் சந்நியாசி கோயில் என்று அழைக்கிறார்கள்.

இக்கோயிலில் இருக்கும் சிலையும், அருகில் உள்ள குகையும், பிள்நாக்குச் சித்தர் (பிளவுபட்ட நாக்குடையவர்)

என்பவருடையதாகும். இவர் பதினெண் சித்தர்களில் ஒருவர் ஆவார். இச்சித்தர் மருத்துவம், யோகம், ஞானம் ஆகியவைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக்கூறி மக்களுடைய மனநோயையும், உடல்நோயையும் மிகுதியும் போக்கிச் சிறப்பு பெற்று இருந்திருக்கின்றார்.

இவர் மனநோயை அதிகம் போக்கியதால் மனநோயில் இருந்து விடுதலை பெற்ற மக்கள் தாங்கள் அணிந்திருந்த கை, கால் விலங்குகளைச் சித்தர்க்கு அர்ப்பணம் செய்திருப்பதை அனைவரும் அறிவார்கள். இந்த சித்தர் கோயில் வெகுகாலமாக இருந்ததாகவும், ஆனால் மண்டபம் சமீபகாலத்தில் கட்டியதாகவும் தெரியவருகிறது.

கோயிலின் இடதுபுறம் 10 அடியில் ஒரு பலிபீடம் அமைந்துள்ளது. அதில் 1½ அடிக்கு ஒரு கல் உள்ளது. அக்கல்லை 6 அடி தோண்டியும் அக்கல்லின் அடிப்பாகம் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் கல்லின் மீது நேர்த்திக்காக மிளகாய் வைக்கிறார்கள். முட்டையைப் புதைத்து வைக்கிறார்கள். கோயிலின் வலதுபுறத்தில் உள்ள சிறிய குகையின் நுழைவாயில் 4 அடி உயரம், 2 அடி அகலம் உள்ளதாகத் தெரிகிறது.

இது 30 ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் மூடப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் குகையின் ஆழத்தை கிட்டத்தட்ட 20 மூங்கில்களை ஒன்றன்பின் ஒன்றாகக்கட்டி ஆழம் பார்க்கப்பட்டதாகவும் ஆழம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிகிறது. இக்கோயிலில் பின்னாளில் சித்தரின் வம்சாவழியினர் பூசை செய்து வருகிறார்கள். மேலும் இங்கு வரும் பிணியாளர்களுக்கு மருந்தும் கொடுக்கிறார்கள்.

**சென்னிமலைக் கோயில்:**

சரவண முனிவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சென்னிமலை கோயிலில் தங்கினார் என்று கூறப்படுகிறது. எனவே இச்சித்தர் கோயிலும் அக்காலத்திற்கு முந்தியதாக இருக்கலாம் எனக் கருத இடம் தருகிறது. சென்னிமலைக் கோயிலுக்குக் கோமாரவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 13ம் நூற்றாண்டில் இந்த கோயிலுக்கான நிலம் ஒதுக்கியுள்ளார். சென்னிமலை முருகனைப் பற்றி அருணகிரிநாதர் பாடியுள்ளார். இச்சென்னிமலையிலும் பயன்தரும் மூலிகைகள் பல உள்ளன.

**சித்தர்கோயில் பற்றிய பிறச் செய்திகள்:**

இச்சித்தர்களின் கோயில்கள் தவிர இம்மாவட்டத்தில் வெள்ளக்கோயிலில் உள்ள வீரக்குமரன் கோயில் திருஉருவமும்

புற்றுமண்ணால் பதினெண்சித்தர்களால் உருவாக்கப்பட்டது. கோயில் மரம் கருங்கடம்பு ஆகும்.

சிவன்மலையில் உள்ள முருகன் கோயிலை 18 சித்தர்களில் ஒருவராகிய சிவவாக்கியர் நிறுவி வழிபட்ட தலம் எனக் கூறுகிறார்கள். இது அருணகிரிநாதரால் பாடல் பெற்றத் தலமாகும்.

பாரியூரில் உள்ள கொண்டத்துக் காளியம்மன் கோயிலில் ஒரு சித்தர் சமாதி உள்ளது.

**முடிவுரை:**

கொங்கு நாட்டில் ஒரு பிரிவாகத் திகழும் ஈரோடு மாவட்டம் சித்தர்கள் பலர் வாழும் இடமாகத் திகழ்வது இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதோடல்லாமல் அவர்கள் பயன்படுத்திய பல அரிய மூலிகைகள் இன்றும் கிடைப்பது இம்மாவட்ட மக்கள் செய்த நற்பயனேயாகும்.

மனவலிமை படைத்த சித்தர்கள் வாழும் பகுதியாகத் திகழ்கின்ற இப்பகுதியில் தோன்றி மறைந்த ஈ.வே.ரா. பெரியாரும் சித்தர்களைப்போல் மனவலிமையைப் பெற்றதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

**வேண்டுகோள்:**

நம் நாட்டில் தட்பவெப்ப நிலைக்குத்தக்கவாறு இயற்கையிலேயே கிடைக்கின்ற மூலிகைச் செல்வங்களை நோய்போக்கும் தன்மை கருதி அழிக்காமல் இருக்க அரசு மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும். ஆய்வு வல்லுநர்களும் இதை எடுத்துக்கூறிட வேண்டுகிறேன்.

**குறிப்புகள்:**

1. திருமூலர் - திருமந்திரம் (திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் - திருநெல்வேலி-6, 1969) ப. 1792.
2. அரு. இலக்குவன் - அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும் (மேலையூர் பூம்புகார் பேரவைக் கல்லூரி முதற்பதிப்பு 1980) அடைவுதிருத்தாண்டகம் ப. 368.
3. உ.வே. சுவாமிநாத அய்யர் - மணிமேகலை (பதிப்பாளர்) 24வது பகுதி ஆபுத்திரன் - காதை 46-47.
4. தாயுமான சுவாமிகள் பாடல் - (திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் வெளியீடு - 1963) 12 தேஜோமயானந்தம் ப. 8.
5. கோவேந்தன் (பதிப்பாசிரியர்) - சித்தர் பாடல்கள் (பூம்புகார் பிரசுரம், 15 மன்னார்சாமி கோவில் தெரு, சென்னை-13) சிவ வாக்கியர் ப. 42.
6. பெரியார் மாவட்ட முக்கியத் திருக்கோயில்கள் - இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு, ஈரோடு 15.3.1987.

# காளமங்கலம் குல விளக்கம்மன் கோயில்

ப. செல்வமணி, 9, புத்தர் வீதி, ஆசிரியர் குடியிருப்பு, ஈரோடு – 11.

*உலகத்தில் வாழும் மாந்தர் ஒவ்வொருவரும் தங்கள் பூர்வீக வரலாற்றைத் தெரிந்திருப்பது மிக அவசியம். தமிழகமானது தமிழர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த இடமாகும். இத் தமிழகத்தில் குடிச்சிறப்பும், கோயில் சிறப்பும், வாணிபமும், கைத்தொழிலும் விவசாயமும் கொண்டு வேளாளர் கவுண்டர் குடிகள் சிறந்து விளங்குவதும் கொங்கு நாடேயாகும். இக் கொங்கு நாடு மிகவும் பழமையானது. சேர, சோழ, பாண்டிய நாடு ஏற்பட்ட காலத்திலேயே சோழ வம்சத்தில் இருந்து பிரிந்தது கொங்கு வம்சமாகும். இக் கொங்கு நாடு அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்களால் போற்றப்படுகிறது. கொங்கு வேளாளக் குலத் தலைவனுடைய மகன் வம்சம் சோழ வம்சமென்றும், அவன் மருமகள் வம்சம் சேர வம்சமென்றும் ஏற்பட்டு, இவ்விரு வம்சக்கூட்டுறவிலிருந்து அறுபதிற்கும் மேற்பட்ட குலக்காணியாளர்கள் உண்டானார்கள் என்றும், வேளாள வம்சப் பரம்பரை வரலாற்று ஏடுகள் உரைக்கின்றன. கொங்கு நாட்டு முன்னோர்கள் ஒவ்வொரு குலத்திற்கும் தனித்தனியே நாடு, குலம், காணி, தெய்வம் ஆகியவற்றைப் பிரித்து அதற்கு உரிய முறையில் வழிநடத்தி வந்துள்ளமை மிகவும் சிறப்புடையதாகும்.*

**குலவிளக்கு அம்மன் கோயில்:**

*ஈரோட்டில் இருந்து கரூர் செல்லும் பாதையில் கணபதிபாளையம் என்னும் சிற்றூர் உள்ளது. அங்கிருந்து கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் காளமங்கலம் குலவிளக்கு அம்மன் கோயில் அமைந்துள்ளது. கோயில் மிகவும் இயற்கையான சூழ்நிலையில் அமைந்துள்ளது. காவேரி ஆற்றங்கரை ஓரமாக அமைந்துள்ளதால் பிரவாகக் காலத்தில் நீர் கோயிலைச் சுற்றிலும் தேங்கி நிற்கும். அம்மன் ஆற்றைப் பார்க்கும் முகமாக வடக்கே வாயில் உள்ளது. ஆற்றில் இருந்து அம்மன் சன்னதி வரையிலும் அகன்ற படிக்கட்டுகள் காணப்படுகின்றன. கோயிலைச் சுற்றி மிகப் பெரிய மதில் சுவர் உள்ளது. இக்கோயில் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் சோழர்கள் இக்கோயிலைக் கட்டினார்கள் என்றும் கூறுகின்றனர். இக்கோயிலுக்கு 72 ஏக்கர் நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது கோயிலை*

ஒட்டிய நந்தவனமும், புளியந்தோப்பும், தென்னந்தோப்பும் மட்டுமே உள்ளன.

அம்மன் சன்னதியில் அம்மன் சிலை தன் காலடியில் அரக்கனை மிதித்துக் கொண்டு தன் சூலாயுதத்தால் அவனைக் குத்திக் கொண்டு இருப்பது போல அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சன்னதி நுழைவாயிலில் இரண்டு துவாரபாலகர்கள் சிலை உள்ளன. அம்மன் சன்னதியின் பக்கவாட்டில் நல்லாத்தாள் சன்னதியும், கருப்பண்ணசுவாமி சன்னதியும் உள்ளன. இவ்விரு சன்னதிகளுக்கும் இடையே பெரிய குதிரை மற்றும் யானை உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அம்மனுக்குக் கிடா வெட்டுவதில்லை. ஆனால் கருப்பண்ணசாமிக்கு கிடா வெட்டி பொங்கல் வைக்கின்றனர். அம்மன் கோயிலை ஒட்டி ஈசுவரன் கோயிலும் பெருமாள் கோயிலும் உள்ளன. ஈசுவரன் கோயிலில் விநாயகர், ஈசுவரர், பூலோகநாயகி அம்மையார், கல்யாண முருகன், துர்க்கை அம்மன், சந்திரன், நாயன்மார்கள், நவக்கிரகங்கள் ஆகியவை உள்ளன. பெருமாள் கோயிலில் அனுமார் மற்றும் பெருமாள் சுவாமிகள் உள்ளன.

காளமங்கலம் குலவிளக்கம்மன் கோயிலின் நிர்வாகம் முழுவதும் தர்மகர்த்தாவைச் சார்ந்தது. தர்மகர்த்தா பதவி பரம்பரையாக வருவது கிடையாது. ஆனால் இக்கோயிலின் தர்மகர்த்தாவாக உள்ளவர் கள்ளன் குலத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். கோயிலின் நடைமுறை, சுத்தம், ஒழுக்கம் எல்லாம் இவர் மூலமாகக் கவனிக்கப்படுகின்றன. அம்மனுடைய பொருட்கள் இவருடைய பாதுகாப்பில்தான் உள்ளன.

அம்மனுக்கு அர்ச்சனை செய்வதற்கு ஆதிசைவர் உள்ளனர். பூஜை செய்வதற்கு பண்டாரங்கள் உள்ளனர். இங்கு ஆதி சைவர் அர்ச்சனை மட்டுமே செய்கின்றனர். தீபாராதனை செய்வது பண்டாரம் ஆகும். இப்பண்டாரங்கள் பரம்பரையாக இக்கோயிலுக்குப் பூஜை செய்து வருகின்றனர். கோயிலுக்கு எட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த பண்டாரங்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் முறையே எட்டு நாட்கள் பூஜை செய்யும் முறை உள்ளது. இவர்கள் அம்மனுக்கு இரண்டு வேளையும் படி வைத்துப் பூஜை செய்ய வேண்டும். அம்மனுக்குக் காலை, மாலை இருகால பூஜை தினமும் நடைபெறுகிறது. இவர்கள் தங்கள் முறையின்போது இரவு பகல் எப்போழுதும் கோயிலில் இருக்க வேண்டும். கோயிலுக்குள் இருக்கும் பொருட்களைப் பாதுகாப்பதும் இவர்கள் கடமையாகும்.

இவர்களுக்கு கோயில் எந்த மானியமும் கொடுப்பது இல்லை. கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் செலுத்தும் காணிக்கைதான் இவர்களின் வருமானம் ஆகும். அடுத்து, ஆதி சைவர் இக்கோயிலில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இவர்கள் பரம்பரையாக வருபவர்கள் அல்ல. இவர்கள் இரு குடும்பத்தினரே இருக்கின்றனர். இவர்கள் முறையே 15 நாட்கள் இக்கோயிலில் அர்ச்சனை செய்ய வேண்டும். மீதி 15 நாட்கள் இக்கோயிலைச் சார்ந்த ஈசுவரன் கோயிலில் பூஜை செய்கின்றனர். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐயங்கார், பெருமாள் கோயிலுக்கு உண்டு. அவர் எப்போழுதும் அக்கோயிலைப் பராமரித்து வருகின்றார். இவர் அம்மன், ஈசுவரன் கோயில்களுக்குப் பூஜை செய்வது கிடையாது. கோயிலில் ஒரு துப்புரவுத் தொழிலாளியும் உண்டு.

**திருவிழா:**

இக்கோயிலின் திருவிழா பன்னிரெண்டு நாட்கள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. இத்திருவிழா ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் நடைபெறுகின்றது. திருவிழா செவ்வாய்கிழமை பூச்சாட்டு விழாவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திங்கட்கிழமை பிரமானை (உத்சவமூர்த்தி கோயில் வலம் வருதல்) என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின் செவ்வாய் அன்று முப்பாட்டு மாவிளக்கு, வேட்டுவ குலத்தினர்களால் எடுத்து வரப்படுகிறது. ஆனால், ஏன் வேட்டுவ குலத்தவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதற்குத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. புதன்கிழமை பொங்கல் சிறப்பாக வைக்கப்படுகிறது. அப்பொழுது பூதகவளம் என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அப்பொழுது ஒருவருக்கு அருள் வந்து அவர் வாயில் பழத்தை வைத்துக் கொண்டு ஆடிக்கொண்டே வருகின்றார். குழந்தை இல்லாதவர்கள் மடி ஏந்தி நிற்கின்றனர். இவர் யார் மடியில் அப்பழத்தைப் போடுகின்றாரோ அவருக்குக் குழந்தை பிறக்கும் என்பது ஐதீகம். பிறகு வியாழக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. பின் வெள்ளி அன்று உத்சவமூர்த்தியை ஊஞ்சலில் வைத்து கோயிலுக்குப் பரம்பரையாக இருந்து வரும் தேவதாசி பாடல்கள் பாடி ஊஞ்சல் ஆட்டு விழாவை நடத்துவார். பிறகு உத்சவமூர்த்தி சத்தாவரம் செல்லும். பின் சனியன்று மஞ்சள் நீராட்டு விழாவுடன் திருவிழா இனிது நிறைவுபெறும்.

கள்ளன்குலத்திலேயே நல்லாத்தாள் சாமிக்குச்சாமி செய்து வழிபடுபவர்களும் உள்ளனர். அவர்களும் கள்ளன்

குலத்தவர்கள்தான். ஆனால் ஒரு பிரிவினர் சாமி செய்யும் வழக்கம் இல்லாதவர்களாக உள்ளனர். சாமி செய்யும் கணவனும், மனைவியும் ஐந்து நாட்கள் விரதமிருக்க வேண்டும். தினமும் ஒரு வேளை இரவுச் சாப்பாடு மட்டும் உண்ண வேண்டும். இப்படி மூன்று நாட்கள் விரதம் முடிந்தவுடன் நான்காம் நாள் இரவு கூடை நிறைய பணியாரங்கள் செய்து, கம்மஞ்சோறு சமைத்து வைப்பார்கள். விடிந்ததும் ராவுத்த சாமிக்குப் பொங்கல் வைத்துப்பூஜை செய்து, இரண்டு ஆடுகளைக் கொண்டு வந்து சாமி செய்யும் வீட்டு வாசலில் நிறுத்தித் தண்ணீர் தெளித்து, ஆடு துளுக்கியதும் பூசாரி குட்டி போடாத ஆட்டுக் குட்டியைச் சாமி செய்யும் வீட்டுக்குள்ளேயே வெட்டி, தோலையுரித்து சமைத்து வைப்பார். மற்ற ஆட்டையும் வெளியில் வெட்டி சமைத்துவைப்பார். பின் இரண்டு முக்காலி போட்டு, இரண்டு பேழை வைத்து அதனுள் சேலை, விறலி மஞ்சள், வெற்றிலைப் பாக்கு, கண்ணாடி, மாங்கல்யம், எலுமிச்சம் பழம், பூ இவைகளை வைத்து பூசாரி வாய்கட்டி பூசை செய்வார். இவைகளையும் சமைத்து கறிவகை, பணியாரம், கம்மஞ்சோறு ஆகியவற்றையும் வாசலில் வைத்து இரண்டு பெண் குதிரைகள் நிறுத்தி அவைகளுக்குப் பொட்டு, பூ அணிந்து மேளதாளத்துடன் பூசாரி பூசை செய்து குதிரையின் குளம்புக்குத் தீர்த்தம் விட்டு, மேலேயும் கொஞ்சம் வீசுவார். குதிரை துளுக்கும். பிறகு சீர் செய்து கொள்ளும், பெண்ணும், அவள் பங்காளி வீட்டுப் பெண்கள் இருவரும் சேர்ந்து இப்படைக்கலங்களை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் செல்வார்கள். கோயிலில் பூசை செய்து விரதம் விட்டு அனைவரும் உணவு உண்டு திரும்புவர். இதுவே சாமி செய்வது ஆகும்.

மேற்கண்டவாறு கள்ளன் குலத்துக் கோயிலாகிய காளமங்கலம் அம்மன் கோயிலில் நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புமாக நடைபெறுகின்றன. திருவிழா காலங்களிலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை நாட்களிலும் பக்தர்கள் திரளாக வந்திருந்து அம்மனைத் தரிசிக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குலத்தவர்களுக்கும் தனித்தனியே காணி இருப்பதாகவும், அவர்கள் எல்லோரும் தங்கள் காணியின் வரைமுறை சிறப்புப்படி இன்றும் வழுவாமல் நடப்பதையும் பார்க்கும்பொழுது நமக்கு வியப்பாக உள்ளது.

# குன்னத்தூர் - கோயில் கல்வெட்டுக்கள்

**ஆர். ரங்கராஜ், ஆய்வு மாணவர்,**
**பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்**

***முன்னுரை:***

*ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளயம் தாலுக்காவில் கோபி-செங்கப்பள்ளி சாலையில் கோபியிலிருந்து தெற்கே சுமார் 20 கி.மீ. தூரத்தில் குன்னத்தூர் உள்ளது. கல்வெட்டுக்களில் 'குன்றத்தூர்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாகக் குறிஞ்சி நிலப் பெயராகவே குன்றத்தூரினைக் கூறலாம்.*

*பழைய காலப் பெருவழியில் இந்த ஊர் அமைந்திருந்ததால் இது சிறந்த வாணிபத் தலமாகவும் இருந்திருக்கிறது. இடைக்காலத்தில் கி.பி. 13, 14-ம் நூற்றாண்டுகளில் பிற்காலப் பாண்டியராட்சியில் இவ்வூர் புத்தெழுச்சி பெற்றுக் காணப்படுகிறது. இங்கே கிடைக்கும் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை பிற்காலப் பாண்டியர் காலத்தவையே. குன்றபுரீசுவரர் கோயில், இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் முதலிய கோயில்கள் இங்கே உள்ளன. இவற்றில் இருக்கும் கல்வெட்டுக்களிலிருந்து அன்றைய அரசியல், சமூக அமைப்பு, அன்றையநிலை போன்றவைகளோடு வணிகம், வேளாண்மை, கொடை, பக்தி நெறி முதலியவற்றைப் பெறுகிறோம். இக்கல்வெட்டுக்களைப் பற்றி ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.*

***குன்னத்தூர்க் கல்வெட்டுக்கள்:***

*குன்னத்தூரில் குன்றபுரீசுவரர் கோயிலில் சிதைந்த கல்வெட்டொன்றும், இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் பத்துக் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.[1] தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் - முதல் தொகுதியில் ஒரு கல்வெட்டு வெளியிடப்பட்டுள்ளது.[2] இவையே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*

*கல்வெட்டுக்களில் தமிழ் மொழி பெரும்பான்மையும் சிறுபான்மை வடமொழியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்களும், தமிழ் எழுத்துக்களும் கலந்தே கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.*

**அரசியல்:**

வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களும், வீர வல்லாளன் என்ற போசள மன்னனும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர். கொங்குச் சோழர் ஆட்சி முடிந்து, பாண்டியர் எழுச்சி உருவாகும் போது போசளர்கள் அவர்களுக்குப் போட்டியாக வருகிறார்கள். அந்த மன்னர்களில் வீர வல்லாளன் கல்வெட்டு கிடைக்கப் பெறுகிறது.

கொங்குச் சோழர்களுக்கும், மதுரைப் பாண்டியர்க்கு மிடையில் திருமண உறவுகள் இருந்தன. அவ்வாறிருந்தமையால் கொங்குச் சோழர்களின் இறுதியிலாண்ட மூன்றாம் விக்கிரமன் சந்ததியின்றி இறந்து விடவே கொங்கு நாடு பாண்டியர் ஆளுகைக்கு உட்பட்டிருக்கலாம். பாண்டியர்கள் வலி குன்றும் போது போசளர்கள் 14-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டைத் தங்கள் கீழ்க் கொண்டு வந்தனர். இச்செய்தி 'அன்னூர் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சமூகம்:**

வெள்ளாளர், சிவப்பிராமணர், வணிகர் (வியாபாரிகள்) ஆகிய மூன்று குடிகளும் செல்வாக்குப் பெற்றிந்தமையைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**வெள்ளாளர்:**

வெள்ளாளர் குலத்தில் சாத்தந்தை, கணவாளர் ஆகிய இரு பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. சிவன் கோயில் கல்வெட்டில் சாத்தந்தை கூட்டப் பெயர் வருகிறது.

> 'குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாழன் கணவாளரில் உடையாண்டானான அழகப் பெருமாள் தாதன் பிள்ளை ஆண்டானான காலிங்க ராயன்'
>
> 'சாத்தன் கூட்டத்து கேசன் அம்பலத்தாடுவான்'

என இரண்டு பெயர்கள் கூட்டத்தோடு, குறிப்பிடப்பட்டுள்ளன.

**சிவ பிராமணர்கள்:**

கோயிலில் பூசைப் பொறுப்பிலுள்ள சிவபிராமணர்கள் 'நம்பிமார்கள்' என்றே கூறப்பட்டனர். வெள்ளாளர்களைக் கூட்டப்பெயரோடு கூறுவதைப் போல சிவ பிராமணர்களைக் கோத்திரத்துடன் குறிப்பிடுகிறார்கள். 'பாரத்வாஜி திருவேங்கடதாசன் அழகப் பெருமாள்' என்பதிலிருந்து 'பாரத் வாஜி'

என்ற சிவ பிராமணர் கோத்திரத்தை உணரமுடிகிறது. கோயில் கொடை நடத்தச் சிவ பிராமணர்களிடம் மட்டுமே காசுக்கொடை தரப்பட்டுள்ளது. அதை வாங்கி 'நேர்த்திக் கடனை' சந்தியா தீபமோ, நந்தா விளக்கோ ஏற்றுவதன் மூலம் நிறைவேற்றுகிறார்கள். 'பட்டன்' என்ற சாதிப்பெயருடன் சில பெயர்கள் (சுரசாரீர பட்டன், மேகபட்டன், தருநடமாடிப் பட்டர்) குறிப்பிடப்பட்டுள்ளன.

'குடங் கொண்டு கோயில் புகுவார்' என்பது கருவறை வரை சென்று இறைவனுக்கு நீராட்டிப் பூசை செய்யும் சிவ பிராமணர்களைக் குறிப்பதாகும்.

**வியாபாரிகள்:**

விசய மங்கலத்திலிருந்தும், திங்களூரிலிருந்தும் வணிகர்கள், இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுக்குக் கொடை வழங்கியுள்ளனர். விசய மங்கலத்திலிருந்து திருவன் சுந்தரப் பெருமாள், பொன்னம்பலக் கூத்தன், மணிய சூரியன் என்ற வியாபாரிகளும் திங்களூரிலிருந்து சீராளன் சொக்கக் கூத்தனான அஞ்சேல் என்ற பெருமாள், பெரியாளாள் போன்றோரும் இவர்களுடன் குன்றத்தூர் வியாபாரி அழகிய தேவகிளியும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

காங்கய நாட்டு வியாபாரி அளித்த கொடை பற்றியச் செய்தியைக் குன்றபுரீசுவரர் கோயில் கல்வெட்டில் காணுகிறோம்.

மலைமண்டலத்து எறாளபுரத்து உமையன் என்ற சேர மண்டலத்து வியாபாரி சந்தியா தீபத்துக்கென வழங்கிய கொடை பற்றியச் செய்தி இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபத்திலுள்ள கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

**பிறர்:**

பாண்டி மண்டலத்து விசையங்குடி அரையன் சூரிய தேவனான குவலையத்தரையனுக்காக இங்கே சந்தியா தீபம் எரியக் கொடை கொடுத்துள்ளனர்.

சோழ மண்டலத்துத் திருஞான சம்பந்தனுக்காகப் பணம் இருபத்திநாலு சந்தியா தீபம் இரண்டினுக்காகக் (ஒரு சந்தியா தீபத்திற்குப் பணம் பன்னிரெண்டு என்ற கணக்கில்) கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

முகுந்தனூரான விக்ரமச் சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையினர் கோயில் ஐயந்தித் திருநாள் நைவேத்தியம் செய்ய ஆண்டு

தோறும் எண்கலம் நெல் கொடையளித்தச் செய்தியும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

**வணிகத் தலங்கள்:**

தாளூன்றி என்ற விக்ரமச் சோழபுரம், விசயமங்கலம், திங்களூர், முகுந்தனூர் (இன்றைய சர்க்கார் பெரியபாளையம்) போன்றன வணிகத் தலங்களாக இருந்தன.

'தாளூன்றி' யான விக்ரம சோழபுரம் என்பது வணிகத்துக்குரிய இடமாக மாறியதைக் குறிக்கிறது. ஊரின் பெயரை இவ்வாறு மாற்றிக் கூறுவதுமுண்டு. 'புரம்' என்பது வணிகம் சிறக்குமிடத்தைக் குறிக்கும்.

**நீர்ப்பாசனம்:**

அணை கட்டிய செய்தியை இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டு கூறுகிறது. விக்ரம சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபை அந்த ஊரில் அணைகட்ட, இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலின் நிதியிலிருந்து (ஸ்ரீபண்டாரத்திலிருந்து) 200 பணம் கடன் பெற்றுள்ளது. அந்தப் பணம் இருநூற்றுக்கும் ஆண்டு தோறும் கோயிலுக்குப் பதின்முக்கலம் நெல்லும், பணம் இருப்பத்தியாறும் செலுத்த உறுதியளிக்கிறது. விளைந்தாலும், விளையாவிட்டாலும் இதைச் செலுத்த வேண்டும் என்று உறுதியளிப்பது எண்ணத்தக்கது.

அணையைக்கட்டி அதனை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கிய தன்மையும், சபை பொறுப்பேற்று அணை கட்டிய நிலையும் அன்றைய சமூகப் பொறுப்பினை உணர்த்துகிறது.

**குடியாட்சி:**

ஊராட்சி முறை எல்லாம் எல்லோரையும் கலந்து செய்த பணியினை அணை கட்டியச் செய்தியில் பெறலாம்.

சபை எனில் சதுர்வேதி மங்கலத்தையே குறிக்கும். சதுர்வேதி மங்கலம் என்பது பிராமணர்களுக்கு முற்றூட்டாக அளிக்கப்பட்ட ஊராகும். 'ஊரும், ஊராளியும்' என்பதிலிருந்து உழுதுண்போராகிய ஊராளிகளை அறிகிறோம். நாட்டோர் 'உழுவித்துண்போராக'க் கருதப்படுவார்கள். நகரத்தார் எனில் வணிகர்களையே குறிப்பிடுகிறது. ஸ்ரீ வைணவர்கள் கோயில் நிர்வாக அதிகாரிகளாகக் கூறப்படுபவர்கள் ஆவர்.

குடியாட்சி அமைப்பு முறையை இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சமூக பொறுப்போடு அவை இயங்கிய தன்மையையும் அறிகிறோம்.

**குறுப்பு நாடு:**

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் குறுப்புநாடு கொங்கு நாட்டின் 24 (இருபத்து நான்கு) நாடுகளுள் ஒன்றாகும். மேற்கே வடபரிசார நாட்டையும், கிழக்கே பூந்துறை நாட்டையும், வடக்கே வடகரை நாட்டையும், தெற்கே காங்கய நாட்டையும் எல்லையாகக் கொண்டது. முதலில் தேவாரத்தில் 'கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்' என்று குறிப்பிடப்படுகிறது. 'குறும்பு' என்பது இங்கே குறுப்பு நாடு ஆகும். குறும்பு என்றால் அரண், கோட்டை, சிற்றரசு எனலாம்.

வெள்ளரி வள்ளியை, 'காடு பிடித்தழித்துக் கொண்ட வெள்ளரி வள்ளி' என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது. காட்டினைப் பிடித்து எரியூட்டி உருவாக்கிய வெள்ளரி வள்ளியைக் கொடையாக இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுக்குக் கொடுத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

வெள்+எரி+வள்ளி எனக் கூறலாம். நெருப்பால் எரித்து உருவாக்கப்பட்ட வள்ளி என்பதே பொருள். இவ்வாறு உருவாக்கப்பட்ட ஊர்களாக செலக்கரிச்சில், புத்தெரிச்சில், நெருப்பெரிச்சில், எரிச்சில் பொழில் வாய்ச்சி போன்றனவற்றைக் கூறுவர். குன்னத்தூர்க் கல்வெட்டின் சிறப்புச் செய்தியாக இதனைக் கூறலாம். 'வெள்ளெரி வள்ளி' என்பதே இதன் சரியான பாடம் எனலாம். குன்னத்தூரிலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் 'வெள்ர வழி' என்ற ஊர் இன்றும் உள்ளது. அந்தச் சிற்றூரே 'வெள்ளெரி வள்ளி'யாக இருக்கலாம்.

**மண்கலம் கொடுத்து.....**

குறுப்பு நாட்டு வியாபாரிகளும், விக்ரமச் சோழபுரத்து நகரத்தாரும் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுக்குக் கொடையளிக்கின்றனர். ஆண்டு தோறும் அதைச் செலுத்த வேண்டும்.[3] அப்படிச் செலுத்தத் தவறினால் இவர்களுக்கு மண்கலத்தினைக் கொடுத்து வீட்டிலுள்ள வெண்கலத்திலாலானப் பாத்திரங்களைப் பறிமுதல் செய்து கொள்ள உறுதியளிக்கின்றனர். 'மண்கலம் தகர்த்து வெண்கலம் எடுத்து' என்று கூறுவது பறிமுதல்

செய்வதில் ஒருபடி மேலானது. இதனை முருங்கத் தொழுவுக் கல்வெட்டில் காணுகிறோம்.[4]

வீரபாண்டிய விண்ணகரம்' என இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலைக் குறிப்பதால் வீரபாண்டியனே இக்கோயிலைக் கட்டியிருக்கலாம்.

சேர, சோழ, பாண்டிய மண்டலங்கள் மூன்றும் குறிக்கப்படுகின்றன. காங்கய நாடு, குறுப்பு நாடு, கருங்குடி நாடு, வெள்ளா நாடு, வள நாடு, திருக்கழுமலை வளநாடு போன்ற சிறு நாட்டுப்பிரிவுகள் இக்கல்வெட்டில் காணப்படுகின்றன.

**முடிவுரை:**

குன்னத்தூர்க் கல்வெட்டுக்கள் அரைநூற்றாண்டுக் கால இடைவெளியில் எழுதப்பட்டவை. இக்காலக்கட்டத்தில் அவ்வூர் நிர்வாகத்திலும், பொருளாதாரத்திலும் சிறப்புற்றிருந்ததை இக்கல்வெட்டுக்கள் வலியுறுத்துகின்றன. கொங்குச் சோழர் வீழ்ச்சியடைந்து பாண்டியராட்சியில் கொங்கு நாடு வந்த பின்பு புதிய நீர்ப்பாசன வசதியையும், பழைய நீர்ப்பாசனங்களைச் செம்மைப்படுத்திச் செய்ததையும், வணிக வளர்ச்சியில் பாண்டியர் காட்டிய ஈடுபாட்டினையும் இக்கல்வெட்டுக்களால் அறிகிறோம். குன்றத்தூர் இப்பாண்டியர்களுக்கு முன்னும் அவர்களுக்குப் பின்னும் செல்வாக்கடைந்ததற்கானக் கல்வெட்டுக்கள் ஏதும் கிடைக்கவில்லை.

**குறிப்புகள்:**

1. இக்கல்வெட்டுக்கள், கோவை - தொல்பொருள் ஆய்வுத்துறைக் காப்பாட்சியரிடமிருந்து பெறப்பட்டன.
2. S.I.T.I. Vol. I. No.: 249.
3. S.I.T.I. Vol. I. No.: 249.
4. தகவல்: ஆர். பூங்குன்றன், கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் துறை, கோயம்புத்தூர்

# கூவலூர்த் திருக்கோயில்கள்

புலவர் பொன். முகிலன், கூகலூர்

*கொங்கு நாட்டின் இருபத்து நான்கு நாட்டுப் பகுப்பினுள் ஒன்று காஞ்சிக் கூவல்நாடு என்பது. இதனைக் காஞ்சிகோயில் நாடு எனக் குறிப்பிடும் வழக்கமும் உண்டு. எனினும், காஞ்சிக் கூவல் நாடு என்பதே பொருத்தமானதாகும்.*

*காஞ்சிக் கூவல்நாட்டுப் பகுதியின் தலைநகர் கூவலூரே. அன்றைய பாரியூரும் இன்றைய கோபிசெட்டிப்பாளையமும் காஞ்சிக்கூவல் நாட்டுப் பகுதியைச் சேர்ந்த ஊர்களே. சுற்றிலும் பல ஊர்களைக் கொண்டு, கூவலூர் அன்று நடுநாயகமாக அமைந்திருந்தமையால் இதற்கு நடுவூர், நட்டூர் எனவும் பெயர்கள் அமைந்தன.*

*இந்த அடிப்படையில்தான் இங்கு எழுந்தருளியுள்ள சிவ பெருமானின் பெயர் நட்டூராண்ட நாயகர், நடுவூர் நாயகர், நடுவூறல் நாயகர் என்பன போன்ற பெயர்கள் வழங்கி வந்துள்ளன.*

*கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் நட்டூராண்ட நாயகர் என்னும் பெயர்தான் உள்ளதேயன்றி, இப்பெயரில் சமஸ்கிருத மொழிபெயர்ப்பான மத்தியபுரி ஈஸ்வரர் என்னும் பெயர் இல்லை. பிற்காலத்தில்தான், நட்டூராண்ட நாயகர் என்னும் நல்ல தமிழ்ப் பெயரைச் 'சமஸ்கிருத' மொழியில் மாற்றி வழங்கியுள்ளனர்.*

*கூவல் என்னும் பெயரடியாகப் பிறந்த கூவலூர் என்னும் பெயரில் உள்ள கூவல் என்னும் சொல்லிற்குச் சிறிய கிணறு என்பதே பொருள். எனவே, கூவலூர் என்பதற்குக் கிணற்றூர் என்பது பொருளாகிறது. இங்கு வீடுதோறும் கிணறுகள் அமைந்துள்ளமை இந்த பெயரின் பொருத்தத்தை மிகத் தெளிவாகப் புலப்படுத்துக்கின்றது.*

*மேலும், அக்காலத்தில் சிறந்த இலக்கியம் படைத்த கொங்குவேள் தமது மாக்கதையில் அதாவது பெருங்கதையில் கூவலூரின் நீர்வளச் சிறப்பினை மனதுள் கொண்டு பாடிய பாடல் அடிகள் மிகச் சிறப்புடையன.*

*"மாரி மருங்குற வற்றினும் மகவயின்*
*நீர்வளம் சுருங்கா நெற்றித் தாரைக்*
*கூவலும் பொய்கையும் கோயில் வட்டத்து*
*எவ்வழி வேண்டினும் அவ்வழிக் காட்டும்"*

*- பெருங்கதை 3,12: 3, 16*

என்னும் இப்பாடல் அடிகளால் கோயிலைச் சுற்றியே அக்காலக் கூவலூர் இருந்தது என்பதையும், மழைபெய்யாமல், எங்கும் நீர்வற்றிய காலத்திலும் கூவலூர் கோயில் வட்டத்தினைச் சுற்றிலும், அதாவது கூவலூரில் மட்டும் எங்கு வேண்டினும் நீர் நெற்றித் தாரை போலச் சுரந்துவரும் தன்மையும் இலக்கிய நயத்துடன் இயம்பியுள்ளார் கொங்குவேள்.

இன்று, கோயில் ஊருக்குப் புறத்தேயும் வயல்களை ஒட்டியும் அமைந்திருக்கிறது. ஆயின், அன்று ஊருக்கு நடுவில்தான் அமைந்திருந்தது. பகைவரின் படையெடுப்பாலோ, கொள்ளையடிப்பாலோ, மக்கள்தான் இடம்பெயர்ந்து இன்றுள்ள கூவ(க)லூர்ப் பகுதியில் குடியேறியுள்ளனர்.

முன்பு கோயிலைச் சுற்றியே மக்களின் குடியிருப்பும், கோட்டையும் அமைந்திருந்தது என்பதை வயலாய் மாறிவிட்ட கோயிலைச் சுற்றிய பகுதிகளில் இன்றும் அதன் அடிச்சுவட்டைக் காணமுடிகிறது.

எனவே, காஞ்சிக் கூவல் நாட்டின் தலைநகராய், நடுவூராய்த் திகழ்ந்த கூவலூர், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வரலாற்றுச் சிறப்பெய்திய ஊராகத் திகழ்ந்திருந்தமையை உணரலாம். இதனை மெய்ப்பிக்கும் முறையில் மூன்று பழமையான கல்வெட்டுகளும், அண்மைக் காலத்துக் க்ல்வெட்டுகள் இரண்டும் கோயிலில் உள்ளன. அக்கல்வெட்டுக்கள் காட்டும் செய்திகளைக் காண்போம்.

**பழமையான கல்வெட்டுக்கள் மூன்று:**

1. பேரரசனாய்த் திகழ்ந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இரண்டாம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1217) கல்வெட்டில் சந்தியாதீபம் வைக்க நிலம் இறையிலியாக - மானியமாகக் கொடுத்தச் செய்தி உள்ளது. இக்கல்வெட்டில் சிவ பெருமான் பெயர் நட்டூரான்ட நாயகர் எனவும், சொக்காண்டார் எனவும் இரு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளச் செய்தியை அறிகின்றோம். பாண்டியரின் ஆட்சிக்காலமாதலால், பாண்டிய மன்னனின் தலைநகராகிய மதுரையில் வீற்றிருக்கும் சிவ பெருமான் பெயர் சொக்கன், சொக்காண்டார் எனச் சுட்டப்பட்டுள்ளது. பூந்துறை நாட்டுக் கொங்கு வேளாளர்கள் கூவலூர் இறைவனுக்கு நிலம் மானியமாகக் கொடுத்தது பற்றிய செய்தியைக் கூறும் கல்வெட்டு இது.

2. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1225) பொறிக்கப்பட்ட கல்வெட்டு இது இதில் குறிப்பிடப்படும் செய்திகள் பற்றி அறிய கல்வெட்டின் முழுப் பகுதியும் கிடைக்கவில்லை. தொடக்கப்பகுதி மட்டுமே உள்ளது.

3. போசள மன்னனாகிய வீர வல்லாளதேவரின் ஆட்சிக் காலக் கல்வெட்டு மூன்றாவது. இது சிவ பெருமானின் பூசைக்கும், விளக்கிற்கும் நிலம் தந்த செய்தி பற்றிக்கூறுகிறது. இந்தக் கல்வெட்டின் முழுப்பகுதியும் கிடைக்கவில்லை. கிடைத்த சிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டுதான் மேற்குறித்த கருத்து தெரிவிக்கப் பட்டது.

**அண்மைக் காலக் கல்வெட்டுக்கள் மூன்று:**

1. அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் இப்போது புதுப்பிக்கப்படுவதற்கு முன்பு இருந்த கோயில் கருவறை முன் மண்டப வெளிப்புறச் சுவர்ப்பட்டிகையில் இருந்த கல்வெட்டில். இரு வரிகள் மட்டுமே இருந்தன. அவை வருமாறு:

வரி: 1 கூன் ச வித்தாப உழிகஉ காஞ்சிக்கோவில் நாட்டுக்குச் சேர்ந்த

வரி: 2..............கான தருமம் மயிந்த மண்டபம் முக......க்கினு, சேனாதிப தி திருஉ...........

2. அருள்மிகு நட்டுராண்ட நாயனார் திருக்கோயிலின் முன் மண்டபத்தில் உள்ள கல்வெட்டு. இதன் காலம் கி.பி. 1919. இந்தக் கல்வெட்டு அழகான ஆசிரியப்பா இலக்கணத்தில் அமைந்த பாடல் கல்வெட்டாகும். இதனை இன்றும் யாவரும் நேரில் சென்று படிக்கலாம்.

**அருள்மிகு செல்லியாண்டியம்மன்:**

ஓரே தாய் ஓரே குலம்:

சக்தியை வழிபடும் சான்றாண்மைச் செயல் தொல்பழங் காலந்தொட்டே நிகழ்ந்து வருகிறது. சக்தி வழிபாட்டைச் சமய அடிப்படையில் சாக்தம் என்றும், மக்கள் வழக்கு அடிப்படையில் தாய் வழிபாடு என்றும் கூறுவர்.

உலகெங்கும் தாய்வழிபாடு நிகழ்ந்துள்ளதை வரலாற்று அகழ்வாய்வுகள் அறிவிக்கின்றன. சிந்து வெளி மக்கள் வழிபட்ட அன்னை வடிவ மண்சிலைகள் மொகஞ்சதாரோ, அரப்பாவில் கிடைத்துள்ளன.

சிந்துவெளியில் கிடைத்தது போலவே பாரசீகம், மொசப்படோமியா, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, சீப்ரு முதலிய பல்வேறு பகுதிகளிலும் அன்னையின் வழிபாட்டு வடிவங்கள் கிடைத்துள்ளன.

இதன்வழி உலகெங்கும் ஒரே தாய்வழிபாடு பண்டைக்காலமுதலே சிறந்திருந்ததை உணரமுடிகிறது. எனவே, உலக மக்கள் எல்லாம் 'ஒரே தாய் ஒரே குலம்' என்ற கோட்பாட்டில் அடங்குவர்.

**குமரிக் கண்டம்:**

நாட்டை, மொழியை, ஆற்றை, நிலத்தை தாயின் பெயரால் போற்றும் தகைமையுடையவர் தமிழர். உலகின் எந்தப் பெருநிலப் பகுதியின் பெயரும் தாயின் - பெண்ணின் பெயரைப் பெறாதிருக்கத் தமிழரின் தொல்நிலப் பகுதியான கண்டம் குமரிக் கண்டம் எனும் பெயரைக் கொண்டுள்ளது.

வளமையோடு இளமைப் பொலிவைச் சுட்டும் பெயராய்த் திகழுவது குமரி. அப்பெருநிலம் கடலுள் மூழ்கியதால் எஞ்சிய நிலத்தின் தென்முனையில் குமரித் தெய்வத்தை அமைத்து இன்றும் கொண்டாடி வருகின்றனர் தமிழர்.

எஞ்சிய இன்றையத் தமிழ்நாட்டில் சக்திக்கென ஏறத்தாழ 2500 திருக்கோயில்கள் உள்ளன. (அரசு 1961-ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி). பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் கொங்குநாடே சக்தி வழிபாட்டில் மிக்குயர்ந்து விளங்குவது புலனாகிறது.

**கொங்கு நாடு:**

இந்தியப் பெருநாட்டில் வேறு எப்பகுதியையும் விட பொன்னும், ஒளிவீசும் பல்வண்ண மணிக்கற்களும் உடைய நிலப்பகுதி கொங்கு நாடாகும். சில ஆய்வாளர்கள் வெவ்வேறு காரணங்கள் கூறினும், பொன்னையும், ஒளிக்கற்களையும் சுட்டும், 'கொங்கு'[1] (கொங்கு - ஒளிக்கற்கள், ஒளிவீச்சு) என்னும் பெயரே இந்நாட்டின் பெயராகவும் அமைந்துள்ளது என்பதே பொருத்தமானதாகும்.

கொங்கு நாடு அக்காலத்தில் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தன.

**24-நாடுகள்:**

என்றும் அழியாக் கல்வெட்டும், இலக்கியமும், வரலாறும் கொங்குநாடு 24-பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமையைக் குறிப்பிட்டுள்ளன. அந்நாடுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | பூந்துறை நாடு | 13. | ஒடுவங்க நாடு |
| 2. | தென்கரை நாடு | 14. | வடகரை நாடு |

| | | | |
|---|---|---|---|
| 3. | காங்கேய நாடு | 15. | கிழங்கு நாடு |
| 4. | பொன்கலூர் நாடு | 16. | நல்லுருக்க நாடு |
| 5. | ஆறை நாடு | 17. | வாழவந்தி நாடு |
| 6. | வாரக்க நாடு | 18. | அண்ட நாடு |
| 7. | திருவாவினன்குடி நாடு | 19. | வெங்கால நாடு |
| 8. | மண நாடு | 20. | காவடிக்க நாடு |
| 9. | தலைய நாடு | 21. | ஆனைமலை நாடு |
| 10. | தட்டய நாடு | 22. | ராசிபுர நாடு |
| 11. | பூவாணிய நாடு | 23. | காஞ்சிக் கூவல் நாடு |
| 12. | அரைய நாடு | 24. | குறும்பு நாடு |

**காஞ்சிக் கூவல் நாடு:**

இருபத்து நான்கு நாடுகளில் ஒன்றான காஞ்சிக் கூவல் நாடு - காஞ்சிக் கோயில் நாடு என்று சில ஏடுகளிலும், ஒன்றிரண்டு கல்வெட்டுகளிலும் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்தப் பெயர்கள் அந்தந்தப் பகுதியின் தலைநகரை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன.

அவ்வகையில் காஞ்சிக் கோயிலும், கூவலூரும், இந்நாட்டின் தலைநகராய் அமைந்திருக்க வாய்ப்புள்ளது, ஏனெனில், காஞ்சிக் கோயில் இந்நாட்டின் தென்கிழக்கு ஓரத்தில் அமைந்துள்ளது. ஆயினும் கூவலூரோ இப்பகுதி ஊர்களுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது.

அதனாலன்றோ, இங்கெழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு நட்டூரான், நடுவூரான், நட்டூராண்ட நாயகர் போன்ற பெயர்கள் அமைந்துள்ளன.

**கூவலூர்:**

காஞ்சிக் கூவல் நாட்டின் நடுநாயகமாகத் திகழ்ந்த அன்றைய கூவலூர் இன்று கூகலூர் என மருவி வழங்குகிறது. கல்வெட்டுக்களிலும் ஏட்டுச் சுவடிகளிலும் இவ்வூரின் பெயர் கூவலூர் என்றே அமைந்துள்ளமையை இன்றும் காணலாம்.

"கொங்கு மண்டல ஊர்த்தொகை" என்னும் பண்டைய நூல் ஒன்று காஞ்சிக் கூவல் நாட்டில் சிறத்திருந்த ஊர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | காஞ்சிக்கோயில் | 7. | முடச்சூர் |
| 2. | கூவலூர் (கூகலூர்) | 8. | கலிங்கயம் |
| 3. | கவுந்தப்பாடி | 9. | அழுக்கொளி |

| | | | |
|---|---|---|---|
| 4. | பாரியூர் | 10. | குளப்பலூர் |
| 5. | பெருந்தலையூர் | 11. | தாளூன்றி |
| 6. | பெரும்புலியூர் | 12. | அயிலூர் |

இப்பன்னிரு ஊர்களைச் சுட்டும் ஊர்த்தொகைப் பாடலின் முதலடியே

"பண்ணுதமிழ் இன்பஞ் சிறந்ததென்
காஞ்சிநகர்ப் பண்பான கூவலூரும்"

எனத் தொடங்குவதே கூவலூரின் தலைமைச் சிறப்பை உணர்த்துவதாகும்.

**அருள்மிகு செல்லியாண்டியம்மன்:**

இலக்கியச் சிறப்பு எய்தியுள்ள கூவலூரில் எழுந்தருளியுள்ள சக்தியே செல்லியாண்டியம்மன் என்னுஞ் செழும் பெயர் பெற்றுள்ளாள்.

காஞ்சியில் காமாட்சியாய், கவின் மதுரையில் மீனாட்சியாய், காசியில் விசாலாட்சியாய் பல்வேறு பெயர்கள் தாங்கி அருள்பாலிக்கும் அம்மை கூவலூரில் செல்லியாண்டியம்மனாய்ச் சிறந்தொலிக்கின்றாள்.

அம்மனின் இப்பெயர் இருசொற்கள் இணைந்து அமைந்தது. செல்லி, ஆண்டி என்பன அவை. இச்சொற்களின் செம்பொருளினை நோக்குவோம்.

செல் என்னும் வேர்ச்சொல்லுடன் பெண்பாலுக்குரிய 'இகர' விகுதி சேர செல்லி என்னும் பெயர் அமைக்கிறது 'செல்' என்னும் சொல்லுக்கு வினையடிப்படையில் பொருள் கொள்ள 'இயக்கம்' என்னும் பொருள் அமையும். இயக்கம் என்பது என்ன? சக்தி என்பது யாவரும் அறிந்ததே.

இனி, 'செல்' என்னும் வேர்ச்சொல்லிற்கு பெயரடிப்படையில் பொருள் நோக்கின் 'மதிப்பு' என்னும் பொருள் வரும். செல்வாக்கு, செல்வம் என்னும் சொற்களை எண்ணிப் பாருங்கள். எனவே, செல்லி என்னும் பெயர் மதிப்புடையவள்; நாம் மதித்துப் போற்றத்தக்கவள் என்னும் மதிப்பார்ந்த பொருளுடைய பெயராய் அமைவதை உணர்கிறோம்.

செல்லி என்னும் பெண்டிருக்கே உரிய இம்மதிப்புப் பெயரை, ஆடவரும் கொண்டிருந்தனர். அதுவும், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியம் இவ்வுண்மையைக் காட்டுகிறது.

அகநானூற்றின் 216-ம் பாடலில் செல்லிக்கோமான் என்னும் செழுந்தமிழ் மன்னனின் பெயர் கூறப்பட்டுள்ளது. அடுத்து ஆண்டி என்னும் சொல்லினை ஆராய்வோம். ஆண்டி என்பதன் வேர்ச் சொல் அல்லது முதல் நிலை ஆள் என்பது. இச்சொல்லின் இறுதியில் உள்ள 'இ' பெண்பால் விகுதி, 'ட்' என்னும் மெய்யெழுத்து விகுதியினை எளிதாக ஒலிக்க சாரியைக்குப் பதிலாக வந்து சேரும் எழுத்துப்பேறு.

ஆள் என்னும் வேர்ச்சொல்லின் 'ள' கர மெய் வருமொழி டகர மெய்யால் (டி) ளகரமாய்த் திரிந்தது. இது இலக்கண முறைமை. இலக்கண முறைமை என்பது மக்களின் வழக்கை-ஒலிப்பை நெறிப்படுத்தி அமைப்பது.

எனவே, மேற்குறித்த சொற்பகுப்பு அடிப்படையில் ஆண்டி என்பதற்கு ஆளுமை செய்பவள் என்பதே பொருள். இதன் பன்மடிப் பொருளாக - ஆகுபெயராகவே பற்றற்றவர், எதுவும் அற்றவர் முதலான பொருள்கள் தோன்றும்.

முடிபொருளாக இவ்விரண்டையும் இணைத்துக் கூறின் 'மதிப்பாளுமையுடையவள்' செல்லியாண்டி அம்மை என்பது தெளிவாகும். கொங்குநாட்டில் செல்லியாண்டிம்மனின் மூலப்பிடமம் உள்ள கோயில் மதுக்கரையில் உள்ள அம்மன் கோயிலே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மதுக்கரைப் பட்டயத்தின் அடிப்படையில் இக்கருத்தினை மொழிவர்.

தமிழ்நாட்டில் செல்லியாண்டியம்மையின் பெயர் இருவகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஒன்று மிகச் சுருக்கமாகச் செல்லியம்மன் என்றும், இரண்டாவது ஓரளவு சுருக்கமாக செல்யாண்டியம்மன் என்றும் வழங்குகின்றன.

அரசினரின் 1961-ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் செல்லியம்மன் என்னும் பெயரினை உடைய சக்தித் திருக்கோயில்கள் 70 உள்ளன.

செல்யாண்டியம்மன் என்னும் பெயரில் 61 திருக்கோயில்கள் உள்ளன. இப்பெயரால் கொங்கு நாட்டில் தான் 41 திருக்கோயில்கள் உள்ளன. கொங்கு நாட்டிற்கடுத்ததாகச் சோழநாட்டில் 19 திருக்கோயில்களும், பாண்டிய நாட்டில் தாமரைக்குளம் என்னும் ஊரில் மட்டும் ஒரு திருக்கோயிலும் உள்ளமையைக் காண்கிறோம்.

இக்கணக்கெடுப்பின் வழி செல்லியாண்டியம்மன் என்னும் பெயர் வழக்கு கொங்கு நாட்டிற்குரிய சிறப்புத் தன்மை என்பது புலானாகிறது.

**திருக்கோயில்:**

கூவலூரில் அமைந்த செல்லியாண்டியம்மன் திருக்கோயில் மக்கள் வழக்கில் அம்மன்கோயில் என்றே வழங்கப்படுகிறது. 'அம்மன் கோயில்' என்னும் மக்கள் வழக்கினுள் நட்டூராண்ட நாயகராகிய சிவபெருமான் கோயிலும், சுந்தரத்தோளுடையார் என்னும் பெருமாள் கோயிலும் அடங்கும். மதிப்பாளுமை மிக்க அம்மனின் சக்தி யாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் பாங்கினை 'அம்மன் கோயில்' என்னும் மக்கள் வழக்கு புலப்படுத்துகின்றது போலும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமையப்பெற்ற இவ்வம்மன் கோயில் முன்மண்டபத்தை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பெருமக்கள் திருத்தியமைத்தமையை இங்கிருக்கும் கல்வெட்டு சொல்லத் தொடங்குகின்றது.

ஆயின், இக்கல்வெட்டின் தொடக்கம் மட்டுமே கிடைத்ததால் அத்திருப்பணியைச் செய்தவர் யார் என அறிய இயலவில்லை.

இக்கோயிலைத் திருப்பணி செய்யவேண்டுமென்று ஊரிலுள்ள பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது.

கூவலூர் என்றாலே இன்று எல்லோரின் உள்ளத்திலும் இடம்பெற்றிருப்பவர் அண்ணல் வழிநடந்து, வள்ளுவர் வழிவாழ்ந்த அமரர் கே.கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள். பவானி கூடலில் திருப்பணி செய்து அரும்பெருந்திருப்பணிச் செம்மலாய்த் திகழும் அன்னாரின் திருமகனார்.சக்தி திரு. கே.எஸ். இராமசாமி அவர்கள் திருப்பணிக்குழுவிற்குத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர்களால் இக்கோயில் முழுமையும் திருப்பணி செய்யப்பெற்று, இன்று பேரழகு பெற்று விளங்குகின்றது.

**திருக்குட முழுக்குப் பெருவிழா:**

முழுமையும் திருப்பணி செய்யப்பெற்ற அருள்மிகு செல்லியாண்டியம்மனின் திருக்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா நிகழும் பிரபவ ஆண்டு பங்குனித் திங்கள் 14-ஆம் நாள் (27-3-88) அனைத்து சிறப்புகளுடன் நிகழ்ந்தது. இத்திருக்குடமுழுக்குப் பெருவிழா செம்மை நலம் அருளும் சித்தர் முறையில் நிகழ்ந்தது குறிப்பிடத் தக்க சிறப்புடையதாகும்.

# கோட்டமாளம் கோயில்

**பேராசிரியர் கோ. ரெங்கராஜுலு, தமிழ்த்துறை,**
**சிக்கைய நாயக்கர் கல்லூரி, ஈரோடு**

ஈரோடு மாவட்டம், தாளவாடி ஊராட்சி ஒன்றியம், திங்களூர் ஊராட்சியில் மலைப்பகுதியில் கோட்டமாளம் என்ற சிற்றூர் உள்ளது. அங்குள்ள கோயில் பற்றிய செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளன.

இவ்வூரின் நடுவில் மேட்டுப்பகுதியில் ஒரு பழமையான கோயில் உள்ளது. அது ஒரு வைணவக் கோயில் ஆகும். கண்ணனின் உருவம் வழிபாட்டிற்குரியதாக உள்ளது.

இக்கோயிலின் முன்புறத்தில் வெட்ட வெளியில் இரண்டு நாகப்பிரதிட்டைகள் காணப்படுகின்றன. நாகப் பிரதிட்டையில் இரண்டு நாகங்கள் பின்னிப் பிணைந்திருக்கின்ற வகையில் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு நாகங்களின் தலைப்பகுதியும் கூடுமிடத்தில் நடுவே ஒன்றில் கண்ணனின் நடனமாடுகின்ற உருவமும், மற்றொன்றில் லிங்க உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு நாகப்பிரதிட்டைகளும் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. வைணவமும், சைவமும் வேறுபாடின்றி வணங்கப்பட்ட முறை இதனால் தெளிவாகிறது.

இக்கோயில் பகுதியிலேயே நடுகல் ஒன்றும் காணப்படுகின்றது. அந்நடுகல் மூன்று பகுதியாக அமைந்து புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. கண்ணைக் கவருகின்ற வண்ணம் மிக அருமையாகச் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. நடுகல்லின் அடிப்பகுதியில் ஆண்மகன் ஒருவன் புலியுடன் போராடுவது போலவும், நாய் ஒன்று புலியைத் துரத்துவது போலவும் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. நடுப்பகுதியில் இரண்டு பெண்களுக்கு மத்தியில் ஆண்மகன் சிற்பமும் மேல் பகுதியில் சிவ லிங்க உருவமும் நந்தி உருவமும் ஆண்மகன் உருவமும் பெண் ஒருத்தியின் உருவமும் வடிக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்தை வணங்குவது போல மேல்பகுதி சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் பற்றிய கல்வெட்டும் உள்ளது.

காட்டுப் பகுதியில் வாழ்ந்த புலியுடன் பொச்ச காமிண்டன் மகனும், சின்ன காமிண்டன் தம்பியுமான பொகடி என்பவன் போரிட்டுப்புண்பட்டு மாண்ட செய்தியையும் அவன் பொருட்டு


சின்ன காமிண்டன் நடுகல் நாட்டி வணங்கிய செய்தியையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டின் மெய் எழுத்துகளில் புள்ளி வைத்திருக்கின்ற அமைப்பு இல்லை. ஏறத்தாழ பதினைந்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இப்பகுதி தமிழ்க் கல்வெட்டில் காமிண்டன் என்ற பெயர் பயின்று வருவது வியப்பிற்குரியது.

காமிண்டன் என்கின்ற வழக்கு கங்கர் காலத்து வழக்காகும். மிக வலிமையுள்ளவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# சங்கமேசுவரர் கோயில்

கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், தொல்லியல் துறை, திருச்சிராப்பள்ளி

தனக்கென ஒரு வரலாற்றுச் சிறப்பு உடையது கொங்கு நாடு. கொங்கு நாடு பண்டைக் காலத்தில் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்நாடுகளில் ஒன்றே வடகரை நாடு. பவானி ஆற்றின் வடகரையில் அமைந்திருப்பதால் வடகரை நாடு என்று பெயர் பெற்றது. இன்றைய பவானி வட்டத்தின் சமநிலப்பகுதி முழுவதும் 'வடகரை' நாட்டினுள் அடங்கியிருந்தது. இந்நாட்டின் தலைநகர் அந்தியூர் ஆகும். கொங்கு நாட்டின் வட பகுதியில் இருந்த காரணத்தால் ''வட கொங்கு நாட்டு வடகரை" என அழைக்கப்பட்டது. வடகரை நாட்டில் 24 ஊர்கள் இருந்தன. கொங்கு மண்டல சதகத்தில் ஊர்த் தொகைப் பாடலில் அவ்வூர்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. அவற்றில் 'வானி' என்று கூறப்படுவதே இன்றைய 'பவானி' ஆகும்.



கோபுரத்தின் தோற்றம்,
சங்கமேசுவரர் கோயில், பவானி

ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டிலிருந்து 16 கி.மீ. தொலைவில் பவானி அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தி யாகி பவானி ஆறு இங்கு காவிரி ஆற்றுடன் கலக்கிறது. இக் கூடுதுறை மிகவும் புகழ்பெற்றது. வடநாட்டில் உள்ள திரிவேணி சங்கமத்திற்கு (பிரயாகை - அலகாபாத்) ஒப்பாகக் கூறுவர். கங்கை - யமுனை ஆற்றுடன் கண்ணுக்குத் தெரியாமல் 'அமுதநதியும்' ஒன்று சேருவதாகக் கூறப்படுகிறது.

பவானி ஆற்றின் பெருமை போற்றப்படுவதை இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். பெருங்குன்றூர்க் கிழார் என்னும் சங்கப் புலவர் இளஞ்சேரல் இரும்பொறையின் திருமேனி மென்மைக்கும் தூய்மைக்கும் குளிர்ச்சிக்கும் இவ்வானி ஆற்றின் நீரை உவமையாகக் கூறினார்.

புனல்பாய் மகளிர் ஆட ஒழித்த
பொன் செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்து வருவானி நீரினும்
தீந்தன் சாயலன் மன்றதானே.

திருஞானசம்பந்தர் பெருமான் பவானியைப் பற்றி பக்திச் சுவையும் இலக்கிய நயமும் கொண்ட பதிகத்தைப் பாடியுள்ளார்.

பந்தார் விரல் மடவாள் பாகமா நாகம் பூண்டேற் தேற
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளிபொளிரத் தேமாக்கனி சிந்தும் திருநணாவே

இங்குள்ள கோயில் சங்கமேசுவரர் கோயில் என அழைக்கப்படுகின்றது. இத்தலத்திற்கு திருநணா, சங்கம சேத்திரம், தட்சிண அளகை, பவானிகூடல், வக்கிரபுரம் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இறைவன் சங்கமேசுவரர் எனவும், இறைவி வேதநாயகி எனவும் அழைக்கப் படுகின்றனர். ஆனால் இறைவன் நண்ணாவுடையார் எனவும், இறைவி பண்ணார்மொழியம்மன் எனவும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இரண்டு ஆறுகளுக்குமிடையில் இறைவன் ஆலயம் இருப்பதால் 'நட்டாற்றீசுவரன்' எனக்


சிரிக்கும் பாவை,
சங்கமேசுவரர் கோயில், பவானி

கூறுவர். ஒரு பழம் பாடல் இறைவனை 'வானிலிங்கேசுவரன்' எனக் குறிப்பிடுகிறது. இத்தலம் 'திருமுக்கூடல்' எனவும், இக்கோயிலை நிர்வகித்தவர்கள் 'திருமுக்கூடல் தானத்தார்' எனவும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.



கெட்டி முதலிகளின் அரச இலச்சினை, சங்கமேசுவரர் கோயில், பவானி

இக்கோயில் மிகவும் பழமையானது. பல்லவர் காலச் சிற்பங்களும், இவ்வூருடன் பாண்டியர் தொடர்பு பற்றிய வேள்விக் குடி செட் பேட்டின் குறிப்பும், சோழர் காலத்தில் திருப்பணி நடைபெற்றதாகக் குறிப்பிடும் சோழன் பூர்வ பட்டயம் கூறும் செய்திகள் ஆகியவை இக்கோயிலின் பழமையை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் தற்பொழுது கோயில் முழுவதும் திருப்பணி செய்யப் பட்டுள்ளதால் பழமையான பகுதிகளைக் காண முடியவில்லை.

**கெட்டி முதலியார் பணிகள்:**

கொங்கு நாட்டு 24 நாடுகளில் ஒன்று பூவானி நாடு. இந்நாட்டில் தாரமங்கலத்தைச் சேர்ந்த கெட்டி முதலிகள் கி.பி. 15-17 ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுப் பகுதியில் ஆட்சி செய்தனர். மூவேந்தர் சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றுடன் சிங்கத்தையும் வண்ணத் தடுக்கையும், வாடாத மலர்ரையும் தங்கள் கொடியில் சின்னமாகப் பொறித்துக் கொண்ட பெருமை அவர்களுக்கு உண்டு. பூவானி நாடே இவர்களால் புகழ் பெற்றது. இதனை ஒரு பழம்பாடல் எடுத்துரைக்கிறது.

பேரிலகும் இருப்பத்தானூரொடு மேன்மை மொழி
　　பெற்ற நதிகளும் வரைகளும்
பேசரிய சிற்பமர் கோயிலும் கட்டி புகழ்
　　மெருகு பூவானி நாடே

கெட்டி முதலிகள் தாரமங்கலத்தை அடுத்துள்ள 'அமரகுந்தியை'த் தலைநகராகக் கொண்டவர்கள். இன்று அவ்வூர் அமராவதிப் பட்டிணம் என அழைக்கப்படுகிறது 'வேளாளர் நலங்காத்தான்', 'மன்னர் வணங்கினும் தான் வணங்காதான்', 'வணங்கா முடிமுதலி' என்ற சிறப்புப் பெயர்கள் அவர்களுக்கு உண்டு.

பவானி சங்கமேசுவரர் கோயிலுக்குச் சுற்றுத் திருமாளிகை, முன் நிருத்த மண்டபம், சிகரம், பண்ணார் மொழியம்மனுக்குக் கருவறை, அர்த்த மண்டபம், கோபுரம், மதில் உண்டாக்கி லிங்கம் பிரதிட்டை செய்தவர் இம்மடி கெட்டி முதலியார் ஆவார். இம்மடிகெட்டி முதலி, வணங்காமுடி கெட்டி முதலி ஆகிய இருவரும் கெட்டி முதலியார் பரம்பரையில் சிறப்பான அரசர்கள் ஆவர்.


வேதநாயகி கோயில் முன் மண்டப விதானத்தில் கி.பி. 1645 ஆம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு அம்மண்டபத்தைக் கட்டியவர் இம்முடி கெட்டி முதலியாரின் மனைவி 'சின்னம்மையார்' என்று கூறுகிறது. இவர் சிறந்த தமிழ்ப் புலவர் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

**கல்வெட்டு:**

பார்த்திப வருடம்
தைமாதம் 20ம் தேதி
திருவாணி கூடல்
பண்ணார் மொழியம்மன்
முன் திரு மண்டபம்
இம்முடி கெட்டி முதலியார்
சின்னம்மாள் உபயம்
இந்த திருப்பணி முடிச்ச
ஆசாரியார் குருவப்ப ஆசாரி
மகன் ரங்கப்ப ஆசாரி
தம்பி நாராயணன் ஆசாரி
எழுத்து

இம்மண்டபம் வசந்த மண்டபம் என அழைக்கப் படுகிறது. முகப்பில் குதிரை மீது வீரர்கள் ஈட்டி ஏந்தி சவாரி செய்வது போன்றச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை விசய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட கல்யாண மண்டபப் பாணியில் அமைக்கப்பட்டதாகும். மண்டப விதானத்தில் இன்னொரு பக்கத்தில் திருப்பணிப் பணியாக 'ஆட்சரசகாயன் சதாசேர்வை' எனவும் கல்வெட்டு காணப்படுகிறது.

இம்மண்டபத்தின் நடுவில் தாமரை மலர் காணப்படுகிறது. அதனைச் சுற்றி பெண்கள் நாட்டியம் ஆடும் காட்சியும், அடுத்து சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவ கோலத்தில் காளியுடன் நடனமாடும் சிற்பங்கள் காணப்படுகின்றன. அருகே கணபதி, முருகன், தும்புரு, பிரம்மன், திருமால் இசைக் கருவிகளை வாசிக்கின்றனர். இதனைச் சுற்றி வில், அம்பு, மகரம், புலி, தட்டிமாலை ஆகியவை காணப்படுகின்றன. இவைகள் கெட்டி முதலியார்களுடைய அரசச் சின்னமாகும் தாரமங்கலம் அருகில் உள்ள எலவம் பட்டி கிராமத்தில் கெட்டி முதலியார்களின் கல்வெட்டில் - தாரமங்கலத்தில் வாழ்ந்திருக்கும் நாடு வாழ் வெள்ளாளர் நிலங்கிழார் வணங்காமுடி பண்ணிக் குடுத்து வாடாத மாலை புலிக் கொடி, வில் கொடி, மகரக் கொடி, சிங்கக் கொடியும், மன்னர் வணங்கினும் தான் வணங்காத மத்தகக் குடோரி விருதும் படைதுகள் வலிமையும் உடைதா வாழ்கின்ற வணங்காமுடி முதலியார்களில் ஸ்ரீமந் முதலியார் நல்லுடையப்பர் இம்முடி கெட்டி முதலியார்-எனக் குறிப்பிடப்படுகிறது.



வசந்த மண்டபம்

தூண்களில் சிவபெருமானின் பல்வேறு தோற்றங்கள் காணப்படுகின்றன. . மேலும் கெட்டி முதலிகள் மற்றும் அவர்களுடைய தேவியர்களின் உருவங்களைக் காணலாம் குதிரை வீரர்கள் இருக்கும் தூண்களில் மகரம், புலி போன்ற கெட்டி முதலிகளின் இலச்சினைகளும் காணப்படுகின்றன. மிகவும் கலையழகு வாய்ந்த மண்டபமாக வசந்த மண்டபம் திகழ்கிறது.

இக்கோயிலில் தனியே பெருமாள் கோயிலும் உண்டு. ஆதிகேசவப் பெருமாள், சௌந்தரவல்லி தாயார், அழகிய பெருமாள் நாச்சியார் சௌந்தரவல்லி அம்மனுக்கு கருவறை, சிகரம், அர்த்த மண்டபம் ஆகியவை கெட்டி முதலியாரின் அமைச்சர் நாராயணக் கவுண்டரால் அமைக்கப்பட்டது என்பதையும் அறிகிறோம்.

செயல் அலுவலர் அலுவலகத்தின் அருகே பல தூண்கள் கிடக்கின்றன. இதில் கெட்டி முதலியாருடைய அரசச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் உள்ள கல்வெட்டில் "மும்முடி கெட்டி முதலியார் நண்ணா உடைய சுவாமியார்க்கு திருசுற்று மாளிகை, அம்மன் கருவறை, அர்த்த மண்டபம், குமார கோயில், வசந்த மண்டபம், கோபுரம், ஆயிரம் லிங்கமும் பண்ணினார்" என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது. இங்குள்ள கற்பலகைகளில் இறைவன் ஊர்த்துவதாண்டவம் ஆடும் காட்சிகள் காணப்படுகின்றன.

இதைத் தவிர புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தில் கெட்டி முதலியார், மற்றும் தேவியர்களின் உருவங்கள் காணப்படும் தூண்கள் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. இம்மண்டபத்திற்கு அருகில் பிள்ளையார் சந்நிதி உள்ளது. இதில் இருபுறமும் அரசன் - அரசி உருவமுள்ள தூண்கள் காணப்படுகின்றன. உருவத்திற்கு மேலே 'இம்முடி கெட்டி முதலியார்' என்ற கல்வெட்டுத் தொடர் காணப்படுகிறது.

மேற்கண்ட வரலாற்றுச் செய்திகளால் இக்கோயிலில் உள்ள இறைவன் மீது கெட்டி முதலியார், கொண்டிருந்த ஈடுபாடு விளங்குகிறது. மேலும் கெட்டி முதலியார்களின் சிற்பக்கலைத் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் திகழ்கிறது.

# சித்திர மேழிக் கோயில்கள்

அ. புவனேசுவரி, தமிழ்த் துறை, கே.ஜி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
அன்னூர் - 638653.

*(கட்டுரைச்சுருக்கம்)*

*சித்திரமேழிப் பெரியநாடு தமிழகத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனுடைய அரசியல் அதிகாரம் கி.பி. 12-13ம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசுச் செல்வாக்கு இழந்து இதனுடைய அதிகாரம் நாடு முழுவதும் பரவியிருந்தது. கொங்கு நாட்டில் சித்திரமேழிப் பெரிய நாடு பல துறைகளிலும் அதனுடைய ஆதிக்கத்தைச் செலுத்தியது.*

*கொங்கு நாட்டில் குழுக்கள் ஆட்சி நிலைபெற்றது. ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கென கோயில்களைக் கட்டிக் கொண்டு வழிபாடு செய்தனர். அக்கசாலீசுவரம், ஆனைக்கீசுவரம், ஐந்நூற்றீசுவரம் போன்ற எல்லாப் பெயர்களிலும் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களை அந்தந்தக் குழுக்களே போற்றிப் பாதுகாத்து வந்தன. இதுபோன்ற ஒரு குழுதான் சித்திரமேழிப் பெரியநாடு. அந்தக் குழு கட்டிய கோயில்களுக்கு அந்த பெயர் வைக்கப்பட்டது.*

*சித்திரமேழிப் பெரியநாடு செல்வாக்குப் பெற்றமையால் இதன் பெயரால் சித்திரமேழி ஈசுவரமுடையார், சித்திரமேழி விண்ணகரம், சித்திரமேழி தட்டான், சித்திரமேழிபட்டன் போன்ற அமைப்புகளையும் பணியாளர்களையும் உருவாக்கும் நிலையேற்பட்டது. இவர்கள் வாணிகம், அரசியல், வேளாண்மை ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தினர்.*

*சித்திரமேழிப் பெரிய நாட்டிற்கும் அப்பெயர் கொண்ட கோயில்களுக்கும் இடையிலான தொடர்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சித்திர மேழி என்ற பெயர் கொண்ட கோயில்கள் மிகுந்து காணப்படுகின்றன.*

# சிவன் மலை

செ. இராசு, ஈரோடு

கொங்கு நாட்டில் முருகப் பெருமான் உவந்து உறையும் குன்றுதோராடல் தலங்களுள் சிவன் மலையும் ஒன்று. சிவன்மலையானது சிவ மலை, சிவாசலம், சிவசைலம், சிவாத்திரி, சிவநாகம், சிவன் மாமலை, சிவகிரி என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கப் பெறும் சிறப்பினை உடையது.

**நாடு:**

சிவன்மலை, கொங்கு 24 நாடுகளில் ஒன்றான காங்கேய நாட்டின் தலைமைத் தலம். காங்கயம், வல்லியிறைச்சல், காடையூர், பட்டாலி, கீரனூர், பார்ப்பதி, பரஞ்சேர்வழி, காரையூர், மருதுறை, முத்தூர், கண்ணபுரம், வெள்ளக்கோயில், ஆறுதொழு, ஆலாம்பாடி, ஆகிய 14 ஊர்கள் கொண்டது காங்கேய நாடு. ஆனால் பண்டைய வழக்கு காங்கேய நாடு 12 கிராமங்களை உடையது என்பதே. ஊர்த்தொகைப் பாடலில் 14 ஊர்களைக் காணுகின்றோம்.

'24 நாட்டுப் பட்டயம்' என்னும் செப்பேடு இப்பதினான்கு ஊர்களில் வல்லியிறைச்சல், பரஞ்சேர்வழி, மருதுறை, ஆறு தொழு, ஆலாம்பாடி இவ்வகைளை நீக்கி சிவன் மலை, துறவலூர், தேவதானம், வீரசோழபுரம் ஆகியவைகளைச் சேர்த்துக் கூறுகிறது.

பொதுவாகக் காங்கேய நாட்டுத் தலைவன் சிவன்மலை முருகன் என்பது என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

"தேங்கிய புகழ் எலாம்
ஓங்கிய சிறந்த காங்கய நாடன்"

என்று சிவன் மலை முருகன் அழைக்கப் பெறுகின்றார்.

**ஊர்:**

பன்னெடுங் காலத்திற்கு முன் குறிஞ்சியும் முல்லையும் மிகப் பெருகிப் பரவியிருந்த காலத்தில் சிவன் மலை அடிவாரத்தில் ஊர் ஏதும் இல்லை. மலையைச் சார்ந்து காடுகள் மிகவும் அடர்ந்து இருந்திருக்க வேண்டும். சிவன்மலையைச் சேர்ந்த ஊர், சிவன் மலைக்குரிய ஊர் அருகில் உள்ள பட்டாலியூரேயாகும்.

சிவன் மலை பட்டாலியுடன் இணைத்தே பல இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது இதனை விளக்கும்.

'அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை'

'பட்டாலிச் சிவாசலம்'

'ஞாலம் புகழும் பட்டாலிச் சிவமலை நன்னகர்'

என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன. பட்டாலி இலக்கியப் புகழ் பெற்ற பேரூர். அங்குள்ள பால்வெண்ணீசுவரர் - நல்லமங்கையம்மன் இருவரின் மகனாகவே சிவன் மலை முருகன் குறிக்கப் பெறுவது அப்பழைய தொடர்பை விளக்கும்.

"செல்வப்பட்டாலியில் பால்வண்ணர் பாலன்"
"செல்வப்பட்டாலி யூரன்"
"பத்தர் பணி பட்டாலிச் சித்தர்"
"சிகரகோ புரமும் தெருஇரு புறமும்
அகரசி கரமும் அன்னசத் திரமும்
மாடமா ளிகையும் கூடகோ ளகையும்
நீடுறு ககனத்த ஆடிடு கொடியும்
அந்தணர் வேள்வியும் செந்தமிழ்க் கேள்வியும்
உந்திய குடிசள் உலவுசந் தடியும்
பூமலர் ஓடையும் மாமணி மேடையும்
பூமினார் ஆடலும் காமனார் கூடலும்"
"கிட்டாது வானமும் கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலி யூரன்"

என்று சிவன்மலை முருகன் அழைக்கப் பெறுகின்றார். ஆனால் இன்று பட்டாலி என்ற ஊர் அழிந்து அருகில் அரசம்பாளையம் என்ற ஊர் ஏற்பட்டுள்ளது. கோவை கே.எஸ். வைத்தியநாதன் அவர்கள் அரசம்பாளையமும் படியூரும் இணைந்து பழங்காலத்தில் பட்டாலியாக விளங்கியது என்று கூறுகின்றார். (The Ancient Geography of the Kongu Country, Page 157)

'கந்தர் மேவிய பட்டாலி' என்று கூறப்படுவதும் சிவன்மலை முருகனைப் 'பட்டாலியூரன்' என்று அழைப்பதும் சிவன் மலையும் பட்டாலியும் பழங்காலத்தில் ஒன்றே என்பதை நமக்குக் காட்டுகிறது.

இதே போல் சென்னிமலை அடிவாரத்திலும் ஊர் ஏதும் முன்பு இல்லை. பிடாரியூரே சென்னிமலைக்கு உரிய ஊராகும் என்று வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

**சிவன்மலை:**

24 நாட்டுப் பட்டயத்தில் பட்டாலியும் சிவன்மலையும் தனித்தனி ஊர்களாகக் குறிக்கப் பெறுகின்றன. அப்பட்டயம் எழுதப் பெற்ற காலம் 16 ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 17 ஆம்

நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம். அப்போது சிவன் மலை அடிவாரத்தில் மக்கள் குடியேறி வாழ்ந்திருக்க வேண்டும். அதனால் சிவன் மலை அடிவாரத்தில் உள்ள ஊர் சிவன் மலை என்றே பெயர் பெற்றது போலும்.

சிவன் மலையை அடுத்துக் கவுண்டம்பாளையம் என வழங்கும் ஊரையும் சிவன் மலையாகவே கொள்வர். வீரை, வீரையூர் எனப்படும் ஊரொன்றும் சிவன் மலையை அடுத்துள்ளது.

"பார்புகழ் வீரைப் பட்டாலியூர்"
"வீரையூரில் திருச் சிவமலை வேலவர் தேர்"
"சிவன்மலை வீரை மாநகர்"

எனவரும் பாடல் அடிகளால் வீரை என்ற ஊர் உள்ளது விளங்கும்.

சிவன்மலை, கலியாண சிவன்மலை, சத்தி சிவன்மலை, இருநிதிசூழ் சிவன்மலை, மகிமைசேர் சிவன்மலை, செல்வச் சிவன்மலை, தவசுபரி சிவன்மலை என்றெல்லாம் புகழப் பெறும் சிறப்பினை உடையது.

**இறைவன்:**

சிவன் மலையில் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்து அருள்புரியும் சிவன்மலையாண்டவர் ஆகிய முருகப் பெருமான் சிவாசல வேந்தன், சிவன்மலைக் காங்கேயன், சிவாசலத்திற் கந்தவேள், சிவாசல விசாகர், சிவசயில முத்தையன், சிவமாமலைக் கந்தசுவாமி, சிவசைலக் குமரர், சிவன்மாமலை வேலன், சிவராத்திரிச் சண்முகன், சிவாத்திரி இறைவன், சிவமலை வேள், சிவமலைக் குகன், சிவசுப்பிரமணியர், துரைசாமி, மரகதமயூரன், வள்ளி மணாளன், காங்கேயன் என்று பல்வேறு பெயர்களில் சிவன்மலையோடு இணைத்தும், தனியாகவும் கூறப் பெறுவார்.

**இலக்கியங்கள்:**

காங்கேய நாட்டு மட விளாகத்தில் அந்தணர் மரபில் மார்க்கண்டேய கோத்திரத்தைச் சேர்ந்த தேவராஜ் பண்டிதருக்கும், நஞ்சுண்டம்மாள் என்ற பெண்மணிக்கும் 1767-ல் பிறந்தவர் இலட்சுமண பாரதி. தமிழகமெங்கும் சென்று தம் புலமையை நிலை நாட்டியவர். சேதுபதி அரசரால் பாரதி என்ற பட்டம் பெற்றவர். அவர் சிவன்மலைக் குறவஞ்சியும், மயில்விடு தூதும் பாடியுள்ளார். குறவஞ்சி திருச்செங்கோடு அ. முத்துச்சாமிக் கோனார் அவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது. மயில்விடு தூது இன்னும் அச்சேறவில்லை

பல்வேறு தனிப்பாடல்களும் சிவன்மலையையும், முருகப் பெருமானையும் புகழ்ந்து கூறுகின்றன.

'திருமிகு சிவமலை வாழ் - முருகனே
சித்தர்கள் தினம் துதிக்கும் அத்தன் மகனே
சீரான் மருமகனே - நம்பினோர்கள்
சிந்தனையைத் தீர்த்து வைக்கும் கந்தநாதனே'

கொடுமணல், தம்பிராட்டி பாளையம் நாச்சிமுத்துப் புலவரிடமிருந்து பெற்று ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் வைத்துப் பாதுக்கப்பட்டு வரும் பல ஓலைச் சுவடிகளில் சிவன்மலையைப் பற்றிய பல்வேறு தனிப்பாடல்கள் உள்ளன.

அவற்றில் ஒன்று:

தகைமைபெறு முப்பத்து முக்கோடி தேவரும்
தாமரைக் கண்ணன்உந்தி
தனில்வந்த நான்முகன் இந்திரன் மயேசுவரன்
சப்தரிஷி யுங்கூடியே
மகமேரு மத்தாக நாகமுங் கயிறாக
மதிநடு தறியாகவே
வாரியும் தாளியாய் வைத்தியர் யாவரும்
வந்தமிர்தம் கடையும்வேளை
பகவனொரு பாலிலே நின்றிடும் போதுகன
பாரம் பொறுக்காமலே
பாதாளம் ஆகுதென்று ஆயிரக் கலாமை
பாருரு வாய்ப்படர்ந்து
செகமெலாம் தாங்கியே வாழ்வுபெற வேவைத்த
திருமாலின் மருகர்குகா
தெய்வானை வள்ளிமண வாளன்என வந்தவா
சிவன்மலைக் குமரேசனே !

என்பதாகும்.

'பண்பான சிவன்மலையிற் பண்டிதா சரணம்' என்று கொடுமணல் இலக்கியங்களில் ஒரு தொடர் வருகிறது.

**அருணகிரியார்:**

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை வருகை புரிந்து சென்னிமலையில் படிக்காசு பெற்றுக் கொங்கு நாட்டில் பஞ்ச நிவாரணப் பணி செய்த அருணகிரிநாதர் பட்டாலி முருகனைப்

பாடியுள்ளார். அவர் பாடியுள்ள மூன்று பாடல்களையும் சிவன்மலைப் பாடலாகவே நாம் கொள்ளலாம்.

"பயிரவி அருள் பட்டாலியூர்"
"பச்சோலை குலவு பனைவளர்
மைச்சோலை மயில்கள் நடமிடு பட்டாலி"
"கொங்கிற் பட்டாலி நகர்"

என்பவை அருணகிரிப் பெருமான் பட்டாலியை வருணிக்கும் பகுதிகளாகும்.

"நக்கீரர் தமிழ் உரைத்தே
நலம் பெருகும் வாசலிது"
"பொற்புடனே அருணகிரி திருப்
புகழ்படிக்கும் வாசலிது"

என்ற வரிகள் அருணகிரிநாதருக்கும் சிவன்மலைக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.

சிவன்மலைக் குறவஞ்சியில் சிவன்மலையில் நக்கீரரின் திருமுருகாற்றுப்படையுடன் அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் இங்கு படிக்கப்படுகிறது என்று கூறுவதும் நோக்கத்தக்கது.

**திருப்பணியும் கொடையும்:**

காங்கேய நாட்டு அரசர்கள் எனப் புகழப்பெறும் காடையூர் காங்கேய மன்றாடியார், பழைய கோட்டைச் சர்க்கரை மன்றாடியார், காங்கேயம், பல்லவராயர் ஆகிய மூவரும் பண்டைக் காலத்தில் பல்வேறு கொடைகள் அளித்துள்ளனர்;. விழாவெடுத்துள்ளனர்; சிவன்மலைக்கு வந்து வழிபட்டுள்ளனர்.

சர்க்கரை மன்றாடியார் மரபினர் ஒருவர் சிவன்மலைத் தேர் வரும் பாதை அமைத்தார். இதனை

'பாரும் காரைமன் கரியான் சர்க்கரை
பக்தி மிகப்பெருகி
பண்புள சிவன்மலை ஆண்டவர் தேர்வரு
பாதை அதைநிரவி
நேரும் கலியுக நாலா யிரமொடு
நானூற் றைம்பது நாள்
நிகழும் நந்தன ஆண்டுதை பத்தேழ்
நிலைபெயர் தேதியினுள்

சீரும் கொண்டிட வேகிரி சுற்றிச்
செப்பமிடத் தனது
செம்மறி யாடுகள் நூறது விற்றுச்
சேர்ந்த பணத்தினிலே
எரும் குதிரை இரண்டது வைத்திங்
கொன்றங்கு ஒன்றதின்மேல்
எக்கியே வந்திரு வேளைய மேதினம்
ஏழுள் முடித்தனரே'

என்ற பாடல் விளக்கும்.

அவர்கள் மரபினர் மலைப்பாதை அமைத்ததை,

'அழகன்சர்க் கரைச் சிறுவன் அனுமந்தர் கோவில்வரப்
பழகுவதைப் பார்த்துக்கற் பாறைகளை - மளமளெனப்
போர்த்துச் சிவன்மலைமேல் பெரும்பாதை செய்தாரே
தீர்த்தகிரிச் சின்னமலைத் தேன்'

என்ற பாடல் மூலம் அறிகின்றோம்.

சர்க்கரை மன்றாடியார் ஒருவர் மனைவியார் ஆரியப்பட்டி வள்ளியாத்தாள். அவர் மகன் விசுவநாதன் காலில் வெண்குட்டம் இருந்தது. புலமையுள்ள வள்ளியாத்தாள் சிவன்மலை முருகன்மீது பல பாடல்களைப் பாடினாள். பக்தியுடன் வேண்டிக் கொண்டாள். தன் மகன் காலில் இருந்த வெண் குட்டத்தை நீக்குமாறு வேண்டிக் கொண்டாள். அடுத்த அசுவதிக்கு வரும்போது வேண்டிக் கொண்டவாறு மகன் காலில் இருந்த வெண்குட்டம் நீங்கியது. அப்போது வள்ளியம்மாள்

'ஐயா சிவமலைவாழ் ஆண்டவனே பன்னிரண்டு
கையாஎன் சேய்விசுவின் காலதனில் - மெய்யாக
வந்தவெண் குட்டமதை மாற்றிக் கருணையது
தந்தவனே நின்தாள் சரண்'

என்ற பாடலைப் பாடினாள்

**கல்வெட்டு:**

சிவன் மலையில் கல்வெட்டுக்கள் இல்லை; ஆனால் அருகில் உள்ள கவுண்டம்பாளையத்தில் விநாயகர் கோயிலுக்கு எதிரில் உள்ள ஒரு பலகைக் கல்லில் சிவன் மலை முருகன் தொடர்பான கல்வெட்டு ஒன்று உள்ளது.

கலியுகம் 4894-ல் சாலி வாகன சகம் 1717-ல் பிரமாதிச ஆண்டு சித்திரை மாதம் சிவன்மலை ஆண்டவருக்கு உச்சிக்காலப்

பூசைக்காகக் காடையூரில் பழைய கோட்டைப்பட்டக்காரர் உத்தமக்காமிண்ட மன்றாடியார் அவர்களால் 15 வள்ளம் பூமி கொடையாக அளிக்கப் பெற்றச் செய்தி அங்கு கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளது. இதனை 1920-ஆம் ஆண்டு மத்தியத் தொல் பொருள் துறையினர் படியெடுத்துள்ளனர். (எண் 291)

**சிறப்புக்கள்:**

சிவன்மலை பல்வேறு பெருமைகளைத் தன்னுள் அடக்கியது. மூலிகைகள் பற்பல நிரம்பியது. அற்புதங்கள் பலவற்றைக் கொண்டது. முனிவர்கள் தவமிருந்த சிறப்புப் பொருந்தியது. மரம், செடி, கொடி, கிழங்கு வகைகள் மிகுதியாகப் பெற்றது. அதன் விசேடங்கள் பலப்பலவாம். சிவன்மலைக் குறவஞ்சியில் இவற்றை மிகவும் விரிவாகக் காணலாம்.

அட்டதுர்க்கை, அட்ட பத்திரகாளி எட்டுத்திக்கும் காவல் காப்பதாகக் கூறப்படுகிறது. விசேடமிக்க புராணப்படி என விளங்கும் பதினெட்டாம்படி, கன்னிமார், பத்தினிப் பெண் சடைச்சியம்மாள் பற்றியும் குறவஞ்சியில் குறிப்புக்கள் வருகின்றன. தெப்பக்குளங்களும், பூந்தோட்டங்களும், அன்ன சத்திரங்களும் பல சிவன்மலையில் உள்ளன என்று கூறப்படுகிறது.

பட்டாலிச் சிவன்மலைக்கு வடக்கில் சம்புநதி உள்ளதாகக் கூறப்படுவதுடன் மலையில் உள்ள பொய்கைக்கு சரவணப் பொய்கை என்ற பெயர் கூறப் பெறுகிறது. அச்சரவணப் பொய்கை மதுரையில் உள்ள சங்கத்தார் மூழ்கிய பொற்றாமரைக் குளத்திற்கு இணையாகக் கூறப் பெறுகிறது.

சிவபெருமான் திரிபுர சம்காரம் செய்யும் போது மேருமலையின் சிகரங்களில் ஒன்று விழுந்து சிவன்மலை ஆயிற்று என்பது புராணக் கருத்து.

**புலவர்கள்:**

சிவகிரி பண்டிதர், ஆறுமுகக் குருக்கள் போன்றோர் சிவன்மலையில் வாழ்ந்த புலவர்கள். அவர்கள் சிவன்மலை பற்றியும், கொங்கு நாட்டின் பல தலங்கள், பாளையக்காரர் பற்றியும் பல்வேறு பாடல்கள் பாடியுள்ளனர். 'வித்வசனர் கவி விளம்பும் முழக்கம்' உள்ளதாகக் குறவஞ்சி கூறும். 'கவிவாணர்கள்' இருப்பதாகக் காங்கேய நாட்டுப் பாடலில் குறிப்பு வருகிறது.

கீரனூர் காடைக்குலச் செல்லன், கருப்பண்ணன், ஆதிகுலக் குப்பண்ணன், பார்ப்பதி தோடைகுலச் செல்லய்யன், பெரியண்ணன், முத்தய்யன், கண்ணந்தை குலச் சின்னத்தம்பி, செல்லையன், முத்துவேலய்யன்;

பரஞ்சேர்வழி பயிறகுலச் சின்னய்யன், ஆலகுலச் சென்னிமலை;
நத்தக்காரையூர் பயிற குலச் சேனாபதி, கொற்றவேல்:
மருதுறைப் பனங்காடை குல நல்லதம்பி, ஆந்தை குலச் சிதம்பரம்;

முத்தூர் மணிய குல இராமசாமி, பெருமாள்,
காளியண்ணன், கண்ணகுல முத்துக்குமார்;
கண்ணபுரம் ஓதாளர் குலச் சுப்பய்யன், சுப்பராயன்

காடையூர் பொருளந்தை குல அழைப்பிச்சான், பச்சைராயன், காங்கேயன்;

காங்கேயம் செங்கண்ண குல அமராபதி சுந்தரகாங்கேயன், தூரகுலம் நாகமலை, குமார நாச்சிமுத்து;

வள்ளி எறிச்சில் ஆந்தை குலச் சிவன்மலை, புல்ல குல நல்லணன், கருமணன்; பட்டாலி கண்ணகுலச் சின்னய்யன் வேட்டுவர் 'குல சின்னய்யன்';

ஆகியோர் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் . பல கொடைகளைச் சிவன் மலைக்கு அளித்துள்ளனர். காங்கேய நாட்டினர் அனைவரும் கொடை அளித்துள்ளனர் என்பதை இதன் மூலம் அறிகின்றோம்.

**முடிவுரை:**

சிவன் மலை வட்டார மக்கள் மட்டுமல்ல கொங்கு நாட்டின் பல பகுதியில் வாழும் மக்கள் சிவன்மலை, சேமலை, சேமணன் என்று பெயர்களை இன்றும் வைத்துக் கொள்வது சிவன்மலையின் சிறப்பை நன்கு உணர்த்தும்.

# தலையநல்லூர் - பொன்காளியம்மன் கோயில்

**பெ.கு. சாந்தகுமார், பெரியூர், கொளாநல்லி அஞ்சல், ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்**

கொங்கு நாட்டில் அரையநாடு என்ற குறுநிலப் பகுதியில் தலைய நல்லூர் - பொன்காளியம்மன் கோயில் சீரும், சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது. இக்கோயிலின் சிறப்பம்சங்கள்: புலவரால் போற்றிப் பாடப் பெற்றதும், குலத்தெய்வக்கோயிலாக விளங்குவதும் நம்பிக்கையில் முக்கியக்கூறான பல்லி சகுனம் பார்த்தலும், திருவிழாவின் போது பந்தம் பிடித்து வழிபடுவதும் ஆகும்.

**இருப்பிடம்:**

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு வட்டத்தில் சிவகிரி கிராமத்திற்கருகில் தலைய நல்லூர் என்ற ஊரில் இக்கோயில் அமைந்துள்ளது. தலைய நல்லூர் தொடக்கத்தில் ஆதிநல்லூர் என்றும், பின்னர் அரச நல்லூர் என்றும் பின்பு சிங்க நல்லூர் என்றும் வழங்கப்பட்டு தற்பொழுது "தலைய நல்லூர்" என்று வழங்கப்படுகிறது.

**வரலாறு, தலபுராணம்:**

தலைய நல்லூர் கோயிலில் வீற்றிருக்கும் அம்மனின் பெயர் "பொன் காளியம்மன்" ஆகும். இக்கோயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. பொன்காளியம்மனுக்கு ஆறு சகோதரிகளான ஆறு பெண் தெய்வங்கள் உள்ளன. பொன்காளியம்மனைச் சேர்த்து ஏழு தெய்வங்களும் முறையே:

| | | |
|---|---|---|
| 1. பொன் காளியம்மன் | - | தலைய நல்லூர் |
| 2. செல்லாண்டியம்மன் | - | ஊஞ்சலூர் |
| 3. குழலியம்மன் | - | கொளா நல்லி |
| 4. குலவிளக்கம்மன் | - | காளமங்கலம் |
| 5. கரியகாளியம்மன் | - | மொடக்குறிச்சி |
| 6. கொங்காளம்மன் | - | ஈரோடு |
| 7. அத்தனூர் அம்மன் | - | அத்தனூர் |

ஆகியவை ஆகும்.

இவ்வேழு சகோதரித் தெய்வங்களுக்கும் ஒரே நாளில் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. இவ்வழக்கம் இன்றும் மரபுவழியாகத் தொடர்கிறது.

பொன்காளியம்மனுக்கு "வண்ணாரக் கருப்பணன்" என்ற காவல் தெய்வம் உண்டு. பொன்காளியம்மன் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் வண்ணாரக் கருப்பணன். சலவைத் தொழிலைக் கொண்ட வண்ணார் குடியில் பிறந்தவர் கருப்பணன் என்னும் வண்ணாரக் கருப்பணன். அம்மன் மேல் கொண்ட அதிக பக்தியால் "வேட்டுவர்" துணிகளைத் துவைக்காமல் இருந்துவிட்டார். கோபம் கொண்ட வேட்டுவர் வெள்ளை ஊஞ்சத்தடியால் வண்ணாரக் கருப்பணனை அடித்துத் தண்டித்தனர். அப்பொழுது வண்ணாரக் கருப்பணன் மீது இரக்கம் கொண்ட "வெள்ளாளர்கள்" எப்படி எங்கள் வண்ணாரை அடிக்கலாம் என்று நியாயம் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது கோபம் கொண்ட வண்ணாரக் கருப்பணன் "வேட்டுவரும் வெள்ளை ஊஞ்ச மரமும் இக்கிராமத்தில் வேரறுவக்கடவது" என்று சாபம் கொடுத்து விட்டார். இச்சமயத்தில் பொன்காளியம்மன் எழுந்தருளி வண்ணாரக் கருப்பணனைத் தனது மெய்க்காப்பாளனாக வைத்துக் கொள்வதாகவும், தனக்குக் கிடைக்கும் சகல பரிவட்டமான பூசைகளும் வண்ணாரக் கருப்பணருக்கும் தருவதாகச் சொல்லி ஏற்றுக் கொள்கிறார். இம்மரபு வழிச் செய்திப்படியே இக்கோயில் உள்ள கிராமத்தில் வேட்டுவ இனமும் வெள்ளை ஊஞ்சல் மரமும் செழிக்காது என்ற நம்பிக்கை நிலவி வருகிறது. இச்செய்தியின் அடிப்படையில் தீப்பந்தம் பிடித்து வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் நிலவுகிறது. வண்ணாரக் கருப்பணனுக்கு மாமிசப் பூசை நடைபெறுகிறது.

பொன்காளியம்மனின் புகழை நஞ்சைப் புலவனார் பாடியுள்ளார். இவர் சிற்றிலக்கிய வகைகளான அம்மன் வண்ணம், அம்மன் விருத்தம், அம்மன் வருகைப் பத்து, அம்மன் சதகம், அம்மன் கும்மி என்று பல நூல்களை இயற்றியுள்ளார். இப்பாடல்கள் அம்மனின் சிறப்பைக் கூறும் ஏட்டுச்சுவடிகளாக இன்றும் நஞ்சைப் புலவனார் பரம்பரையினரிடம் உள்ளன. அம்மனின் புகழ்பாடிய இப்புலவர் பரம்பரையினருக்கு நிலம் மானியமாக அளிக்கப்பட்டச் செய்தி கல்வெட்டில் கிடைக்கின்றது.

பொன்காளியம்மன் கொங்கு வேளாளர் இனத்தில் கூறைக் குலத்தவர்க்கும், விளையன் குலத்தவர்க்கும் குல தெய்வமாக விளங்குகிறாள். இவர்களே கோயிலில் செலவுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்விரு குலத்தவரும் தங்கள் பொருளாதார நிலைக்கு ஏற்றபடி இக்கோயிலுக்கு நிதி வழங்கிச் சிறப்பிக்கின்றனர். பொன்காளியம்மன் கொங்குச் செட்டியார்,

கொங்குப் புலவர் மற்றும் அரைய நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில குடிகள் ஆகியோருக்குக் குலதெய்வமாக விளங்குகிறாள்.

**காலம், கட்டினவர்:**

இக்கோயிலின் காலத்தை மரபு வழிச் செய்தியின் மூலம் தான் அறிய முடிகிறது. நஞ்சைப் புலவனார் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இப்புலவர் தான் புற்றில் இருந்த அம்மனை வெளி உலகிற்குக் காட்டினார் என்ற மரபு வழிக் கதையின்படிதான் இக்கோயிலின் காலத்தை நிர்ணயிக்க முடிகிறது. இக்கோயிலை முதலில் கட்டியவரைக் கூறுவதற்குத் தகுந்த ஆதாரம் கிடைக்கவில்லை. கோயிலைச் சுற்றிலும் உள்ள மதில்களும், பொங்கல் மண்டபமும் கூறை குலத்தவரும், விளையன் குலத்தவரும் அளித்த நிதியுதவியால் கட்டப்பட்டவை.

**கல்வெட்டுச் செய்தி:**

இக்கோயிலின் சுவரில் ஒன்றும் தூணில் ஒன்றுமாக இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. புலவர் இனத்திற்குப்பூமி மானியமாக அளிக்கப்பட்டச் செய்தியை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

**சிறப்பு:**

இக்கோயிலின் முக்கியச் சிறப்பாக விளங்குவது திருவிழா வாகும். இவ்வட்டாரத்திலேயே தனிச்சிறப்பாக விளங்குவது பந்தம் பிடித்தல் என்ற நிகழ்ச்சியாகும்.

திருவிழா பங்குனி மாதத்தில் நடைபெறுகிறது. செவ்வாய்க்கிழமை பூச்சாட்டு நடைபெறும். பூச்சாட்டு அன்று காப்புக் கட்டிக் கொள்ளும் பறையர் கோயில் வாசலில் நின்று கொண்டு பறையடித்து உரத்த குரலில் பூச்சாட்டில் இருந்து திருவிழா நடைபெறும் பத்து நாட்களின் நிகழ்ச்சியையும் எடுத்துரைப்பர். இப்பறையருக்கு இக்கிராமத்தில் உள்ள ஒவ்வொரு கவுண்டர் இனத்தைச் சார்ந்த குடும்பமும், 2 வள்ளம் தானியம் கொடுப்பது வழக்கமாக உள்ளது. (4 லிட்டர் சேர்ந்தது ஒரு வள்ளம்)

இந்த பொன்காளி அம்மனின் உத்சவச் சிலையானது சிவகிரி வேலாயுத சுவாமி கோயிலில் இருந்து வரும் துர்க்கையாகும். சிவகிரி வேலாயுதசுவாமி கோயில் இக்கோயிலிருந்து 1½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. துர்க்கைச் சிலையை முதலியார்களும், வேளாளரில், கூறை குலத்தினர் மற்றும் விளையக் குலத்தினரும் சகலப் பரிவாரங்களுடன் திருவிழாவில் ஏழு நாட்களுக்கு முன்பு அழைத்து வருவார்கள்.

திருவிழாவின் இரண்டு நாட்களுக்கு முன்பு "அம்மை அழைத்தல்" என்ற சிறப்பு வழிபாடு நடக்கும். இவ்வழிப்பாட்டில்

குதிரை துலுக்குப் பிடித்தல் முக்கிய நிகழ்ச்சியாகும். இந்த அம்மை அழைத்தல் என்ற சிறப்பு வழிபாடு பொன்காளியம்மன் உள்பட ஏழு சகோதரிகளுக்கும் நடக்கும்.

திருவிழாவின் முதல் நாள் பச்சை விரதம் என்ற விரதத்தை கூறை குலத்தவரும், விளையன் குலத்தவரும் மேற்கொண்டு வழிபடுகின்றனர். இவ்விரதத்தில் பச்சை மாவுதான் ஆகாரமாகும். பச்சை விரதம் பிடிப்பவர் அன்றிரவு அம்மன் திருவீதி உலா வந்த பிறகு தான் வீட்டிற்குச் சென்று, சமைத்து உண்பது வழக்கமாக உள்ளது.

இக்கோயிலுக்குத் தேர் உண்டு. இத்தெய்வத்தின் தேர் இழுப்புத் தேர் அல்ல; எடுப்புத் தேர் ஆகும். எடுப்புத் தேர் என்பது தூக்கிச் செல்கின்ற அளவுக்குச் சிறிய தேராக இருக்கும். இத் தேரைச் சுமப்பவர்கள் சிவகிரியில் உள்ள முதலியார்கள். அம்மன் தேருக்கு எழுந்தருளும் முன்பு "முப்பாட்டு மாவிளக்கு" பூசை, இரு குதிரையின் துலுக்கு ஆகியவற்றை ஏற்றுக் கொண்ட பிறகே தேர்ப்பவனி தொடங்கும். (இரு குதிரை என்பதில் ஒரு குதிரை கூறை குலத்தவர்க்கும், மற்றொரு குதிரை விளையன் குலத்தவர்க்கும் உரியதாகும்).

கூறை குலத்தவரும், விளையன் குலத்தவரும் தங்களின் சலவைத் தொழிலாளர்கள் உதவியுடன் எண்ணற்ற பந்தங்கள் தயார் செய்து திருவிழாவன்று கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். கோயிலிலிருந்து மூன்று குடம் எண்ணெய் தருவார்கள். கூறை குலத்தவரும், விளையன் குலத்தவரும் மற்ற பொது மக்களும் தங்கள் சக்திக்கு ஏற்ப பந்தத்திற்கு எண்ணெய் கொடுப்பார்கள். திருத் தேர் புதன் கிழமை இரவும், வியாழக் கிழமை காலையும் பவனி வரும். திருத்தேர் பவனி வரும் போது அவரவர் தங்கள் கையில் தீப்பந்தத்தைப் பிடித்து வணக்கம் செய்ய வேண்டும். இரவு நேரத்தில் ஆயிரக்கணக்கான தீப்பந்தங்கள் எரியும் காட்சி பார்ப்போரை ஈர்க்கும் வண்ணம் உள்ளது. இக்கோயிலின் தனிச் சிறப்பே இப்பந்தம் பிடிக்கும் நிகழ்ச்சியாகும். அதே வியாழக்கிழமை அன்றுதான் அம்மனின் மற்ற சகோதரிகளுக்கும் திருவிழா நடைபெறும்.

வியாழக்கிழமை இரவு கொங்குச் செட்டியார் மடத்திற்கு அம்மன் எழுந்தருள வேண்டும். அன்றையச் செலவு அனைத்தும் கொங்குச் செட்டியார்கள் ஏற்றுக் கொள்வர். அன்று அம்மனின் உடைமைகளைப் பாதுகாவல் செய்யும் பொறுப்பு கிராமத்து நாடாருக்கு உரியதாகும். அச்சமயம் வண்ணாரக் கருப்பணனுக்கு பொங்கலும், கிடாக் காவும் கொடுத்து பூசை செய்வர். வெள்ளிக்

கிழமை காலையில் மஞ்சள் திருநீராட்டு நடைபெறும். பின் கோயிலின் மரபுப்படி பணியாற்றிய பணியாளர்களுக்குக் கூறை குல, விளையன் குல தர்மகர்த்தாக்கள் சன்மானங்கள் வழங்குவர். காசு, நெல், தேங்காய், பொங்கல், பழம் போன்றவை சன்மானப் பொருள்கள் ஆகும். இதனை மிராசுகள் என்பர்.

பிறகு துர்க்கை அம்மன் பழையபடி சிவகிரி வேலாயுத சுவாமி கோயிலுக்குச் சகல பரிவாரங்களுடன் கொண்டுச் செல்லப்படும்.

**பல்லி சகுனம்:**

பல்லி சகுனம் பார்த்தல் இக்கோயிலின் மற்றோரு சிறப்பம்சம் ஆகும். இக்கோயிலின் முன்பு பாம்பாட்டிச்சித்தர் சிலை ஒன்று உள்ளது. இச்சிலை முன்பு அதிகாலை மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரை பல்லி சகுனம் கேட்பர். இப்பல்லி சகுன நம்பிக்கை இன்றும் வழக்கில் உள்ளது.

இக்கோயிலின் வட்டாரத்தில் அதிகம் கூறை குல மக்களே உள்ளனர். இவர்கள் பெயர்கள் 25 சதவீதம் பொன்காளியம்மன் பெயர் கொண்டதாக உள்ளன. பொங்கியண்ணன், காளியப்பன், பொங்காளியப்பன், என்று ஆண்கள் பெயர்களும், பொங்கியம்மாள், பொன்மணி, காளியம்மாள், பொங்காயி, என்று பெண்கள் பெயர்களும் உள்ளன.

**கட்டிட அமைப்பு:**

வடக்கு நோக்கி அமைந்திருக்கும் இக்கோயிலைச் சுற்றி மதில்சுவர் உள்ளது. கோபுரத்தின் பின்புறமும், வலப்புறமும் மண்டபங்கள் பொங்கல் வைக்கவும் உணவு அருந்தவும் வசதியாக கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது குடமுழுக்கு விழா கொண்டாடுவதற்காக கட்டிடங்களைப் புதுப்பித்து, மாற்றி வசதியுடன் அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது.

இக்கோயிலின் ஆவணங்களாக ஓலைச் சுவடிகள் உள்ளன. ஓலைச் சுவடிகள் நஞ்சைப் புலவனார் பரம்பரையினரிடமும், பேரூர் சாந்தலிக்க இராமசாமி அடிகளார் தமிழ்க் கல்லூரியிலும் உள்ளன.

இவ்வாறு இக்கோயில் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவதுடன் சமுதாயத்தை ஒரு அரவணைப்புக்குள் வைத்துள்ளது என்றால் மிகையாகாது. இக்கோயிலின் முக்கிய நிர்வாகத்தை கூறை குலத்தவரும், விளையன் குலத்தவரும், செவ்வனே செய்தாலும் மற்ற இனத்தவருக்கும் மரபு வழுவாமல் முக்கியத்துவம் கொடுப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சமுதாயம் என்பது அனைவரையும் உள்ளடக்கியதே என்பதை இக்கோயில் நடைமுறை வழக்கம் எடுத்துக் காட்டுகிறது.

# திருப்பாண்டிக் கொடுமுடி

க.ஆ. திருஞானசம்பந்தம், தமிழ்ப் பேராசிரியர்,
சிக்கைய நாயக்கர் கல்லூரி, ஈரோடு-638 004.

"குருவருள் முந்நூற்று எண்பது சிவாலயம்
கொங்கேழு தேவர் சபையும்
கொல்லிமலை வெள்ளிமலை தலைமலை வராககிரி
கொழித்துலவு கொங்கு நாட்டில்"

"பாருளோர் புகழ்கறைசை அன்பர் கொடுமுடி லிங்கர்
பங்கில் வடிவுள் மங்கையும்
ஆசரித்திடும் அன்பர் அகிலமிசை நீடூழி
அனுதினமும் மிக வாழ்வரே"

என்பது கொடுமணல் இலக்கியம் கண்டது.

**கொடுமுடி:**

அகநானூற்று 159-ம் பாடலைப்பாடிய ஆமூர் கௌதமன் சாதேவனார், "ஆகெழு கொங்கர் நாட்டில் உள்ள குரூஉக்கண் நெடுமதில் சேண் விளங்கு சிறப்பில் ஆமூர் காக்கும்" கொடுமுடி என்னும் அரசனை வென்றவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பர். கொடுமுடியின்து நாட்டகத்து வாழ்ந்த மக்கள் அவனது பீடும் பெயரும் எழுதி நடுகல் எடுத்து வணங்கினர். அவனிடத்துக் கொண்ட காதலால் கறையூர் எனவும் வழங்கிய ஆமூரை அவன் நினைவாகக் கொடுமுடி என்னும் பெயரைச் சூட்டி மக்கள் அழைத்தனர் போலும்! இன்றைய பழைய கோட்டையின் பெயரே ஆமூர் என ஆய்வாளர் கூறுவர். (இன்று ஆனூர் என வழங்கப்படும் ஊர்).

**இலக்கியத்தில் கொடுமுடி:**

ஆமூர் கௌதமன் சாதேவனார் பாடிய அகநானூற்றுப் பாட்டில் (159) பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்திய துறையில்,

"வில் கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறு மூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஓடிய தூறி
கொடுமுடி காக்கும் குரூஉக் கண் நெடுமதில்
சேண் விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்

*ஆண்டமைந்து உறையுநர் அல்லர்நின*
*பூண்தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்தே"*

என்று வருவழி, கொடுமுடியும் ஆமூரும் குறிக்கப்படுகின்றன.

ஆமூரே "ஆனூர்" ஆயிற்று என்றும், கொடுமுடிக்கு மிக அண்மையில் உள்ளதென்றும் காவிரிக் கரையில் கண்டு பிடிக்கப்பட்ட 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் (ARE - 284/1961-62) குறிக்கும் ஆம்பரநாதப் பெருமான் ஆமூர்நாதனையே குறிக்கும். இன்று ஈசனின் திருப்பெயர் மகுடேசுவரர், மகுடலிங்கர், கொடுமுடி நாதர் எனவும் அழைக்கப்படும் வழக்கு கொடுமுடி என்பதின் வடமொழி வழக்காறே. அப்பர், சம்பந்தர், சுந்தரர் கூற்றிலும் வேள்விக்குடிச் செப்பேட்டிலும் பாண்டிக் கொடுமுடி என்றே போற்றப்படுகிறது.

**ஞானசம்பந்தர்:**

"பருவமறாப் பொன்னிப் பாண்டிக் கொடு முடியார்" என்றும், 'செப்பருஞ்சீர் திருப்பாண்டிக் கொடுமுடி' என்றும், 'கானமா மஞ்ஞைகள் ஆடும் கோலக் காவிரி' என்றும் கொடுமுடியைப் பாடுகிறார், திருஞானசம்பந்தர்.

அப்பர் பெருமானோ திருக்குறுந்தொகையில் 'திருக்கொடுமுடி என நினைத்தாலே தீவினை அகலும்' என்பார். சுந்தரனாரோ, 'கொங்கினில் பொன்னித் தென்கரைக் கறையூர் - கொடுமுடிக் கோயில் முன் குறுகி - கற்றவர் தொழுதேத்தும் சீர்கறையூரில் பாண்டிக் கொடுமுடி நற்றவா! உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என நமச்சிவாயப் பதிகம் பாடுகிறார்.

**வேள்விக் குடிச் செப்பேடு (710–740):**

மன்னர் மன்னன் தென்னவன் மருகன் மானவெண்குடை மான்தேர் மாறன்

*"பூவிரியும் பொழிற் சோலை*
*காவிரியைக் கடந்திட்டு - அழகமைந்த வார் சிலையன்*
*மழ கொங்கம் அடிப்படுத்து- மீண்டொழிய*
*மணி இமைக்கும் எழிலமைந்த - நெடும்புரி*
*சைப் பாண்டிக் கொடு முடி சென்றெய்தி*
*பசுபதியது பத்மபாதம் பணிந்தேத்தி*
*கநகராசியும் கதிர் மணியும் மன்மகிழக்*
*கொடுத்து இறைஞ்சினார்"*

எனக் குறிப்பிடுகிறது.

*சோழன் பூர்வ பட்டயமோ* கரிகாலன் கொடுமுடியில் சிவாலயங்கள் கட்டிவைத்து, குளமும் வெட்டி வைத்து, ஊரும் நகரமும்

பட்டணமும் கோட்டையும் கட்டி வைத்தான் எனக் குறிக்கும். அருணகிரியாரோ பாண்டிக் கொடுமுடி உடையாரின் கொடுமுடிக் குமரப் பெருமானே எனப் போற்றிப் பதிகம் பாடுவார்.

சர் பிரான்சிஸ் புக்கானன் (10-11-1800) மலபார் பயணம் புறப்பட்ட போது தன் தலயாத்திரைக் குறிப்பில் கொடுமுடிபற்றிக் குறிப்பிடுவதாவது:

"I went eight hours to Kodumudi, a town on the bank of Cauvery. The road is interupted by several torrents swelled much by the heavy rains. A great part of the route led me through a country fully cultivated and enclosed; and although not so well wooded as England, yet I think on the whole, the most beautiful that I have seen in India".

கபில தேவ நாயனாரின் இரட்டை மணிமாலையில் கொடுமுடியிடம் காதல் கொண்டு கருத்தழிந்த கன்னி ஒருத்தி படும் பாட்டைச் சித்தரிக்கும் அகத்துறைப்பாடல் கற்கண்டாய் இனிக்கிறது. தாயுமானவனிடம் பெண்ணைப்பெற்ற தாய் சென்று, தன் மகளின் மெலிவை எடுத்துச் சொல்லிப் புலம்புகிறாள். கபில தேவ நாயனார்,

நிறம் பிரிதாய் உள் மெலிந்து நெஞ்சுருகி வாளா
புறம் புறமே நாள்போக்கு வாளோ? நறுந்தேன்
படு முடியாய் பாய்நீர் பரந்தொழுகு பாண்டிக் கொடுமுடியாய்"

எனக் கற்பனை நயந்தோன்றக் கூறுகிறார்.

**கொடுமுடித்திருத்தலம்:**

| | | |
|---|---|---|
| கோயில் | - | திருப்பாண்டிக் கொடுமுடி |
| இடம் | - | கொடு முடி |
| இறைவன் | - | ஸ்ரீ மகுடலிங்கர் |
| இறைவி | - | ஸ்ரீ வடிவுடைய நாயகி (ஸ்ரீ சௌந்திராம்பிகை அம்மன்) |
| திருமால் | - | ஸ்ரீ வீரநாராயணப் பெருமாள் |
| தேவி | - | திருமங்கை நாச்சியார் |
| தீர்த்தங்கள் | - | காவேரி (கங்கையிற் புனிதமாய காவிரி) |
| காவிரியின் வேறுபெயர்கள் | - | கவேர நதி, காக நதி, பொன்னி நதி, தென்கங்கை, தேவ தீர்த்தம், பரத்துவாச தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் |
| தலவிருட்சம் | - | வன்னி மரம் இம்மரத்தினடியில் பிரம்மன் திருஉருவம் அமைந்துள்ளது |

| | | |
|---|---|---|
| கோயில் அளவு | - | கிழமேல் 640 அடி<br>தென்வடல் 434 அடி |
| தனிச்சிறப்பு | - | மும்மூர்த்திகளுக்கும் உரிய தலம்.<br>சமயக் குரவர் நால்வராலும் போற்றப்பட்டது<br>தேவாரப் பாடல் பெற்ற கொங்கு நாட்டுச் சிவத்தலங்களில் ஒன்றான திருப் பாண்டிக் கொடுமுடி |

**தலத்தின் வேறுபெயர்கள்:**

| | | |
|---|---|---|
| தென்கயிலாயம், | | |
| பிரம்மபுரி | - | (பிரம்மன் வழிபட்டமையால்) |
| அரிஹரபுரம் | - | திருமால் வணங்கியமையால் |
| அமுதபுரி | - | கருடன் அர்ச்சித்து தெய்வ உலக அமிர்தம் கொணர்ந்தமையால் |
| கன்மாட புரம்,<br>கறையூர், கறை செய் | - | கன்மாடன் என்னும் வேதியன் வழிபட்டு வயிற்றில் உள்ள களங்கம் நீங்கினமையால் |
| பாண்டிக் கொடுமுடி | - | மலயத்துவசப் பாண்டியன் திருத்தலம் அமைந்ததால் |
| பாண்டு நகரம் | - | பாண்டியன் பெருநோய் நீங்கினமையால் |
| பரத்துவாச சேத்திரம் | - | பரத்துவாசருக்கு ஆனந்த நடனக் காட்சி தந்தமையால் |
| கொடுமுடி | - | மேரு மலையின் ஒரு துண்டு வயிர மணியாக விழுந்து அதுவே லிங்க மானமையால் |

கல்வெட்டுக்களில் அதிராஜராஜ மண்டலத்து காவிரி நாட்டுக் கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

**கோயிலின் அமைப்பும் இறைவன் திருவுருவங்களும்:**

கோயில் காவிரியாற்றின் மேல் கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் சுற்றுமதிலில் சுவாமி, அம்மன், பெருமாள் ஆகியோர்க்குரிய மூன்று கோபுரங்கள் உள்ளன. தற்போது கோயிலின் வடபக்கம் இறைவன் சந்நிதியும், தென்பக்கம் அம்மன் சந்நிதியும், இடையில் வீர நாராயணப் பெருமானின் கிழக்கு நோக்கிய சந்நிதியும் தென் மேற்கு மூலையில் அனுமார் சந்நிதியும் பெருமாள் சந்நிதிக்குத் தெற்கில் நாச்சியார் சந்நிதியும் அச்சந்நிதியின் முன் வன்னி மரமும் பிரம்மனின் திருவுருவும் அமைந்துள்ளன

கோயிலின் கோபுரத்திற்கு உள்பக்கத்தில் இரு புறத்திலும் கதிரவன், சந்திரன் அமைய அருகே நவக்கிரகங்கள், பைரவர் சனீசுவரன் சந்நிதிகள் உள்ளன. கோயிலின் மையத்தில் மூலவரின் திருச் சந்திதானமும் உள் சுற்றுப் பிரகாரத்தில் தெற்கில் அறுபத்து மூவர் திருவுருவங்களும், மேற்றிசையில் ,வினாயகர், உமாமகேசர், அகத்தீசுவரர், கசலட்சுமி, வள்ளி தெய்வானை சமேதராக திருமுருகன், வடதிசையில் நடராசர், நால்வர் திருவுருவங்களும் அமைந்துள்ளன.

வீர நாராயணப் பெருமாள் சந்நிதானத்தில் இருபுறமும் பன்னிரு ஆழ்வார்கள் திருவுருவங்களும், பரமபதநாதர், உடையவர், வெங்கடாசலபதி, கருடன் திருவுருவங்களும் காணப்படுகின்றன. பள்ளி கொண்ட கோலத்தில் இப்பரந்தாமன் காட்சித்தருகிறான்.

**பிரமன்:**

தல விருட்சமாகிய வன்னி மரத்தின் முன் பிரம்மன் சிலை காணப்படுகிறது.

**ஆஞ்சநேயர்:**

கோயில் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஆஞ்சநேர் காட்சித் தருகிறார்.

**விநாயகர்:**

காவிரிக்கரையில் சக்தி வினாயகர் காட்சித் தருகிறார்.


**இறைவனின் திருநாமங்கள்:**

**காவிரி கண்ட விநாயகர்:**

"அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவாய்"

என மணிமேகலை காவிரியின் தோற்றம் பற்றி நவிலும். இச் செய்தியை அரண் செய்வது போலக் கந்த புராணத்தில் 'கொங்கிற் கணித்தி னோரிடை' என்று தொடங்கும் பாடலில் இந்திரன் சீர்காழியில் வைத்த நந்தவனத்தின் பொருட்டு அகத்தியரது குண்டிகையினை விநாயகர் காக உருவில் கவிழ்த்ததனால் பெருகிய காவிரி கொங்கிற் கணித்தாய் ஓர் தலத்தினின்றும் சோழ நாடு வந்தது என்னும் செய்திவருகிறது. மேலும் கொடுமுடித் தலத்து விநாயகர் 'காவிரி கண்ட விநாயகர்' எனவும் காவிரியாற்றின் மையத்தில் காணப்படும் பாறை அகத்தியன் பாறை எனவும் அழைக்கப்படுகின்றன.

கார்மேகக் கவிஞர் கொங்கு மண்டல சதகத்தில் (12) திருப்பாண்டிக் கொடுமுடியைக் குறிக்கும் போது 'பூச்சாத்த இயலாத



மகுடேசுவரர், திருபாண்டிக் கொடுமுடி

வாறு உயர்ந்த சிவலிங்கத் திருமுடியானது குறுகிய வடிவுள்ள அகத்தியர் கையகப் பிடியில் அடங்கிட பூமியில் தாழ்ந்த மகுடேசர் கறையூரில் தோன்றி இருப்பதும் கொங்கு மண்டலமே' எனக் குறிப்பிடுகிறார்.

**மூலவர்:**

தான் தோன்றி அப்பர் (சுயம்பு) இறைவனுக்குக் கொடுமுடி நாதர், மலைக் கொழுந்தர், மகுடேசுவரர், மகுடலிங்கர், கொடுமுடீசுவரர், கொடுமுடிலிங்கர், திருப்பாண்டிக் கொடுமுடித் தேவர், ஆளுடை நாயனார், ஆம்மர நாதனார் என வேறு பெயர்களும் உண்டு.

**இறைவி:**

வடிவுடை நாயகி, பன்மொழி அம்மை, சௌந்திராம்பிக்கை என அழைக்கப்படுகிறார். தேவிக்குத் திருமங்கை நாச்சியார், மகாலட்சுமி என்ற பெயர்கள் உண்டு.

**பெருமாள்:**

வீர நாராயணப் பெருமாள், ஆதி நாராயணன் அநந்த நாராயணர், வேத நாராயணர் எனப்படுவர்.



அருள்மிகு உத்சவமூர்த்தி
வீரநாராயணப் பெருமாள்

இவர்க்குப் பரிவார தெய்வங்களாக நாபிக் கமல நான்முகன், நாரதர், பரவாசுதேவர், விபீடணன், ஆஞ்சநேயர், கவேர முனிவர், அகத்தியர் போன்றோர் அமைந்துள்ளனர்.

**வியத்தகு செய்திகள்:**

ஆண்டுதோறும் ஆவணி, பங்குனி மாதங்களில் நான்கு நாட்கள் கதிரவனின் கதிர்கள் விமானங்கள், கொடி மரம் இவற்றை கடந்து கருவறை வந்து கொடுமுடி நாதர் வடிவுடை நாயகி திருவுருவங்களில் படும்படி கோயில் சமைத்த சிற்பிகளின் கணிதவியல் கட்டடக் கலைத்திறனை நாம் போற்ற வேண்டும்.

**கொங்கின் அருங்கலைச் செல்வங்கள்:**

கொடுமுடியில் வீர நாராயணப் பெருமாள் கோயிலில் உள்ள திருமாலின் செப்புத் திருமேனி கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்திய நாட்டில் திருமால் செப்புத் திருமேனிகளிலேயே ஈடு இணையற்றது திருப் பாண்டிக் கொடுமுடி திருமால் திருமேனியே எனச் சிற்பக் கலை வல்லுநர்கள் குறிப்பிடுவர்.



கொடுமுடி நடராசர் (வெங்கலம்)

இக்கோயிலில் சதுரதாண்டவர் உருவம், ஆடவல்லானின் உருவம், முப்புரம் எரித்த முதல்வன் உருவம், இவை செம்பில் அழகுற வார்க்கப் பெற்றுள்ளன. கல்லில் வடித்த கவினுறு சிலைகளும் செம்பில் வடித்த செழுங் கலைச் செல்வங் களும் கொங்கு நாட்டில் உண்டு என்பதற்கு தாரமங்கலம், தாடிக் கொம்பு, பேரூர், நாமக்கல் கல்லோவியங்களும் மடவளாக ஆடவல்லான் செப்புச் சிலையும் கொடுமுடி கலைச் செல்வங்களும் தக்கச் சான்றுகளாகும்.

**திருவிழாக்கள்:**

மகுடேசுவரருக்கும், வீர நாராயணப் பெருமாளுக்கும் சித்திரை மாதம் பிரம்மோத்சவம் 11 நாட்கள் நடைபெறுகிறது. இத்திருவிழா சைவ, வைணவ ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கொங்கில் அமைகிறது.

மகாசிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கந்தர் சட்டி திருவிழாக்களும் நடைபெறுகின்றன. திருமங்கல நாண் நோன்பும் மார்கழித் திருவாதிரை நாளில் நிகழும் பங்குனி உத்திரமும், ஆடி பதினெட்டாம் பெருக்கும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

பங்குனி உத்திரத்திற்கு நான்கைந்து நாட்களுக்கு முன் இருந்தே சிவனருட் செல்வர்கள், முருக பக்தர்கள் கொடுமுடிக் காவிரியில் இருந்து காவிரித் தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு, கொடுமுடியின் அறிகுறியாக வன்னியிலையைக் கலசத்தில் வைத்துக் கொண்டு பழனிக்குப் பயணம் போவார்கள். வழிநடைப் பயணமாகப் போகும் போது, தம்பட்டம், பதலைப்பறை, சிறுபறை, உடுக்கை, பம்பை, உறுமி, பேரிகை முதலான வாத்தியங்களையும், துணைக் கருவிகளாகிய ஊதுகொம்பு, எக்காளம், தாரை, திருச்சின்னம், துத்தாரி, நாதசுரம், புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களையும், கஞ்சக் கருவிகள் ஒலிக்கப்பெற அவ்வவ் விசைக் கருவிகளுக்கு ஏற்ப மக்கள் ஆடியும் பாடியும் தம்மை மறந்தவராய், ஆண்டவன் புகழ் பாடியவராய் பெருமுழக்கங்களோடு ஆயிரம் ஆயிரம் காவடிகளை ஏந்தியவராய் குறிஞ்சிக் கிழவனைக் காண, அஞ்சலி செலுத்த நடைப்பயணம் போது கொங்கின் இசைச் செல்வங்களையும் மக்களின் இறை உணர்வையும், காணும் வாய்ப்பு நெஞ்சை நெகிழச் செய்யும்.

**கல்வெட்டுச் செய்திகள்:**

இத்தலம் “அதி ராஜ மண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர் திருப்பாண்டிக் கொடுமுடி'' எனவும், இறைவன் பெயர் “திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர், ஆளுடைய நாயனார்'' என்றும் கல்வெட்டுக்களில் அமைந்துள்ளன.

**அரசர்கள்:**

1. சுந்தர பாண்டியன், கேசரிவர்மன், திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் என குறிக்கப் பெற்றுள்ளான்.

2. கொங்குச் சேரன் வீரநாராயண ரவிவர்மன் பெருமாளுக்குச் செய்த சிறப்புப் பூசனை, திருவிழா, திருப்பணிகளுக்கு ஏற்படுத்திய நில தானங்கள்.

3. தேவதானமாக எட்டு ஊர்கள் வழங்கப்பட்ட செய்தி

4. பாண்டி மண்டலத்து மயிலூர் உடையான், முருகன், விநாயகர் திருப்படிமங்களைச் செய்தளித்தமை

5. காவிரிக்கரைக் கல்வெட்டில் இறைவனது திருநாமம் ஆம்மரநாதப் பெருமான் எனக் குறித்துள்ளமை

6. கல்வெட்டுக்களை எழுதிய அலுவலர் பெயர்கள்

1. வெட்சியூர் உடையான் எழுத்து

2. சுந்தர பாண்டியன் காளிங்க ராயன் கையெழுத்து

3. பூந்துறை வேளாண் நம்பெருமாள் எழுத்து

கொடுமுடிக் கோயிலின் தொன்மைக் கல்வெட்டுக்கள் ஐந்தினை, மெக்கன்சி என்ற ஆங்கிலேயப் பொறியாளர் 200 ஆண்டுகட்குமுன் படி எடுத்து பதிப்பித்துள்ளார் (தென் இந்தியக் கோயிற் சாசனங்கள் முதல் பாகத்தில் 251 முதல் 255 வரை). தற்போது ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் பெருமாள் கோயிலின் பின்புறத்தில் காணப்படுகிறது. மைசூர் இந்திய தொல்பொருள் துறையினர் இரு கல்வெட்டுக்கள் காவிரிக் கரையில் இருக்கக் கண்டு 1961-62 ஆம் ஆண்டு கல்வெட்டு அறிக்கையில் (284, 285) பதிப்பித்துள்ளனர்.

**தண்டிகைக் காளியண்ணன்:**

திருமலை நாயக்கர் ஆட்சியில் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்) நாட்டிமைக் காளியண்ணன், மேல் கரை அரைய நாட்டில் நாட்டாண்மைப் பொறுப் பேற்றவன், கூறை குலத்தினன்; தலைய நல்லூர் என்னும் சிவகிரியில் ஆட்சி புரிந்தவன். கொடுமுடி லிங்கருக்கு அபிடேகம், நித்தியப்படித்தரக் கட்டளை, ஒப்பரிய நந்தாதீபத்தின் கட்டளை, நந்தவனம் சோலை முதலியன அமைத்தான் என்னும் தகவலை "கொடுமுடிக் குறவஞ்சி" தரும். இன்று ஈரோடு அருங்காட்சியகத்தின் முகப்பில் வைக்கப் பட்டிருக்கும் சிலை, தண்டிகைக் காளியண்ணன் சிலையாகக் கருதலாம்.

**நரசிங்க முகத்தூண்கள்:**

இருநரசிங்க முகத்தூண்கள் இத்தலத்தில் காணப்படுகின்றன. இவை பல்லவர் காலக் கலைத் தூண்களாக இருக்கக் கூடும் என்பது சிற்ப ஆய்வாளர் கணிப்பாகும். நரசிம்ம பல்லவன் (கி.பி. 625-650) காலத்துக் கலைப்பணித் தூண்களாகவும் இருக்கக் கூடும்.


**கொடுமுடியில் காசுகள்:**

கட்டுரையாளர் களப்பயணத்தில் கிடைத்த காசுகள்.

1. இராசராசன் கோழிக்காசு
2. சுந்தர பாண்டியன் காசு
இவை ஈழமனிதன் உருவும் எழுத்துப் பொறிப்பும் கொண்டவை.
3. காளைச் சின்னம் பொறிக்கப்பட்ட விசயநகர மன்னர் செப்புக் காசு
4. 'வேங்கட்ட' பெயர் பொறிக்கப் பெற்ற விசயநகர மன்னர் செம்புக் காசு
5. மைசூர் உடையார்கள் - யானைத்துட்டு - யானைக் காசுகள்
6. ஹைதர்-திப்பு செம்புக்காசு (1, ½, ¼, 1/8 பைசா)
7. மயிலிக் காசு (5 காசு, 20 காசு)
8. வி.ஓ.சி. டச்சு 'நாமக்' காசு
9. கிழக்கிந்தியக் கும்பெனிக் காசு (1835 - ½ அணா, ¼ அணா)
10. வீர ராயன் பணம் - 400 மில்லிகிராம் தங்கக் காசு
11. நாலாவது வில்லியம் வெள்ளிரூபா

**கட்டுரைக்குப் பயன்படுத்திய நூல்கள்:**


1. திருப்பாண்டிக் கொடுமுடி கோயில்கள் வரலாறு - தேவஸ்தான வெளியீடு - 1966.
2. கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் - குடமுழுக்கு விழா சிறப்பு மலர் - 1974.
3. வேங்கடம் முதல் குமரி வரை - காவிரிக் கரையிலே - தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் - 1961.
4. கொங்கு - புலவர் ராசு: தொகுதி 2, 3 (1972, 1973).
5. ஆய்வுத் தேன் - பதிப்பாசிரியர் -கொடுமுடி சண்முகம் - 1973.
6. திருப்பாண்டிக் கொடுமுடி வரலாறு - பதிப்பாசிரியர் - ச. பிரகதம் - 1977.
7. கொங்கு நாட்டுக் கவுண்டர் - வீயாரெம் - 1977.
8. தமிழகக் கோயிற் கலைகள் - இரா. நாகசாமி - 1976.
9. கொடுமணல் இலக்கியங்கள் - பதிப்பாசிரியர் - புலவர் செ. ராசு - 1981
10. கொங்கு மண்டல சதகங்கள் - சாந்தலிங்க அடிகளார் - தமிழ்க் கல்லூரி - பேரூர் - 1986.



மே
தெ
வ
கி
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
29
30
31
32
33
34
35
36
36
37

**எண் குறிப்புக்கள்:**

1. சக்தி விநாயகர்
2. இறைவன் கோபுர வாயில்
3. பெருமாள் கோபுர வாயில்
4. அம்மன் கோபுர வாயில்
5. மகுடேசுவரர் முன் மண்டபம்
6. கதிரவன்
7. சந்திரன்
8. நவக்கிரகங்கள்
9. பரத்துவாசதீர்த்தம்
10. பைரவர்
11. சனீசுவரர்
12. சுவாமி கோயில் வாயில்
13. மகுடேசுவரர்
14. அறுபத்து மூன்று நாயன்மார்கள்
15. தட்சிணாமூர்த்தி
16. காவிரி கண்ட விநாயகர்
17. உமாமகேசுவரர்
18. அகத்தீசுவரர்
19. கசலட்சி
20. முருகன்
21. சண்டேசுவரர்
22. சபாபதி
23. உத்சவ மூர்த்தி
24. அம்மன் கோயில் முன்மண்டபம்
25. அம்மன் கோயில் வாயில்
26. அம்மன்
27. கணேசர்
    சப்தமாதர்
    சோழீசுவரர்
    விசுவேசுவர்
    காசி விசுவநாதர்
    விசாலாட்சி
    சரசுவதி
28. அம்மன் பள்ளியறை
29. மடப்பள்ளிகள்
30. பிரம்ம தீர்த்தம்
31. பிரம்மன் ஆலயம்
32. அனுமார் சந்நிதி
33. திருமங்கை நாச்சியார்
34. வீர நாராயணப் பெருமாள் கோயில் வாயில்
35. பெருமாள்
36. ஆழ்வார்கள்
37. சொர்க்க வாசல்

# திருவாணி கூடல்

செ. இராசு, ஈரோடு

கொங்கு நாட்டு இலக்கியங்களிலும், வரலாற்றிலும், செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும், ஓலைப்பட்டயங்களிலும் மிகவும் சிறப்பிக்கப்பெறும் ஊர்களில் பவானி முக்கிய ஊராகும். சங்க இலக்கியம் தொடங்கி இக்காலப் பெரும்புலவர் அ.மு. குழந்தை வரை எண்ணற்ற தமிழ்ப் புலவர்கள் கூடுதுறையில் ஆடி, மகிழ்ந்து தெய்வத் தமிழில் பாடியுள்ளனர்.

**பல்வேறு பெயர்கள்:**

நன்றா, நணா, நண்ணாவூர், திருநணா, நண்ணா, வானி, வானிகூடல், வானியங் கூடலூர், கூடல், கூடலூர், திருவாணிகூடல், திருமுக்கூடல், கூடுதுறையூர், பவானி கூடல் என்றெல்லாம் பல்வேறு பெயர்களில் பாங்குடன் அழைக்கப்பெற்ற பெருமைகளை உடையது இன்றைய பவானியாகும்.

**ஏழில் ஒன்று:**

காஞ்சிபுரம் உள்ளிட்ட ஏழு இந்திய ஊர்களை முத்திநகர் ஏழு என்று தொகுத்துக் கூறுவர். அதுபோல் தேவாரத் திருமுறைப் பாடல்பெற்ற திருத்தலங்கள் ஏழு. அவை பவானி, திருச்செங்கோடு, கொடுமுடி, வெஞ்சமாங் கூடல், கரூர், அவிநாசி, திருமுருகன் பூண்டி என்பனவாகும். பண்டை நாளில் வசதிகள் இல்லாது இருந்த போதிலும் இவ்வேழு தலங்களையும் ஒரே நாளில் சென்று வழிபட்டு மகிழ்ந்துள்ளனர் நம் கொங்கு நாட்டுப் பெருமக்கள். செல்ல முடியாதவர்கள் சென்றவர்களை வாழ்த்தி வணங்கியுள்ளனர். சென்றுவந்த குதிரைக்குக்கூட காணிக்கை செலுத்தி மரியாதை செய்துள்ளனர் என்பதை பழம்பாடல்கள் உணர்த்துகின்றன. முன்னோர் கொங்கேழு தலங்களையே எண்ணி நாள்தோறும் வணங்கினர். இதனை

ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி **நீள்நணா** - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை

என்ற வெண்பா நமக்கு அறிவிக்கிறது.

**திருமுறைகளில் திருநணா:**

முதல் மூன்று திருமுறைகள் பாடிய திருஞானசம்பந்தரும், இறுதியாகிய பன்னிரண்டாம் திருமுறை பாடிய சேக்கிழார் பெருமானும் பவானியைக் குறிப்பதால், பவானி சிறப்புப் பெறுகிறது. எல்லாத் திருமுறைகளிலும் இவ்வூர் சிறப்பிக்கப் பெறுவதாகக் கருதலாம்.

திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் இரண்டாம் திருமுறையில் 72ஆம் பதிகத்தில் 2245 முதல் 2255 வரையுள்ள தெய்வத் தீந்தமிழ்ப் பாடல்கள் பவானிக்குரியவை (தேவாரம் அடங்கன் முறை-மயிலை இளமுருகனார் பதிப்பு). பதிகத்தின் ஆறாம் பாடலாக

வில்லார் வரையாக மாநாக நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும்
அல்லாத சாதிகளும் அங்கழல்மேல் கைக்கூப்ப அடியார்கூடிச்
செல்லா அருநெறிக்கே செல்லஅருள் புரியும் திருநணாவே

என்ற பாடல் அமைந்துள்ளது.

அல்லாத சாதிகளும் கைக்கூப்பி வணங்குவர் என்று ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் பாடிய அதிசயம் பவானியில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்தது. நொய்யலாற்றின் வடபகுதியிலுள்ள பவானியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் மாவட்ட ஆட்சியர் வில்லியம் கேரோ அவர்கள் 11-1-1804 அன்று வேதநாயகியை வணங்கிமகிழ்ந்து பள்ளியறைக்குத் தந்தக் கட்டிலைப் பரிசிலாக அளித்து அதில்தன் கையொப்பத்தையும் இட்டுள்ளார்.

சேக்கிழார் சுவாமிகளும்

அப்பாலை குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலும் சென்றேத்தித் திருநணா வினைஇறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார்

என்று பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் இங்குவந்து வழிபட்டதைப் பாடுகிறார் (பெரியபுராணம் - திருஞான சம்பந்தர் புராணம் 327).

**நன்றாவும் நணாவும்:**

சங்க இலக்கியமாகிய பதிற்றுப்பத்தின் பதிகம் குறிக்கும் நன்றா என்னும் குன்றுதான் ஊராட்சிக்கோட்டை மலை. இந்தமலை

பவானியோடு தொடர்புடையது. நன்றா என்ற பெயரே தேவார காலத்தில் நணா - திருநணா - என்று மாறியது. நணாவில் உள்ள சிவபெருமான் நணாவுடையார் - நண்ணாவுடையார் எனப்பட்டார். நண்ணாவுடையார் என்பதே சங்கமேசுவரரின் பழம் பெயராகும்.

கொங்கு 24 நாடுகளில் முதன்மையானது பூந்துறைநாடு. அந்நாட்டின் தலை நகர் பூந்துறை. அப்பூந்துறையின் புகழ்மிகு காணியாளர்கள் கொங்கு வேளாண் பெருமக்களில் காடை குலத்தினர். அக்குலத்தலைவர்கட்கும் நண்ணாவுடையார் என்பதே பெயர். பவானி வடகரைநாட்டு வானியாக இருந்தாலும் பூந்துறைத் தலைவர்கள் இத்தலத்தின் புகழ்பாடியுள்ளனர். பவானி இறைவன் பெயரையே தாமும் பூண்டனர்.

வேணா டுடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரைமன் றாடி - வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை **நண்ணாவுடையார்க்கு**
மூவேந்தர் சூட்டும் முடி

என்பது ஒரு பழம்பாடலாகும்.

**வாணியே பவானி:**

பவானியின் பெயர் வானியாற்றால் ஏற்பட்டதே. பதிற்றுப்பத்தில் (பாடல் 86) 'சாந்து வரு வானிநீர்' என வானி குறிக்கப் பெறுகிறது. வானியாற்றில் சந்தன மரங்கள் மிகுதியாக வருவதால் குளிர்ச்சியும் மணமும் பெறுகிறது என்ற குறிப்பு அங்கு காணப்படுகிறது.

கொங்கு மண்டல சதகத்தில் கொங்குநாட்டு ஆறுகளைத் தொகுத்து கூறும் பாடலில் (எண் 6) வானியாறு ஆறாவது ஆறாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

திருமணி தொப்பைபூங் காவேரி வானியும் செய்யநதி
தருமணி காஞ்சி பொருநைநள் ளாறொடு சண்முகமும்
குருமணி பாலை நதிவாழை காரி குடவநதி
வருமணி காண்பதும் சிற்றாறு சூழ்கொங்கு மண்டலமே

என்பது அப்பாடலாகும்.

பல்வேறு இலக்கியங்களிலும், தனிப்பாடல்களிலும் வானி குறிக்கப் பெற்றுள்ளது.

'வடகொங்கில் **வானி ஆற்றில்**' (பரமத பங்கம்)

'காவிரியோடு கலக்குறு **வானி**' (கொங்கு மண்டல சதகம்)

*'எற்றுதிரைப் பொன்னி **கூடுறு வானி**' (தனிப்பாடல்)*
*'வரைகொண்ட பூந்துறை நாடது வாழப் **பவானி**தனைக்*
*கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை*
*காலிங்கனே*

*(தனிப்பாடல்)*

*'**வானி** நதியைக்கொண்டு வாய்க்கால்ஐங் காதவழி*
*தாணுயர்வாய்க் கொண்டுபோய்த் தான்நடத்தும் மெய்குலத்தோன்'*
*(நல்லணவேல் காதல்)*

*'தேவர்திரள் மாதவர்கள் சேர்ந்துதினம் தோய்ந்திலங்கும்*
*காவிரி **பவானி** காஞ்சிஅறு மாநதி' (மேலது)*
*மூவரசர் தான்கூடி முடிசூட்டும் **வானி***
*முகூர்த்தமிடக் கால்வாய்கள் முந்திவயல் பாயும்*
*(பூந்துறைப் புராணம்)*

*'உயர்நதி வடக்கு **வானி**' (மேலது)*
*'தளமிலகு காஞ்சிநதி **வானி**யருள் தரளம்*
*தாழ்விலாப் பொருநை லவணம்*
*தாங்குநதி காவேரி ஆளியாறுடன்' (காணிப்பாடல்-குழாய குலம்)*
*'வளமான பொன்னிநதி, **வானி**நதி காஞ்சிநதி*
*'மருவுபூந் துறைநாடனே' (காணிப்பாடல்-கூறை குலம்)*
*'காவேரி **வானி**யும் நொய்யல்சூழ் மேல்கரைப்*
*பூந்துறைசை நாட்டெல்லை' (காணிப்பாடல்-காடை குலம்)*
*'சித்தாறு காஞ்சியும் **வானி**கா வேரியும்*
*செல்வனே புகழ்பெற்றவா' (காணிப்பாடல்-செகங்குலம்)*
*'கொங்கிலுயர் பொருநைநதி சித்தாறு காஞ்சியும்*
*குடகனும் தார்**வானி**யும்' (காணிப்பாடல்-செம்ப குலம்)*
*'சரசகா விரி**வானி** காஞ்சிஅனு மாதையும்*
*சதுர்வித நதி' (சென்னிமலை ஆண்டவர் காதல்)*
*'கொந்துலவு காஞ்சிநதி சவுந்தரமா நதி**வானி***
*குலாவியும் விளங்குநாடு' (குறுப்பு நாட்டுப்பாடல்)*
*'**வானி** அணைகட்டி வாய்க்கால் ஐங்காதம் வழிநடந்து*
*பானு மதியும்உள் ளமட்டும் கீர்த்தி படைத்தவன்' (தனிப்பாடல்)*

'வாணிதனைக் கரைகொண் டடைத்தவன்
'வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே' (தனிப்பாடல்)

**பவானிப் பாடல்கள்:**

வானியாற்றால் பெயர்பெற்ற பவானி நகரும் பலபடச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

'அந்தி யூரும்பட்டி லூரும்குறிஞ்சிபூ
லாம்பட்டி சம்பை **வானி**' (வடகரை நாட்டுப்பாடல்)

'திங்களூர் எழுமாதை கொடுமணல் விசயமங்கை
தென்நெல்லி பட்டிலூரு
திருமுருகன் பூண்டி குந்தாணி கச்சிப்பளி
**திருவாணி கூடல்** மாத்தூர்'
(காணிப்பாடல்-பனங்காடை குலம்)

'தென்னுலவு வெள்ளோடு உயர்கொன்னை யாறுடன்
சேர்ந்தபுள் ளாநத்தமும்
செய்யதிரு **முக்கூடல்** அண்டவள நாடதுவும்
செல்வவயி ரம்பள்ளியும்' (காணிப்பாடல்-பயிர குலம்)

'வல்லமை புகழ்பரவு செவ்வாயர் குலமரபு
**வானியங் கூடலு**டனே' (காணிப்பாடல்-செவ்வாயர் குலம்)

'வடிதமிழ் சிறந்தஎழு மாளதயா னூரதும்
**வானிகூ டல்**பிரமியம்' (காணிப்பாடல்-பனங்காடை குலம்)

'வண்டிநத்தம் குலவிளக்கு அவிலூர் அரச்சலூர்
வள்ளிநகர் **கூடுதுறையூர்**' (காணிப்பாடல்-செல்ல குலம்)

**கூடுதுறை:**

கூடுதுறையின் காரணத்தால் பவானிக்கே கூடுதுறையூர் என்று பெயர் அமைந்தது. பலபெயர்கள் கூடுதுறையுடன் தொடர்புப்படுத்தி வழங்கப் பெறுகிறது. சங்க இலக்கியம் குறிக்கும் கழார் என்னும் நீர்த்துறை இக்கூடுதுறையே என்பார் புலவர் குழந்தை அவர்கள்.

சந்திர-சூரிய கிரகண காலங்களில் இங்கு நீராடுவது மிகவும் சிறந்ததாகும். கார்மேகக் கவிஞர் தன் கொங்கு மண்டல சதகத்தில் இதனைச் சிறப்பிக்கின்றார் (எண் 14).

'காலில் அரவம் இருகட ரைப்பற்றும் காலத்திலே
மேலுல கம்பெறு வோர்புனல் மூழ்க விரும்புவதும்
கோல மிகுந்த பவானியும் பொன்னியும் கூடுதுறை
வாலிப காசிநண் ணாவூர் பயில்கொங்கு மண்டலமே'

'இளைய காசி' என்றும் இவர் பவானியைக் குறிப்பார்.

பவானியும் காவிரியும் மட்டும் அல்ல. கண்ணுக்குத் தெரியாமல் அந்தர் வாகினியாகப் பராசர முனிவரால் வந்த அமுத நதியும் அவ்விரண்டுடன் கூடுகிறது. ஆகவே பவானி முக்கூடல் ஆகிறது. பிரயாகையில் கங்கை-யமுனை-சரசுவதி ஆறுகள் கூடுவது போல் இங்கும் முக்கூடல். காவிரிதான் கங்கை, பவானியாறு தான் யமுனை, அமுதநதிதான் சரசுவதி. இதனைப் பவானித் தலபுராணம் பாடிய ஓராட்டுக் குப்பை வாசுதேவ முதலியார் தம் புராணத்தில் கூறுகின்றார்.

'பொன்னியே கங்கை யமுனையே பவானி
பொருவரும் பராசரன் வகுத்த
மின்னவிர் அமுத நதியதே வாணி
அல்லது வேறய இந்தத்
தன்னிகர் பிறிதில் தலம்திரி வேணி
சங்கம மாதலால் தென்பால்
கன்னிமா மதில்சூழ் காசியின் மேலாய்க்
கவினும்இக் கடிநகர் அன்றே'

என்பது அவர் பாடலாகும்.

'நல்லண்வேள் காதல்' கூடுதுறையில் பாட்டுடைத் தலைவன் நீராடி மகிழ்ந்து இறைவனை வழிபட்டதைக் கீழ்க்கண்டவாறு கூறும்.

'கன்னா உதாரன்எனக் காட்சிகொண்டு மேன்மை பெற்றுத்
தன்னாண்மை யாகத் தானிருக்கும் நாளொருநாள்
பூவுலகின் மிக்கான புண்ணியநதி என்றினிதாய்க்
**காவிரி பவானி கலந்ததுறை** நீராடி
வெண்டிருநீ றும்புனைந்து மேலாம் மறையவர்க்குப்
பண்டுலவு தானதர்மம் பண்பாகச் செய்தயன் மால்
தேட அரிய சிவசங்க மேசுரரைத்
தாதொழுது போற்றியன்பாய்த் தான்தழைக்க வும்பரிவாய்
வேத உமையை விரும்பித் துதித்து நன்றாய்
சீதரனைக் கண்டுபதம் செப்பமுட னேபணிந்து'.

பவானித் தலபுராணமும் இங்கு நீராடியவர்கள் உலகில் பெரியவர்கள் ஆகலாம் என்று கூறுகிறது. அதற்கேற்பக் கொங்குப் பெருமக்கள் பல்லாயிரமாக-இலட்சக் கணக்கான பேர் ஆண்டுதோறும் இங்கு நீராடி இறைவனின் இன்னருள் பெறுகின்றனர்.

இளைய காசியும் வதரியா ரண்யமும்
ஏற்றமார் தென்னாட்டில்
விளையும் நலத்திரி வேணிசங் கமுமாய்
விளங்குறு திருநண்ணா
உளையும் அன்பருக்கு அருள்சங்க மேசுரன்
உமைமறை நாயகிபங்
களையும் சிற்பரன் நிலவிய பெருந்தலம்
அடைந்தவர் பெரியோரே

என்பது தலபுராணப் பாடலாகும்.

**சமயச் சிறப்பு:**

தேவர்கள் வேள்வியில் சாம்பல் கொட்டி அது பவானியில் வேதகிரியாக (நன்றா) வளர்ந்தது என்றும், பதரி (அல்லது வதரி) எனப்படும் தலவிருட்சம் (எலந்தமரம்) நாள் தோறும் சிவன் பூசனைக்கு ஒரு பழம் தரும் என்றும் இத்தலச் சமயச் சிறப்புக் குறிக்கப் பெறுகிறது. இவைகளை பாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகம் மிகவும் சிறப்புடன் குறிக்கிறது (எண் 10,21).

'அலையாடும் பூம்புனல் மேவிய காவிரி ஆற்றருகே
நிலையான வேத கிரிஎன்ப தேன்இனி நித்தநித்தம்
தலையான மாதவ நாரதர் வேள்வியில் சாம்பல்கொட்டி
மலையாய் வளர்ந்ததும் நண்ணாவூர் சூழ்'கொங்கு மண்டலமே'

'அருந்தவ மாமுனி வோர்களும் தேவரும் அன்புடனே
நிரந்தர மாகத் தொழும்ஆல யத்துக்கு நித்தநித்தம்
திருந்தும் பரம சிவன்பூச னைக்கொரு தென் இலந்தை
மரம்கனி ஈவதும் நண்ணாவூர் சூழ்கொங்கு மண்டலமே'.

**திருப்புகழ்:**

அழகியதும் பெருமையும் புகழும் மிக்கதாகிய இத்தலத்துக்கு அருணகிரிப் பெருமான் மிக அழகிய திருப்புகழ்ப் பாடல் பாடியுள்ளார். திருவானி கூடல் என்று அவர் பாடியதைத் தவறாக உணர்ந்து திருவானி கூடல் ஆக்கி அப்பாடலை மதுரைப் பாடல்களோடு சேர்த்துவிட்டனர். மதுரைக் கூடலின் பெயர் வேறு காரணத்தால் ஏற்பட்டதாகும்.

'கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதில் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே

மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவல் கொடியோனே
திருவானி கூடல் பெருமாளே'.

**இறைவனும் இறைவியும்:**

**தல புராணத்தில் சங்கமேசுரர்:** வேதநாயகி தம் பெருமை பலபடப் பாராட்டிப் புகழப் பெற்றுள்ளார். அவைகளில் இரண்டு பாடல்களைப் பார்க்கலாம்.

**சங்கமேசுரன் துதி**

'பண்ணாரும் மறையோனும் பாலாழி துயின்றோனும்
படிவம் வேறா
விண்ணாடி மண்ணிடந்தும் காண்பரிய பேரொளியாய்
மெய்யன் புள்ளோர்
உண்ணாடும் பூரணமாய்ப் புவனசரர் சரவுயிருக்கு
உயிராய் ஞானக்
கண்ணாகி நண்ணாவில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தைக்
கருத்துள் வைப்பாம்'.

**வேதநாயகி துதி**

'பண்பெற்ற மறைக்கிழவன் கைஆறக் கடுங்காலப்
படர்கால் ஆற
எண்பத்து நான்குநூ றாயிரந்தா யரும்சுமக்காது
இளைப்பிங்கு ஆறத்
தன்பெற்ற பெருங்கருணை யதுகொழிக்கும் கடைக்கணருள்
தந்தாட் கொண்டென்
புண்பெற்ற பவம்துடைத்த வேதநா யகிமலர்த்தாள்
போற்றல் செய்வாம்'.

**ஏற்றமிகு இலக்கியங்கள்:**

'வேதநாயகி பிள்ளைத் தமிழ்', 'வேதநாயகியம்மன் சதகம்', 'வேதநாயகி அம்மன் பதிகம்' என்பன இத்தல இலக்கியங்களாகும். பெரும்புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் இத்தலத்தின் பெருமை அனைத்தையும் தொகுத்து 'வதரியாற்றுப் படை' என்ற சிற்றிலக்கியம் பாடியுள்ளார். புலவர் சு.மு. குழந்தை அவர்களின் 'திருநணாச் சிலேடை வெண்பா' நாம் அறிந்ததே. இவ்வூரில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பாலபாரதி முத்துசாமி அய்யர் இவ்வூர்த் தெய்வத் திருமேனிகள் பற்றிய பல பாடல்கள்

பாடியுள்ளார். அவற்றுள் பல சிறந்த இசைப் பாடல்களாகவும் திகழ்கின்றன. பிள்ளைத் தமிழில் ஒரு பாடலைக் காணலாம்.

'எள்ளத் தனையும் கள்ளமிலார்
இதயத் தடத்தில் இனிதலரும்
இனிய மலரே! அண்டர் உணற்கு
எட்டாந் தேனே! கண்டவர்கள்

அள்ளிக் கொளும்பே ரழகுவளர்
அகமே! கனுவுறாக் கரும்பே!
அரிய தவமே! தவப்பயனே!
அன்பே! கங்கை நதிபுனையும்

வள்ளல் தருவில் விளையாடும்
மயிலே! வேத நாயகியே
வரம்வேட் டவருக்கு அருள்புரியும்ப
வானி வாழும் பெருவாழ்வே!

தள்ளத் தகும்எம் தமக்கும்அருள்
தாயே! வருக! வருகவே!
தாயேழ் புவியும் காக்க வரும்
தாயே வருக! வருகவே!

சமுக்காள உற்பத்தியிலும், அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் முன்னின்று நடாத்தி மகிழும் கோடி அர்ச்சனைப் பெருமையிலும், திருமுறைக் கழகத்தின் சிறப்பிலும் உயர்ந்து விளங்கும் பவானியின் இலக்கியப் பெருமையும் பெரிதல்லவா? தட்சிண அளகை என்ற குபேரன் ஊர்ப் பெயரைக் கொண்ட இத்தலத்தை வழிபட்டோர் செல்வம் பெறுவர். நீங்களும் வந்து வணங்கிச் செல்வம் பெற்று வாழ்வீர்!

# திங்களூர்க் கோயில்கள்

முனைவர் பெ. சண்முகம், ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு

*கொங்கு நாட்டில் 24 உட்பிரிவுகளில் ஒன்றான குறும்பு நாட்டில் திங்களூர் அமைந்துள்ளது. இது ஈரோட்டிலிருந்து 26 கிமீ. தூரத்தில் அமைந்துள்ளது. முன் காலத்தில் கோவை பவானி வாணிகப் பெருவழிவும் மதுரை சத்தியமங்கலம் வாணிகப் பெருவழியும் சந்தித்துச் செல்லும் சிறந்த வாணிகத் தலமாகத் திங்களூர் விளங்கியிருக்கிறது. இவ்வூரில் சந்திர மௌலீசுவரர் என்ற பெயரமைந்த சிவன் கோயில், அழகப் பெருமாள் என்ற பெயரமைத்த பெருமாள் கோயில், புட்பநாதர் என்ற சமணத் தீர்த்தங்கரருக்கு ஏற்படுத்தப் பெற்ற சமணர் கோயில் என்பன சிறப்பாக அமைந்துள்ளன. இம் மூன்று கோயில்களும் பற்பல வரலாற்றுச் செய்திகளை விளக்குகின்றன. இவற்றில் கல்வெட்டுக்கள் பொருந்தியுள்ளன. இவை மன்னரின் ஆட்சிச் சிறப்பு, கடவுளர்களின் சிறப்பு, அடியார்களின் பக்திச் சிறப்பு, அவர்களின் கொடைச் சிறப்பு முதலியவற்றை விளக்குகின்றன.*

### *1. சந்திர மௌலீசுவரர் கோயில்:*

*திங்களூரில் வடமேற்கு எல்லையில் நீலாக் கவுண்டம்பாளையம் செல்லும் வழியில் சந்திரமௌலீசுவரர் கோயில் அமைந்துள்ளது. பிறையவிபெருமான் சந்திரமௌலீஸ்வரர் என வழங்கப்பெற்று வந்துள்ளார் சிவ லிங்கம் பெரிய அளவில் அமைந்துள்ளது. இக்கோயிலில் கருவறை, கருவறை மேல் சிறு கோபுரம், அர்த்த மண்டபம், முக மண்டபம், சுற்றுப்பிரகாரம் என்பன உள்ளன. வெளிப்புறம், விநாயகர் பலிபீடம், கருடக்கம்ப மண்டபம் என்பனவற்றையும் கொண்டு இக்கோயில் விளங்குகிறது. காலை வழிபாடு நடைபெறுகின்றது. ஐயப்ப பக்தர்களும், முருக பக்தர்களும், இச்சிறப்பு வழிபாடுகளை நடத்துகின்றனர். இவ்வாலயத்தின் முன்புற முகமண்டபம் கல்வெட்டுத் தூணுடன் காணப்படுகின்றது. இதில் அமைந்துள்ள கல்வெட்டுச் சாசனம் பின்வருமாறு:*

*(1) ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவதற் கெதிராவது குறும்பு நாட்டு (2) திங்களூர் உடையார் சந்திரபுரீஸ்வரம் உடையநாயனாற்கு அஸ்தி தேவரையெழுந்த (3) ருளுவித் தேன் பாண்டிமண்டலத்து கல்வாயினாட்டு அரசனாராயனப் பெருந் (4) தெருவான சுந்தர பாண்டியபுரத்து வியாபாரிகளில் நல்லூருடையான் அம்மையத்தேவன்*

பெருமானான் குமர்பாலனேன் தருமம். இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.[1]

கொங்கு நாட்டையாண்ட சேர நாட்டான் விக்கிரம சோழ தேவனின் நான்காம் ஆட்சியாண்டில், கி.பி. 1010இல் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இவ்வூர் வணிகப் பெருக்கம் அமைந்த ஊராக அந்நாளில் அமைந்து இருந்தது. ஐம்பொழில் வணிகக் கூட்டத்தினர் வாழ்ந்து வந்தார்கள். பாண்டிய மண்டலத்தின் சுந்தரபாண்டியபுரம் வியாபாரிகளில் நல்லூருடையான் அம்மையத் தேவன் பெருமாளின் மகன் குமரபாலன் என்பவர் இந்த அஸ்ததேவர் மண்டபத்தினை எழுப்பியுள்ளார் என்ற தகவல் இக் கல்வெட்டில் உணர்த்தப் பெறுகின்றது. இக்கோயில் அர்த்த மண்டபக் கருவறைச் சுவர்களில் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை தொன்மை வாய்ந்தவை. இவை தனியே ஆய்வதற்குத் தக்கவை.

இக்கோயிலில் பெரிய நாயகியம்மையின் கோயில் தனியாக அமைக்கப் பெற்றுள்ளது. மேலும், தென்முகக் கடவுள், ஏழு கன்னிமார், நவக்கிரகச்சந்நிதி, கண்ணப்பர் சிற்பம் ஆகியவை உள்ளன. கருடகம்பத்தில் நின்ற நிலை விநாயகர், பசு பால்சொரியும் லிங்கம், கோதண்டபாணி சிற்பங்கள் உள்ளன. கருடகம்பத்திற்கு அருகில் முகஞ்சிதைந்த நிலையில் ஒரு அரிகண்டச்சிலை அமைந்துள்ளது.

சந்திர மௌலீசுவரர் திங்களூர் நொண்டி நாடகத்திலும் பாராட்டப் பெறுகின்றார். இந்நூலின் ஓலைச் சுவடி ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. இவ்விறைவன் அருள்மலை நொண்டிச் சிந்து நூலிலும் பாராட்டப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.[2]

இக்கோயில் சொத்துக்கள் தற்பொழுது இல்லை. இக்கோயில் குடமுழுக்குத் திருப்பணி செய்யப் பெற்றால் நன்னிலை அடையும் என்று எதிர்பார்க்கலாம்.

**2. சுந்தர பாண்டியன் விண்ணகரம் என்ற அழகப் பெருமாள் கோயில்:**

திங்களூரில் கீழ்ப்புறம் பெருமாள் கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக அமைந்துள்ளது. இதன் முன்புறம் வெளியே கருடகம்ப மண்டபம் உள்ளது. கருடகம்பத்தில் உள்ள கருடாழ்வார் மகுடம் புனைந்து அழகாகக் காட்சித் தருகின்றார். ஒருபுறம் இராமர் வில் அம்புகளுடன் காட்சி தருகிறார். ஒருபுறம் அனுமன் உள்ளார். ஒருபுறம் சங்கு சக்கரம் உள்ளன. முகப்பு முன் மண்டபம் ஒருபுறம் இடிந்துள்ளது. ஒரு தூணின் மேல் பகுதியில் திருமாலின்

மச்சாவதாரம், கிருட்டிணாவதாரம், காலிங்க நர்த்தனக் கண்ணன், அனுமன், யோக நரசிம்மர், அமர்ந்த நரசிம்மர் திருவுருவங்கள் காட்சியளிக்கின்றன. இத்தூணின் கீழ்ப்பகுதியில் திருத்தொண்டர்களான தம்பதியர் மேல் திசையில் உள்ள இறைவனை வழிபடுகின்றனர். மேலும் இரண்டு பக்தர்கள் இதே தூணில் வழிபட்ட நிலையில் உள்ளனர். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். மற்றொரு தூணில் ஓர் ஆடல் நங்கையின் சிற்பம் காட்சி தருகின்றது. இதன் நுழைவாயில் மரக்கதவு நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டிருக்கலாம். இந்த முகப்பு மண்டபத்தில் கோபுரம் இல்லை. இதன் உட்புறம் உள்ள கிணறு பாழடைந்துள்ளது.

கோயில் உள்ளே திருச்சுற்று வழி அமைந்துள்ளது. இங்கே அனுமன் கோயில் அமைந்துள்ளது. பெருமாள் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மேலே கோபுரம் இல்லை. கருவறையில் அழகப் பெருமாள், திருமகள், நிலமகள் ஆகியோருடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார்.

மகா மண்டபத்தில் ஒரு தூணில் நரசிம்மர் இரணியனுடன் கடுமையாகப் போரிடும் காட்சி அமைந்துள்ளது. போர் முடிவில் நரசிம்மரின் மடியில் இரணியன் கிடக்கை கோலத்தில் இருப்பது ஒரு சிற்பத்தில் உள்ளது. ஒரு தூணில் குழல் ஊதும் கண்ணன், குழந்தைக் கண்ணன் என்ற இரண்டு சிற்பங்கள் காட்சி தருகின்றன. ஒரு தூணில் அனுமன், கோதண்டபாணி காட்சியளிக்கின்றனர்.

இம்மண்டபத்தில் விட்ணுசேனர் சங்கு சக்கரதாரியாகவும், வரத அபய கரங்களுடனும் காட்சி தருகின்றார். நம்மாழ்வார், திருமங்கை மன்னன், இராமானுசர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் வழிபாட்டில் அமைந்துள்ளன.

இக்கோயிலின் தென்புறம் பட்டிகையின் மேற்பகுதியிலும், மேற்கு வெளிப்புறத்திலும், வடபுறம் அர்த்த மண்டபத்தின் பட்டிகை வரிகளிலும் கல்வெட்டுச் சாசனங்கள் அமைந்துள்ளன.

மேற்கு வெளிப்புறச் சுவரில், திரிபுவனச் சக்கரவர்த்திகள், கோனேரின்மை கொண்டான், கோராசகேசரிவர்மன், கோமாறவர்மன் என்ற பட்டங்கள் பெற்ற கொங்குப் பாண்டிய மன்னரின் கல்வெட்டு உள்ளது (சாசனம் 260-1905).

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராச கேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரபாண்டிய தேவர் திருவெ(ழு)த்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பதினெட்டாவது ஆவணி மாசம்

முதல் திங்களூர் குறுப்பநாட்டு சுந்தரபாண்டியன் விண்ணகரகம் நாயனார் அழகப் பெருமான் திருவிளையாட்டந் தாழூன்றியான விக்கிரம சோமபுரத்தில் வாழும் ஊராளிகளிலே யெங்கள் நாயனார் அழகப் பெருமாளுக்கு நாங்கள் தர்ம்ம சாசனம் பண்ணிக் குடுத்த ப்ரிசாவது தங்கள் நாயனார் அழக பெருமாளுக்கு ஆ(றொ)வீடுக்கு பொன்னாடு வானியில் எரியும் தீபத்துக்கு யெண்ணையும் தானானறியெ தர்ம்ம சாசனம் விட்டது. இது செம்பிலையும் கல்லுலையும் வெட்டிக் குடுத்தோம் அழகப் பெருமானுக்கு சக்கரவர்த்தி சிலையிடெழுத்து சுந்தரபாண்டியன் அழகப் பெருமாள்".[3]

மேற்கண்ட கோமாறவர்ம மன்னர் கி.பி. 1265 - கி.பி. 1285 கால எல்லையில் ஆட்சி புரிந்தார்.[4] எனவே, இக்கல்வெட்டு கி.பி. 1283-இல் வெட்டப் பெற்றுள்ளது. இம்மன்னர் ஆட்சியில் அழகப் பெருமாள் சந்நிதித் தீபத்திற்குத் தரும சாசனம் செய்து கொடுத்துள்ளார் சுந்தரபாண்டியன் அழகப் பெருமாள் என்பவர்.

அழகப் பெருமாள் கோயில் வடக்குப் பட்டிகை வாயிலில் உள்ள கல்வெட்டு (சாசனம் 617 - 1905) வருமாறு:

"ஸ்வஸ்திஶ்ரீ கோவிராஜகேசரி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு ஆண்டு யிருவத்து மூன்றாவது குறுப்ப நாட்டுத் திங்களூர் நாயனார் அமு(ர்)துக்கு பாண்டி மண்டலத்துச் சோழ (கேரள) சிங்க வளநாட்டுப் பிரமதேயம் திருப்புத்தூரில்...... நம்பெருமாள் நம்பிக்காக யிந்நாயனாருக்கு ரெண்டு சந்தியா தீபம் எரிப்போமாக. யிக்கோயில் கா(நி) (வி)யாழ் நம்பிமாரில் சபாபதி வீட்டார் சவுரி பெருமாளும் கல்விய திறயெயக் கலத்து பிள்ளைக்கு பிள்ளைக்கு மாணிக்க விடலும் யிருவரும் யவர் பக்கல் வாங்கின பணம் யிருபத்தி ரெண்டு கொண்டு சந்திராதித்த வரை குடம் கொண்டு கோயில் புகுவான் (கோயிபுரவாரதி கலைவிட்டுயிருக்குது)".[5]

இக்கல்வெட்டில் வரும் கொங்குச் சுந்தரபாண்டியன் கி.பி. 1251 - கி.பி. 1283 கால எல்லையில் ஆட்சி புரிந்தவர்.[6] இருவரும் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் இராசகேசரிவர்மன் என்ற விருதுகளைக் கொண்டு விளங்கினார். இவர் தம் பெயரில் சுந்தரபாண்டியபுரம் என்ற ஊரினை ஏற்படுத்தினார். இவர் கொங்கு நாட்டில் மிகுதியான சிவாலயங்களுக்கும் வைணவத் திருப்பதிகளுக்கும் திருப்பணிகள் புரிந்துள்ளார். இவர் ஆட்சியில் இத்தலத்து அழகப் பெருமாளுக்குத் திருவமுதுக்கும் சந்தியா தீபத்திற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றச் செய்தியை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

தற்சமயம் வைணவப் பிராமணக் குடும்பத்தினர் நாளொன்றுக்கு ஒருமுறை வழிபாடு நிகழ்த்துகின்றார்கள். கோயில் சொத்துக்கள் எவையும் இல்லை. மிகவும் சிரமத்துடன் வழிபாடு நடத்தி வருகின்றனர். இக்கோயில் திருப்பணி செய்யப் பெற வேண்டும். நாளொன்றுக்கு இரண்டு வேளை வழிபாட்டிற்காவது ஏற்பாடு செய்யப் பெறவேண்டும். பொதுமக்களின் நல்லாதரவு திரட்டப்பெற வேண்டியது இன்றியமையாதது.

### 3. திங்களூர்ச் சந்திர வசதி:

கி.பி. நான்கு முதல் ஏழாம் நூற்றாண்டு வரையில் திங்களூர், சீனாபுரம், விசயமங்கலம், அரசண்ணாமலை, வெள்ளோடு, பூந்துறை முதலிய ஊர்களில் (பண்டைக் காலத்தில்) சமணக் கோயில்கள் எடுப்பிக்கப் பெற்றன. திங்களூரில் தென்மேற்கில் மந்திரிபாளையம் செல்லும் வழியில் சிறிது தூரத்தில் ஒரு தோட்டத்தில் புட்பநாதர் தீர்த்தங்கரரின் சந்திர வசதிக் கோயில் அமைந்துள்ளது. இது கிழக்கு நோக்கிய கோயிலாகும். இங்கே முன்புறம் பலி பீடம், மடைப்பள்ளி என்பன வெளியே அமைந்துள்ளன. மடைப்பள்ளி வடக்கு நோக்கி உள்ளது. கோயிலில் மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்பன உள்ளன. கருவறையும் அர்த்த மண்டபமும் பிற்காலச் சோழர் காலத்தவை. மகா மண்டபம் கி.பி. 1045-ல் எழுப்பிக்கப் பெற்றுள்ளது. கருவறையின் மேல் கோபுரம் உள்ளது. கருவறையில் பீடத்தின் மேல்நிலையில் முக்குடையின் கீழ் புட்பநாதர் யோக நிலையில் அமர்ந்துள்ளார். அர்த்த மண்டபத்தின் முகப்பில் நுழைவாயிலின் மேல் புட்பநாதருக்கு இரண்டு களிறுகள் மலர் தூவி நிற்கின்றன.

மகா மண்டபத்தில் நான்கு கற்றூண்கள் உள்ளன. முதல் இரண்டு தூண்களில் துவார பாலகர்கள் உள்ளனர். இதனை எடுப்பித்த கணித மாணிக்கஞ் செட்டியின் உருவம் இடப்புறத்தூணில் வடக்கு நோக்கி உள்ளது, குதிரை, அன்னப்பறவை, பசு என்பனவும் உள்ளன. இவற்றில் பல சமண அடியார்கள் அமர்ந்த நிலையிலும் நின்ற நிலையிலும் உள்ளனர். ஒரு தூணில் விநாயகர், நரசிங்கர், நான்முகன், அடியார்கள் ஆகியோர் உள்ளனர். மண்டபத்தின் மேல் விதானத்தில் புட்பநாதரின் சின்னமான முதலை அமைந்துள்ளது.

மேலும் இம்மண்டபத்தின் மேல் விதானத்தின் நடுப்பகுதியில் எட்டு இதழ் விரித்த தாமரை மலர் அமைய, பக்கங்களில் சூரிய சந்திரரும் அவற்றை விழுங்க வாய் திறந்து காத்திருக்கும் இராகு, கேது பாம்புகள் நெளிந்த வண்ணம் உள்ளன. இரண்டு இடங்களில்

மீன் சின்னம் அமைந்துள்ளது. ஓரிடத்தில் பாயும் புலி காணப்படுகிறது.

மகா மண்டபத்தில் இடப்புறம் அறையில் கசலட்சுமியின் தோற்றம் உள்ளது. இவ்வறையின் உள்ளே பீடத்தில் குதிரையின் சிற்பம் உள்ளது. உள்ளே புட்பநாதர் காட்சியளிக்கின்றார். இச்சிலையில் திருவாசியில் மேல்புறம் சிங்கத்தின் தலை காட்சியளிக்கிறது.

சந்திர வசதிக் கோயிலின் மடைப் பள்ளியில், 21 வரிகள் கொண்ட ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.[7] இதில் பல வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. இக்கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

"ஸ்வஸ்திஸ்ரீ கோநாட்டான் விக்கிரம சோழ தேவர்க்கு செல்லாநின்றயாண்டு நாற்பதாவது அறத்துளான் தேவன் பேரன் ஆன நானா கணித மாணிக்கச் செட்டி சந்திர வசதியில் முக மண்டபம் எடுப்பித்தேன் சகரயாண்டு 967 சிங்களாந்தகன் என்பது முக மண்டகம்."[8]

இக்கல்வெட்டு சக ஆண்டு 967 (கி.பி. 1045) இல் பொறிக்கப் பெற்றுள்ளது. இது கிரந்த எழுத்திலும் தமிழ் எழுத்திலும் அமைந்துள்ளது. இதில் கோனாட்டான் விக்கிரம சோழ தேவர் என்ற அரசர் குறிப்பிடப் பெறுகின்றார். இவர் புதுக்கோட்டை - வெள்ளாறு ஒட்டிய கொடும்பாளூர்ப் பகுதியாகிய கோனாட்டைச் சேர்ந்தவர்; வேளிர் மரபினர்; சோழப் பேரரசர்களிடம் சிறந்த அரசியல் அலுவலராகப் பணிபுரிந்து வந்தார். கோனாட்டான் விக்கிரம சோழன் கொங்குச் சோழர் மரபினரில் முதன்மையானவர். இவர் சக ஆண்டு 928 (கி.பி. 1006) முதல் நாற்பதாண்டுகள் ஆட்சி புரிந்த செய்தி அறியப்படுகின்றது.[9]

விக்கிரம சோழன் சேரநாட்டான் என்ற பட்டமேயன்றி, கலி மூர்க்கன், கோக்கலிமூர்க்கன், பரகேசரிவர்மன், திருச்சிற்றம் பலமுடையார், சந்திராதித்யகுல திலகன் என்ற பட்டப் பெயர்களையும், கொண்டு விளங்கிய செய்தியை இவர் ஆட்சியின் பிற கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.[10] இவர் ஆட்சி ஏற்றபொழுது தஞ்சையில் முதலாம் இராசராசனின் 22 ஆம் ஆண்டு ஆட்சி நடைபெற்றது.

இவர் கல்வெட்டுகள் கோவை, ஈரோடு, திண்டுக்கல் மாவட்டங்களில் காணப்பெறுகின்றன. பேரூர், வெள்ளலூர், கோளுவாம்பட்டி, விசயமங்கலம், திருமுருகன் பூண்டி, கண்ணாடிப்புத்தூர், குமரலிங்கம், சோழமாதேவி, பொன்னிவாடி, தாராபுரம், கீரனூர், பெரியகோட்டை, களந்தை, பிரமியம், சமத்தூர்,

அன்னூர், கோவில்பாளையம் என்ற இடங்களிலுள்ள கொங்கு நாட்டின் சிறப்பான ஆலயங்களில் இவர் பெயர் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தாராபுரம் இவர் தலைநகர் ஆகும். மேல் கொங்கு, தென் கொங்கு, இரண்டிலும் செல்வாக்கு நிலை பெற்றிருந்தது. அந்தியூர் அருகில் அமைந்த கோக்கலி மூர்க்கனூர் என்ற ஊர் மருவி கோமூக்கனூர் என்று வழங்குகின்றது.[11]

விக்கிரம சோழன் முதலாம் இராசராசனின் மேற்கு நாட்டுப் போர்களில் முன்னின்று இராசேந்திரனின் கீழ்ப்பணிபுரிந்தார். இவர் சோழ நாட்டு இளவரசியைத் திருமணம் புரிந்து கொண்டார் என்பதற்கு, 'விக்கிரம சோழன் சோழமாதேவியார்' என்ற பிரமியம் கல்வெட்டுப் பகுதி சான்றாக அமைந்துள்ளது.[12] சோழப் பேரரசரின் சிங்களப் போரில் விக்கிரம சோழர் கலந்து கொண்டதால் பேரரசர் தம் பட்டப் பெயராக சிங்களாந்தகன் என்பதை விக்கிரம சோழருக்கு வழங்கியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.[13] இக்கல்வெட்டும் இதனை உறுதிப் படுத்துவதாகக் கொள்ளலாம்.

இம்மன்னர் ஆட்சியில் ஐம்பொழில் என்ற வணிகச் சங்கம் தென்னாட்டில் பரவியிருந்தது. அதில் 500 வணிகர்கள் அங்கத்தினர்களாக இருந்து வந்தனர். பல சிற்றூர்களிலும் பேரூர்களிலும் இதன் அங்கத்தினர்கள் இருந்தார்கள்.[14] இச்சங்கத்தின் மூலம் வாணிகம் விரிவாகி வந்தது. இச் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர்தான் இக்கல்வெட்டில் வரும் அறத்துளான் தேவன் பேரனான கணித மாணிக்கச் செட்டி என்பவர். இவர் சிலைக்கு முன், பாயும் குதிரை இருக்கிறது. எனவே, இவர் குதிரை வணிகராக இருக்கலாம்.[15]

இம் மண்டபத்திற்குக் கங்கர் மன்னர் பெற்ற பட்டப் பெயரினைச் சிறப்பாக வைத்துள்ளார். இச் செய்திகளைத் தாங்கிய கல்வெட்டையும் அளித்து உள்ளார். இக்கோயிலில் வீரவல்லாள தேவரின் கல்வெட்டும் (கி.பி. 1292 - கி.பி. 1343) கிடைத்துள்ளது. இது முற்றுப் பெறா நிலையில் கிடைத்துள்ளது. இது:

"ஸ்வஸ்திஸ்ரீ வீர வல்லாள தேவர்க்கு வீரராச்சியம் பள்ளி அருளாயி நின்ற பிலவங்க வருஷத்து தை மாசம் முதல் தங்களுக்கு திரிகால சந்திக்கு பெறும் பள்ளி நாயனார் பூமேந்திரத்துக்கு பள்ளிக் கந்த அறிகளி நல்லூர்......"[16]

இக்கோயிலின் முக்கால வழிபாட்டுக்குப் பள்ளிச்சந்தம் தந்த செய்தியை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. இக்கோயிலின் பலிபீடம் ஒருவரால் அமைக்கப்பெற்ற செய்தியை உணர்த்தும் கல்வெட்டு பலி பீடத்தில் அடிப்பகுதியில் உள்ளது.[17]

கொங்குவேள் மாக்கதை யென்னும் பெருங்கதை தோற்றுவித்த விசயமங்கலத்தில் இருந்து வந்த சமணசமயச் சங்கத்தின் தொடர்ச்சியும் சமணசமயத் தீர்த்தங்கரர்களின் வழிபாடும் வழி வழியாக இருந்து வந்தன என்பது இக்கல்வெட்டுக்கள் உணர்த்தும் செய்திகள். சைவசமயம் தழைத் தோங்கிய இராசராசனின் ஆட்சியிலும் தொடர்ந்து சமண சமயமும் கொங்கு நாட்டில் தழைத்தோங்கியச் செய்தியை விளக்கும் இத் திங்களூர்ச் சந்திர வசதிக் கல்வெட்டுக்கள் போற்றிப் பாதுகாக்கத் தக்கவை.

கொங்கு நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களில் திங்களூர் முதன்மை பெற்று விளங்குகிறது. தொன்மைமிக்க சமணசமயக் கோயில், பெருமாள் விண்ணகரம், சிவன் திருக்கோயில் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றது. திரிகால சந்தி நாள் வழிபாட்டுக்கும் சிறப்புத் திருநாள் வழிபாட்டுக்கும் பொதுமக்களும் இந்துசமய அறநிலையத் துறையும் ஏற்பாடு செய்யவேண்டும். இத்திருக் கோயில்கள் அழிபாடுகள் நேராவண்ணம் பாதுகாக்கப் பெற வேண்டும். இப்பணியினை இளைய தலைமுறை உணர்ந்து மேற்கொள்ளுமாக.

**அடிக் குறிப்புகள்:**

1. சந்திர மௌலீஸ்வரர் கோயில் முக மண்டபத்தின் வலப்பக்கத்தூணில் உள்ள கல்வெட்டு.
2. மேற்படி கோயில் குருக்கள் தெரிவித்த செய்தி.
3. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், பகுதி-1, எண். 260.
4. கொங்குநாட்டு வரலாறு, கோவைகிழார், ப. 186.
5. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், பகுதி-1, எண். 259.
6. The Imperial Pandiyas, N. Sethuraman, P. 247.
7. Epigraphia Indica, Vol. XXX, Part VI P. 248, April 1957.
8. *Ibid.*, P. 249.
9. *Ibid.*, P. 244.
10. கொங்குநாட்டு வரலாறு, கோவை கிழார், ப. 188.
11. கோணமூக்கனூர் மாணவர்கள் ஸ்ரீ வாசவி கல்லூரியில் படிக்கின்றனர்.
12. Epigraphia Indica, Vol. XXX, Part VI, P. 249.
13. *Ibid.*, P. 249.
14. கொங்கு நாட்டு வரலாறு, கோவை கிழார், ப. 190.
15. டாக்டர் சி. மூக்கரெட்டி இவ்வாறு கூறுகிறார்.
16. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், பகுதி 1 எண். 258.
17. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், பகுதி 1 எண். 257.

# பாரியூர் திருக்கோயில்

**புலவர் கூ.சு. சென்னியப்பன், கோபிசெட்டிபாளையம்**

கொங்கு நாட்டின் இருபத்து நான்கு நாட்டுப் பகுப்புகளுள் நீராலும் நிலத்தாலும் வளம் பெற்ற பகுதி காஞ்சிக்கூவல் நாடு. இந்நாட்டுப் பகுப்பிலும் மிகப்பழமையான ஊர் பாரியூர். இது ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்திற்கு அருகில் உள்ளது.

இன்று இங்கு சிறந்து விளங்குவது கொண்டத்துக் காளியம்மன் கோயில். பழங்காலத்தில் சிவபெருமான் கோயிலே சிறப்புற்றுத் திகழ்ந்தது. இக்கோயில் இன்று வெண்பளிங்குக் கற்களால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கோபிசெட்டிபாளையம் உருப்பெறுவதற்கு முன்னால் மக்கள் வாழ்ந்த பகுதி பாரியூரே. பைந்தமிழ் மக்கள் 'பதியெழுவறியாப் பழங்குடிகள் எனப் பாராட்டப் பெறுவர். பாரியூர், ஏறத்தாழ பதிமூன்றாம் நூற்றாண்டிற்குப்பின் நிகழ்ந்த ஒரு கடும் போரினால் பாழ்பட்டது, அதன்பின் அம்மக்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து இன்றைய வெள்ளாளபாளையத்திலும், நஞ்சகவுண்டம்பாளையத்திலும் குடியேறினர்.


போர்த்துன்பம் நிகழ்ந்தபோதும், வாழ்ந்த இடத்திலிருந்து பெயர்ந்து செல்லாமல் பதிந்து வாழ்ந்த பகுதியே இன்று பாரியூரின் அருகில் உள்ள பதி என்றும் ஊராகும். அன்றைய பாரியூர் நகரம் இன்றைய பதி வரை விரிந்து பரந்த பெருநகரமாக இருந்தது. ஊரில் நடுவில்தான் பாரியூர் சிவன் கோயிலும், அம்மன் கோயிலும் அமைந்திருந்தன.

பாரியூர் கோயில்களை நடுவாகக் கொண்டு, இன்றைய பதியினை ஒரு திசையின் எல்லையாகக் கொண்டு ஓர் வட்டம் வரைந்தால் எவ்வளவு பரப்பு அடங்கும் என்பதை மனக்கண்ணால் நோக்குங்கள். அதுவே, அன்றைய பாரியூர் நகரத்தின் பரப்பாகும்.

பதியில் பதிந்து வாழ்ந்த மக்கள் தவிர ஏனைய பகுதியில் வாழ்ந்த மக்களெல்லாம் இரண்டுகல், மூன்றுகல், தொலைவில் சென்று குடியேறியுள்ளனர். அத்தகைய புதிய குடியேற்ற ஊர்களே இன்று பாரியூருக்கு அருகில் பாரியூர் வெள்ளாளபாளையமும், பாரியூர் நஞ்சகவுண்டம்பாளையமுமாகும். இவ்வூர்ப் பெயர்களின் முன் அடைமொழியாக அமைந்துள்ள பாரியூர் என்பதே மேற்குறித்த வரலாற்றிற்குரிய அறிய சான்றாகும்" என புலவர் பொன். முகிலன் கூறுகிறார்.

பாரியூர்ச் சிவன் கோயில் அமைந்துள்ள இடத்தில்தான் பாரிவள்ளல் பகைவர்களால் வெல்லப்பட்டான் என்றும், அந்நிகழ்ச்சியின் அடிப்படையில் எழுந்த கோயிலே அது என்று கூறும் ஆய்வு ஒன்றும் உள்ளது.

பாரியூர்க் கோயிலினின்றும் மேற்கே தென்படும் மேற்குத் தொடர்ச்சி மலையின் பகுதியே பாரிவள்ளல் வாழ்ந்த பறம்பு மலை எனவும், புறநானூற்றுப் பாடல்களில் கூறப்பட்டுள்ள குறிப்புகள் அனைத்தும் இப்பகுதி மலையில் தான் உள்ளன எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது. எனினும், இவ்வாய்வு அறிஞர்களின் ஏற்பினைப் பெறாது, மேலும் ஆய்வுக் குரியதாகவே உள்ளது.



பாரியூர் அம்மன் கோயில்

பாரியூருக்குப் 'பராபுரி' என்று ஒரு பெயர் அக்காலத்தில் வழங்கியதாக 1942-இல் வெளியிடப்பட்ட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பராபுரி என்ற சொல்லே பாரியூர் என மாறிவிட்டதாக அந்நூலை எழுதிய காலடி எச். சுப்பிரமணிய சாத்திரிகள் கூறி உள்ளார் பராபுரி என்னும் சொல்லை நோக்கினால் இது இரு சொற்களின் இணைப்பு எனத் தெரிகிறது. பரா+புரி பராபுரி . பராவுதல் என்ற தொழிற்பெயரில் 'தல்' என்ற விகுதி நீங்கி 'பரா' என்னும் சொல் இப்பெயரின் முதற் சொல்லாக அமைகிறது. இச்சொல்லுக்கு போற்றுதல், வழிபடுதல் என்பது பொருளாகும். 'புரி' என்னும் சொல்லுக்கு கோட்டை, மதில் என்னும் பொருள்கள் உள்ளன. இவ்விரண்டையும் இணைத்து நோக்கின் வழிபடுவதற்கு உரிய கோட்டை, அல்லது பராவதற்குரிய கோயில் எனப் பொருள் அமையும்.

இப்பொருளில் பராபுரி என்னும் பெயர் ஒரு காலத்தில் வழங்கி இருக்கக் கூடும். மேற்குறித்த காலடியாரின் நூலைத் தவிர வேறு எதிலும் இப்பெயர் காணப்படவில்லை.

பாரியூரில் இன்று பெரும் புகழ் பெற்று விளங்கும் அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில் எப்பொழுது அமைக்கப்பட்டது என்பதற்குரிய சான்று ஏதும் கிடைத்திலது. ஆயினும் இக்கோயில் தமிழ் சித்திர பானு ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை (20.4.1942) காலை 9.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் மிதுனலக்கினத்தில் திருக்குட முழுக்கு விழா நடைபெற்றுள்ளது. அன்று செய்த திருப்பணிகளையே இன்று நாம் காண்கிறோம்.

இவ்வம்மனின் அருள் பெற்ற சித்தர் "சூரராச சித்தர்" என்பவர். இவருடைய மந்திர சித்தியின் திறனால் அன்னை காட்சி கொடுத்ததாக ஒரு வரலாறு உள்ளது.

இத்திருக்கோயிலின் கீழ்ப்புறத்தில் பட்டாரி என்னும் கோயில் உள்ளது. இதற்கருகில் இன்றும் சமாதி நிலையில் இச்சித்தர் இருப்பதாகக் காலடியார் கூறுகிறார்.

இவ்வம்மையின் பேரருளினால் கனம் பொருந்திய வாள் ஒன்றைப் பெற்றதாக ஒரு படைத்தலைவர் பாராட்டப்படுகிறார். இவர் சேர மன்னனின் படைத்தலைவராக விளங்கியவர். வேளாளர் குலத்தில் தோன்றியவர். முத்துக்குமார வீரர் என்னும் பெயரினை உடையவர்.

இவர் காலம் முதல் இவர் குலத்தில் தோன்றிய மக்கள் "கனவாள குலத்தார்" எனப் போற்றப்பட்டுள்ளனர். இக்குலத்தில் தோன்றியவரே "கோபிசெட்டி பிள்ளான்" என்னும் வள்ளல். இவரை, கர்ணனுக்கும், பாரிக்கும் நிகரானவர் எனப் போற்றுவர் இவர் பெயரால்தான் இன்றைய கோபிசெட்டிபாளையம் இப்பெயரைப் பெற்றுள்ளது.

இவ்வள்ளலை நாடி புலவர் ஒருவர் வந்த போது அவருக்கு வேண்டிய பொருளை வழங்கும் நிலை இன்மையால் வருந்தி தன் உயிரை மாய்த்துக் கொள்ள இப்பாரியூர்ப் பகுதியிலிருந்த புலிப்புதருக்குச் சென்றார். அன்னையை வழிபட்ட வண்ணம் புலியை எதிர்நோக்கிப் புதறை அடைந்தார். அங்கு புலியைக் காணாமல் திருடர்கள் சேர்த்து வைத்திருந்த பொற்குவியலைக் கண்டார். தன் வள்ளல் தன்மை காக்கப்பட வேண்டும் எனக்கருதிய அன்னையின் அருளே இப்பொற்குவியல் என எண்ணி, வியந்து, போற்றி, அக்குவியலை புலவர்க்கும் மற்றும் எல்லோருக்கும் ஈந்து உவந்தார் என, பாரியூர் கொண்டத்துக் காளியம்மை ஆற்றுப்படை

என்னும் நூலின் ஆசிரியர் வித்வான் இ.கே. நடேச சர்மா கூறியுள்ளார். மேலும் இவர் பாரியூர் சிவன் கோயில் ஐந்து விடங்கத்தலங்களுள் ஒன்று என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

படியெடுத்துள்ள ஆறு கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டு பெரியது. ஏனைய ஐந்தும் சிறியன. முதல் கல்வெட்டில், அக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டில் ஆட்சி செய்த மன்னன் பெயர் முழுமையாகத் தரப்படவில்லை. மேலும் முதற் கல்வெட்டு, 'திரிபுவன வீர தேவர்க்கு' எனத் தொடங்குகிறது. கல்வெட்டில் இறுதிப் பகுதியில் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் என்று வந்து உள்ளது. இவ்விரு பெயர்களிலும் மன்னனின் பெயர் முழுமையாக இடம் பெறவில்லை. இவன் திரிபுவன வீர தேவன் என்ற பட்டமுடைய மூன்றாம் குலோத்துங்கச் சோழனாக இருக்கலாம்.

என்றாலும் இம்முதற் கல்வெட்டில் (291) குறித்துள்ளது போன்றே நான்காம் (294) கல்வெட்டிலும், 'சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்' என வருகின்றது. பாரியூர் காஞ்சிக் கூவல் நாட்டின் தலைநகராய் அன்று திகழ்ந்த கூவலூரில் உள்ள கல்வெட்டுகள் சுந்தர பாண்டியன் காலத்தவை.

எனவே கோனேரின்மை கொண்டான் என்னும் புகழ்ப்பெயர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டிய தேவர்க்கு உரியதாக வரலாற்றில் காண்கிறோம். இவ்வடிப்படையில் நோக்கும் போது பாரியூரில் உள்ள முதலாம் (291) கல்வெட்டும் நான்காம் (294) கல்வெட்டும் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தவை எனக் கொள்ளலாம்.

பாரியூரில் அமைந்துள்ள இரண்டாவது கல்வெட்டு (292) புகழ்பெற்ற போசள வேந்தனாகிய வீரவல்லாள தேவன் காலத்தைச் சார்ந்தது. இவனை இக்கல்வெட்டு 'ஸ்ரீமன் பிரதாப சக்கரவர்த்தி போசள புஜபல வீர வல்லாள தேவன்' என்று போற்றிப் புகழ்கிறது.

மூன்றாம் (293), ஐந்தாம் (295), ஆறாம் (296) கல்வெட்டுக்கள் மூன்றாம் வீரபாண்டியன் காலத்தவை. 'வீர பாண்டிய தேவர்' என்னும் பெயர் மூன்று கல்வெட்டுக்களிலும் தெளிவாக இடம் பெற்றுள்ளது.

இனி, முதற்கல்வெட்டு தெரிவிக்கும் செய்திகளை நோக்குவோம். கொங்கு நாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் பாரியூரில் உள்ள இக்கல்வெட்டு மிகவும் சிறப்புடையது.

கொங்கு நாடு அக்காலத்தில் 24-நாடுகளாகப் பகுக்கப் பட்டிருந்தது. அந்த இருபத்து நான்கில் 17 நாடுகளின் பெயர்களை இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டால் நாம் அறியும் 17 நாடுகள் வருமாறு:

1. நரயனூர் நாடு
2. பொங்கலூர் நாடு
3. தென்கரை நாடு
4. அண்ட நாடு
5. தலையூற்ற நாடு
6. குருப்ப நாடு
7. காஞ்சிக் கூவல் (கோயில்) நாடு
8. பூந்துறை நாடு
9. வடகரை மணலூர் நாடு
10. அரய நாடு
11. சினங்கு நாடு
12. வெங்கல நாடு
13. வீர சோழ வளநாடு
14. வனுப்புக்கார நாடு
15. வடபரிசார நாடு
16. கீழ்ப்பரிசார நாடு
17. வடகரை நாடு

நாடு பற்றிய ஆய்வினை மேற்கொள்பவருக்கு இக்கல்வெட்டு அரும்பெருந்துணையாகும்.

இத்தகைய நாட்டுப் பகுப்பு ஒவ்வொன்றிலும் காணியாளர்களும், தானத்தார்களும் இருந்துள்ளதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. அன்றைய காணி என்பது இன்றைய ஊராட்சிக்கும் மேலான அதிகாரங்களையும் ஆளுமை முறைகளையும் கொண்டிருந்தது.

கொங்கு நாட்டில் இக்காணி ஆட்சிமுறை தொல் பழந்தமிழரின் அரசியல் அறிவினைக் காட்டும் திறத்தது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆன்மைத்திறன் கொண்டவர்கள் காணியாளர்களாய் அமைத்து மக்களை நன்முறையில் நடாத்திச் சென்று உள்ளனர். இன்றைய வழக்கில் கூட ஊரின் முகமையானவரை 'காணியாளக்காரர்' எனக் குறிப்பிடுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தானத்தார் என்பது கோயில் நிர்வாகத்தை மேற்கொள் பவர்களைக் குறிப்பதாகும். இவர்கள் அக்கால மக்களின்

பொதுவுடைமை நிலையமாய்த் திகழ்ந்த கோயிலை மக்களுக்கும் அவர்தம் இறையுணர்விற்கும் பயன்படும் வண்ணம் நிர்வகித்து வந்ததைத் தமிழகக் கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன.

கொங்கு நாட்டில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய தானத்தார்களின் பெயர்களில் சில இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. அவை,

1. திருப்பாண்டிக் கொடுமுடி தானத்தார்
2. திருமுக்கூடல் தானத்தார்
3. திருவெஞ்சமாங் கூடல் தானத்தார்
4. திருமுருகன் பூண்டி தானத்தார்
5. அவினாசி ஆளுடை கோவில் தானத்தார்
6. மன்னியூர் தானத்தார்

மேலும் அத்தானத்தாரைச் சிறப்பிக்கும் வண்ணம் அவர்கள் வாழ்ந்த ஊர்கள் தானத்தார் பாளைம் என வழங்கியிருக்க வேண்டும் எனக் கூறும்படியாக ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் 'தானத்துப்பாளையம்' என்ற ஊர் ஒன்று உள்ளது. 'தானத்தார் பாளையம்' என்பது மருவி 'தானத்துப்பாளையம்' என வழங்கி வருகிறது எனக் கொள்ளலாம்.

அக்காலத்தில் வழங்கிய காசுகளின் பெயர்களில் ஒன்றிரண்டை இக்கல்வெட்டு குறிப்பிட்டுள்ளது. ஒட்டச்சு, பணம் அச்சு என்பன அவை.

இக்கல்வெட்டு திருக்கோயிலில் அமுதுபடியும், பூசையும் முறையாகவும் தொடர்ந்தும் செய்யப்பட வேண்டும் என்பதைக் தெரிவிக்கும் வண்ணம் பொறிக்கப்பட்டுள்ளது.

பாரியூரில் வீற்றிருந்து அருள்புரியும் இறைவனை 'உடையார் அமர வணங்கப் பெருமான்' என இரண்டாம் கல்வெட்டு (292) இயம்பி உள்ளது. மூன்றாம் (293) ஐந்தாம் (295) கல்வெட்டுக்கள் சிவபெருமானை அமர விடங்கப் பெருமான் எனக் குறிப்பிட்டுள்ளன.

ஆயின், நான்காம் (294) கல்வெட்டு 'அமர விடங்கேசுவரப் பெருமான்' என்றும் ஆறாம் கல்வெட்டு (296) 'அமர விடங்கீசுவரமுடையார்' என்றும் குறிப்பிட்டுள்ளன. முதற்கல்வெட்டில் (291) இறைவனின் பெயர் குறிக்கப் படவில்லை.

பாரியூர் காஞ்சிக் கூவல் நாட்டுப் பகுதியைச் சேர்ந்தது. இந்நாட்டின் பெயரை இங்குள்ள கல்வெட்டுக்கள் (292, 293, 295, 296) காஞ்சிக் கோயில் நாடு எனக் குறிப்பிட்டுள்ளன.

எனினும் ஐந்தாம் (295) கல்வெட்டில் மட்டும் முறையாகக் காஞ்சிக் கூவல் நாடு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ஈரிடங்களில் இப்பெயர் வருகிறது. முதலில் காஞ்சிக் கோவில் நாடு என்றும் இரண்டாவதாகக் குறிப்பிடும் இடத்தில் காஞ்சிக் கூவல் நாடு என்றும் அமைந்துள்ளது.

இரண்டாம், மூன்றாம் கல்வெட்டுக்கள் பாரியூர் சிவபெருமானுக்கு சந்தியா தீபம் வைப்பதற்காகத் தோன்றியவை. இவ்விரண்டில் முதலாவதான (292) கல்வெட்டில் விளக்கிற்குப் பணம் கொடுத்தவர் பெயர் பாரியூர் வேளாளர் செட்டிப் பிள்ளையப்பன் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இப்பெயரை நோக்குகையில் இன்று பாரியூருக்கு அருகில் பெரிய நகரமாய்த் திகழும் கோபிசெட்டிபாளையம் இந்த செட்டிபிள்ளையப்பன் மரபினரான கோபண்ணச் செட்டிப் பிள்ளை என்பவரின் பெயரால் அமைந்தது என முடிவு செய்யலாம்.

இரண்டாவதான சந்தியா தீபக் கல்வெட்டில் பணம் கொடுத்தவர் பெயர் மணிய வேட்டுவரில் ஊரான பெரிய பிள்ளையாண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்காம், ஐந்தாம், ஆறாம் கல்வெட்டுக்கள் பாரியூர் அமர விடங்கப் பெருமானுக்குத் தேவதானமாக இறையிலி நிலம் வழங்கியதைக் குறிப்பிட்டுள்ளன.

இவற்றில் ஐந்தாம் ஆறாம் கல்வெட்டுக்கள் எதன் பொருட்டு நிலம் இறையிலியாக வழங்கப்பட்டது என்பதையும் தெரிவிக்கின்றன.

ஐந்தாம் கல்வெட்டு உடையார் இமர விடங்கப் பெருமான் திருப்பள்ளியறை நாச்சியாருக்கு மார்கழி மாதம் திருமஞ்சனம், பெரிய திருமஞ்சனம், திருப்பாவாடை திருவிழா முதலியவற்றிற்கு நிலம் கொடுத்ததை அறிவிக்கின்றது.

ஆறாம் கல்வெட்டு நாச்சியாருக்குத் திருப்பாவாடைக்கும், அமுது படைக்கும் சன்னிதிமாருக்கு அரண்மனை மானியத்திற்கும் நிலம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டில் இறையிலியாகக் கொடுத்த நிலத்தில் நான்கு பக்கமும் அமைந்தவற்றின் விளக்கங்கள் தெளிவாகவும் முறையாகவும் தரப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின்படி உள்ள நிலத்தினை வழங்கியவரின் பெயர் பாரியூர் அண்டர் மகன் பெரியய்ய தேவன் என்பது.

மேற்குறித்த கல்வெட்டுக்களால் அரையர் குளம், ஓடை குளம் மற்றும் குட்டியானப் பட்டி, மயிலம்பாடி போன்ற பல ஊர்ப் பெயர்களை அறிய முடிகிறது.

கொங்கு நாட்டின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும் அறிய விரும்பும் ஆர்வலருக்கும் ஆய்வாளர்க்கும் இவ்வாறு கல்வெட்டுக்கள் அரிய செய்திகளை வழங்கும் துணையாகத் திகழ்கின்றன.

இவ்வளவு அரிய செய்திகளையும் உள்ளடக்கிய இக்கற்பொறிப்புகளை இன்று நாம் கண்ணாரக் காணும் வாய்ப்பு இல்லை. ஏனெனில், கோயிலைப் புதுப்பித்தோர் வரலாற்றுக்கு வளமூட்டும் இக்கல்வெட்டுக்களின் அருமையை உணராமல், கோயிலைப் புதுப்பிக்கும் ஒரே நோக்கத்தால் இவற்றைப் புதை பொருளாக்கி விட்டனர்.

# பூந்துறைக் கோயில்கள்

**பேராசிரியர் கா. அரங்கசாமி, தமிழ்த் துறைத் தலைவர்,**
**கோபி கலைக் கல்லூரி, கோபிசெட்டிபாளையம்**

*முன்னுரை:*

*"பொன்னிநதி வானிநதி காஞ்சிநதி*

*சூழ்கின்ற பூந்துறை நாட்டின்"[1] முதன்மைத் தலைநகர் பூந்துறை. சங்கச் சான்றோர் போற்றும் "புன்றுறை"[2]யின் பெயரால் புகழ் மேம்பட்ட பூந்துறை வரலாற்றுப் புகழ்மிக்க ஊராகும். பூந்துறைப் புராணம் "மன்னிய கோட்டை பேட்டை வளங்கள் மாநகர மோங்கும்" என்று போற்றும். எட்டுத்திக்கிலும் 15 கோயில்களைக் கொண்டிலங்கும் இவ்வூர் இறைமாட்சியில் சிறந்திருந்த பாங்கினையும் கோயில்களின் வரலாற்றினையும் அமைப்பினையும் இக்கட்டுரை ஆய்கிறது.*

*பூந்துறையிலுள்ள கோயில்கள்:*

1. *புட்பவனேசுவரர் கோயில்*
2. *பாகம்பிரியாளம்மை கோயில்*
3. *அறுமுகப் பெருமான் கோயில்*
4. *விசுவேசர் கோயில்*
5. *விசாலாட்சி கோயில்*
6. *தாமோதரப் பெருமாள் கோயில்*
7. *அங்காளம்மன் கோயில்*
8. *கரியகாளியம்மன் கோயில்*
9. *மாரியம்மன் கோயில்*
10. *பார்சுவநாதர் (அம்மண ஈசுவரர்) கோயில்*
11. *முத்துக்குமாரசாமி கோயில்*
12. *அய்யனார் கோயில்*
13. *வலம்புரி விநாயகர் கோயில்*
14. *காடை விநாயகர் கோயில்*
15. *செல்வ விநாயகர் கோயில்*

**தேவாரத்தில் பூந்துறை:**

*கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் 'நாமார்க்கும் குடியில்லோம்', எனப் புரட்சி முழக்கமிட்ட அப்பர் பெருமான் தம் அடைவுத் திருத் தாண்டகத்தில் 11வது திருப்பாசுரத்தில் பாடல்பெற்ற வைப்புத் தலங்கள் எனப் புகழ்பெற்ற 523 தலங்களில் ஒன்றாகப் பூந்துறையைக் குறிக்கிறார்.*

"கயிலாய மலையெடுத்தான்......... பூந்துறை வெருந்துறையுந் .............
துறையனைத்தும் வணங்க வேண்டும்"


என்பதே அப்பர் தம் அருட்பாடல். இவ்வாறு வழிபாட்டு நோக்கில் பூந்துறை ஈசர் குறிக்கப்பிடுவது முதன்முறையாக இத்தேவாரத்தில் தான் என்பது அறியத்தக்கது.

### புட்பவனநாதர் கோயில் தோற்றவரலாறு:

சவுணகர் 1008 தலங்களில் சிறந்த தத்துவத்தலம் யாதென்று கேட்க சூதமுனி "செவியமுதம் போற் கொங்கு வளநாட்டிற் சிறந்த நற்பூந்துறையாம்"[3] என்றும், பிற தலங்களில் இறைவன் இறைவி தனித்தனியாகக் கோலம் கொண்டிருக்க இங்கே 96 தத்துவம் போல "சிவன்சக்தி யொன்றாகி"[4]யுள்ளனர் என்றும் உரைத்தார். உமை இறைவனின் கண்ணைப்புதைக்க இறைவன் பூவுலகில் 21 ஆயிரமாண்டுகள் தவஞ்செய்க எனக் கட்டளையிட உமை காஞ்சியில் 21 ஆயிரமாண்டும், அருணாசலத்தில் 21 ஆயிர மாண்டும்[5] தவஞ் செய்த பின்னர், இறைவன், வாதாவி எனும் அரக்கனைத் தொலைத்த அக்கினிச் சேரன் வாழ் கொங்கில் பூந்துறை நகரில் சங்கமாவனம் மேவி மீண்டும் 21 ஆயிரமாண்டுகள் தவம் செய்க[6] என்றிட, அவ்வாறே அம்மை சங்கமாவனம் அடைந்தார். அம்மை நீராடத் தீர்த்த முண்டாக்கு என்று பிள்ளையாருக்குக் கட்டளையிட, அன்னையின் ஒருவாக்கால் உண்டாகிய கிணற்றுக்கு 'ஒருவாக்கிணறு'[7] என்ற பெயரும் ஏற்பட்டது மற்றும் விநாயக - இந்திர - பிரம - சண்பக - விட்ணு - சிவ - காளி- இலட்சுமி- சர்வ- பொன்னி முதலான தீர்த்தங்களும் இங்கே உண்டு[8] எனப் புராணம் கூறும்.

### புட்பலிங்கர் கோயில்:

"இந்த வித மேனியெல்லாம் பூவாய்த் தோன்ற
இமயவர் கோன் புட்பலிங்கமெனப் பேர் செப்பும்"[9] என்ற அடிகள் இறைவனுக்குப் பெயர் வந்த காரணத்தைப் புராணப் பாங்கில் கூறும். மலர் வனத்தில் தோன்றிய இறைவனாதலின் மலர்க்காட்டீசன் - புட்பவனநாதர் என்றழைக்கப்பட்டார் என்பதே பொருந்தும். மேற்கு நோக்கிய கோயில் சிறப்புடையது என்றும், சேரமன்னன் கட்டியதால் மேற்கு நோக்கிய தென்றும் மக்கள் வழங்குவர். இக்கோயில் முழுக்கால் வேலையாகச் சிறப்புடன்[10] அமைந்துள்ளது என்பர். கொங்குக் கோயில்கட்கேயுரிய 'கருடகம்பம்' முன்னால் அமைந்துள்ளது. அக்கருட கம்பத்தின் முன்னுள்ள கல்லில் இதனை உபயமாக 500 ஆண்டுகட்கு முன் தந்தவர் காடைகுல வாரணவாசிக் கவுண்டர் மகன் காசிலிங்க கவுண்டன் என்று வெட்டப்பட்டுள்ளது.



புட்பவனேசுவரர் கோயில், பூந்துறை

உயர்ந்த சுற்றுமதிலோடு பரந்த நிலப் பகுதியில் விரிந்த பூந்துறைக் குளத்தின் தென்கரையில் அமைந்துள்ள இக்கோயிலின் அருகே கங்கர் கால கலைச் சுவடுகள் அமைந்துள்ளன. வாயில்காப்போர் (துவாரபாலகர்) இல்லை. கொடிக் கம்பமும் இல்லை. கோயில் சிவாச்சாரியார் தேரோட்டம் இல்லாமையால் கொடிக்கம்பம் இல்லை என்று குறிப்பிடுகின்றார். உள்ளே நுழைந்ததும் பலிபீடமும் அதிகார நந்தியும் அமைந்தள்ளன.



சந்தனக் காப்பிடப்பட்டுள்ள அதிகாரநந்தி, புட்பலிங்கர் கோயில், பூந்துறை

சோபன மண்டபம் எளிமையாக உள்ளது. மகா மண்டபம் அருமையான கற்றளிப் பணியாக உள்ளது. சோபன மண்டபத்தில் இருக்க வேண்டிய அணுவெட்டித் தூண்கள் மகா மண்டபத்தில் உள்ளன. மகா மண்டபத்தில் அண்மைத் திருப்பணியால்,

பிஞ்சும் பூவுமாக வாழை, வாயினில் கல் உருண்டையுடன் கூடிய சிங்கம், காந்தி, புத்தர், விவேகானந்தர், முனிவர், சக்திவடிவில் பாரதமாதா கற்சிலைகளையும் அமைத்துள்ளனர். மகாமண்டப முகப்பில் இருமுறை நடந்த திருப்பணி குறித்த கல்வெட்டுக்கள் உள்ளன. பூந்துறை வேளாளக் காடை குலத்தார் கலி 5054 ஆனி 21 (4-7-1952), கலி 5078 ஆனி 21 (4-7-1976)ல் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தியதை அக்கல்வெட்டுக்கள் கூறும். முகப்பின் மேல் பார்வதி திருக்கல்யாணம் சுதைச் சிற்பமாகவுள்ளது. மகாமண்டபத்துள் வாகனநந்தியும் மேற்கு நோக்கிய பிள்ளையார் திருவுருவமும் அமைந்துள்ளன.

அடுத்து அந்தராளத்துடன் கூடிய அர்த்த மண்டபம் - கருவறை உள்ளன. கருவறைக் கோபுரம் மூன்று நிலைகளுடன் - சுதைச் சிற்பங்கள் கொண்டு விளங்கும் கோபுரம் 1. உபபீடம் (அடிப்பாகம்) 2. அதிட்டானம், 3. பாதவர்க்கம், 4. மஞ்சவர்க்கம், 5. விமானம் என்ற அமைப்பில் சிற்ப நூலுக்கேற்ப அமைந்துள்ளது. மஞ்சவர்க்கத்தின் நடுவில் கருவறை உள்விதானம் கோண வட்டம், சதுரவட்டம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.[11]

பரிவார தேவதைகளாக வடக்கில் துர்க்கை, சண்டேசர், பிரம்மன், வடகிழக்கில் நவக்கிரகங்கள், சனீசுவரர், கிழக்கில் பைரவர், தான்தோன்றி லிங்கர், தர்மசம்வர்த்தினி, சிவசூரியன், லிங்தோத்பவர் (அண்ணாமலையார்), தெற்கில் தட்சிணாமூர்த்தி முதலான திருவுருவங்கள் அமைந்து அழகு செய்கின்றன.

மூலவர் சதுர வடிவான ஆவுடையாரில் அமைந்திருப்பது தனிச் சிறப்பு என்றும் நால்வகைப் பேற்றினையும் அருளும் திறத்தினைக் குறிப்பது என்றும் அர்ச்சகர் குறிப்பர். இக்கோயிலின் எழுந்தருளும் (உத்சவ) திருமேனிகள் களவாடப்பெற்று, மீண்டும் காவிரியில் கிடந்து கண்டெடுத்து வரப்பட்ட வரலாறும் உண்டு. இங்கு ஐம்பொன்னாலாகிய துர்க்கை, சந்திரசேகரர், உமை, பிள்ளையார், நடராசர், சிவகாமி, முருகன், வள்ளி, தெய்வானை முதலான எழுந்தருளும் செப்புத் திருமேனிகள் உள்ளன.

பாளையக்காரர்களின் ஆட்சிக் காலம் வரை சேமூர், பெருமாபாளையம் என்னும் இருபேரூர்களின் மேல்வாரம் இக்கோயில் வழிபாட்டுக்குத் தரப்பட்டது என்றும் பின்னர் இல்லாது போயிற்று என்றும் சிவாச்சாரியார் குறிப்பர்.[12] இங்கு காமிக ஆகமப்படி வழிபாடு காலைச் சந்தி சிறப்பு உண்டு. பூந்துறைப் புராணம் மீனமாதத்தில் இங்குச் சிறப்பாகத் திருவிழா நடந்ததாகக் கூறும்.

இக்கோயில் திருப்பணியின் போது சுவரில் பானையுள் வைக்கப்பட்டிருந்த மூன்று இதழ்களைக் கொண்ட செப்பேடு கண்டெடுக்கப் பட்டு, இப்போது அது எழும்பூர் அருங்காட்சியகத்தில் 1965-66ல் சேர்க்கை எண் 152/65 ஏ.ஆர்.இ செப்பேடு எண் ஏ5 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சேரன் கோரவிகோதை காலத்தது. இதில் காடை குலம் குறிக்கப்படுகிறது. இதன் தனிச்சிறப்பு தமிழ்-கிரந்தம்-வட்டெழுத்து மூன்றும் கலந்து கிடப்பதாகும்.

## புட்பவனநாதர் கோயிலையொட்டியுள்ள கோயில்கள்:

### 1. பாகம் பிரியாளம்மை கோயில்:

ஈசன் கோயிலுக்குத் தென்பால் மேற்கு நோக்கியதாக, பழமையான கல்வேலைப்பாட்டுடன் இக்கோயில் அமைந்துள்ளது. பல விடங்களில் எதிர் எதிர் மீன் வடிவம் புடைப்புச் சிற்பமாக இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் வடகுமுதவரியில் விசயநகர மன்னன் சதாசிவராயன் காலத்தில் மார்த்தாண்டவன் வசவப்பன் என்பார் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்த செயல் குறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டால் இக்கோயில் இருந்த இடம் புட்பவனம் என்றும் இறைவன் பெயர் பாகம் பிரியாதார் என்றும் அறி கிறோம். அதே பகுதியில் காடைகுலத்துக்குப்பன் அழைப்பித்தான் அருத்த மண்டபம் கட்டியச் செய்தியும் பொறிக்கப் பட்டுள்ளன.[13] மற்றும் இந்தியக் கல்வெட்டு அறிக்கையில் இடம் பெற்ற கல்வெட்டுக்களில், சுப்பிரமணிய நம்பியான், சிற்பாசிரியர், முப்பாட்டுக் காரர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.[14]



பாகம்பிரியாளம்மை கோயில்,
பூந்துறை

*2,3 விசுவேசர் - விசாலாட்சி கோயில்கள்:*

இவ்விரு கோயில்களும் கிழக்குப் பார்த்ததாகச் சிறிய கற்றளிகளை உடையன. காசியிலிருந்து கொணர்ந்த லிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபட்டதால் இப்பெயர் பெற்றதாக வழிவழிச் செய்திகள் கூறுகின்றன.

*அறுமுகப் பெருமான் கோயில்:*

தெற்கு நோக்கிய கோயில் மகா மண்டபம், கருவறையுடன் அமைந்திருந்தது. இங்கும் மீன் வடிவங்கள் புடைப்புச் சிற்பமாக இருந்தன. இங்கு மூலவருக்கடியில் ஒரு செப்புத் தகடும் நவமணிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்போது இக்கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது (1988). மூலவர் வள்ளி தெய்வானையுடன் அறுமுகப் பெருமானாகக் காட்சித் தருகின்றார்.

**புட்பவனநாதர் கோயிலுக்கு வெளியேயுள்ள கோயில்கள்:**

***1. கரியகாளியம்மன் கோயில்:***

மிகப் பழமை வாய்ந்த இக்கோயில் பூந்துறையின் மேற்கு எல்லையில் வடக்கு நோக்கியமைந்துள்ளது. சிதிலமான நிலையில் உள்ளதாயினும் இப்பொழுதும் வழிபாடு நடந்து வருகிறது. கொங்குப் பண்டாரம் பூசனை செய்கிறார். பாகம் பிரியாளம்மை -ஆறுமுகப்பெருமான்-தாமோதாரப் பெருமாள் - செல்வ விநாயகர்-அங்காளம்மை கோயில்களில் உள்ள மீன் வடிவங்கள் இங்கு இல்லை. இங்கு மகாமண்டபக் கற்றூணில் ஒரு பக்கம் கோட்டுச் சிற்பமாக அன்னப்பறவையும் எஞ்சிய தூண்களில் எட்டு இதழ் கொண்ட மலர்களும் வடிக்கப்பட்டுள்ளன. இறைவி எட்டுக்கையுடன் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். மகா மண்டபத்தின் முன்னும் அர்த்த மண்டபத்தின் முன்னும் இரண்டிரண்டு சிற்பங்கள் உள்ளன. அவற்றைப் பூசகர் ஆண் பெண் முனிகள் என்கின்றனர். கோயிலின் கிழக்கில் தனித்த மேடையில் அழகான கற்சிற்பம் உள்ளது. அதனைக் கருப்பணசாமி என்கின்றனர். பூந்துறைப் புராணம் கரிகாற் சோழ சருக்கத்தில் கரிகாலன்,

"நன்னயஞ்சேர் பூந்துறைக்கு வந்து மிக்க
நற்கரிய காளி பிரதிட்டை செய்தான்"[15]

என்றியம்புகிறது. கரிகாலன் எழுந்தருளுவித்தமையால் கரியகாளி என்ற பெயர் வந்தது என்றும் புராணம் கூறுகிறது. கொங்கில் கரிகாலன் என வழங்கும் பெயர்கள் யாவும் இராசராச கரிகாலனையே குறிக்கும் என்பார் வீயாரெம்.

***2. அம்மணீசுவரர் கோயில் (பார்சுவநாதர் கோயில்):***

சகம் 1423ல் வெட்டப்பட்ட விசய நகர மன்னன் கல்வெட்டால் இக்கோயிலில் பார்சுவநாதர், பத்மாவதி படிமங்களை

எழுந்தருளச் செய்து சமணர்கள் வழிபட்டனர் என்பதை அறிகின்றோம். (படம் - பக்கம் 163)

### 3. தாமோதரப் பெருமாள் கோயில்:

இக்கோயிலை 1970ல் புதுப்பித்துத் திருமுழுக்குச் செய்துள்ளனர். பழமை மறைக்கப்பட்டுள்ளது. ஆயினும் பழமையான மீன் வடிவங்கள் உள்ள கற்கள் முன் மண்டபத்தில் உள்ளன. கோயில் அர்ச்சகர் புராண மரபையொட்டிச் சதுர்யுகத்துக்கு முற்பட்டது இக்கோயில் என்பார். மேலும் புகழ்மிக்க வாரண வாசிக்கவுண்டர் 72 ஏக்கர் நிலம் இதற்குத் தானம் தந்திருந்தார் என்றும், கோயிலின் அடிப்பகுதியைத் தோண்டிப்பார்த்தால் தமிழ், தெலுங்குக் கல்வெட்டுக்கள் தெரியும் என்கின்றார்.

தாமோதரப் பெருமாள் நின்ற கோலத்தில், சக்கரம், சங்கு, கதை, அபயம் கொண்டு நான்கு கைகளுடன் அலமேலு மங்கை - திருமகளுடன் உள்ளார். மகா மண்டபத்துடன் தெற்கு நோக்கி விசுவச்சேனரும், உடையார் நம்மாழ்வார் வடக்கு நோக்கியும் உள்ளனர். பரந்த சோபன மண்டபத்துள் கருடாழ்வார் உள்ளார். கோயில் தெற்குப் பகுதியில் சுற்று மதிலுக்குள், மாவிலிங்க மரத்தடியில் திருமூர்த்தி திருமலைசாமி வழிபடப்படுகின்றார். பக்தர்கள் இங்குச் 'சகுனம்' கேட்பதுண்டு. தென் மேற்கு மூலையில், மேற்கில் இருபுற்றுக்கள் வளர்ந்து வருகின்றன. மக்கள் வழிபாடும் அவற்றுக் குண்டு. வாயிலின் முன்னுள்ள கருடகம்பம் வாரணவாசியால் காளமங்கலத்திலிருந்து வெற்றியின் அடையாளமாகக் கொணரப்பட்டது என்பர்.

### 4. அங்காளம்மன் கோயில்:

இக்கோயில் புதுப்பிக்கப்பட்டதாகும். ஆனால் கருடகம்பம் மட்டும் பழமையான மீன் வடிவத்துடனும் சிற்பங்களுடனும் இன்றுமுள்ளது. பூந்துறைக் காடை கூட்டத்தாரும் எழுமாத்தூர்க் காடை கூட்டத்தாரும் மாசி சிவராத்திரியில் ஒன்று சேர்ந்து அங்காளம்மை செய்து வழிபடுவர் என்றும், ஒரு முறை எழுமாத்தூரார்கள் வரத்தாழ்க்க பூந்துறைக்காரர்களே வழிபாட்டை முடித்தனர். சீற்றங்கொண்ட எழுமாத்தூரினர் சாமியை எடுத்துக் கொண்டு போய்விட்டனர். பின்னர் காருத்துப் பாளையத்தில் இருந்த வாரணவாசியின் வழியினர் காசியிலிருந்து கொணர்ந்த லிங்கத்தைக் கொண்டுவந்து அங்காளம்மை இருந்த இடத்தில் வைத்து வழிபட்டனர். பின்னர் புதிதாகச் சிலை செய்து கொண்டனர். இக்கோயிலில் காரைக்காட்டு வேளாளர்கள் எனப்படும் மடத்தாண்டிகள் பூசனை செய்கின்றனர்.

**5,6 மாரியம்மன் கோயிலும், முத்துக்குமாரசாமி கோயிலும்** புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

### 7,8,9 பிள்ளையார் கோயில்கள்:

ஊரின் தென் மேற்கு மூலையில் ஒருவாக்கிணறு என்னும் "தீர்த்தம்" உள்ளது. அதன் அருகில் மிகச்சிறிய 'புட்பகிரி' என்னும் பாறை மீது செல்வவிநாயகர் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. இக்கோயிலிலும் மீன் வடிவங்கள் உள்ளன. வாரணவாசிக் கவுண்டர் செல்லங்கூட்டத்துடன் மணவுறவு கொண்டதன் நினைவாக இக்கோயிலைக் கட்டியதாகச் செவிவழிச் செய்திகள் கூறும். பூந்துறைக்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் காடவிநாயகர் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. வலம்புரி விநாயகர் கோயில் புட்பவனநாதர் கோயிலுக்குள் தென் மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

### 10. அய்யனார் கோயில்:

பூந்துறைப் புராணம் புகழும் அய்யனார் கோயில் எது எனக் காணமுடியாத நிலை இன்றுள்ளது. ஊரின் கிழக்கில் சிதைந்து போன இருகோயில்கள் உள்ளன. அவற்றின் ஒன்று அய்யனார் கோயிலாக இருக்கலாம்.

### முடிவுரை:

மூர்த்தி, தலம், தீர்த்தம் வழிபாட்டில் முதன்மையிடம் பெறுவன. இம்மூன்றும் சிறப்பு பெற்ற 15 கோயில்களை எட்டுத்திசையிலும் கொண்டு விளங்கும் பூந்துறை, பூந்துறை நாட்டின் தலைநகராகப் புகழ்பெற்ற ஊர், இன்று அடக்கமான தோற்றத்துடன் ஈரோட்டுக்குப் பத்து கிலோ மீட்டர் தெற்கே உள்ளது. பழமையான வரலாற்றுப் பெருமை மிக்க ஊர் என்பதை இன்றும் கோயில்கள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

### குறிப்புக்கள்:

1. தனிப்பாடல்.
2. அகம். 44.
3. பூந்துறைப் புராணம் ப:17.
4. பூந்துறைப் புராணம் ப:17.
5. பூந்துறைப் புராணம் ப:17.
6. பூந்துறைப் புராணம் ப:21.
7. பூந்துறைப் புராணம் ப:21.
8. பூந்துறைப் புராணம் ப:28.
9. பூந்துறைப் புராணம் ப:29.
10. வி. முத்து வைரவ சிற்பி மகன் குமரன் சிற்பி கூறியவை.
11. வி. முத்து வைரவ சிற்பி மகன் குமரன் சிற்பி கூறியவை.
12. செல்வரத்தினக்குருக்கள் ஈசுவரன் கோயில், பூந்துறை.
13. கட்டுரையாளர் படியெடுத்தவை.

# பெரிய சேமூர் கோயில்கள்

முனைவர் அ. பொன்னுசாமி , உதவிப் பேராசிரியர்,
சிக்கைய நாயக்கர் கல்லூரி, ஈரோடு - 638 004

பெரிய சேமூர் கிராமம் ஈரோட்டிலிருந்து சித்தோடு செல்லும் பாதையில் 4-வது கிலோமீட்டரில் உள்ளது. இக்கிராமத்தில் மாணிக்கம் பாளையம், முனியப்பம் பாளையம், எல்லப்பாளையம், சின்ன சேமூர் ஆகிய சிற்றூர்களும் புதிய குடியிருப்புகளான எஸ்.எஸ்.பி. நகர், ஈ.பி.பி. நகர் ஆகியவையும் இடம் பெறுகின்றன.

பெரிய சேமூர் கிராமத்தில் மற்ற கிராமங்களில் உள்ளதைப் போலவே பல்வேறு கோயில்களும் அமைந்துள்ளன. சேமலிங்கீசுவரர், செல்லியம்மன், மாரியம்மன் ஆகியவை கட்டட அமைப்பிலும், முனியப்பன், கருப்பணார் ஆகியவை மேடை அமைப்பிலும், பிள்ளையார் குடிநீர்க் கிணற்றின் அருகிலும், மாரியம்மன் கோயில் அருகிலும், சிறிய மேடையுடன் கூடிய கட்டடத்தின் கீழும், அரச மரத்தடி மேடையிலும் மற்றும் அரசும், வேம்பும் சேர்ந்துள்ள இடத்திலும், காட்டுக் கருப்பணார் மரத்தடியிலும், பிடாரி ஊர்க் கடை வாசலிலும், கன்னிமார் பிற கோயிற் பகுதிகளிலும் உள்ளன.

### சேமலிங்கீசுவரர் கோயில்:

சேமலிங்கீசுவரர் கோயிலைச் சுற்றிலும் சேமலிங்கப் பட்டணம் என்ற ஊர் இருந்ததாகவும் அவ்வூர் எக்காரணத்தாலோ அழிந்து விட்டதாகவும், பின்னர் அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் மேற்கில் சேமூர் உருவானதாகவும் கூறுவர். பழைய சேமலிங்கப் பட்டணம் இருந்த இடத்திற்கும் இப்போதுள்ள சேமூருக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பெருங்கல் வட்டங்கள் இருக்கின்றன. அப்பகுதியில் விவசாய நிலத்தைப் பண்படுத்தியதில் பல பெருங்கல் வட்டங்கள் அழிந்து விட்டன. இன்றும் சில பெருங்கல் வட்டங்கள் எஞ்சியிருப்பதை நேரில் காணமுடிகிறது. இப்பெருங்கல் வட்டங்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருத இடமுண்டு. ஆதலால்

சேமலிங்கீசுவரர் கோயில் கொண்ட சேமலிங்கப் பட்டணமும் பழைமையான ஊர் என்பதில் ஐயமில்லை.

**சேமலிங்கீசுவரர் கோயில் அமைப்பு:**

இக்கோயிலின் சுற்றுச்சுவர் சுமார் 100 அடி நீளமும், 100 அடி அகலமும் கொண்டதாக 6 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி உள்ள கோயில் கருவறை 11 அடி அகலம் 11 அடி நீளத்தில் 7 அடி உயரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்குள் 5க்கு 5 அடி மண்டப அமைப்பின் கீழ் லிங்க உருவம் நாட்டப்பட்டுள்ளது. கருவறை உள் மண்டபத்தில் 4 கற்றூண்கள் உள்ளன. இடது பக்க முன் தூணின் முன் பக்க அடிமுகப்பில் சிவலிங்கம் புடைப்போவியமாகச் செதுக்கப்பட்டுள்ளது. வலது பக்க முன் தூணின் முன்பக்க அடிமுகப்பில் விநாயகர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. கருவறை செதுக்கிய கற்களால் கட்டப்பட்டு கூரைப்பகுதி கற்களால் பாவப்பட்டுள்ளது. விதானம் சிறிய விமான அமைப்பில் உள்ளது கருவறைக்கு முன் பகுதி அதாவது முகப்பு மண்டபம் 6க்கு 11 அடி என்ற அமைப்பில் தொடங்கி 19 அடி நீளமும் 8 அடி அகலமும் உடைய அளவில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கற்றூண்கள் நிறுத்தி மேல்பகுதி நீண்ட பலகைக் கற்களால் மூடப்பட்டு மண்டப அமைப்பில் இருந்திருக்கிறது. கருவறையின் வெளிப்பக்கச்சுவரின் மூன்று பக்கங்களிலும் மீன்கள் எதிரெதிராக இருப்பது போல கல்லில் வெட்டப்பட்டுள்ளன.

**பக்கக் கோயில்கள்:**

சேமலிங்கர் கோயிலுக்கு முன்பகுதியில் இடது பக்கமும் வலது பக்கமும் இரண்டு சிறு கோயில்கள் 6க்கு 8 அடி அளவில் அமைந்துள்ளன. இடது பக்கம் உள்ள கோயிலில் 4 கைகள் கொண்ட 6 அடி உயரமுள்ள பெண் தெய்வத்தின் சிலை உள்ளது. இது மூலவரின் அம்மனாக இருக்கலாம். இச்சிலையில் வலது கை ஒன்றில் மழுவும் மற்றொன்றில் வாளும் கொண்டுள்ளது. இடது கை ஒன்றில் குறுவாளும் மற்றொன்றில் வச்சிராயுதமும்

கொண்டுள்ளது. இச்சிலையில் வலது பக்க ஓரத்தில் வணங்கும் மனித உருவம் ஒன்று காணப்படுகிறது.

இடது பக்கக் கோயிலில் முறுக்கிய மீசையும், பக்கக் குடுமியும் உள்ள கண்டிரக்கோன் சிலை உள்ளது. வலது கையில் கதாயுதமும், இடது கையில் வில்லையும் கொண்டுள்ளது. இடுப்பில் வலது பக்கம் குறுவாள் செருகப் பட்டுள்ளது. இடது பக்கக் கோயிலின் கிழக்கு ஓரமாக அங்காளம்மன் கற்சிலை உள்ளது. இத் தெய்வ உருவம் 4 கைகளுடன் உள்ளது. இடுப்பில் குழந்தையை வைத்துள்ளது. இடது கையில் குழந்தையைத் தாங்கிப்பிடித்தபடி வலது கையால் குழந்தையின் கால்பகுதியைப் பிடித்துக் கொண்டுள்ளது. குழந்தையின் இடதுகை தாயின் இடது மார்பில் உள்ளது. அங்காளம்மனின் இன்னொரு வலது கையில் மழுவும் இடதுகையில் வில்லும் காணப்படுகின்றன.

**தீப கம்பம்:**

சேமலிங்கீசுவரர் கோயிலுக்கு எதிரில் சுமார் 10 அடி உயரமுள்ள தீப கம்பம் உள்ளது. தீப கம்பத்தின் அடிப்பகுதியில் நான்கு பக்கங்களிலும் சிற்பங்கள் உள்ளன. கோயிலைப் பார்த்துள்ள முகப்பில் சிவலிங்கமும், வெளிப்பக்க எதிர் முகப்பில் விநாயகர் உருவமும் இடது பக்கம் நந்தியின் புடைப்புச் சிற்பமும், வலது பக்க முகப்பில் திரிசூலமும் பொறிக்கப்பட்டுள்ளன.

**நந்தி உருவம்:**

கோயிலுக்கும் தீப கம்பத்திற்கும் இடையில் சிறிய நந்தி உருவம் 4 × 4 × 6 அடி அளவில் அமைந்த கல் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**கருவன்ராயன்:**

மதிலின் வாயிலைப் பார்த்தவாறு கோயில் வளாகத்தின் தென் கிழக்குப் பகுதியில் கருவன்ராயன் வைக்கப்பட்டுள்ளது. பக்கத்தில் ஏழு சிறு கற்களின் வடிவில் கன்னிமார் இடம் பெற்றுள்ளனர்.

**பெரிய சேமூர் கிராமத்திலுள்ள மற்றக் கோயில்கள்:**

இக்கிராமத்தில் அமைந்துள்ள மற்றச் சிற்றூர்களில் பிள்ளையார், மாரியம்மன், பிடாரி (பொட்டுச்சாமி), செல்லியம்மன்,

முனியப்பன், கருப்பணார், கன்னிமார் ஆகிய தெய்வங்கள் அமைந்துள்ளன.

**பிள்ளையார் கோயில்:**

பிள்ளையாரை விநாயகர் என்ற பெயராலும் குறிப்பிடுவதுண்டு. வினைக்கு முதல்வர் என்ற கருத்துக்கேற்ப எச்செயலையும் தொடங்குமுன் பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்குவது தமிழரின் மரபாக உள்ளது. சில ஊர்களில் பிற கோயில்கள் இல்லை என்றாலும் பிள்ளையார் கோயில் மட்டுமாவது இருப்பதைக் காணமுடிகிறது. மாரியம்மன் கோயில் உள்ள ஊரில் பிள்ளையார் மாரியம்மன் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டு பிள்ளையாருக்குப் பூசை செய்த பின்னரே மாரியம்மனுக்குப் பூசை செய்யும் வழக்கம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது. புதியதாக உருவாகும் ஊர்களில் அங்குள்ள மக்கள் புதியதாகப் பிள்ளையார் கோயில் அமைத்துக் கொள்வதையும் காண்கிறோம். சில இடங்களில் அரசமரம், வேப்ப மரம் இரண்டையும் ஒரே இடத்தில் வளர்த்து அவற்றின் அடியில் சிறிய கல்மேடை அமைத்துப் பிள்ளையார் உருவத்தையும் பிள்ளையாருக்கு இருபக்கங்களிலும் நாகர் உருவங்களையும் நிறுவி வழிபாடு நிகழ்த்துகின்றனர். பழங்காலத்தில் ஊர் அம்பலமாகப் பயன்பட்ட மக்கள் கூடும் ஊர்ப் பொதுமன்றில் பின்னர் பிள்ளையாருக்கு இடங்கொடுத்துள்ளதை அறிய முடிகிறது. பிள்ளையார் பருத்தவயிறும், இரண்டு கைகளும், மூன்று கண்களும் வளைந்த துதிக்கையும் கொண்டு இரண்டு கூரிய தந்தங்களுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். பிள்ளையாருக்கு உயிர்ப்பலி யிடுவது இல்லை. பிள்ளையாருக்கென்று தனியாகத் திருவிழாக் கொண்டாடுவதையும் காண முடியவில்லை. இருப்பினும் அண்மைக்காலத்தில் விநாயகர் சதுர்த்தி போன்றவற்றில் பிள்ளையாருக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. மணமக்கள் திருமணத்திற்கு முன்பும், பின்பும் பிள்ளையாரைச் சுற்றத்துடன் சென்று வழிபடுகின்றனர். மணமகன் விட்டார் மணமகள் வீடு தேடி வரும்பொழுது அந்த ஊர்ப்பிள்ளையார்

கோயிலின் மேடையில் இருப்பர். மணமகள் வீட்டார் சுற்றத்துடன் சென்று எதிர்கொண்டு அழைத்து வரும் வழக்கம் இன்றும் கொங்கு வேளாளர்களின் திருமணச் சடங்குகளில் கடைபிடிக்கப்படுகிறது. சூளாமணியில் ஊருக்குப் புதியதாக வருவோரை வரவேற்பதற்காக ஊரம்பலத்திலுள்ள மேடை புதுப்பிக்கப் படுகின்றச் செய்தி காணப்படுகிறது. ஆனால் அம்மேடையில் பிள்ளையார் உருவம் இருந்ததாகக் கூறப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் சாரணர்கள் ஓய்வு கொள்ளும் பொருட்டு பளிங்குமேடை அமைக்கப்பட்டிருந்தச் செய்தி காணப்படுகிறது. இத்தகைய மேடைகளில் பிற்காலத்தில் பிள்ளையார் இடம் பிடித்துக் கொண்டார் எனலாம். பிற்காலச் சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கன் படையெடுப்பின் போது கலிங்க நாட்டின் தலைநகரான வாதாபியிலிருந்து பிள்ளையார் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு மலைக்கோயிலில் வாதாபி கணபதி என்ற பெயரில் ஒரு பிள்ளையார் அமைந்துள்ளமை மேற்கண்ட செய்தியை உறுதிப்படுத்துகிறது.

**மாரியம்மன் கோயில்:**

பெரிய சேமூர் கிராமத்திலுள்ள பெரிய சேமூர், மாணிக்கம் பாளையம், முனியப்பம்பாளையம், எல்லப்பாளையம் போன்ற எல்லாக் குக்கிராமங்களிலும் மாரியம்மன் கோயில்கள் உள்ளன. மாரியம்மன் கோயிலுக்குச் சேர்ந்தாற் போலவே பிள்ளையார் கோயில்களும் அமைந்துள்ளன. மழைத் தெய்வமே மாரியம்மன் என்ற பெயரால் வழிபாடு பெறுகிறது எனலாம். "மழைதரும் கற்பினள்" என்று கற்புள்ள பெண் போற்றப்படுதலால் மழையைத் தருகின்ற கற்பரசியை வழிபடுவதால் மழைவளம் பெறலாம் என்னும் நம்பிக்கையோடு கற்பின் களலி கண்ணகிக்குச் சேரன் எடுத்த கோயிலின் வழியில் எல்லா ஊர்களிலும் மாரியம்மன் என்ற பெயரால் கண்ணகி வழிபாடு தோன்றிற்றெனல் பொருந்தும். வெப்புநோய் வந்தால் மாரியை வேண்டி வேப்பிலை கொண்டு குணம் பெறுதல் இன்றும் நடைமுறை வழக்காக உள்ளது.

### பிடாரி (பொட்டுச்சாமி):

பிடாரி ஊர் மந்தையில் கடை வாசலில் வைத்து வழிபடப்படுகிறது. ஆதலால் கடகடப்பான் என்ற பெயரும் இதற்கு வழங்குகிறது. எல்லாக் குக்கிராமங்களிலும் பிடாரி காணப்படுகிறது. ஊர்ப்பிடாரிக்குப் பொங்கல் வைத்த பின்னரே மாரியம்மன், முனியப்பன் போன்ற மற்ற தெய்வங்களுக்குப் பொங்கலிடுகின்றனர். மந்தைப் பிடாரிக்கு உயிர்ப்பலி கொடுக்கின்றனர். மந்தைப் பிடாரி பேய், பிசாசு, கொள்ளை நோய் போன்றவற்றிலிருந்து ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக விளங்குவதோடு ஊருக்கும் இடுகாட்டிற்கும் இடையில் இருந்து கெட்ட ஆவிகள் வராமல் தடுப்பதாக நம்புகின்றனர். மந்தைப் பிடாரி வழிபாடானது முனியப்பன் வழிபாடு, கருப்பணார் வழிபாடு, மாரியம்மன் வழிபாடு ஆகியவற்றிற்கெல்லாம் முந்தியது எனத் தெரிகிறது.

### செல்லியம்மன் கோயில்:

பெரிய சேமூர் கிராமத்தில் சேமலிங்கப் பட்டணம் (இன்றைய சூளை) எல்லப்பாளையம் ஆகிய இரண்டு ஊர்களில் மட்டுமே செல்லியம்மன் கோயில்கள் உள்ளன. இதனை மதுக்கரைச் செல்லி என்று வழங்குகின்றனர். கொங்கு வேளாளர் கவுண்டர் இனத்தில் சில குலத்தவருக்கு இக்கோயில்கள் குலதெய்வக் கோயில்களாக விளங்குகின்றன. சூளையில் உள்ள செல்லியம்மன் கோயில் சரியாகப் பராமரிக்கப் படாத நிலையில் ஆண்டுத் திருவிழா இல்லாமல் இருக்கிறது.

### முனியப்பன் கோயில்:

பெரிய சேமூர் கிராமத்தில் சூளை முனியப்பன் கோயில் கெங்கெனி முனியப்பன் கோயில் ஆகியவை உள்ளன. இக்கோயில்களுக்குக் சுற்றுச்சுவர்கள் உள்ளன. மேடைகளின் மேல் சுண்ணாம்புக் காரையால் செய்த பெரிய முனி உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. முன்னால் வேல்கள் நடப்பட்டுள்ளன. பெரிய மண் குதிரைகள் பக்கங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. ஆடி மாதம் தோறும் ஏதாவது ஒரு செவ்வாய்க் கிழமையில் பொங்கலிட்டு ஆட்டுக்கிடா, கோழிச் சேவல் ஆகியவை பலியிடுகின்றனர்.

**கருப்பணார் கோயில்:**

தொட்டியத்துக் கருப்பணன், மடையன் கருப்பணன், ஆகியவற்றிற்கு ஆடி மாதம் பொங்கலும், ஆட்டுகிடா உயிர்ப்பலி யும் இடுகின்றனர். இவை மரத்தடியில் சிறிய கல் மேடையில் உள்ளன. இவை தவிர பெரும்பாலான உழவர்கள் தங்கள் நிலங்களில் காட்டுக் கருப்பணார் வைத்துத் தாங்கள் மட்டும் ஆண்டுக் கொருமுறை பொங்கலிட்டு, ஆட்டுக்கிடா பலிகொடுத்து வழிபடுகின்றனர். இதனைக் குடும்ப தெய்வ வழிபாடு எனலாம்.

**கன்னிமார்:**

கன்னிமார் எழுவர். சிலப்பதிகாரத்தில் கண்ணகியால் குறிப்பிடப்படும் பத்தினிப் பெண்டிர் எழுவருக்கும் இத்தெய்வங்களுக்கும் தொடர்புண்டா என்று ஆராயவேண்டும். பெரிய சேமூர் கிராமத்தின் கன்னிமாருக்கென்று தனியாகக் கோயில் எதுவும் இல்லை. முனியப்பன், கருப்பணார், பிடாரி ஆகியவற்றின் அருகில், ஓரமாக கன்னிமாரையும் வைத்து வழிபடுகின்றனர். கன்னிமாருக்கு உயிர்ப்பலி கொடுப்பதில்லை. மற்ற தெய்வத்திற்கு உயிர்ப்பலியிடும் போது அதன் அருகில் உள்ள கன்னிமாரை 'மாத்து' (வெள்ளைத் துணி) கொண்டு மூடிவிடுகின்றனர். கன்னிமார் பூசை முடிந்தபிறகு அருகில் உள்ள மற்ற தெய்வத்திற்குப் பூசை நடக்கும்.

இவ்வாறு பெரிய சேமூர் கிராமத்தில் சமய தெய்வ வழிபாடும் (பெருந்தெய்வ வழிபாடு), சிறு தெய்வ வழிபாடும், குல தெய்வ வழிபாடும், குடும்ப தெய்வ வழிபாடும் நிலவுவதை இக்கிராமத்திலுள்ள கோயில்களால் அறிய முடிகிறது. மேலும், இக்கிராமத்தின் பழமையும் வரலாற்று சிறப்பும், தெய்வங்களின் கோயில்கள் அவ்வப்போது உண்டாக்கப்படுவதும் புலனாகிறது. ஈரோடு மாவட்டத்திலுள்ள மற்ற கிராமக் கோயில்கள் பற்றியும் இதைக் கொண்டே அறியலாம்.

# சமண சமயக் கோயில்கள்

இரட்டர், சேரர், சோழர், பாண்டியர், போசளர், விசயநகர மன்னர்கள், மைசூர் மன்னர்கள் ஆகிய அனைவரும் சமய வேறுபாடு இன்றி சமண சமயத்தை ஆதரித்துப் பேணி வந்துள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் சமண சமயக் கோயில்கள்

**புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613 005.**

*முன்னுரை:*

*ஈரோடு மாவட்டப் பகுதியில் முன்பு சமண சமயம் மிகவும் சிறப்புடன் விளங்கியது. அவர்களின் அருமையான ஆலயங்கள் பல இங்கு உள்ளன. சமணச் சிற்பங்கள் பல ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. பண்டைச் சமணரின் செழிப்பை அறிவுறுத்தும் வகையில் பல சமணக் கல்வெட்டுகள் இங்கே உள்ளன. பாதுகாப்பாரற்று அழிந்து வரும் அவைகளைப் பற்றிய சில செய்திகளை இங்கே காணலாம்.*

***சமணம் வந்த வரலாறு:***

*அசோகப் பெருமன்னரின் பாட்டனாரான சந்திரகுப்த மௌரியன் (கி.மு. 322-298) மகத நாட்டை ஆண்டு வந்தான். பத்திரபாகு என்னும் சமணப் பெரியார் அவனுக்குக் குருவாக விளங்கினார். மகத நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் பெரும் பஞ்சம் வரும் என்பதை முன்னரே அறிந்த பத்திரபாகு முனிவர் தம்மோடிருந்த சமண சமய முனிவர்களைக் காப்பாற்ற அவர்களை அழைத்துக் கொண்டு பஞ்சம் இல்லாத வளமிக்க தென்னாடு நோக்கி வந்தார்! அவருடன் அவர் சீடரான பேரரசன் சந்திகுப்த மௌரியனும் அரசைத் துறந்து புறப்பட்டு வந்தான். அனைவரும் கர்நாடக மாநிலத்தில் உள்ள சிரவண பௌகொளா என்னுமிடத்தில் தங்கினர்.[2]*

*அங்கு தங்கியிருந்த போது விசாக முனிவர் என்னும் தம் சீடரைக் கொங்கு நாட்டுக்கும், தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகட்கும் சமண சமயப் பிரச்சாரம் செய்யப் பத்திரபாகு அனுப்பி வைத்தார்.*

*தமக்கு இறுதிக் காலம் வந்ததை அறிந்த பத்திரபாகு சல்லேகனை விரதம் இருந்து உயிர் துறந்தார். குரு பத்திரபாகுவிற்குப் பணிவிடை செய்யத் தங்கிய அவர் சீடரான சந்திரகுப்த மௌரியனும் அவ்வாறே செய்தான்.*

*இக்காலத்தில் தான் கொங்கு நாட்டில் சமணம் பரவியிருக்க வேண்டும். இன்றும் தமிழகம் உட்படத் தென்னிந்தியச் சமணர்கள் பலருக்கும் சிரவண பௌகொளாவே தலைமையிடமாக உள்ளது. விசாக முனிவர் பொன்னாட அல்லது பொன்னாடு எனப்படும்*

பகுதிக்குச் சென்று முதலில் சமண சமயத்தைப் பரப்பியதாகக் கூறுவர். கொங்கு என்ற சொல்லுக்குப் பொன் என்ற பொருளும் உண்டு.[4] பொன்குலுக்கி நாடு, பொன்கலூர் நாடு என்ற நாட்டுப் பிரிவுகள் கொங்கு நாட்டில் உள்ளன.[5] கொங்கு நாட்டில் பாயும் காவிரிக்கும் பொன்னி என்ற பெயரும் உண்டு. கொங்கு நாட்டில் பல கனககிரிகள் உள்ளன.[6] அண்மையில் சத்திய மங்கலம் அருகே கண்டு பிடிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டில் பொந்நாட என்ற பெயர் காணப்படுகிறது.[7] எனவே பொன்நாடு - கொங்கு நாடே என்பதில் ஐயமில்லை. அல்லது கொங்கு நாட்டின் ஒரு பதியாக இருக்கலாம்.

**தொல்லியல் சான்று:**

சங்க இலக்கியம் கூறும் 'கொடுமணம்' என்னும் இன்றைய கொடுமணலில் நடந்த அகழ்வாய்வில் பெருங்கற்காலச் சின்னப் புதை குழியில் மிகவும் அரிதாக 'விஸாகி' என்று பழந்தமிழியில் எழுதப்பட்ட பானை ஓடு கிடைத்துள்ளது. எனவே விசாக முனிவர் பெயர் கொங்கு நாட்டில் நன்கு பரவியுள்ளது என்பதை அறிகின்றோம். இலங்கைப் பிராமிக் கல்வெட்டில்கூட இரண்டு இடங்களில் தமிழ்வணிகன் விசாகன் என்பார் குறிக்கப்படுகிறார்.

**இரட்டர் காலத்தில்:**

சங்க காலத்தை அடுத்து கொங்குப் பகுதியை ஆட்சி புரிந்தவர் இரட்டர்கள் ஆவர். இரட்ட மன்னர் சிலர் சமண சமயத்தவராக இருந்தனர். சமண சமயத்துக்குப் பெரும் ஆதரவு நல்கினர்.

இரண்டாம் கோவிந்தராயன் அரிட்டணன் என்னும் சமணருக்குப் பூமி சாசனம் அளித்தான்.[8] அந்த அரிட்டணன் வாழ்ந்த மலை அரசண்ணா மலை என்ற பெயரில் விசயமங்கலம் அருகில் உள்ளது. அரிட்டணன் மலை - அரசண்ணன் மலை என மாறியிருக்கலாம். பொம்மக் கொம்மன் என்ற ஊர் ஒன்று அருகில் இருந்ததாகக் கூறப்படுகிறது. கொம்மக் கோயில் என்ற பெயரில் ஊர் ஒன்று இப்பகுதியில் இன்றும் உள்ளது.

சதுர்ப்புச கன்னர தேவன் என்ற இரட்ட மன்னன் காலத்தில் நாகநந்தி என்ற சமணப் பெரியவர் வாழ்ந்தார். பிற்காலத்தும் சமண சமயத்தில் உள்ள நால்வகைக் கணங்களில் நந்தி கணத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும், கொங்கு நாட்டில் வாழ்ந்தனர்.[9] அவர்களில் பவணந்தி ஒருவர்.

*இரட்டர்கள் கொங்கு நாட்டில் 'ஸ்கந்தபுரம்' என்ற பெயரில் தலைநகர் அமைத்து ஆட்சி புரிந்தனர். அவர்களின் 'ஸ்கந்தபுரம்', காங்கேயம்,[10] தாராபுரம்,[11] திருமுருகன் பூண்டி,[12] டணாயக்கன் கோட்டை[13] என்று பல்வேறு கருத்துக்கள் உள்ளன. தாராபுரம் அண்மையில் உள்ள கொங்கூரே 'ஸ்கந்தபுரமாக' இருக்கலாம். அவ்வூர் தொன்மையான பாண்டியர் செப்பேடுகளிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் புகழப் பெற்ற ஊர். (ஸ்கந்தம் - மணம், மணம் - கொங்கு)*

**கங்கர் காலத்தில்:**

*இரட்டர்கட்குப் பின் இங்கு ஆட்சிபுரிந்த தலைக்காட்டுக் கங்கர் காலத்தில் சமண சமயம் கொங்கு நாட்டில் மிகவும் செழிப்பாக விளங்கியது. கங்கப் பேரரசு ஏற்பட்டதன் நோக்கமே சமண சமயத்தைப் பரப்புவது தான். சமண முனிவர் சிம்மநந்தி என்பவராலேயே அம்மரபு தோற்றுவிக்கப் பட்டது. கங்கர்கள் சமணர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படியே அவ்வரசு தோன்றியது. இவர்கள் பெரும்பாலும் சமண சமயத்தையே ஆதரித்தனர்.*

*துர்விநீத கங்கன் காலத்தில் பல்லவ நாட்டிலிருந்து திருநாவுக்கரசரால் வெளியேறிய சமணர்களும், பாண்டிய நாட்டிலிருந்து திருஞான சம்பந்தரால் வெளியேறிய சமணர்களும் கொங்கு நாடு புகுந்து கங்கர்களால் வரவேற்கப்பட்டு ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகளில் குடியேறினர். துர்விநீதன் காலத்தில் சில காலம் ஈரோடு மாவட்டத்தின் முகுந்தப்பட்டணம் - முகுந்தனூர் என்ற சர்க்கார் பெரிய பாளையம் அவர்கள் தலைநகராக விளங்கியது. பெரும்பான்மையான கங்க மன்னர்கள் தலைக்காட்டிலிருந்து ஆட்சி புரிந்தனர்.[13]*

*இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கொங்கணிவரும பசதியே சீனாபுரம் ஆதிநாதர் கோயில் என அறிஞர்கள் கூறுகின்றனர்.*

**சோழன் பூர்வ பட்டயம்:**

*கொங்கு நாட்டு வரலாறு கூறும் நூல் சோழன் பூர்வ பட்டயம். சாலிவாகனன் என்னும் அரசன் சமண மதமும் சருவேசுர தீட்சையும் பெற்றுச் சமண சமயத்திற்கு முழு ஆதரவு கொடுத்தான்.*

*சைவ, வைணவக் கோயில்களை அழித்தான் என்றும் மக்களைச் சமண சமயத்துக்கு மாறும்படி கட்டாயப் படுத்தினான் என்றும் அவ்வாறு மாறியவர்களை ஆதரித்தான் என்றும், சமண*

சமயத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களைத் தண்டித்தான் என்றும் அந்நூல் மிகவும் விரிவாகக் கூறுகிறது.[14]

**அறச்சலூர் மலை:**

நாகம் என்று சங்க இலக்கியத்தால் புகழப் பெற்றது நாகமலை என்னும் அறச்சலூர் மலை. இம்மலையின் வடசரிவில் உள்ள நீண்ட பாறைத் தொடரின் மேல்புறம் சமண முனிவர்கள் வாழ்ந்த இயற்கைக் குகைத்தளம் ஒன்று உள்ளது.

சமண முனிவர்கள் தவம் நோற்ற கல்படுக்கைகள் உள்ளன. சமணரின் நற்காட்சி, நல்ஞானம், நல்ஒழுக்கம் என்பதை விளக்கும் இரத்தினத் திரையம் எனப்படும் சின்னம் அங்கு உள்ளது. முக்குடையைக் குறிக்கும் தொன்மையான சின்னங்களும் அங்கு உள்ளன.

இங்கு மூன்று தொன்மையான பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன் இங்கு இசை எழுத்துக்களைப் பொறித்தான் என்ற குறிப்புடைய கல்வெட்டும், அருகில் இசை அடைவுகள் பொறிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுக்களும் உள்ளன.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் எழுத்துப் புணர்ப்பு என்ற இசை அமைதிக்கு ஏற்ப இக்கல்வெட்டில் எழுத்துப் புணருத்தான் என்ற தொடர் காணப்படுவது சிறப்புக் குரியதாகும்.[16]

அறச்சாலையூர் என்ற இவ்வூரின் பெயரே சமண சமயத்தின் அறத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. அறச்சாலை அம்மன் கோயில் இங்கு உள்ளது. அக்கோயில் அடியார்கள் அறச்சாலை என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர்.

**அரசண்ணா மலை:**

விசய மங்கலத்திற்கு அருகில் இந்த மலை உள்ளது. இது சுமார் 500 அடி உயரம் உள்ள சிறுமலை. மலைமேல் நேமிநாதருக்கும், இயக்கி "கூஷ்பானினி"க்கும் கோயில்கள் இருந்தன. சுமார் 125 ஆண்டுகட்கு முன்பு இக்கோயிலை மறைத்து சுவர் ஒன்று வைத்து முருகன் சிலை ஒன்றைப் பிரதிட்டை செய்து விட்டனர். இங்கிருந்த 'கூஷ்பானினி' சிற்பம் விசயமங்கலம் கோயிலில் உள்ளது.[17]

மலை அடிவாரத்தில் கொங்கம் பாளையம் என்ற ஊர் உள்ளது. அவர்கள் மலைமேல் அரசாத்தாள் (இயக்கி) இருப்பதாகக்

கூறுகின்றனர். ஊரில் பல பெண்கள் அரசாத்தாள் என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். ஆண்கள் சிலர் அரசப்பன் என்றும் பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். இரட்டர் காலக் கொங்கு நாட்டுச் சமணப் பெரியார்-அரிட்டணன் பெயரால் இம்மலை அரசண்ணன் மலை (அரசண்ணாமலை) என்று வழங்கப்படுகிறது. அரசண்ணன் என்பது நேமிநாதரைக் குறிப்பதாகவும் இருக்கலாம். தீர்த்தங்கரர் அனைவரும் அரசர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மலையை அதியமலை என்றும், "கூஷ்பானினி" இயக்கியை அதிய மலை அம்மன் என்றும் மக்கென்சி சுவடி ஒன்று கூறுகிறது.[18]

**விசயமங்கலம்:**

ஈரோடு மாவட்டத்தின் மிகப் பெரிய சமணத் தலம் விசய மங்கலம். சங்க காலத்தில் வாகை என்று பெயர் பெற்ற இவ்வூர் சமணர் வருகையால் விசயமங்கலம் ஆயிற்று.[19]

இங்கு 8-ஆம் தீர்த்தங்கரர் ஆகிய சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. ஆதி நாதருக்குப் பெரிய கோயில் ஒன்று கட்டப்பட்டுப் பாதியுடன் நின்றுவிட்டது.[20] இங்கு ஆதிநாதர், அனந்தநாதர், நேமிநாதர், மகாவீரர் ஆகியோருக்கும் தனித்தனிப் படிமங்கள் உள்ளன.

ஒரு மண்டபத்தில் 24 தீர்த்தங்கரர் சிற்பங்களும் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. வாத்ய மண்டபத்தில் ஆதிநாதரின் வரலாறு கூறும் ஸ்ரீபுராணச் சிற்பங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.[21]

அரசண்ணாமலையிலிருந்து கொண்டு வந்த நேமிநாதரின் இயக்கி 'கூஷ்பானினி'க்கும், தர்ம தேவிக்கும் அழகிய சிற்பங்கள் உள்ளன. 'கூஷ்பானினி'யின் நெற்றிப் பொட்டில் நேமிநாதரின் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. 'நேமிநாதரை மவுலிமுடி வைத்த தாயே' என்பது பழம்பாடல்.

இக்கோயில் வீரசங்காதப் பெரும் பள்ளி என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[22] சமணர்களில் ஒரு பிரிவினரான வீரசங்கத்தார் ஏற்படுத்திய கோயிலாக இருக்கலாம்,[23] அல்லது முதல் கொங்குச் சோழர் காலத்தில் அமைச்சராக விளங்கிய வீரசங்காதச் சுற்றிய தேவன் திருப்பணி செய்ததால் வீரசங்காதப் பெரும்பள்ளி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.[24] பிரமியம் கல்வெட்டில் சிவன் பெயரால் வீரசங்காதச் சதுர்வேத மங்கலம் என்ற ஊர் இருந்தமை கூறப்படுகிறது. விசயமங்கலம் அருகில் வீரசங்கிலி என்ற பெயரில் இரண்டு ஊர்கள் இருப்பதும் நோக்கத்தக்கது.

10-ஆம் நூற்றாண்டில் கங்க அரசன் இராச மல்லனின் அமைச்சனாக விளங்கியவனும், புகழ் பெற்ற சிரவண பெளகொளா கோமடேசுவரரை நிறுவியவனும் ஆகிய சாமுண்டராயனின் தங்கை புள்ளப்பை விசயமங்கலத்தில் சல்லேகனை விரதமிருந்து உயிர் துறந்துள்ளாள்.[25] அதைக் குறிக்கும் கல்வெட்டும் சிற்பமும் இங்கு உள்ளன.


நெட்டைக் கோபுரம்

விசயமங்கலம் கல்வெட்டுக்களில் தீர்த்தங்கரர்கள் "அணியாத அழகர்" என்று குறிக்கப் பட்டுள்ளனர்.[26] சமணத் திருப்பாமாலை "அணிவன அணியா அழகா ஜெய ஜெய" என்று கூறுகிறது.

விசயமங்கலம் சமணக் கோயில் உள்ள இடம் "பஸ்திபுரம்" அல்லது கோயில்பாளையம் என்று வழங்கப்படுகிறது. இப்பகுதி மக்கள் இக்கோயிலை "நெட்டைக் கோபுரம்" என இன்று அழைக்கின்றனர்.

இங்கு பல திருவிழாக்கள் நடை பெற்றுள்ளதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஒரு கல்வெட்டு இவ்வூரை "சதா ஸ்வர்க்க லோகமான விசயமங்கலம்" என்று பாராட்டுகிறது.

**திங்களூர்:**

திங்களூரிலிருந்து காசுக்காரம்பாளையம் செல்லும் வழியில் கோயில் தோட்டத்தினுள் புஷ்பநந்த தீர்த்தங்கரர் கோயில் உள்ளது.

பிரம யட்சனுக்கும், சீதள தீர்த்தங்கரருக்கும் படிமங்கள் உள்ளன. இங்குள்ள எல்லாத் தூண்களிலும் பல தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் உள்ளன. புஷ்பநந்த தீர்த்தங்கரர் பூமேந்திரர் என்று கல்வெட்டில் குறிக்கப்படுகின்றார்.

கொங்குச் சோழ மன்னன் கோனாட்டான் விக்கிரம சோழன் காலத்தில் அறத்துளான் தேவன் பொன்னான நானா கணித மாணிக்கச் செட்டி இக்கோயிலுக்கு சிங்களாந்தகன் மண்டபம் என்னும் மண்டபத்தைப் புதியதாக அமைத்தான்.[27]

திங்களூர்-சந்திரவசதி (வசதி-பஸ்தி) என்று குறிக்கப் பெறுகிறது. தென்னாட்டுச் சமணர்கட்குச் சிரவண பௌகொளாவும் அங்குள்ள சந்திர (குப்த) பஸ்தியும் தலைமைத்தலமாக விளங்குகிறது. மகதப் பெருமன்னன் சந்திகுப்தன் நினைவால்-சந்திர வசதி-திங்களூர் ஏற்பட்டதென்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

*சீனாபுரம்:*

பெருந்துறையிலிருந்து திங்களூர் செல்லும் வழியில் சீனாபுரம் அருகே மமுட்டித் தோப்பு என்னும் இடத்தில் பழமையான ஆதிநாதர் கோயில் உள்ளது. கொங்கணிவருமன் காலத்தின் எடுக்கப் பட்ட கொங்கணிவரும பசதி இக்கோயிலாக இருக்கலாம் என்பது அறிஞர் துணிவு.

ஜினபுரம் என்ற பெயரே காலப் போக்கில் மருவி சீனாபுரம் என மாறிவிட்டது. இப்பெயரை ஸ்ரீநாகபுரம் என்று பிற சமயத்தாரால் மாற்றி எழுத முயற்சி நடந்துள்ளது. இதனை ஒரு சுவடி மூலம் அறிகின்றோம்.



பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயில்,
பூந்துறை


**பூந்துறை:**

பூந்துறையின் பழைய சந்தை மேட்டில் உயர்நிலைப் பள்ளியின் வடபாகத்தில் பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயில் உள்ளது. கார்மேகக் கவிஞர்

பாடிய தனிபாடல் ஒன்றில் "பாரிசநாதன்" என இவர் குறிக்கப் பெறுகின்றார்.[28]

இக்கோயில் விசய நகர மன்னன் கிருட்டிணதேவராயர் காலத்தில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.[29] இப்போது கோவையிலும், ஈரோட்டிலும் வாழும் குசராத்திச் சமணர்கள் இக்கோயிலுக்கு வருகின்றனர்.[30] அவர்கள் உதவியால் இக்கோயில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

**வெள்ளோடு:**



ஆதிநாதர் கோயில், வெள்ளோடு

வெள்ளோடு ஊரின் வடக்கில் பெரிய குளத்தின் கிழக்குப் பகுதியில் தொன்மையான ஆதி நாதர் உடைய கோயில் உள்ளது. சந்திரப் பிரப தீர்த்தங்கரருக்கும் தனிச் சிற்பம் உள்ளது. 60 ஆண்டுகட்கு முன்பு பல கல்வெட்டுக்கள் இருந்ததாகக் கூறுகின்றனர்.[31] பூந்துறைச் சமணர் பொறுப்பில் வெள்ளோட்டுக் கோயில் உள்ளது.

**பிற இடங்கள்:**

சத்திய மங்கலம் அருகே நல்லூர் எனப்படும் இடத்தில் விண்ணப் பள்ளி என்ற சமணக் கோயில் இருந்துள்ளது. இன்றும் நல்லூர் அருகே விண்ணப் பள்ளி என்ற ஊர் உள்ளது.

விசயமங்கலத்தின் அருகே செங்கப்பள்ளி என்ற ஊர் உள்ளது. அங்கு சமணக் கோயில் இருந்ததாக விசய மங்கலம் கல்வெட்டுக் கூறுகிறது.

தாராபுரம் கோட்டை மேட்டில் சில சமணச் சிற்பங்கள் கிடக்கின்றன. பரஞ்சேர்பள்ளியில் ஒரு அழகிய தீர்த்தங்கரர் சிலை உள்ளது. சமணர் அல்லாத சைவர்களால் வழிபடப்படுகிறது.

ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம் விரிவு படுத்தப்படும் போது சிதைந்த சமணச் சிலை ஒன்று கிடைத்தது. கலைமகள் அருங்காட்சியகத்தில் உள்ள கல்வெட்டொன்றில் மின்னப் பள்ளி என்ற சமணக் கோயில் குறிக்கப் படுகிறது.[32] ஈரோடு நகரில் வணிகராக வாழும் சுவேதாம்பர சமணர்கள் புதியதாக ஒரு அழகிய சமணக் கோயில் கட்டியுள்ளனர்.

**விசயமங்கலத் தமிழ்ச் சங்கம்:**

விசயமங்கலத்தில் சமணர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவினர்.[33] பெருங்கதை என்னும் காப்பியத்தைப் பாடிய கொங்குவேளிர் விசய மங்கலத்தைச் சேர்ந்தவர். அவர் துர்வநீதனின் வடமொழி 'பிருகத்கதா' என்னும் நூலை மொழி பெயர்த்தது பற்றிய தொன்மையானக் கல்வெட்டு இங்கு இருந்தது.[34] அதன் அருமை தெரியாமல் அழித்துவிட்டனர்.

நன்னூல் இயற்றிய சன்மதி முனிவர் மகன் பவணந்தி முனிவர் சீனாபுரத்தைச் சேர்ந்தவர்.[35] கங்கநாட்டுக் சனகாபுரமும் தொண்டை நாட்டுச் சனகாபுரமும் பவணந்தி ஊர் அல்ல. ஈரோடு மாவட்டத்துச் சீனாபுரமே அவரது ஊர் என்று ஆய்ந்து நிறுவப்பட்டுள்ளது.[36]

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் விசயமங்கலம் அருகே இருந்த நிரம்பை என்ற ஊரைச் சேர்ந்தவர்.[37]

சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர், பெருவஞ்சி என்ற தாராபுரத்தைச் சேர்ந்தவர். பொய்யா மொழி என்ற சத்தியவாக்கியர் கங்க மன்னனால் ஆதரிக்கப் பட்டவர்.[38]

வச்சணந்திமாலை, நேமிநாதம் என்ற இரண்டு நூல்களை இயற்றிய குணவீரபண்டிதர் கொங்கு நாட்டவர். அந்நூல்கள் விசயமங்கலத்தில் தான் அரங்கேற்றப்பட்டன.[39]

கொங்கு நாட்டு வரலாற்றுக்கு மிகவும் அடிப்படையான ஆதாரங்களைத் தரும் கொங்கு மண்டல சதகம் என்னும் நூலைப் பாடிய ஜினேந்திரன் பிறந்தது விசயமங்கலம். அவர் கார்மேகக் கவிஞர் என்று பெயர் பெற்றவர்.

**சமய ஒருமைப்பாடு:**

இங்கு ஆட்சி புரிந்த சேரர், சோழர், பாண்டியர், போசளர், விசயநகர மன்னர்கள், மைசூர் மன்னர்கள் ஆகிய அனைவரும் சமய வேறுபாடு இன்றி சமண சமயத்தை ஆதரித்துப் பேணி வந்துள்ளனர்.

பிற தமிழகப் பகுதிகளில் பள்ளிச் சந்தம் நீக்கி என்ற தொடர் எழுதப்படும்; ஆனால் சர்க்கார் பெரியபாளையம் சிவன் கோயில் கல்வெட்டில் சமண சந்தியுள்ளிட்ட வேண்டும் வெஞ்சனாதி கட்குக் கொடையளிக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.[40]

மறவபாளயைம் கல்வெட்டில் சிவன் கோயில் அறத்துக்குத் தீங்கு செய்தால் மறு சென்மத்துக்கும் ஏழெட்டுச் சமணரைக் கொன்ற பாவத்திலே போவான் என்று எழுதப்பட்டுள்ளது.[41]

ஆலத்தூர்க் கல்வெட்டில் சமணப் பள்ளிக்கும் சிவன் கோயிலுக்கும் ஒரே கொடை நிலம் ஒன்றாக அளிக்கப் பெற்றுள்ளதைக் காண்கின்றோம்.[42]

இன்றும் இங்குள்ள திகம்பர சமணக் கோயில்களை அம்மணீசுவரர் என்று சிவனாகவே பாவித்துப் பிற மக்கள் வணங்கி வருகின்றனர்.

**இன்றைய நிலை:**

இங்கு வாழ்ந்த சமணர்கள் தெற்கே இராமநாதபுரம் மாவட்டத்துக்கும் மேற்கே பாலக்காட்டுக்கும், கேரளத்தின் வைநாட்டுப் பகுதிக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் குடிபோய் விட்டனர். விசயமங்கலத்தில் ஒன்றும், பூந்துறையில் ஒன்றுமாக இரண்டே சமணக் குடும்பத்தினர் தான் ஈரோடு மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

**அடிக் குறிப்புகள்:**

1. நாலடியார் தோன்றிய வரலாறு இத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது.
2. சிரவண பௌகொளா என்றால் 'சமணரின் வெள்ளைக் குளம்' என்று பொருள் ஆகும்.
3. முனைவர் க.ப. அறவாணன், சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை, பக்கம் 5.
3. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்கம் 35, பி.பி.தேசாய் , தென்னிந்தியாவில் சமணம், பக்கம் 25.
4. "கொங்குரை ஆற்றிலிட்டுக் குளத்தினில் தேட." என்ற இலக்கிய அடிகளில் கொங்கு பொன் என்ற பொருளில் வருவது காண்க.
5. கொங்கு மண்டல சதகம், ஊர்த் தொகைப் பகுதி.
6. சேலம், ஈரோடு, கோவை மாவட்டங்களில் உள்ளன.
7. சேர மன்னன் கோ ரவி கோதை கல்வெட்டு, சமணப் பள்ளி பற்றிய கல்வெட்டு.

8. கொங்கு தேச ராசாக்கள், 2.
9. அச்சநந்தி, பவணந்தி, வச்சிரநந்தி, புட்பநந்தி போன்றோர்.
10. மு. ஆரோக்கியசாமி கருத்து, "கொங்கு நாடு".
11. கோவை கிழார் கருத்து, "கொங்கு நாட்டு வரலாறு"
12. கே.எஸ். வைத்தியநாதன் கருத்து, "கொங்கு நாட்டின் பண்டைய பூகோளம்".
13. கொங்கு தேச ராசாக்கள், 5, 6, 9.
14. சோழன் பூர்வ பட்டயம் 2.
15. கல்வெட்டறிக்கை 1961-62 எண் 280-282.
16. கல்வெட்டியல், கல்வெட்டு ஓர் அறிமுகம் என்ற தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை நூல்கள் காண்க.
17. கோவை கிழார், கொங்கு நாடும் சமணமும்.
18. பாளையப் பட்டு வரிசை 3, பக்கம் 56.
19. அகநானூறு 199, "வாகைப் பெருந்துறை".
20. ஆய்வுத்தேன், இரா. சண்பகலட்சுமியின் கட்டுரை, 23-27.
21. பாளையப்பட்டு வரிசை 3, பக்கம் 54-55.
22. கல்வெட்டறிக்கை 1905-598.
23. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் 14-113.
24. கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருத்து, தெக்காணத்துச் சரித்திரக் குறிப்புகள் 2-66.
25. கல்வெட்டறிக்கை 1905-597.
26. ஆலத்தூர்க் கல்வெட்டிலும் இத்தொடர் காணப்படுகிறது. கல்வெட்டறிக்கை 1978-216.
27. எபிகிராபியா இண்டிகா 30-41 (243-249).
28. கொங்கு மண்டல சதகம் முன்னுரை.
29. கிழக்குச் சுவர்க் கல்வெட்டு.
30. அவர்கள் சுவேதாம்பர சமணராக இருந்தும் இக்கோயிலுக்கு வருகின்றனர்.
31. கோவை கிழார், கொங்கு நாடும் சமணமும்.
32. பெரியமணலியிலிருந்து கிடைத்த கல்வெட்டுக் கல்.
33. செ. இராசு, நல்லறம் 1960 இதழ்கள்.
34. நாகரி எழுத்தில் "ஸ்ரீபிருகத் கதா லாவண்ய ரத் பிரதாப ஹ" என எழுதப்பட்டிருந்தது.

35. கங்கக் குரிசில் உவக்கநன் னூலைக் கணிந்துபுகல்
அங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கில் குறும்பில் தனில் ஆதி நாத குருவிளங்கும்
மங்குற் பொழிற் சன காபுர மும்கொங்கு மண்டலமே

(கொங்கு மண்டல சதகம்)

36. செ. இராசு, பவணந்தி முனிவர், கொங்கு 1-1.

37. குருவை உணர்ந்த இளங்கோ வடிகள்உட் கொண்டுசொன்
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழ்க்கு
அருமை உணரசெய் அடியார்க்கு நல்லார் அவதரித்த
வருமைப் பொழில் நிரம் பைப்பதி யும்கொங்கு மண்டலமே

38. "வன் பெரு வஞ்சிப் பொய்யா மொழி புகழ் திருத்தகு மாமுனி" ஆலத்தூர்க் கல்வெட்டில் 'சிந்தாமணி தேவர்' என்பார் குறிக்கப் படுகின்றார். மைசூர் எல்லையில் சிந்தாமணி ஆறு உள்ளது.

39. நூல் பாயிரம்.

40. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் 1-261.


41. மேலது 322.

42. கல்வெட்டறிக்கை 1978 - 216.

# விசயமங்கலம்
# 'சந்திரபிரப தீர்த்தங்கரர் கோயில்'

**புலவர் வீ. சொக்கலிங்கம், விசயமங்கலம்**

தமிழ்த்திரு நாட்டில் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலத்தில் இற்றைக்கு பன்னூறு ஆண்டுகட்கு முன்பு சமண சமயம் செழித்திருந்த காலத்தில் அமைக்கப்பட்ட சமணசமயத் தீர்த்தங்கரர் ஆலயம் தான் சந்திரபிரப தீர்த்தங்கரர் ஆலயம், சமணசமயத்தைத் தோற்றுவித்த ஆதிநாதர் எனப்படும் ரிஷப தீர்த்தங்கரர் முதல் கடைசித் தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரர் முடிய உள்ள இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் இச்சந்திர பிரப தீர்த்தங்கரர் எட்டாவது தீர்த்தங்கரர் ஆவார். கொங்கு நாட்டில் மட்டும் எழுபத்து இரண்டு சமணசமய ஆலயங்கள் முன்பு இருந்த போதிலும் இவ்விசயமங்கலத்தில் உள்ள சந்திரபிரப தீர்த்தங்கரர் ஆலயம் பண்டும், இன்றும் மக்களால் பெரிதும் வியந்து பேசப்படும் சமணசமய ஆலயம் ஆகும். இவ்வாலயம் இமயமலையில் உள்ள வடகயிலாயம் போன்றும், திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் போன்றும் இவ்விசயமங்கலத்தின் வடபால் பஸ்திபுரம் என்று சங்க காலத்தில் பேசப்பட்ட இடத்தில் தென் முகமாக அமைந்துள்ளது.



சந்திரபிரப தீர்த்தங்கரர் கோயில், விசயமங்கலம்

இவ்விசய மங்கலத்திலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் ஆதிகாலம் தொட்டு சிவாலயங்களும், திருமுருகன் ஆலயங்களும், வைணவ ஆலயங்களும் கொற்றவை ஆலயங்களும் இருந்த

போதிலும் எந்த ஒரு கோயிலிலும் இராசகோபுரம் இருந்ததில்லை. இவ்விசயமங்கலம் சந்திரபிரப தீர்த்தங்கரர் ஆலயத்தில் மட்டுமே பண்டு தொட்டு இராசகோபுரம் இருந்து வந்துள்ளது. இப்பகுதி மக்கள் இதனை 'நெட்டைக் கோபுரம்' என்று அழைத்து வருகிறார்கள். இவ்வாலயத்தின் முன்புறம் முப்பது அடி உயரம் கொண்ட 'மானஸ்தம்பம்' காணப்படுகிறது. இதன் முகப்பு இடியுண்டு தலைப்பாகம் துண்டிக்கப்பட்ட நிலையில் சிதைந்து காணப்படுகிறது. இந்த 'ஸ்தம்பத்தின்' அடியே சந்திரபிரப தீர்த்தங்கரர், "ஜ்வாலாமாலினி", பிரம்மயட்சன், காந்தர்வ யட்சன் ஆகிய சிலைகள் காணப்படுகின்றன.

ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் வலம் வரும்போது அழகிய சிற்பங்கள் பல புடைச் சிற்பங்களாக சுற்றுச் சுவர்களில் காணப்படுகின்றன. ஒரு ஆண் யானையும் பெண் யானையும் தம் கன்றுடன் கூடிக் குலாவும் காட்சி இல்லறத்தின் மாட்சியை வெளிப்படுத்தும். அதனை அடுத்து இராம காதையில் வரும் வாலி வதை படலத்தை வெளிப்படுத்தும் சிற்பங்கள், பூரணை புஷ் கலையுடன் கூடிய அய்யனார் சிலையும், கசலட்சுமி அனுமன் சிலைகளும் புடைச் சிற்பங்களாக கல்லில் வடி வமைக்கப் பட்டுள்ளன கல்லி னால் அமைக்கப்பட்ட ஒரு அழகிய சாளரமும் அதன் மேல் அமைந்த ஒரு அழகிய அரண்மனையின் மேல் மாடக் காட்சியும் அதில் அமைந்த சின்னச்சிறு தூண்களும் ஒரு விரல் கூட புகமுடியாத அதன் உள்ளே செதுக்கப்பட்ட அழகிய தீர்த்தங்கரர் சிலையும் காண்பவர்களைப் பிரமிக்கச் செய்யும். இவ்வாலயத்தின் கீழ்ப் பக்கம் ஒரு சிறிய தீர்த்தக்கிணறு காணப்படுகிறது. இக்கிணற்றின் உள் அமைப்பு பீமனின் கதாயுதம் போன்று இருப்பதனால் 'பீமன் தண்டு ஊன்றிய கிணறு' என்று இப்பகுதி மக்கள் சொல்லுகிறார்கள்.



ஆதிநாதர் (ரிஷப தீர்த்தங்கரர்),
விசயமங்கலம்

இச்சந்திரபிரப தீர்த்தங்கரரின் ஆலயம் வாத்திய மண்டபம். நிருத்திய மண்டபம் அல்லது வித்யா மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம், என ஐந்து பகுதிகளாகக் காணப்படுகின்றன. முதலாவதாகக் காணப்படும் வாத்திய மண்டபத்தில் ஒரு மகாபலிபுரமே அமைந்துள்ளது எனலாம். பதினாறு தூண்களைக் கொண்ட அம்மண்டபத்தின் உள் விதானப் பகுதியைச் சுற்றி ஆதிநாதரின் வாழ்க்கை வரலாற்றினை ஸ்ரீபுராணம் வழியில் நின்று சித்திரிக்கும் நூற்று முப்பத்து இரண்டு புடைச்சிற்பங்கள் காணப்படுகின்றன. இதனை அடுத்து காணப்படுவதுதான் நிருத்திய மண்டபம் எனப்படும் வித்யா மண்டபம் ஆகும். இந்த மண்டபத்தில் தான் 'பிருகத்கதாலவண்யா ரத்பிரதாபஹ' என்று எழுதப்பட்ட நந்திநாகரி கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இவ்விசயமங்கலம் 'பெருங்கதையின் அழகிலும், பெருமையிலும், மூழ்கிக்கிடக்கிறது' என்பது இக்கல்வெட்டின் தமிழாக்கம் ஆகும். உதயணன் வரலாற்றினைக் கூறும் பெருங்கதை காப்பியம் இம் மண்டபத்தில் தான் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர், பவணந்தி முனிவர் சிலைகளும் சீயகங்கன், பணிப் பெண் சிலையும், மற்றும் நான்கு புலவர்களின் சிலைகளும் இம்மண்டபத்தில் இன்றளவும் காண உள்ளன. இம்மண்டபத்தில் காணப்படும் நான்கு தூண்களும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்டவை. இம்மண்டபத்தில் ஆதிநாதரின் பிரம்மாண்டமான அபூர்வ கற்சிலை ஒன்று காணப்படுகிறது. இது தவிர தலைப்பாகம் துண்டிக்கப்பட்ட நிலையில் தர்மதேவியின் சிலை ஒன்றும் காணப்படுகிறது. பூசணிப்பூவைக் கையில் வைத்திருக்கும் நிலையில் காணப்படும் 'கூஷ்பானினி' அம்பிகைக்குத் தனியாக ஒரு கோயிலும் இங்கு காணப்படுகிறது.

இதனை அடுத்து காணப்படும் மகாமண்டபத்தின் மேல்புறம் ஆதிநாதர் முதல் வர்த்தமான மகாவீரர் முடிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் சிலைகள் வரிசையாகக் காணப்படுகின்றன.

இதனை அடுத்து இருப்பதுதான் அர்த்த மண்டபம். முதலில் மகாவீரர் சிலையும் தர்மதேவியின் சிலையும் காணப்படுகின்றன. இதனை அடுத்து காணப்படும் கருவறையில் இவ்வாலயத்தின் மூலவரான சந்திரபிரப தீர்த்தங்கரரின் சிலை காணப்படுகிறது. மிகச் சிறிய சிலை தான் என்றாலும் இதன் வடிவமைப்பு நெஞ்சை அள்ளும் தன்மையது. இக்கர்ப்பகிரகத்தின் மேல் காணப்படும் கோபுரத்தின் உட்பகுதிகளில் அழகிய பண்டைக் கொங்கு சோழர்கால ஓவியங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன

இவ்வாலயத்தில் ஐந்து கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று கி.பி. தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றில் எழுதப்பட்ட கல்வெட்டு ஆகும். இதுவே இங்கு காணப்படும் பழமையானக் கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு மைசூர் நாட்டில் உள்ள சிரவண பௌகொளாவில் 56 அடி உயரம் கொண்ட கோமடேசுவரர் சிலையை நிறுவிய கங்க அரசனின் அமைச்சரான சாமுண்ட ராயனின் தங்கை புள்ளப்பை இங்கு வடக்கிருந்து உயிர்துறந்த செய்தியைக் கூறுகின்றது. அவ்வாறு உயிர்துறந்த புள்ளப்பையின் சிலையும் அக்கல்வெட்டின் பால் காணப்படுகிறது. கி.பி. ஒன்பது, பன்னிரெண்டு நூற்றாண்டுக் காலத்தின் கொங்குச் சோழர்களின் கல்வெட்டுக்களும் இங்கு உண்டு. கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரை இவ்வாலயம் சிறப்புற்று விளங்கியது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இவ்வாலயம் கி.பி. 678-ல் கங்கமன்னர்களில் மேலைக்கங்கர் ரேச்சயன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டு கி.பி. 1041ல் முதல் கொங்குச் சோழன் வீரச் சோழனின் அமைச்சன் வீரசங்காதச் சுற்றிய தேவன் காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பர். இவ்வாலயம் தற்போது மைய அரசின் தொல் பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் உள்ளது

# இசுலாமிய சமயக் கோயில்கள்

இசுலாமிய பள்ளிவாசல்களும் துயில்லங்களும் சமய வேறுபாடின்றி கூடுமிடங்களாக இருந்து வந்துள்ளன.

# ஈரோடு மாவட்டத்தில் இசுலாமிய இறை இல்லங்களும் இறைநேசச் செல்வர்களின் துயிலில்லங்களும்

**கே.ஏ.எஸ். அலாவுதீன் சாஹிப்,**
**78, காந்திஜி சாலை, ஈரோடு - 638 001.**

*முன்னுரை:*

*இசுலாமியர்களின் இறை இல்லங்களும் அவர் தம் ஞானாசிரியர்களின் கல்விப்பணிக்காக அல்லது அவர்தம் சேவைகளை நினைவு கூர்ந்து பின்னாளில் அவர்தம் அன்பர்கள் அமைத்த இறைநேசர்களின் துயிலில்லங்களான 'தர்ஹாக்கள்' எனப்படும் அவர் தம் அடக்கத்தலங்களும் தெளிவான சட்டங்களின் அடிப்படையிலேயே அமைக்கப் பெறுகின்றன என்ற அடிப்படைக் கொள்கையினை ஆய்வாளர்கள் அறிவது அத்தியாவசியமான தொன்றாகும்.*


*இறை இல்லங்களை நிறுவுதல் இசுலாமிய அரசர்கள் அல்லது அரசுகளின் மீதே முகற்கண் கடமையாகக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சூழ்நிலை அமையாத காலத்தில் இறை இல்லங்களை நிறுவி, நிர்வகித்து வரும் கடனை 'ஜமா அத்துக்கள்' எனப்படும் இசுலாமிய சமுதாயத்தவரின் கடமையாகின்றது.*

*இவ்வாறு நிர்மாணிக்கப்படும் இறை இல்லங்கள் 'தர்காக்கள்' கல்விக் கூடங்களான 'மதரஸாக்கள்' ஆகியன வக்ஃபு நாமாக்கள் எனப்படும் உரிம ஆவணங்களின் அடிப்படையில் முக்தவல்லிகள் என்ற நிர்வாகிகள் அல்லது அறக்கட்டளைகள் மூலம் நிர்வகிக்கப் படுகின்றன. 'தர்ஹாக்கள்' என்பன இறை நேசச் செல்வர்கள் இசுலாமிய சமுதாயத்திற்கு ஞானக்கல்வி புகட்ட ஆங்காங்கு வந்து தங்கியபோது அவர்களது பணிகளுக்குத் துணைபுரிவான் வேண்டி, அரசர்கள் அவர்களுக்கு அவர்களுடைய வாழ்நாளிலோ அல்லது அவர்கள் ஆற்றி வந்த பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர்தம் மரணத்திற்குப் பின்போ வழங்கப்பட்ட 'வக்ஃபு'களாகும். பெரும்பாலும் ஞானாசிரியர்கள் அவர்கள் பணியாற்றி வந்த இடங்களிலேயே அடக்கம் செய்யப்படுவது வழக்கில் இருந்து வந்துள்ளது. வக்ஃபு என்பது இறைவன் பெயரால் இசுலாமிய சமுதாயத்தவர்களுக்காக இவ்வாலயங்கள் எக்காலத்தும் இருந்து வரவேண்டும் என்பதை வலி*

யுறுத்த உண்டாக்கப்பட்ட ஆதாரம். ஓலைச்சுவடிகள், பட்டயங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் அல்லது பதியப்பட்ட பத்திரங்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களாக இவை அமைகின்றன.

அரசர்கள், அரசுகள் இசுலாமிய சமுதாயத்தினர், தனி நபர்கள் ஆகிய பலதுறைப்பட்ட வக்ஃபுகளும் இன்றும் நமக்கு காணக்கிடக்கின்றன.

**ஈரோடு ஹஜ்ரத் சேக் அலாவுதீன் பாதுஷா தர்கா:**



ஷேக் அலாவுதீன் சாகிப் பாதுஷா தர்கா,
காவிரிக்கரை - ஈரோடு

ஷேக் அலாவுதீன் பாதுஷா என்ற பெரியவர் இங்கு தான் அடக்கம் செய்யப் பட்டுள்ளார். ஐதர் அலி இந்த தர்காவிற்கு வந்து இதனைப் பார்வை யிட்டுள்ளார். இந்த தர்காவின் பராமரிப்பிற்காக மன்னர் ஐதர் அலி நிலம் வழங்கியுள்ளார். இந்த தர்கா காவேரிக் கரையில் உள்ளது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே இந்த தர்கா இருந்து வருகிறது. இவர் பலக் (ஈரான்) தேசத்திலிருந்து வந்தவர். வாரந்தோரும் வியாழக்கிழமை இரவு சிறப்புப் பிரார்த்தனை நடைபெறுகிறது. இந்தியத் திருநாட்டில் பல பாகங்களில் இருந்தும் சமய வேறுபாடின்றி அனைத்துமதத்தினரும் வருகிறார்கள். இங்கு புராதனக் கல்வெட்டு ஒன்றும் புதைத்திருக்கின்றது. இதன் காலம் கி.பி. 1761 ஆகும் (12-12-1761). ஆதாரம் ஜி.எஸ். நெம்பர் 184/பெரியார், டிடி. நெம்பர் 585.

***(2) ஈரோடு பசல்சா காதிரி அவுலியா தர்கா:***

பசல்ஷாகாதிரி என்ற மகான் இங்கு அடக்கம் செய்யப் பட்டுள்ளார். ஐதர் அலி இந்த தர்காவைப் பார்வையிட்டுள்ளார் இந்த தர்காவின் பராமரிப்பிற்காக மன்னர் ஐதர்அலி நிலக் கொடை



பசல்சா காதிரி அவுலியா தர்கா, ஈரோடு

வழங்கியுள்ளார். இந்த தர்ஹா ஈரோடு வ.உ. சிதம்பரானார் பூங்கா வளாகத்தில் அமைந்துள்ளது. இது ஈரோட்டில் 200 ஆண்டு களுக்கு முன்பிலிருந்தே இருந்து வருகிறது. இது கி.பி. 1863-க்கு முன்னதாக ஏற்பட்டதாகும். இது ஆங்கிலேயர்களால் ஊர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது. ஆதாரம் ஜி.எஸ். நெ. 203, டிடி. நெம்பர் 728.

**ஈரோடு ஜாமிஆ மசூதி (ஈரோடு பெரிய பள்ளி வாசல்):**

இது பெரியார் வீதியில் நகரக் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ளது. இது சுமார் 100 ஆண்டுகளுக்கு முந்தியதாகும். இது கலை அம்சத்தோடு அமைந்து இருக்கிறது. இதில் அமைந்துள்ள ஜன்னல்கள் வேலைப்பாடுடன் பலவகை வண்ணக் கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இங்கு தொங்கும் வண்ணக் கண்ணாடி ஜாடி விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. மின் விளக்குகள் வராதகாலத்தில் இக்கண்ணாடி ஜாடி விளக்குகளில் மெழுகுவர்த்தியை எரியவைத்து வெளிச்சம் பெற்றார்கள். இந்த மசூதியின் உள், வெளிச்சுவர்கள் வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளன. இங்கு தொழுகைக்கு 'ஒலு' செய்வதற்கு (கைகளால் முகம் கழுவுவதற்கு) அழகிய தாமரைக்குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த மசூதியில் காலை, மாலை இரண்டு வேளையும் 'குர் ஆன்' சிறு பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. இங்கு நூலகம் ஒன்றும் செயல்படுகிறது. இங்கு உள்ள **'ஆசாகோல்'** 65 வருடமாக நல்ல நிலைமையுடன் இருந்து வருகிறது. அழகிய வேலைப்பாட்டுடன் உயர்ந்த **'மினாராக்கள்'** உள்ளன. புறாக்கள் வாழ்வதற்கு ஏற்றபடி கூட்டிலுள்ளைய அமைப்பில் இருக்கின்றன. இந்த மசூதிக்கு காலையும், மாலையும்

ஓதிப் பார்க்க வரும் மற்ற சமுதாயத்தைப் பார்க்கும்பொழுது, இந்த மசூதி சமுதாய ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிவருகிறது. இங்கு அமைந்துள்ள பாரசீக மொழியில் எழுதப்பட்டுள்ள ஒரு சிறு கருங்கல் மசூதியின் பழமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

**ஈதுகா பள்ளி:**

ஐதர் அலி ஈதுகா பள்ளிக்கு வந்துள்ளார். இதற்கு அருகில் பசல்சா காதிரி மகான் அடங்கியுள்ளார். இங்கு ஆண்டுக்கு இருமுறை, அதாவது, ரம்சான், பக்ரீத் பண்டிகைகளில் தொழுகைகள் நடைபெறுகின்றன. இதைப் பராமரிப்பதற்கு ஐதர் அலி நிலக்கொடை வழங்கியுள்ளார். இது ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதுவும் ஈரோடு வ.உ.சிதம்பரனார் பூங்கா மைதானத்தில் அமைந்துள்ளது. கி.பி. 1863-க்கு முன்னதாக ஏற்பட்டதாகும். ஆதாரம் ஜி.எஸ்.நெ. 203, டிடி. நெம்பர் 728.

**பிராமணப் பெரிய அக்ரஹாரம் மீரா உசேன் (ஹஜ்ரத்) அவுலியா தர்கா:**

இங்கு இறைநேசச் செல்வர் மீரா உசேன் (ஹஜ்ரத்) என்ற மகான் துயில் கொண்டுள்ளார். தொன்றுதொட்டு இங்கு ஆண்டுதோறும் "கந்தூரி" என்னும் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் அமைப்பு மிகவும் புராதனமானதாகும். ஈரோடு மாவட்டத்திலிருந்தும் மற்றும் தமிழகத்தில் பல மாவட்டங்களிலிருந்தும் சமயவேறுபாடு இன்றி மக்கள் வந்து மகானை 'ஜியாரத்' செய்து வருகிறார்கள். இது கி.பி. 1854-க்கு முன்பே ஜமாத்தார்களால் ஏற்படுத்தப்பட்டு, இன்றுவரை நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

**காங்கேயம் தப்லீக் மசூதி:**

கி.பி 1863-க்கு முன் மதுரை அரசர் பாலிகர் (சின் ஆப் மதுரா) இந்த மசூதிக்கு வருகை தந்துள்ளார். இம்மசூதியைப் பராமரிப்பதற்கு இவர் நிலக்கொடை வழங்கியுள்ளார். ஆதாரம் டிடி நெ. 1081 நாள் 23-1-1863.

**ஊத்துக்குளி தர்கா:**

இது ஊத்துக்குளி வடுகபாளையம் கிராமத்தில் திப்பு சுல்தான் நேரிடையாக ஏற்படுத்திய தர்காவாகும். இத்தர்காவைப் பராமரிக்கவும், ஒளி (விளக்கு) அமைக்கவும் நிலக்கொடை வழங்கியுள்ளார் இது கி.பி. 1863-க்கு முன்பே இனாமாகக்

கொடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம் ஜி.எஸ். நெ. 246/பெரியார், டி.டி. நெ. 816.

**துடுப்பதி இப்ராகிம் பாதுசா தர்கா:**

திப்பு சுல்தான் தங்கியிருந்து, 'ஜியாரத்' செய்து ஏழைகளுக்கு உணவுகள் வழங்கியுள்ளார். 'குர்ஆன்' ஓதவைத்து, தான் கேட்டுள்ளார். தர்காவைப் பராமரிப்பதற்கும் ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்கும் குர்ஆன் (மதுரை) கற்பதற்கும் நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளது. ஆதாரம் ஜி.எஸ். நெ. 390 சி.பெரியார் டி.டி. நெ. 859.

**நம்பியூர் அசன் அலி தர்கா:**

நம்பியூரில் உள்ள அசன்அலி தர்கா அசன் அலி என்ற மகான் அடக்கிய இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆதாரம் ஜி.எஸ். நெ. 237, டி.டி. நெ. 439.


ஈரோடு மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த கல்விக்கூடங்களும் 'மதராஸா'க்களும் (குர் ஆன் பாடசாலை) வரலாற்றுச் சின்னங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. இவை பல இசுலாமியப் பெரியார்களால் தோற்றுவிக்கப்பட்டு, இன்றளவும் பாதுக்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இவைகளைப் பற்றி முறையான ஆய்வுகள் நடத்தினால் பல வரலாற்றுச் சிறப்புகள் காணக் கிடைக்கும்.

**அல்–அமீன் சேவை மற்றும் கொடைக்கழகம்:**

அல்-அமீன் சேவை மற்றும் கொடைக் கழகத்தினரால் ஒரு 'மெட்ரிக்குலேசன்' பள்ளியும் அல்-அமீன் 'பாலி டெக்னிக்' கல்லூரியும் நடைபெற்று வருகின்றன. ஈரோட்டில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு காந்திஜி சாலையில் ஜனாப் முதலாளி சாகிப் பங்களாவில் ஒரு பள்ளி வாசலும், மற்றும் பெரியார் நகர், திருநகர் காலனி, அசோகபுரம், பெரிய அக்ரகாரம், அண்ணா நகர், கனிராவுத்தன் குளம், லக்காபுரம், சங்குநகர், திண்டல் மலை ஆகிய இடங்களில் புதியதாக பள்ளிவாசல்கள் ஏற்படுத்தப்பட்டு, தொழுகை நடந்து வருகின்றது. ஈரோடு பழைய ரயில்வே நிலையம் பள்ளி வாசல் கடந்த சுமார் 100 வருடங்களுக்கு முன்பும் ஈரோடு டவுன் சுல்தான்பேட்டை மகல்லூர் பள்ளி வாசல் சுமார் 55 வருடங்களுக்கு முன்பும் ரயில்வே காலனி பள்ளி வாசல் கடந்த சுமார் 40 வருடங்களுக்கு முன்பும் கட்டப்பட்டு தொழுகை நடந்து வருகின்றது. சத்தியமங்கலத்தில் உள்ள பள்ளி வாசல் கடந்த

60 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் நாற்பதுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் இருபதுக்கும் மேற்பட்ட தர்காக்களும் முப்பதுக்கு மேற்பட்ட 'கபருசுதான்'களும் உள்ளன

கொடுமுடி, குள்ளக் கவுண்டன்புதூர், வள்ளியம் பாளையம், காசிப்பாளையம், சென்னிமலை, பெருந்துறை, பவானி, ஜம்பை, ஓலகடம், அந்தியூர், பெருந்தலையூர், கோபி ஆகிய இடங்களில் மசூதிகளும் தர்காக்களும் உள்ளன.


திப்புசுல்தான் கட்டிய மசூதி, தாளவாடி

குந்துபாயூர் வெள்ள கோயில், தாளவாடி, கவுந்தப் பாடி, காங்கயம்பாளையம், குருமந்தூர் ஆகிய இடங்களிலும் பள்ளி வாசல்கள் உள்ளன. ஜம்பைக்கு அருகில் உள்ள மேவானி என்ற ஊரில் தர்கா மற்றும் கபருஸ்தான் மட்டும் உள்ளன. இங்கு பள்ளிவாசல் இல்லை. தாளவாடியில் திப்புசுல்தான் கட்டியதாகக் கூறப்படும் மசூதி உள்ளது. இதனை ஒட்டிய ஒரு இந்து சமயக் கோயிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை:

ஈரோடு மாவட்டத்தில் மேலே கூறப்பட்டுள்ளவை போன்று இன்னும் பல கல்வி நிறுவனங்களும், 'மதரஸா'க்களும் நடந்து வருகின்றன. இவற்றிக்குத் தனியான ஆய்வு தேவைப்படுகிறது.

# ஈரோடு மாவட்டத்தில் இசுலாமியர்களால் நடத்தப்படும் கல்விக்கூடங்களும் மதரசாக்களும்

ஈரோடு இசுலாமியக்கலாச்சாரக்கழகம்,
166, நேதாஜி சாலை, ஈரோடு 638001.

*முன்னுரை:*

*ஈரோடு மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த கல்விக்கூடங்களும் மதரசாக்களும் (குர் ஆன் பாடசாலை) வரலாற்றுச் சின்னங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. இவை பல இசுலாமிய மகான்களால் தோற்றுவிக்கப்பட்டு, இன்றளவும் பாதுகாக்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இவற்றைப் பற்றி முறையான ஆய்வுகள் நடத்தினால் பல வரலாற்றுச் சிறப்புகள் காணக்கிடைக்கும்.*

***(1) ஜன்னாத்துல் பாக்கியாத் மதரசா, ஈரோடு:***

*இசுலாமிய மதக் கல்வியை குழந்தைகளுக்கு இலவசமாகக் கற்பித்துக் கொடுப்பதற்காக இம்மதரசா கடந்த 1919 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இம்மதரசா நடைபெறுவதற்குரிய இடமும் அதற்கு வருவாய் வரக்கூடிய வகையில் வேறுசில இடங்களும் கொடையுள்ளம் படைத்த சீமாட்டி, "ஹாஜா" கதீஜா பீபி என்பவரால் நன்கொடையாக அளிக்கப்பட்டது இந்த நன் கொடைகள் ஈரோடு துணைப்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண். 619ன்படி கடந்த 1.4.1942ஆம் நாள் பதிவு செய்யப்பட்டுள்ளது இந்த நன்கொடைகள் தமிழக வக்ஃபு வாரியத்தின் வரிசை எண் 385 படி பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வக்ஃபு செய்யப்பட்ட நிர்வாகம் இசுலாமிய சமுதாயப் பொதுமக்களால் தேர்வு செய்யப்பட்ட ஓர் குழு "ஜன்னாத்துல் பாக்கியாத் அசோசியேஷன்" என்ற பெயரில் நிர்வாகம் செய்ய வேண்டும் என நிபந்தனையும் கூறப்பட்டுள்ளது.*

***(2) இ.கே.எம். அப்துல்கனி மதரசா இசுலாமியா உயர்நிலைப்பள்ளி:***

*இ.கே.எம். அப்துல்கனி மதரசா இசுலாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி ரோடு, செல்ல பாட்சா வீதி மற்றும் வெங்கடப் பெருமாள் வீதியில் அமைந்துள்ளது. இதற்கான இடத்தை அப்போதைய இசுலாமிய பெரியோர் பலரால் வக்ஃபு செய்யப்பட்டுள்ளது. இப்பள்ளி 1935ல் தொடங்கப்பட்டது. முதலில் இது திண்ணைப்பள்ளியாக இருந்து (தீனியாத்) இசுலாமிய மதக் கல்வியைப் போதித்து வந்தது. பிறகு 10 ஆண்டுகள் கழித்து 1945 ஆம் ஆண்டு முதல் ஆரம்பப்பள்ளியாகவும் பிறகு நடுநிலைப் பள்ளியாகவும் செயல்பட்டது. 1955ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப்பள்ளியாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.*

*இப்பள்ளிக்கு இரண்டு ஏக்கர் பரப்பளவில் விளையாட்டு மைதானம் பூங்கா சாலையில் உள்ளது. இப்பள்ளியை மதரசா இசுலாமியா சங்கம் (டிரஸ்ட்) நடத்துகிறது. இப்பள்ளியின் முழுப் பொறுப்பும் மதரசா இசுலாமியா வக்ஃபின் கீழ் உள்ளது. இது அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஒன்று. இப்பள்ளியின் சிறப்பைக் கூறும்பொழுது (1) முதல் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை நடைமுறைக்கல்வியுடன் இசுலாமிய மதக்கல்வி போதனையும் உண்டு. (2) இப்பள்ளி தமிழகத்திலேயே சிறந்த இசுலாமிய நிர்வாகப் பள்ளியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (3) இப்பள்ளி சிறந்த சாரண, சாரணியர்கள் பரிசு பெற்றுள்ளது. (4) இப்பள்ளி சிறந்த தலைமையாசிரியர் விருதும், சிறந்த தமிழாசிரியர் விருதும் பெற்றுள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் பலமுறை நல்ல விழுக்காடுகளைப் பெற்றுள்ளது. (5) ஏழை மாணவ மாணவிகளுக்கு பத்தாம் வகுப்புவரை இலவச நூல்கள் ஆண்டுதோறும் பள்ளியின் நிர்வாகிகளால் வழங்கப்படுகின்றன. இப்பள்ளியில் தற்போது 1100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள்.*

***(3) பிராமணப் பெரிய அக்ரஹாரம் மதரசா தாவூதியா அரபிக்கல்லூரி:***

*பிராமண பெரிய அக்ரஹார கொடை வள்ளல் அல்காஜ் ஏ.பி. சேக்தாவூது சாகிப் 1952ல் மதரசா தாவூதியா அரபிக்கல்லூரியை*

நிறுவி தன் சொத்துக்களில் புன்செய் நிலங்களையும் அதிக வாடகை வரும் கட்டடங்களையும் வக்ஃபு செய்து, திறமையான ஆசிரியர்களை நியமித்து, தானே நடத்தி வந்தார்

இதற்குக் காரணமாக இருந்தவர் காலம் சென்ற அல்லாமா அமானி அச்ரத் ஆவார். 1951, டிசம்பர் 25ஆம் நாளில் 11 மாணவர்களைக் கொண்டு முதல் வகுப்பை வேலூர் பாக்கியாத் துன்னாலிகாத் நாஜிரும், முப்தியுமான செய்கு ஆதம் அசரத் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. அதன்பின் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகுப்பாக அதிகப்படுத்தப்பட்டு, 1959ம் ஆண்டு தக்வீல் பட்டமளிப்பு விழா முதன் முதலாக அல்லாமா அமானி அச்ரத் தலைமையில் நடத்தப்பட்டது.

மதரசா நிரந்தரமாக நடந்துவர 1963ம் ஆண்டு 17 நபரைக் கொண்ட அறக்கட்டளையை கனம் காஜி ஏ.பி.எஸ். என்பார் நிறுவினார். மதரசாவின் நிரந்தர நாஜிராக மௌலானா அபுசூவுது அகமத் ஏற்படுத்தி, பல புதிய திறமை வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து, நல்லமுறையில் நடந்துவரச் செய்தார். 1963லிருந்து 'கிப்கு' வகுப்பும் (குர் ஆன் மனனம்) 'கிராஆத்தும்' (குர் ஆன் ராகத்துடன் ஓதல்) ஒன்று முதல் ஏழு வகுப்பு வரை மௌல்வி (மதக்கல்விப் போதனை) வகுப்பும், தமிழ்மொழி வாயிலாக நடந்து வருகிறது. நிறுவனருடைய மறைவிற்குப்பிறகு ஜனாப் காஜி ஈ.கே.ஹெச்.எம். அகமது இப்ராகிம் சாகிப் தலைமையில் உள்ள நிர்வாகத்தினரின் சீரிய முயற்சியால் தற்போது இந்த மதரசாவில் கல்வி பயின்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கையும் கல்வித் தரமும் உயர்ந்துள்ளது. நம் நாட்டின் பல மாநிலங்களிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து இலவசக் கல்வியைப் பெற்று வருகின்றனர். இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டு வருகின்றன. இக் கல்லூரியில் இருந்து பட்டம் பெற்றவர்கள் நமது நாட்டின் பலபாகங்களிலும் ஏமன், இலங்கை, குவைத் ஆகிய நாடுகளிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

முடிவுரை:

ஈரோடு மாவட்டத்தில் மேலே கூறப்பட்டுள்ளவை போன்று இன்னும் பல கல்வி நிறுவனங்களும், மதரசாக்களும், நடந்து வருகின்றன. இவற்றிற்கு தனியான ஆய்வு தேவைப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் இசுலாமியக் கலாச்சாரங்களைப் பேணிக்காக்கும் வகையில் ஈரோடு மாநகரில் அல்அமீன் சங்கமும், குறிப்பாக இசுலாமியக் கலாச்சாரக்கழகம் மற்றும் சக கழகங்களும் அரும்பாடுபட்டு வருகின்றன.

# கிறித்துவக் கோயில்கள்

இயேசுகிறித்துவின் திருத்தூதுவர்கள் சமயப்பணி செய்யுங்கால் கட்டிய கோயில்கள் பல இந்து, இசுலாமிய கட்டடக்கலை மாண்புடன் விளங்கி அனைவரையும் ஈர்ப்பனவாய் அமைந்துள்ளன.

# ஈரோடு மாவட்டக் கிறித்துவக் கோயில்கள்

**வே. ஜெயராஜ், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், ஈரோடு - 638 001.**

***கிறித்துவக் கோயில்கள் வரலாறு:***

*இந்தியாவில் கிறித்தவர்களின் தொடக்கம் தோமையரின் வரவில் ஆரம்பித்தது எனலாம். சீரியர்களின் வரவால் கேரளத்தில் கிறித்துவம் பரவியது. தொடர்ந்து போர்ச்சுகீசியர்களின் வரவால் கிறித்துவம் தழைத்தது. ஆங்கிலேயரின் வரவால் மேலும் கிறித்துவம் பரவியது எனலாம். தொடக்கத்தில் வழிபாட்டினை இந்துக் கோயில்களில் தொடங்கினர் என்றோ அல்லது கிறித்துவ ஆலயங்களை இந்துக் கோயில்களைப் போலக் கட்டினர் என்றோ கூறலாம். சீரியன் கிறித்துவர்கள் வழிபாட்டிடங்களில் உட்கார நாற்காலிகள் கிடையாது. தேவைக்கேற்ப உட்கார்ந்தோ அல்லது மண்டியிட்டோ வழிபடுவது வழக்கம். ரோமன் கத்தோலிக்கத் தேவாலயங்கள் உருவ வழிபாட்டுடன் காணப்பட்டன. 1510ல் கொச்சியில் பிரான்சிசுகன்களால் ஒரு கிறித்துவத் தேவாலயம் ஐரோப்பியர்களால் கட்டப்பட்டது. சிலுவை அடையாளத்தில் கிறித்துவக் கோயில்கள் கட்டப்பட்டு பிரபல மடைந்தன. கோள வடிவக்கூறைகளும் கோபுரங்களும் பிற்காலத்தில் கட்டப்பட்டன. பிற்காலத்தில் இந்தியக் கட்டடக் கலை கிறித்துவ ஆலயங்களில் புகுத்தப் பட்டன. ஆந்திர மாநிலம் தோரணக்கல்லிலுள்ள பேராலயமும் தமிழ் நாட்டிலுள்ள திருப்பத்தூர் கிறித்துகுல ஆசிரம கிறித்துவ ஆலயமும் திராவிடக் கலையில் கட்டப்பட்டுள்ள கிறித்துவ ஆலயங்களாகும். மட்டுமல்லாது இந்துக் கோயில்களின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது போல கிறித்துவப் பொருட்களில் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளதைக் காணலாம். பெரும்பாலான கிறித்துவ ஆலயங்களில் சாளரங்களில் கிறித்துவப் பொருளில் வண்ணக் கண்ணாடிகள் கொண்டு உருவங்களை அமைத்துள்ளதையும் காணலாம். வழிபாட்டு வேளைகளில் குழுவாகப்பாடல் பாடுவது வழக்கம். வந்திருப்போருக்கு ஆலய குரு .வேதாகமத்திலிருந்து உபநியாசம் பண்ணுவதும் வழக்கமானது.*

*கிறித்துவம் ஈரோடு மாவட்டத்தில் பரவத் தொடங்கியது கி.பி. 16ம் நூற்றாண்டு ஆகும். மதுரையில் கி.பி. 1606ல் உருவான இயேசு சங்கத்தார் (JESUIT MISSION) மூலமாக ஈரோடு மாவட்டத்தில் முதல் முதல் சமயப்பணி நடந்தது. முதல் முதல் தாராபுரத்தில் கி.பி.*

1608ல் ஒரு கிறித்துவக் கோயில் கட்டப்பட்டது. இராபர்ட் டிநொபிலி என்ற திருத்தூதுவர் சத்திய மங்கலத்தில் ஒரு கிறித்துவக் கோயிலை நிறுவினார். 1652ல் சத்திய மங்கலம் பகுதியில் 15 கிறித்துவக் கோயில்கள் எழுப்பப் பட்டன. சத்திய மங்கலத்தில் இருந்த பாளயக்காரர்கள் கிறித்துவத்திற்கு ஆதரவாக இருந்தனர். 1856ல் லைப்சீக் (Life Seek) என்ற கிறித்துவச் சங்கம் தொடங்கப்பட்டது. அதனது உழைப்பால் 1888ல் ஈரோட்டில் தமிழ் சுவிசேச லுத்தரன் திருச்சபையின் ஆலயம் கட்டப்பட்டது. இலண்டன் சங்கம் (LONDON MISSION) மூலமாக ஈரோட்டிற்கு திருத்தூதுவர் அந்தோனி வாட்சன் பிரப் 1897ல் அனுப்பப்பட்டார். இவர் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர். ஈரோடு மாவட்டத்தில் 20க்கும் மேலான ஆலயங்கள் இவரால் கட்டப்பட்டன. இவர் இங்கு பணியாற்றிய காலத்தில் சேகரிக்கப்பட்ட ஈரோடு பகுதியைச் சார்ந்த கலைப்பொருட்கள் ஆஸ்திரேலிய அருங்காட்சியகத்தில் உள்ளன. 1908ல் மெரி வெதர் என்ற திருத்தூதுவர் இலங்கை இந்தியா பொதுச் சங்கத்தின் (CEYLON INDIA GENERAL MISSION) சார்பாக வந்து ஈரோடு மாவட்டத்தில் கிறித்துவக் கோயில்கள் அமைத்தார். நூற்றுக்கணக்கான கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

**கிறித்துவக் கோயில் மாதிரி:**

கிறித்துவ வேதாகமத்தில் இசரவேல் மக்களை எகிப்திலிருந்து கானான் நாட்டுக்குள் வழி நடத்தின மோசேக்கு 'தேவன்' காண்பித்த கோயில் மாதிரியின் படியே மோசே ஆசரிப்புக் கூடாரம் என்பதை அமைத்தார். ஆசரிப்புக் கூடாரத்தின் வெளி அளவு 100 முழநீளம், 50 முழ அகலம். இதனுள் மகாதூய தலம், தூய தலம், உட்பிரகாரம், வெளிப் பிரகாரம் என்ற பகுதிகள் இருந்தன. இதன் அடிப்படையில் தான் சாலோமோன் அரசர் எருசலேம் நகரில் கோயில் கட்டி முடித்தார். பின்னர் கிறித்துவுக்குப் பின் ஆலயத்தின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டன. உப்பரிக்கைகள் எனப்படும் கோபுரங்கள் உருவாயின. பெரும்பாலான கிறித்துவக் கோயில்கள் சிலுவை வடிவில் காணப் படுகின்றன.

**கிறித்துவச் சங்கங்கள்:**

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு கிறித்துவச் சங்கங்கள் உள்ளன. ரோமன்கத்தோலிக்கச் சபை, தென்னிந்தியத் திருச்சபை, லுத்தரன் சபை, சிலோன் இந்தியா பொதுச் சங்கம், பெந்தே கோஸ்தே சபை, சீயோன் பெந்தே கோஸ்தே சபை, இந்திய பெந்தே கோஸ்தே சபை, பெத்தானியா சபை, கிறித்துவின் சபை,

சகோதரர்கள் சபை, கிறித்துவைப் பின்பற்றுவோர் சபை, தேவ சபை. தேவசங்க சபை, எழுப்புதல் சபை, சுவிசேசச் சபை போன்ற சங்கத்தினர் ஈரோடு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தேவாலயங்கள் கட்டி வழிபட்டு வருகின்றனர்.

**ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவ ஆலயங்கள்:**

ரோமன் கத்தோலிக்க ஆலயங்கள் பொதுவாக கோபுரங்களுடன் காணப்படுகின்றன. இங்கு உழுவ வழிபாடு உண்டு. இந்துக்களைப் போல விழாக்காலங்களில் தேர் விழாக்கள் இன்றும் காணப்படுகின்றன.

**தூய அலோசியசு கிறித்துவ ஆலயம், தாராபுரம்:**

இயேசு சங்கத்தைச் சார்ந்த இராயந்து என்ற வரலாற்றுப் புகழ்பெற்ற குருவால் இந்த ஆலயம் 1608ல் கட்டப்பட்டது. ஆங்கிலேயருக்கும் திப்பு சுல்தானுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் ஒருவன் இவரைச் சுட்டுக் கொன்றான் எனக் கூறுவர். 1750ல் கட்டப்பட்ட பெரிய கிறித்துவ ஆலயம் திப்புவினால் அழிக்கப்பட்டது எனவும் கூறுவர். இப்போதுள்ள ஆலயம் பெர்சிவால் என்ற குருவால் 1857ல் கட்டப்பட்டது. 1940ல் புதுப்பிக்கப்பட்டு மூன்று கூண்டுகள் கட்டப்பட்டன. 1975ல் தூயதலத்தில் உயிர்த்தெழுந்த கிறித்துவின் ஓவியம் தீட்டப்பட்டது.

**தூய இக்னேசியசு ஆலயம், அக்கரைக் கொடிவேரி:**

பழயூர் என்ற இடத்தில் ஒரு சிறிய கிறித்துவ ஆலயம் இருந்தது. மழை வெள்ளத்தால் அடிக்கடி இந்த ஆலயம் பாதிக்கப்பட்டதால் அம்புரோசு என்ற குருவால் 1947ல் அக்கரைக் கொடிவேரியில் பெரிய ஆலயம் கட்டப்பட்டு தூய இக்னேசியசு ஆலயம் என்று அழைக்கப்பட்டது.

**தூய அந்தோனியார் ஆலயம், ரேயில்வே காலனி, ஈரோடு:**

உபகாரசாமி என்ற முதல் இந்தியப் பேராயரால் 29.9.1941ல் இவ்வாலய அடிக்கல் நாட்டப்பட்டது. 11.2.1943ல் டி.சி. அடைக்கலம் என்ற குருவால் கட்டப்பட்டு, பேராயர் டி.சி. உபகாரசாமியால் வழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இத்தேவாலயத்தில் பல்வேறு கூம்புகள் அழகுறக்காணப்படுகின்றன.


**தூய தெரசாவின் ஆலயம், கொளப்பலூர்:**

கொளப்பலூரில் பிரெஞ்சு திருத்தூதுவர்களால் 1909ல் சிறிய ஆலயம் கட்டப்பட்டது. இங்கேயே பள்ளியும் ஆலய ஆராதனையும்

நடந்தன. 1938ல் தந்தை அவுடியா என்பவரால் இப்போதுள்ள ஆலயம் கட்டப்பட்டது.

**தூய பேதுரு மற்றும் பவுல் ஆலயம், வாலிபாளயம்:**

வாலிபாளயம் 1666 லேயே ஒரு கிறித்துவ கிராமம். பைகாப், பாக்ரோ போன்ற குருக்கள் முறையே 1837, 1841 ஆகிய ஆண்டுகளில் பணி செய்தனர். ஒரு ஆலயமும் இருந்தது. இப்போது பள்ளி நடத்தப்பட்டு வருகிற பழைய ஆலயம் 1869ல் தந்தை ட்ரைகொட் என்பவரால் கட்டப்பட்டது. 1909ல் இப்போதுள்ள ஆலயம் தந்தை லிபான்செக் என்பவரால் கட்டப்பட்டது.



தூயமேரி ஆலயம், ஈரோடு

**தூய மேரியின் ஆலயம், ஈரோடு:**

1867ல் இத்தேவாலயம் கட்டப்பட்டது. தந்தை லிபான்செக் என்பவரால் விரிவாக்கப்பட்டது. தந்தை ஏ. சூசை என்பவரால் 8.9.1968ல் இப்போதுள்ள ஆலயம் கோபுரத்துடன் கட்டப்பட்டது.

**தூய இருதய ஆலயம், கோபிச்செட்டிபாளயம்:**


இந்த ஆலயம் 1962ல் கட்டப்பட்டது. இவை தவிர, ஈரோடு மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்ட கிறித்துவ ஆலயங்கள் சமீப காலத்தில் கட்டப்பட்டுள்ளன.

**தென்னிந்திய திருச்சபை ஆலயங்கள்:**

ரோமன் கத்தோலிக்கம் தவிர்த்து பிற கிறித்துவ ஆலயங்களில் உருவ வழிபாடு இல்லை. மாறாக சிலுவை உண்டு. 'பெந்தேகோஸ்தே' என்ற கிறித்துவ அமைப்புகளில் சிலுவையோ, எந்த உருவ வழிபாடோ கிடையாது.

**பிரப் நினைவாலயம், ஈரோடு:**


1830ல் இலண்டன் கிறித்துவச் சங்கம் தன் கிறித்துவத் திருத்தூதுப் பணியைத் தொடங்கியது. 1894ல் மறைதிரு. அந்தோணி



அந்தோணி வாட்சன் பிரப்


வாட்சன் பிரப் ஆஸ்திரேலியாவிலிருந்து கோயம்புத்தூர் வந்து இரண்டு ஆண்டுகள் பணி செய்தார் 1897ல் ஈரோடு வந்தார். 20க்கும் மேலான ஆலயங்கள் மறைதிரு. ஏ. டபுள்யூ பிரப் அவர்களால் கட்டப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கது ஈரோட்டிலுள்ள பிரப் நினைவாலயமாகும். 1930ல் பிரப் ஆலயம் கட்ட திட்டம் தீட்டப்பட்டு 1933ல் பேராயர் அசரியா அவர்களால் அர்ப்பணிக்கப் பட்டு, பிரப் நினைவாலயம் எனப் பெயரிடப்பட்டது.

சிமெண்டு உபயோகிக்காமல் சுண்ணாம்புக் காரையை முட்டைகளுடன் அரைத்து, அதனை பயன் படுத்தி அவர் கட்டினார். பூமியிலிருந்து சுவர் எவ்வளவு உயரமோ அவ்வளவு ஆழம் பூமிக்குள் அத்திபாரம் போடப்பட்டுள்ளது. சுவரில் வழவழப்பை உண்டாக்க முட்டை பயன்படுத்தப் பட்டது. இந்த ஆலயத்தில்



தென்னிந்திய திருச்சபை
பிரப்நினைவாலயம், ஈரோடு

பயன்படுத்தப் பட்ட கற்கள் கரூரிலிருந்து கொண்டுவரப் பட்டன. சாளரங்கள் கரூரில் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டன.



தென்னிந்தியத் திருச்சபை கிறித்துவ ஆலயம், பூந்துறை

இக்கோயில் இந்தோசராசனிக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. ஈரோட்டிலுள்ள இசுலாமியர்களை ஈர்ப்பதற்காக இந்த அமைப்புடன் கட்டப்பட்டதென கூறப்படுகிறது. இக்கோயிலின் முகப்பில் கடவுள் ஒருவரே என்று தமிழிலும் அரேபிய மொழியிலும் எழுதப் பட்டுள்ளது.

தூய பேதுருவின் ஆலயம், ஈரோடு, தூய யோவான் ஆலயம், ஈரோடு மற்றும் கொடுமுடி, பள்ளி பாளையம், பெருந்தலையூர், பவானி, பள்ளிபாளையம், பேப்பர் மில்காலனி, சிவகிரி பட்டகாரன்பாளயம், காஞ்சிக்கோயில், வெள்ளோடு, கோபிச்செட்டிபாளையம், பூந்துறை போன்ற இடங்களில் 20க்கும் மேற்பட்ட ஆலயங்கள் உள்ளன. சமீபத்தில் பேப்பர்மில் காலனி தேவாலயத்திற்கு அருகில் கோபுரத்துடன் கூடிய பெரிய கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

**லுத்தரன் சபை ஆலயங்கள்:**

1888ல் தமிழ்சுவிசேச லுத்தரன் திருச்சபை ஆலயம் ஈரோட்டில் கட்டப்பட்டது. புஞ்சைப்புளியம்பட்டி மற்றும் ஊத்துக்குளி போன்ற இடங்களிலும் ஆலயங்கள் உள்ளன. ஆலயங்களில் கோபுரங்கள் கிடையாது.

**சிலோன் இந்தியா பொதுச்சங்க சபை ஆலயங்கள்:**

கோபிச்செட்டிபாளயத்தில் பழமையான ஒரு ஆலயம் உள்ளது. ஆப்பக்கூடல், அந்தியூர், சத்தியமங்கலம், குறிச்சி போன்ற

இடங்களில் கோபுரங்கள் இல்லாத ஆலயங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஏறத்தாழ 90 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டவை.

**பெந்தே கோஸ்தே ஆலயங்கள்:**

பெந்தே கோஸ்தே சபைகள் எனப்படும் நிறுவனங்கள் பெரிய அளவில் ஆலயங்கள் கட்டாமல் வீடுகளிலும், கொட்டகைகளிலும், சிறிய ஆலயங்களிலும் ஆலய வழிபாடு நடத்தி வருகிறார்கள். இவை விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டுள்ள மாதிரியின் படி அமைக்கப்படவில்லை.

**முடிவுரை:**

ஈரோடு மாவட்டத்திலுள்ள கிறித்துவக் கோயில்கள் பெரும்பாலானவை சுற்றுப்புற மதில் சுவர்களுடன் காணப்படுகின்றன. விழாக்கள், பொது நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்த மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளிகள், மருத்துவ மனைகள், முதியோர் இல்லங்கள், விடுதிகள் போன்றவை சுற்றுப்புறச் சுவர்களுக்குள்ளேயே அமைந்துள்ளன. கோயில்களில், ஆராதனை வேளையைக் குறிக்க பெரிய ஆலயங்களில் பெரிய வெண்கல மணிகள் ஒலித்து அழைக்கின்றனர். மணிக்கூண்டுகளும் கட்டப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் தற்சமயம் நூற்றுக்கு மேற்பட்ட கிறித்துவ ஆலயங்கள் கிறித்துவச் சங்கங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**துணை நூல்கள்:**

1. Early History of the Coimbatore Mission, Coimbatore Multipurpose Religious Service Centre, 1979.
2. Diocese of Coimbatore Directory, 1978.
3. Century of Christian Service in Erode, The Work of the London Missionary Society in Erode, Printed at the London Mission Press, 1836-1936, Nagercoil.
4. C.S.I. Hospital, Erode (Former Gosha Hospital) Hospital Fete, 5th September 1981.

5. *50 ஆண்டு 1930-1980 பொன் விழாமலர், சி.எஸ்.ஐ. பிரப் நினைவாலயம், ஈரோடு, 1980.*

6. *கோவை மாவட்டத்தில் சமயம் பண்டைக்கால முதல் கி.பி. 1900 வரை, திரு. ஆர். பூங்குன்றன், பதிவு அலுவலர், தொல் பொருள் ஆய்வுத் துறை, கோவை.*

7. *கோவை மாவட்டமும், தமிழ் நூல்களும், புலவர் செ. இராசு, தஞ்சைப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-5.*

8. P. Thomas, Churches in India, Publication Division, Ministry of Information and Broadcasting, Govt. of India, 1990.

9. V. Jeyaraj & A.B. Vasanthakumari, Let us Preserve Our Art & Culture, Govt. Museum, Vellore, 1993.

# பொதுக் கட்டுரைகள்

கலை வளர்ச்சியில் சிறப்புற்ற கோயில்கள் மருந்தகங்களாகவும் விளங்கி வந்துள்ளன.

# ஈரோடு மாவட்டத்தில் சிற்பக்கலை

க. இலக்குமிநாராயணன், காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், சேலம்

ஈரோடு மாவட்டத்தின் தற்போதைய நிலப்பகுதி கொங்கு நாட்டின் மையப்பகுதியாகும். இது கல்வெட்டுகளிலும், கொங்கு மண்டல சதகத்திலும் கூறப்பட்டுள்ள இருபத்துநான்கு நாட்டுப் பிரிவுகளில், ஒடுவங்கநாடு, தென்பொன்கலூர் நாடு, குறுப்புநாடு, காஞ்சிக்கோவில் நாடு, வடகரைநாடு, மேல்பூந்துறை நாடு, மேல்கரை அரயநாடு, தென்கரைநாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

கொங்கு தேச ராசாக்கள் கதை, சோழன்பூர்வபட்டயம் போன்ற வரலாற்று மூலங்களாலும், டாக்டர் ஆரோக்கியசாமி, கோவைகிழார், இராமச்சந்திரன் செட்டியார் போன்ற வரலாற்று அறிஞர்களாலும், சங்க காலத்திற்குப்பின் கொங்குநாட்டில் அடுத்தடுத்து கோலோச்சிய இரு மரபுகளைப் பற்றி அறிகிறோம். கி.பி. 250 வாக்கில் வீரராய சக்ரவர்த்தி என்ற மன்னனால் துவக்கப்பட்ட இரட்டர்மரபு சுமார் நூற்று ஐம்பது ஆண்டுகள் இப்பகுதியில் வலிவுடன் ஆட்சிப் புரிந்தது. அதனை அடுத்து சுமார் கி.பி. 405 வாக்கில் கொங்கணிவர்மனால் இங்கே நிறுவப்பட்ட கங்கர் ஆட்சி நாலரை நூற்றாண்டுகளுக்கு மேலாக, பல ஏற்றத்தாழ்வுகளுடன் நடைபெற்றது. இரட்டர் மரபு விட்டுச் சென்றது எனக் கூறத்தக்க கலைப்படைப்புகள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், கங்கர் மரபு இங்கே ஆண்டதின் அடிச்சுவடுகளைச் சுட்டிக்காட்டும் கலைச்சுவடுகள் இங்கே உள்ளன.

***கங்கர் கோயில்:***

ஈரோடு நகரின் மையத்தில் கோட்டைப்பகுதியில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட மகிமாலீசுவரர் திருக்கோயில் இருக்கிறது. தற்போது இக்கோயில் காட்டும் புது கட்டிற்குள்ளே கொங்குநாட்டில் தொன்மைமிக்க கோயிலின் பழமை மிக்கப் பகுதிகள் மறைத்திருக்கின்றன என்பது வியப்பிற்குரிய உண்மையாகும். கொங்கு நாட்டில் உள்ள முழுச் செங்கலால் கட்டப்பட்ட கட்டுமானக்கோயில்களில் இதுவே மிகத் தொன்மையானது என்பது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும். கருவறையில் தரைமட்டத்திற்கு ஒட்டியவாறு திருமஞ்சனநீர் போக துளை அமைக்கப்பட்டிருப்பது பல்லவர் பாணியின் தாக்கத்தை தெரிவிக்கிறது. கோயில் கட்டிட அமைப்பு கங்கர்களின் செங்கல் கட்டிட வகையைச் சார்ந்தது. எனவே, இக்கோயில் மூன்றாம்

நந்திவர்மன் காலத்தில் கொங்குநாட்டை ஆண்ட கங்கர்களால் அளிக்கப்பட்ட கலைக்கொடை எனலாம். இந்தியத் தொல்லியல் கழகத்தின் இணை இயக்குநராக இருந்த கே.வி. சௌந்திரராசன் இக்கோயில் கி.பி. 9-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கங்கர்களால் அமைக்கப்பட்டதெனக் கருதுகிறார்.

மகிமாலி என்ற பெயரை மகிமாலய இருக்குவேள் என்னும் கொடும்பாளூர் வேளிர்குலச் சிற்றரசனுடன் தொடர்பு கற்பித்து இக்கோயிலும் அவனால் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். கொடும்பாளூர் வேளீர் அமைத்தக் கோயில் ஒன்று புதுக்கோட்டை கொடும்பாளூரில் தற்போதும் இருக்கிறது. முசுகுந்தேசுவரர் என்று தற்போது அழைக்கப்படும் அக்கோயில் முசுகுன்றம் உடையார் கோயில் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. முதலாம் பராந்தகச் சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் நான்கு அக்கோயிலில் உள்ளன. கல்வெட்டுக்கள் இக்கோயிலை மகிமாலய இருக்குவேள் கி.பி. 921 வாக்கில் பத்தாம் நூற்றாண்டின் முதற்காலப் பகுதியில் எடுப்பித்ததாகக் கூறுகின்றன. எனவே, ஈரோடு மகிமாலிசுவரர் கோயில் கொடும்பாளூர் முதுகுன்றம் உடையார் கோயிலுக்குச் சுமார் மூன்று அல்லது நான்கு தலைமுறைகளுக்கு முற்பட்டது என்பதை உணரலாம்.

சமீபக் காலத்தில் நடந்த திருப்பணிக்குப் பிறகு பழமைச் சின்னங்கள் முழுவதும் மறைக்கப்பட்டுவிட்ட நிலையில் அந்நாளைய பழமையில் ஒரே எச்சமாக மகிமாலீசுவரர் திருக்கோயில் கருவறையின் வடக்குப்புறம் இருக்கும் துவாரபாலகர் சிலை விளங்குகிறது. 4½ அடி உயரத்தில் தலைமுடி அணிந்து கழுத்து ஆரங்களும், முத்து கோத்த முப்புரிநூலும் புனைந்து விளங்கும் இச்சிலை தக்கோலம் திருஊறல் மகாதேவர் கோயில் துவாரபாலகர் சிற்பத்தின் வேலைப்பாட்டுடன் பெரிதும் ஒத்திருக்கிறது. தக்கோலம் திருக்கோயில் கி.பி. 9-ம் நூற்றாண்டில் பாணர்குல மன்னர்களால் அமைக்கப்பட்டது எனக் கூறுவர். பெருமிதமாக தோற்றமளிக்கும் தக்கோலம் சிலைகளின் அழுத்தமான அமைப்பு நளினமான சோழர் பாணிக்கு முற்றிலும் மாறுபட்டதென தக்லஸ் பேரட் விளக்குவார். தக்லஸ் பேரட் தக்கோலம் சிலைகளுக்குக் கூறியவை மகிமாலீசுவரம் துவாரபாலகர் சிலைக்கும் பொருந்தும். இச்சிற்பம் கனத்திற்கும், அழுத்தத்திற்கும் முத்திரை கொடுக்கும் சாளுக்கிய, பாண்டிய பாணிகளின்

அடித்தளத்திலிருந்து கிளைத்த கங்க வெளிப்பாடாகும். எனவே, இந்த அடித்தளத்திலிருந்து கிளைத்த பாணர் மற்றும் முத்தரையர் பாணி சிற்பங்களுடன் பல அம்சங்களில் இது ஒத்திருப்பதையும் காணலாம்.

**பாண்டியர் ஆதிக்கத்தில்:**

கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியரின் படையெடுப்புகளைத் தொடர்ந்து கொங்குநாட்டில் அவர்தம் மேலாதிக்கம் சிறிது காலம் நிலவியது. இக்காலப்பகுதியில் பாண்டியர் பாணியின் தாக்கத்தில் சிற்பக்கலை செழித்தது. ஈரோடு தொண்டீசுவரம் உடையார் கோயில் சுற்றுவளாகத்தில் மேற்குப் பகுதியில் அரசமரத்தடியில் நாகக்கற்களுடன் வைக்கப்பட்டிருக்கும் முருகன் மற்றும் துர்க்கைச் சிற்பங்கள் பாண்டியர் பாணியின் தாக்கத்தில் உருவானவை. துர்க்கைச் சிற்பம் சேலம் கோட்டை பெருமாள் கோயில் சொர்க்கவாசல் வீதியில் இருக்கும் பாண்டியர் காலத் துர்க்கைச் சிற்பத் தோடு பெரிதும் ஒத்துள்ளது.

**கொடுமுடிப் படிமங்கள்:**

இரா. நாகசாமி 1961-இல் லலித்கலா இதழில் திருப் பாண்டிக் கொடுமுடித் திருக்கோயிலிலுள்ள சிறந்த திருமேனிகள் நான்கை அறிஞர் உலகிற்கு அறிமுகப் படுத்தினார். நடராசர், திருமால், திரிபுராந்தகர், திருபுரசுந்தரி ஆகியத் தெய்வத் திருஉருவங்களைச் சித்தரிக்கும் இத்திருமேனிகள் கொங்குநாட்டுச் சிற்பக்கலையின் சிறந்த உச்சங்களாகும். திராவிடக் கலையின் கொங்கு வழக் கிற்குச் சான்றுகள் என இவற்றைக் குறிப்பிடும் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பாண்டிய நாட்டு காலத்தாக்கம் இதில் மிகுந்திருப்பதாகக் கூறுவர். கொடுமுடி நடராசர் திருமேனி தற்போது சென்னை அருங்காட்சியத்தில் இருக்கும் மதுரை பொருப்பு மேட்டுப்பட்டி நடராசர் திருமேனியுடன் பெரிதும் ஒத்திருப்பதை எடுத்துக் காட்டும் சிவராமமூர்த்தி இது பாண்டியப் பாணியின் வட்டாரத் தெறிப்பாக, சோழரின் துவக்க காலத்தில் உருவானது என்பார்.

தாமரை மீது நடனமிடும் நிலையில் 63.5 செ.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள கொடுமுடி நடராசர் திருமேனி தமிழகத்தின் கலைநலம் காட்டும் இணையற்ற திருமேனிகளில் ஒன்றாகும். கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் துவக்கக் காலத்தைச் சேர்ந்த இத்திருமேனியை குஞ்சிதபாத மூர்த்தியென கொடுமுடி கோயிலில் அழைக்கின்றனர். இத்திருமேனி சித்தரிக்கப்பட்டிருக்கும் நடன நிலை இதன்



கொடுமுடி நடராசர் (வெங்கலம்)

சிறப்பைப் பெரிதும் உயர்த்துகிறது. தற்போது புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் இருக்கும் புதுக்கோட்டை திருவரங்குளம் நடேசர் திருமேனியைப் போன்று லலித பாவத்தில் சதுரமாகக் கால்களை வைத்தநிலையில் வடிக்கப்பட்டிருக்கும் இத்திருமேனியில் முயலகன் காட்டப்படாதது குறிப்பிடத் தக்கதாகும். சைவச் சித்தாந்த தத்துவத்திற்கு ஏற்ப சோழ நாட்டு வழக்கில் படைக்கப் பட்டதால் திருவரங்குளம் திருமேனியில் முயலகன் இடம் பெற்றிருக்கிறான். சாளுக்கிய வழக்கின்தாக்கத் திற்கு உட்பட்ட பாண்டியர் பாணியில் உருவாகிய கொடுமுடி திருமேனியில் தெக்கென வழக்கிற்கு ஏற்ப முயலகனுக்குப் பதிலாக தாமரை நடனபீடமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அண்மையில் நாமக்கல் வட்டம் மணற்பள்ளி கிராமம் ஆற்றுப்படுகையில் கிடைத்த இதே வடிவமைப்பில் உள்ள நடாரசர் திருமேனியைத் தவிர வேறு எந்த தென்னாட்டு நடராசர் திருமேனியும் இதுபோன்ற நடன நிலையில் இதுவரை அறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## சோழர் ஆட்சியில்:

முதலாம் ஆதித்தச் சோழர் காலத்தில் கொங்குநாடு சோழரின் மேலாண்மைக்கு உட்பட்டது. ஆதித்தன் மகன் முதலாம் பராந்தகன் காலத்தில் இங்கே பல கோயில்கள் கட்டப்பட்டதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இம்மன்னன் காலத்தில் சோழர் ஆட்சிக்கு உறுதுணையாய் சேரரும் இங்கே சேவை புரிந்தனர். இதனால் சோழர் கலைப்பாணி கொங்கில் புதுமெருகோடு வெளிப்பட்டது.

கொடுமுடித் திருக்கோயிலில் இருக்கும் முன்பு குறிப்பிட்ட நான்கு திருமேனிகளில் நடராசர் தவிர்த்த ஏனைய திருமால், திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி ஆகிய மூன்றும் முற்காலச் சோழர் கலைப்பாணியைப் பெரிதும் பெற்றிருப்பவையாகும். இத்திருமேனிகளைத் தவிர இதேபாணியில் வடிக்கப்பட்ட இரு கற்சிற்பங்களும் இக்கோயிலில் உள்ளன. கோபுரவாசலின் இருமருங்கும் வைக்கப்பட்டிருக்கும் சூரிய சந்திரர் சிற்பங்கள் புதுக்கோட்டை கொடும்பாளூர் சிற்பங்களுக்கு இணையானவை. சூரியனை விட தெளிவாகக் காணப்படும் சந்திரனின் சிலை பார்க்க, பார்க்கப் பரவசமூட்டும்.

ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும், பிரமியம் சண்டேசுவரர் சிற்பம் சேலம் அருங்காட்சியத்திலுள்ள சண்டேசுவரர் சிற்பத்தோடு அமைப்பிலும் கலைப்பாணியிலும் ஒத்தது. இரண்டும் புதுக்கோட்டை நார்தாமலையில் செழித்த முற்காலச்சோழர் பாணியில் அமைந்தவை.

**விசயநகர மேலாண்மையில்:**

கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் நாற்பதுகளின் இறுதியில் விசயநகரின் செல்வாக்கு கொங்குநாட்டில் குமார கம்பண்ணனின் படையெடுப்புடன் பரவத் துவங்கியது. பதினாராம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேரரசன் கிருட்டிணதேவராயன் ஆட்சியில் விசயநகரின் முழுமையான பிடிப்பின்கீழ் கொங்குநாடு வந்துவிட்டது. இதன் விளைவாக விசயநகரப்பாணி துளிர்விட்டுத் தழைத்தது. விசயநகரமேலாண்மைக்குட்பட்டு இங்கு பரவிய உம்மத்தூர் மரபினரும் மதுரை நாயக்க மரபினரும் தத்தம் பகுதிகளின் அடிப்படைக்கூறுகளை விசயநகரப்பாணியில் வெளிப்படுத்தியபோது, புதிய பரிமாணங்களில் சிற்பக்கலை கொங்கில் செழித்தது. உம்மத்தூர் மரபு வழியாகவும் மைசூர் வழியாகவும் வந்த விசயநகரப்பாணியில் போசளமரபுகள் பின்பற்றப்பட்டன. மதுரை நாயக்க மரபு வழியாக வந்த பாணியில் சோழ, பாண்டிய தன்மைகள் வெளியிடப்பட்டன.

ஈரோடு ஆர்த்தர கபாலீசுவரர் திருக்கோயிலில் மூன்றுதலை, மூன்றுகை, மூன்று கால்களுடன் நடராசர் வடிவில் ஒரு சிலை இருக்கிறது. சிவனின் அம்சமான ஆகமங்கள் குறிப்பிடும் ஜுரஹரேசுவரரைச் சித்தரிக்கும் இச்சிலை கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது. சோழ, பாண்டிய வழியில் மலர்ந்த விசய நகர பாணியைப் பெற்றிருக்கிறது. இச்சிலையின் பீடத்தின் பின்பகுதியின் மத்தியில் சதுரம் செய்து

அதில் மலர் வடிவைச் செதுக்கியுள்ளனர். பொதுவாக, சமண தீர்த்தங்கரர் சிலைகளின் பீடங்களில் இவ்வாறு சதுரம் அமைத்து அதில் சம்பந்தப்பட்ட தீர்த்தங்கரரின் இலச்சினையை வடிப்பார்கள். சமணச் சிலைகளில் பின்பற்றப்படும் வழக்கு, சைவச் சிற்பத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது இப்பகுதியில் சமணத்திற்கு இருந்த செல்வாக்கை ஓரளவிற்குப் புலப்படுத்துகிறது.

**சமணச் சிற்பங்கள்:**

கொங்கு நாட்டில் இருந்ததாகக் கூறப்படும் 72 சமணத்திருப் பதிகளில் சில ஈரோடு மாவட்டத்தில் இருந்தன. இவற்றுள் விசயமங்கலத்தில் உள்ள எட்டாவது சமணத் தீர்த்தங்கரர் சந்திர பிரப தீர்த்தங்கரர் திருக்கோயில் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் புகழ்பெற்ற கோமதீசுவரர் சிலையை நிறுவிய சாமுண்டராயனின் சகோதரி புள்ளப்பை உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த இடம் இத்திருக்கோயில் இருக்கும் இடமே. இக்கோயிலின் முகமண்டபத்தில், தூண்கள் மீது கூரையைத் தாங்க இடப்பெற்றிருக்கும் குறுக்குக் கற்சட்டங்களில் சித்தரிக்கப் பட்டிருக்கும் தீர்த்தங்கரரின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்களும், விதானச் சிற்பங்களும் போசள மரபு வழியே செழித்த விசயநகரப்பாணிக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

**கெட்டிமுதலி கட்டிய மண்டபம்:**

மதுரை நாயக்கர் காலத்தில் சேலம், ஈரோடு பகுதிகளில் பாளையக்காரராக சிறந்திருந்த கெட்டி முதலிகள் சமயப்பற்றும் கலை உணர்வும் மிக்கவர்களாக விளங்கினர். அவர்கள் கட்டிய தாரமங்கலம், திருக்கோயிலைப் பற்றி நாம் நன்கு அறிவோம். அக்கோயிலின் விதானத்தில் படைக்கப்பட்டிருக்கும் கலைப் படைப்பை நினைவூட்டும் வகையில் அருமையான மற்றொரு கலைப் படைப்பை ஈரோடு மாவட்டத்திலும் கெட்டி முதலிகள் படைத்திருக்கின்றனர்.

பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் வேதநாயகி அம்மன் சன்னதிக்கு முன்னே ஒரு முகமண்டபம் இருக்கிறது. கலைநலம் மிளிரும் இந்த மண்டபத்தை இம்மடி கெட்டிமுதலி கட்டியதை அம்மண்டபத்தின் கூரைத் தளத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டால் அறிகிறோம். இம்மண்டபத்தின் விதானச் சிற்பத்திற்குத் தேர்ந்தெடுத்திருக்கும் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். விதானத்தில் மத்தியில் தாமரைமலர் மீது அமர்ந்து கிளிகள் பொகுட்டை கொத்தும் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. தாரமங்கலம், கைலாசநாதர்கோயில், சேந்தமங்கலம்

இலக்குமிநாராயணர் கோயில்களிலும் காணப்படும் இக்கருத்து போசளர் வழிவந்ததாகும். தாமரைக் கிளிகளுக்கு அப்பால் இடைவெளி விட்டு இரு சதுரபுடைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சதுரபுடைப்பின் இடைப்பகுதியில் அம்பிவிசயநகரப்பாணியில் கோலாட்டம் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து திசைக் கோணத்திற்கு ஒருவராக கணபதி, திருமால், பிரம்மன், ஆறுமுகன், ஊர்த்துவதாண்டவர், கொடிப்பெண், காளி, துர்க்கை, நந்தி, ஆகியோர் உருவங்களுடன் கின்னரர், நாரதர் உருவங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. அக்கால இசைக்கருவிகளை அறிவிக்கும் அற்புதமான சிற்பத் தொகுதியாக இது அமைந்திருக்கிறது. மண்டபத்தின் தூண்கள் மதுரை நாயக்கர் பாணியில் யானை, குதிரை, யாளி போன்றவற்றையும் கோயில் திருப்பணி செய்தோரின் உருவச்சிலைகளையும் பெற்றிருக்கின்றன.

# கோயிலும் ஒரு மருந்தகமே

**டாக்டர் பி. லலிதாபாய், உதவி மருத்துவ அலுவலர் (சித்த),**
**ஆரம்பச் சுகாதார நிலையம், சித்தோடு, ஈரோடு மாவட்டம்**

*முன்னுரை:*

*ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தலைவனும் அவனைச் சார்ந்த அக்குடும்பத்தாரும் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுதலும் இயல்பாக இருப்பது போல், ஊர் மக்களும் கோயிலை நடுநாயகமாக வைத்து அதனோடு தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். இதைக் கருத்தில் கொண்டுதான் தமிழ் மக்கள் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறினர் போலும்.*

*நடுகல்–கோயில்:*

*மக்களுக்காக பாடுபட்ட வீரத்தலைவர்களின் நினைவாக "நடுகல்" நடுகின்ற பழக்கம் கற்கால முதல் மனிதர்களிடையே பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. அவை போன்றவைகள், காலப்போக்கில் கோயிலாக மாறியுள்ளன என்பதை வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். எனவே, மனித வாழ்க்கையில் கோயில் என்பது ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.*

*பல்வேறு கோயில்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்தன என்பதற்கு சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.*

*பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்*
*அறுமுக செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*
*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்*
*மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்*
*(சிலப்பதிகாரம் இந்திரவிழா எடுத்தகாதை - வரி 581-586)*

*இவ்வாறு மக்கள் விருப்பத்திற்கேற்பப் பல்வேறுபட்ட கோயில்களைப் பிற்காலத்தில் தோற்றுவித்தார்கள். மக்கள் அப்பெருமக்களுக்காக நினைவுச் சின்னங்களாக எடுத்த கோயில்களுக்குச் சென்று, தங்களுக்கு உளநலமும், உடல்நலமும் தரவேண்டும் என வேண்டுகின்றனர்.*

***உடலும் உள்ளமும் இணைந்து செயல்படுவதன் நோக்கம்:***

*மனிதன் உளமும், உடலும் சரியாக இருந்தால்தான் எந்தவிதச் செயலையும் செவ்வையாகச் செய்ய முடியும் என்ற கருத்தை*

நினைவில் கொண்டு அவர்களை வேண்டினர். அந்தக் கருத்தைத்தான் திருமூலரும், தன் திருமந்திரத்தில் உளமும், உடலும் ஒருசேர நன்னிலையில் இருந்தால்தான் எதையும் சாதிக்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

-என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

மருத்துவன் நோயைப் போக்குவது போல் இக்கோயில்களும் மக்களுக்கு உடல், மன நோயையும் போக்குகின்றன. இக்கருத்தை மனதில் கொண்டுதான் இறைவனுக்கு வைத்தீசுவரன், மருந்தீசர் என்பன போன்ற பலப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

**கோயிலுக்குச் செல்வதால் பெறும் பலன்:**

இக்காலத்தில் உளநலமும், உடல் நலமும் விரும்பி யோகாசனமும், மற்ற உடற்பயிற்சிகளும் அதிகமாகச் செய்து வருவதை நாம் பார்க்கிறோம். இதை ஏற்கனவே உணர்ந்த மக்கள், உடற்பயிற்சியின் அவசியத்தை அறிந்து "இருந்த காலே மூதேவி, நடந்தகாலே சீதேவி" எனச் சுருக்கமாக உடற்பயிற்சியின் முக்கியத் துவத்தைக் கூறிச் சென்றனர். மனிதருக்கு எதையும் தனியாக, செய் என்று சொன்னால் சோம்பலின் காரணமாக அதை விட்டு விடுவர் எனவேதான் நம் மக்கள் கோயில்களைச் சிறிது தொலைவில் அதிலும் சிறப்பாகக் குன்றுகளில் அமைத்து, "நீங்கள் அங்கு சென்று இறைவனை வழிபட்டால் வேண்டியதைப் பெறலாம்" எனக் கூறியதால், வாழ்நாள் முழுவதும் அது வேண்டும், இது வேண்டும் என மனதில் எண்ணிக்கொண்டு இருக்கிற மக்கள் மலையேறி சிறிது துன்பப்பட்டாலும் வேண்டியது கிடைக்குமே என்ற ஆவலில் கோயிலுக்குத் தினமும் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டனர். இதனால் அதிகாலை வேளை இறைவனை வழிபடச் செல்கின்ற மக்களுக்கு, நடக்கின்றபோதும், மலை ஏறுகின்ற போதும் உடல் தசைகள் நன்கு இயக்கப்படுகின்றன. எனவே அதிகமான உயிர்க்காற்றை (பிராண வாயு) பெற்றுப் பயன் அடைகின்றனர்.

சிறப்பாக அதிகாலையில் செல்கின்றபோது, ஓசோன் என்ற உயிர்க்காற்று அதிகம் பரவியிருப்பதால் அதை சுவாசிக்கின்ற

மக்களின் குருதியோட்டம் சிறப்புற நடக்கிறது. குன்றுகளின் மேல் ஏறுகின்றபோது அங்கு இருக்கின்ற மூலிகைச் செல்வங்களின் வாசனையை நுகர்ந்து கொண்டு செல்வதால் பல்வேறுபட்ட நோயாளிகளும் தங்களுடைய நோயினின்று விடுபடுகின்றனர். இதனால் இவர்களின் மனதிலும், உடலிலும், உற்சாகமும், புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றது. அப்புத்துணர்ச்சி அந்நாள் முழுவதும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களின் வேலைகளைத் திறம்படச் செய்வதற்கு பயனுள்ளதாக இருக்கிறது.

உடலைத் தூய்மையாக்கிய பின்னரே, இறைவனை வழிபடச் செல்கிறோம். உடலைத் தூய்மையாக்குவதால் முதல் நாள் ஏற்படும் களைப்பு நீங்கி புத்துணர்ச்சி பெறுகிறோம். பொதுவாக ஆறுகளில் குளிக்கிறோம். இவ்வாறுகள் மலைகளிலிருந்து வருகின்ற காரணத்தால் பல்வேறுபட்ட மூலிகைச் சத்துக்களைக் கலந்து கொண்டு வருவதனால், அந்நீர் உடலில் படுகின்ற போது பல்வேறுபட்ட தோல் நோய்கள் தீர்கின்றன. கோயில்கள் தோறும் குளம் இருப்பது வழக்கம். குளங்களில் நீராடி இறைவனை வழிபடச் செல்கின்ற மக்களின் பயன்கருதி நம் பெரியோர்கள் இக்குளங்களில் மருந்துப் பொருட்ககளைக் கலந்து வைத்திருந்தார்கள். அதில் குளிக்கின்ற மக்கள் உடல்நலம் பெறுகின்றனர்.

**பொய்கைகளின் பெருமை:**

மேற்கண்ட கருத்தை வலியுறுத்துவதுபோல் காஞ்சிமாநகரில், அக்காலத்தில் ஒன்பதுவிதமான பொய்கைளை ஏற்படுத்தி இருந்தனர் என நூல் ஆதாரங்கள் கூறுகின்றன. அவைகளில் மூன்று மேற்சொன்ன செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

"பழம்பிணிநீக்கும் பொய்கை
பொன் வடிவைத்தரும் பொய்கை
வசிகரத்தை அளிக்கும் பொய்கை"

ஆகியன. (தொகை அகராதி, பக்கம் 76)

இதே கருத்தை வலியுறுத்துகின்ற வகையிலேயே வள்ளல்பெருமானும் தான் அமைத்த ஞான சபைக்கு அருகிலேயே மக்கள் உடல் நலம் கருதி, கிணற்றில் நோய்களைப் போக்கும் மருந்துப் பொருட்களைப் போட்டு, அக்கிணற்றில் குளிக்கச் செய்தார். அக்கிணறு இன்றும் வடலூரில் உள்ளது. அதுபோல், கோயில்கள் தோறும் இருக்கின்ற குளங்கள் மக்கள் உடல் நலம் கருதியே தோண்டப்பட்டன.

**பிரகாரங்களின் அவசியமும் உடற்பயிற்சியும்:**

கோயில்களின் அமைப்பு பல்வேறு பகுதிகளைக் கொண்டுள்ளதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் வெளியில் இருப்பது மலர்த்தோட்டமாகும். மலர்களும் மூலிகைகளும் பெரிதும் மருத்துவப்பயன் கருதியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோயில்கள் பல்வேறுப்பட்ட சுற்றுவீதிகளை உடையவையாக இருக்கின்றன. அதற்கு மதுரை மீனாட்சி அம்மன் கோயில் எடுத்துக்காட்டாக உள்ளது. கோயிலின் கருவறைக்குச் செல்லும் முன் வெளிச்சுற்று வீதிகளில் காலாற நடந்து சென்று சுற்றிய பின்னரே செல்லுகிறோம். இதனால் உடல் முழுவதும் வலிமை பெறுகின்றது.

**திருவுருவும் மருந்தும்:**

கருவறையில் திருவுருவம் நிலை நிறுத்துகின்றபோது எட்டுவிதமான மருந்துப் பொருட்களைச் சேர்த்து இடித்து பிடத்தின் மேல் பள்ளம் தோண்டி அதனுள் இட்டு பிறகு திருவுருவத்தை அமைக்கின்றனர். அதற்கு அஷ்டபந்தனம் என்று பெயர். அதில் சேரும் மருந்துப் பொருட்கள்:

1. கொம்பரக்கு
2. சுக்கான் தூள்
3. குங்கிலியம்
4. சுற்காவி
5. செம்பஞ்சு
6. சாதிலிங்கம்
7. தேன்மெழுகு
8. வெண்ணெய்

ஆகியவை ஆகும்.

இந்த எட்டுவிதமான மருந்துப் பொருட்கள் கீழ்க்கண்ட பலன்களை நமக்கு அளிக்கின்றன:

1. **கொம்பரக்கு:**

குருதி அழல்நோய், குன்மம், இளைப்புநோய், அடிபட்டப்புண், உடல்வலி, சந்நிபாதசுரம், பெரும்பாடு, குருதிக்கழிச்சல் நீக்குவதோடு மார்புக்கு வலிமையும் கொடுக்கும்.

2. **சுச்சான் தூள்:**

உணவைச் செரிப்பிக்கும்; பல்லுக்கு உரத்தைத்தரும்; வாத நோய்களையும் தோல் நோய்களையும் போக்கும்.

3. **குங்கிலியம்:**

தோல் நோய்கள், புண், மேகநோய்கள் இவற்றைப் போக்கும்.

4. **கற்காவி:**

"இடலறு நற்காவிக் கலட்சிநோய் மேகம்
வெடியக்கி வாந்தி பித்தம் வீட்டும்"

கண் நோய், குண்மம், மேகநோய், இளைக்கின்ற அத்திநோய், வாந்தி, பித்தம் ஆகிய நோய்களும் பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடும் தீரும்.

5. **செம்பஞ்சு:**

புண்களை ஆற்றும் தன்மை உண்டு. நீர் சுளுக்குப் போகும்.

6. **சாதிலிங்கம்:**

கழிச்சல், சுரம், தீராப்புண்கள், சந்நிநோய், அதிமூத்திரம், காணாக்கடி, இளைப்புநோய், தோல்நோய்கள் போகும்.

7. **தேன்மெழுகு:**

பக்கவாதம், வீக்கம், இருமல்நோய், வன்மை இன்மை, கடவிடங்கள், தோல்நோய்கள், மேகநோய்கள் தீரும். வெட்டுப்பட்ட புண்களுக்கு இதைக் கொண்டு செய்யப்பட்ட தைலம் நல்ல பயன் தருகிறது.

8. **வெண்ணெய்:**

கண்ணிலெழு நோயுங் கண்ணெரிவும் பீளையும்போ
மென்னும் பசியுமெழும்புங்கால் - நண்ணரிய
ஆவுன - ஆவினதும் வெண்ணெய்க்கலும்வன் மேகமெல்லாம்
பூவினர் கெல்லாம் புகல்

-குண பாடம்

கண்ணோய், கண் எரிச்சல், பிளைசாரல், பிரமேகம் தீரும்; பசி உண்டாகும் (தாதுசீவ வகுப்பு).

இம்மருந்துப்பொருட்கள் சிலையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வதுடன் பீடத்திற்கும் சிலைக்கும் இணை எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. நாம் பால், நெய், தயிர், இளநீர், தேன், வெண்ணெய் போன்ற பொருட்களால் இறைவனை முழுக்காட்டுகின்ற போது மருத்துவக் குணங்கள் அடங்கிய இப்பொருட்களோடு பீடத்தில் இருக்கின்ற அந்த எட்டுவித மருந்துகளின் சத்தும் கலந்தே தீர்த்தமாக வெளிவருகிறது. எனவே தான் அதை இறைவன் பெயரால் ஏற்று அருந்துகிறோம். அதனால் பல நோய்கள் தீருகின்றன.

*மேலும் பழநி முருகன் கோயிலில் உள்ள திருஉருவம் நவபாடணத்தால் ஆனது. வீரம், பூரம், இலிங்கம், மனோசிலை, தாளகம், கொரிபாடாணம், எலிப்பாடாணம், கார்முகில் என்ற மருந்துப் பொருட்கள் சேர்ந்த திருஉருவின் மீது இரவில் சந்தனக் காப்பிட்டு அதை அதிகாலையில் எடுத்து மக்களுக்குப் பிரசாதமாக வழங்குகிறார்கள். இரவு முழுவதும் சந்தனக்காப்பில் மருத்துவக் குணம் பொருந்திய நவபாடாணத்தின் சத்துக்கள் இறங்கி இருக்கும். சந்தனம் குளிர்ச்சியைத் தரக்கூடியது. மேலும் நீர் எரிச்சல், தோல்நோய்கள், போன்ற மற்ற நோய்களைப்போக்கும். இச்சந்தனத்தோடு கலந்த நவபாடாணச் சத்தைப் பெற்று மக்கள் உண்கின்றபோது, கொடுமை செய்யும் பல நோய்கள் விலகுகின்றன. அதே போன்று அபிஷேகம் செய்த பஞ்சாமிருதத்தை அருந்தும் போது நோய்கள் போகும். இவ்வாறு ஒவ்வொரு கோயிலிலும் பல மருந்துப் பொருட்களைப் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள்.*

***பிரசாதங்களின் மருத்துவக் குணம்:***

*ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொருவிதமான பிரசாதம் வழங்கப்படுகிறது. சிவன் கோயிலில் வில்வமும், பெருமாள் கோயிலில் துளசியும், அம்மன் கோயிலில் வேப்பிலை, மஞ்சளும், பிள்ளையார் கோயிலில் அருகம்புல்லும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இறைவனுக்கு கோயிலில் ஒவ்வொருவிதமான மாலை அணிவித்துப் பிரசாதமாக வழங்குகின்றனர்.*

***வில்வம் – சிவன்கோவில்:***

*சிவனை அக்னிக் கடவுளாகக் கருதுகிறோம். தமது உடலில் அக்னி-நெருப்பு இருக்கின்ற இடம் வயிறு. வில்வமானது குளிர்ச்சி தன்மையுடையதாலும், அக்னியை அணைக்கின்ற தன்மை இருப்பதாலும் வயிற்றுப்புண், செரியாமை போன்ற நோய்களைப்போக்கும்.*

***வில்வத்தின் குணம்***

*"உண்டிக்சுழகரண முற்றதுணை கொற்றவற்குத்*
*தண்டிக்க வல்ல சமர்த்தென்ன - வெண்டிக்கும்*
*மேலார் பதார்த்தமென, மேதினியில் லாந்துலங்கு*
*மாலு ரளித்த பெருமை" - (தேரையன் வெண்பா, பக்கம்-15)*

*மன்னன் குற்றவாளிகளை ஒடுக்குவதுபோல் வில்வம் நோய்களைக் கண்டித்து உடலைக் காப்பாற்றும்.*

***துளசி–பெருமாள்கோயில்:***

*பெருமாள் கடலில் அனந்த சயனம் கொண்டிருக்கிறார். சாதாரணமாக மந்தாரமாக இருக்கும்போதோ, மழையில்*

நனைத்தாலோ நாம் நீர்க்கோர்வையினால் அவதிப்படுகிறோம். பெருமாள் எப்போதும் நீரின்மேல் இருக்கின்றபடியால் எதிர்ப் பொருளான தீ அம்சம் பொருந்திய துளசியைக் கொடுக்கிறார்கள். அது நமக்கு ஏற்படும் கபசம்பந்தமான நோய்களைப் போக்கும்.

**துளசி குணம்**

*"துளசியிலை ரசந்துய்திடச் சுரப்பிமி*
*யளவு நோயின்மெலா மறுவது திண்ணமே"*

*- (தேரையர் காப்பியம், பக்கம் 16)*

சுரமும், சுரம் சார்ந்த இருமல் இளைப்பு போன்ற ஐய நோய்களும் துளசி உண்டால் தீரும்.

**வேப்பிலை–அம்மன் கோயில்:**

**வேம்பின் குணம்**

*"புத்தியினைத் தீட்டுவிக்கும் புண்பிணியை யோட்டுவிக்கும்*
*இந்திரத்தை நன்றா யிசைவிக்கும் - சந்ததமும்*
*வீருண்டாங் கற்பமிக வுண்டா - மெஞ்ஞான்று*
*மாநவிருரையமில்லாமல்"*

*- (தேரையன் வெண்பா - பக்கம் 127)*

பாண்டியன் மாலையாகிய வேம்பு அறிவைத் தெளிவுபடுத்தும். தீயநோய்களைப் போக்கும். உடலுக்கு வன்மையைத்தரும். ஆயுளை நீடிக்கச் செய்யும். இது ஒரு காயகல்ப மூலிகையாகும். அம்மைநோய் போன்றவற்றை வராமல் தடுக்கும். வேப்பிலையானது தொற்றுநோய்களைப் போக்குகின்ற காரணத்தால் இதை அம்மனுக்கு அணிவித்து பின் நாம் அதை ஏற்று நோய் வராமல் தடுத்துக் கொள்கிறோம்.

**எலுமிச்சம் பழம் – அம்மன் கோயில்:**

எலுமிச்சம் பழத்தை இறைவிக்காக அர்ப்பணிக்கிறோம். அதனுடையச் சாறு பருகினால் அழல்நோயைப் போக்கி பயித்தியம் போன்ற மனநோய்களையும் போக்கும்.

*"சதாபலக் கனிகாய் சமூலமு முண்ணவே*
*நிதானமாய்ப் பயித்திய நிந்தை நோயகலுமே"*

*(தேரையர் காப்பியம் - பக்கம் 11)*

**மஞ்சள் – அம்மன் கோயில்:**

உடலைப் பொற்சாயலாக்கிப் புலால் நாற்றத்தை நீக்கும். மஞ்சளினால் புருஷ வசியமும், பசியும் உண்டாகும். வெம்மை, வித்த கபவாத நோய்கள், தலைவலி, சலதோடம், பிரமேகம்,

நாசிகாரோகம், ஐவகை வலி, வீக்கம் வண்டுக்கடிவிடம், பெருவிரணம் தீரும்.

**அறுகம்புல் – பிள்ளையார் கோயில்:**

"போகாத தோஷவினை யோகப் பிணியகன்று
தேகாதி யெல்லாஞ் செழிக்கவே - வாகாய
அடர்தந்தை பிள்ளைக் கனியாலினாலத்
திடமாங் கணபதி பத்திரம்" - (தேரையர் வெண்பா, பக்கம்-16)

அறுகம்புல்லுக்கு கணபதி அணி மூலம் என்ற பெயர் உண்டு. அறுகம்புல்லுக்கு நச்சுத் தன்மைகளைப் போக்குகின்ற தன்மை உண்டு. இதை வினைதீர்க்கும் விநாயகருக்கு அணிவித்து நீங்காத நமக்கு வரும் வினைகளைத் தீர்க்க உபயோகித்துக் கொள்ளுகிறோம். நீங்காத எவ்வித நோய்களையும் போக்கி, உடம்பை வலிமைப்படுத்துகிறது. இதன் நற்பயன் கருதித்தான் கொங்கு நாட்டு மக்கள் விரும்பி ஏற்கின்றனர். மேலும் ஜெர்மன் போன்ற நாடுகளில் ரொட்டி மாவில் இதன் சாற்றைக்கலந்து ரொட்டியாகச் செய்து விற்கின்றனர்.

**அனுமார் கோயிலும் வெண்ணெயும்:**

அனுமார் கோயிலில் வெண்ணெய் கொடுக்கிறார்கள். அனுமார் வலிவுள்ள தெய்வமாகக் கருதப்படுகிறார். எனவே அதே வலிமை தங்களுக்கும் வரவேண்டும் என்ற காரணத்தினால் கொழுப்புப் பொருந்திய பிரசாதமாகிய வெண்ணெயை வழங்குகிறார்கள்.

**கோயில் மரம்:**

ஒவ்வொரு கோயிலிலும் ஒரு கோயில் மரம் (தல விருட்சம்) இருப்பது வழக்கம். ஏனெனில் ஒவ்வொரு மூலிகை மரத்திற்கும் பிணிபோக்கும் குணம் உண்டு. இதைக் கருத்தில் கொண்டு அந்த மரங்களை வளர்த்து, பாதுகாத்து அவற்றின் பகுதிகளை இறைவனுக்கு அர்ப்பணித்து பிணிபோக்கும் பொருட்டு நாம் பெற்றுக்கொள்கிறோம்.

**எடுத்துக்காட்டாக:**

| ஊர் | கோயில் | திருஉருவம் | கோயில் மரம் | பலன் |
|---|---|---|---|---|
| 1. திருநணா (பவானி) | சிவன் கோயில் | சிவன் | இலந்தை மரம் | இலந்தைப் பழை பசியைத் தூண்டும். வாந்தியை நிறுத்தும் |

*திருவிழா:*

*ஓர் ஆண்டை ஆறு பருவகாலங்களாகப் பிரிக்கின்றோம். ஒவ்வொரு பருவ காலம் மாறும்போதும் தட்பவெட்ப நிலைகள் மாறுகின்றன. எனவே, இக்காலங்களில் நோய்கள் ஏற்படாதவாறும், வந்த நோய்களைப் போக்குகின்ற வகையிலும் விழாக்களை கொண்டாடுகிறோம்.*

***பருவகாலம்:***

| | | |
|---|---|---|
| *கார்காலம்* | - | *ஆவணி, புரட்டாசி* |
| *கூதிர்காலம்* | - | *ஐப்பசி, கார்த்திகை* |
| *முன்பனிக்காலம்* | - | *மார்கழி, தை* |
| *பின்பனிக்காலம்* | - | *மாசி, பங்குனி* |
| *இளவேனில்காலம்* | - | *சித்திரை, வைகாசி* |
| *முதுவேனில்காலம்* | - | *ஆனி, ஆடி* |

*சித்திரை மாதம் இளவேனில்காலம். எனவே வெப்பத்தைத் தணிப்பதற்காக, மதுரை போன்ற நகரங்களில், தெருக்கள் முழுவதும் பந்தலிட்டு, நீர்தெளித்து, வெப்பத்தைத் தணிக்கும், வெல்லம், ஏலம், சுக்கு போன்ற பொருட்கள் அடங்கிய பானத்தைக் கொடுத்தும், நீர்மோர் கொடுத்தும் வெப்பத்தைத் தணிக்கிறார்கள். ஓலை விசிறி கொடுப்பதும் உண்டு.*

*வைகாசி மாதம் வசந்த விழாக் கொண்டாடி வெப்பத்தைக் குறைக்கச் செய்கின்றனர். முருகனுக்காக திருச்செந்தூரில் விழாக் கொண்டாடுகிறார்கள். ஆனி மாதத்தில் வைணவத் திருவிழா கொண்டாடப்படுகிறது. முதுவேனில்காலமாகிய ஆடி மாதத்தில் ஆற்றங்கரைக்குச் சென்று நீராடுகின்ற பழக்கம் உண்டு. மேலும் இம்மாதத்தில், காற்றுடன், வெயிலும், சிறிது தூறலும், இருப்பதால் பூமியில் அதிக வெட்பத்தைக் கிளப்புகிறது. அதே செயல் தான் நமது உடம்பிலும் ஏற்பட்டு, “அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது” என்பதற்கு இணங்க உடலிலும் மணல்வாரி போன்ற அம்மை நோய்களை தோற்றுவிக்கின்றது. அதைத் தணிக்கும் பொருட்டுதான் மாரியம்மன் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. திருவிழா கொண்டாடுமுன் கொடியேற்றி 15 நாட்கள் சாற்றுமறை செய்வது வழக்கம். இது ஏனெனில் இச்சமயத்தில் அவ்வூர்க்காரர்கள் எங்கும் வெளியே செல்லமாட்டார்கள். அதே போன்று வெளியூர்க்காரர்களும் அங்கே வரமாட்டார்கள். இது ஏனென்றால் இந்நோயாளர்கள் வெளியே சென்று நோயைப் பரப்பாமல் தடுக்கும்*

வழியாகும். இதை இக்காலத்தில் "குவாரண்டைன்" எனக் கூறுகிறோம். இக்காலங்களில் அம்மனுக்கு மஞ்சள் + வேப்பிலை + அறுகம்புல் கலந்த நீர்கொண்டு சென்று முழுக்காட்டுவது வழக்கம். மேலும் அதையே மக்களும் பிரசாதமாக ஏற்று அருந்துகிறார்கள்; குளியலுக்காகவும் பயன்படுத்துகின்றனர். இது நோயை வராமல் தடுக்கவும், வந்த நோயைப் போக்கவும் பயன்படுகிறது. இக்காலங்களில் நீர்மோர், கம்பங்கூழ், இளநீர் போன்ற குளிர்ச்சி பொருந்திய மருத்துவப் பொருட்களை உணவாக ஏற்கின்றனர். இதுபோன்று ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு வித விழா எடுத்து மக்களை நோயின்றி பாதுகாத்துக் கொள்கிறோம்.

**தீபஆராதனை, யாகம்:**

இறைவனுக்கு நாள்தோறும் அல்லது திருவிழாக் காலங்களில் கற்பூரம் காட்டப்படுகிறது. ஏனெனில் மக்கள் கூட்டம் அதிகமாக ஒரே இடத்தில் குவிகின்றனர். நாம் விடுகிற கரியமிலவாயு அதிகமாகி பலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே அத்தூய்மையற்ற காற்றை தூய்மையாக்கும் பொருட்டு கற்பூரம் ஏற்றப்படுகிறது. இக்கற்பூரத்தின் குணத்தின் தன்மையைக் கீழ்க்கண்ட வரிகளால் அறியலாம்.

"கிருமி சலதோடங் கிளைவலிப்பு சந்நி
பொருமுமாந்தம் அங்கிபட்ட புண்ணோ - டெரிசுரங்கள்
வாந்தி பித்தஞ் சீதமுறு வாதஞ்செவிமுகநோய்"

கற்பூரத்தினால் கிருமி, நீரேற்றம், இசிவு, சந்நிவாதம், தீ சுட்டபுண், கோரசுரம், வாந்தி, பித்தம், கபவாதம், காதையும் முகத்தையும் பற்றிய பிணிகள் தீரும்.

"தண்ணுறு சீதத்தைத் தவிர்ப்ப தன்றியே
எண்ணுறு வெப்ப மியற்றும் வேர்வையை
மண்ணுறத் திரும்பினும் வளரும் தொத்துநோய்
வண்ணுறச் செய்திடுஞ்சூடன் வீர்யம்

(பதார்த்த குண மஞ்சரி, பக்கம் 156)

சயித்தியத்தால் உண்டாகும் சீதளத்தையும், அதிவியர்வையையும் போக்கி வெப்பத்தைத் தரும். தொத்து நோய்களை அணுகவொட்டாது தடுக்கும். இவ்வளவு பலனளிக்கும் கற்பூரம் தற்காலத்தில் கலப்படம் செய்யப்பட்டு, உடலுக்கு ஊறு விளைவிக்கும் பொருளாக மாறிவிட்டது. மக்கள் இதை மாற்ற வேண்டும்.

*விழாக்காலங்களில் மக்கள் அதிக அளவில் கூடுதலால் யாகம் வளர்க்கப்படுகிறது. அதனின் முழுமையான கருத்து மருத்துவக் குணம் பொருந்தியது. இந்த யாகத்தில் மருத்துவக் குணம் பொருந்திய மூலிகைகள், நெய், கற்பூரம், தேன் விட்டு எரிகின்ற போது வருகின்ற புகைமண்டலம் வானவெளியில் சென்று மக்கள் சுவாசிக்கும் போது நோய் பரவாமல் தடுக்கிறது. குறிப்பாக இரைப்பு இருமல் நோயாளிகள் யாகங்களில் கலந்து கொண்டால் நோயின் கொடுமை மிகவும் தணிகிறது.*

**உளநோயும், கோயிலும்:**

*இக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வித மனநோயாளியாக இருக்கிறான். எடுத்துக்காட்டாக மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற வேண்டும் என எண்ணியும், திருமணம் ஆன தம்பதியர் பிள்ளை இல்லாத போது பிள்ளை இல்லையே என்ற ஏக்கத்துடனும், பிள்ளைப் பேற்றை அதிகம் உடையவர்கள் குடும்பப் பாரத்தை அதிகம் சுமப்பதிலேயே அலுப்புத் தோன்றியும், வயோதிகர்கள் இறைவனை அடைய வேண்டும் என எண்ணியும், வியாபாரிகள் பொருள் நட்டம் ஏற்படாதவாறு இருக்க வேண்டும் என எண்ணியும் மனக்கவலையுடன் கூடும் இடம் கோயிலாகும். இவர்கள் கோயிலை வந்தடையும் போது மனச்சுமையுடன் வருகின்றனர் இறைவனை வழிபடும்போது சிலர் மனச்சுமையை இறக்குகிறார்கள். இறைவனை வழிபட்ட பின் மண்டபத்திலோ, குளக்கரையிலோ அமர்ந்து மற்றவர்களைப் பார்க்கும் போதும் ஒருவரொடொருவர் பேசும் போதும் தங்களுக்கு உள்ள மனக்குறை மற்றவரைவிட குறைவு என்பதால் கவலை குறைகிறது. மேலும் அப்பேச்சினால் மனச்சிக்கல்களுக்கு வழியும் பிறக்கின்றது. மன உளைச்சலில் இருந்து விடுபடுகின்றனர். அதிகமான மன உளைச்சல் காரணமாக முதிர்ச்சி அடைந்த மனநோயாளிகளை குணசீலம், வைத்தீசுவரன் கோயில், சங்கரன் கோயில் போன்ற பல்வேறு கோயிலுக்கு அழைத்துச் சென்று நலம் பெற வைக்கிறார்கள். கோயிலுக்கு வருகைபுரிவதால் உடல்நோயைப் போக்கிக் கொள்வதோடு அல்லாமல் மனநோயையும் போக்கிக் கொள்கிறார்கள்.*

***முடிவுரை:***

*கோயில் இருப்பிடம், அதன் வடிவமைப்பு, ஆராதனை, அபிசேகம், அத்தனையும் உளநலம், உடல் நலம் பெற வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டுதான் அமைக்கப் பெற்றுள்ளன. எனவே "**கோயிலும் ஒரு மருந்தகமே**" எனக் கூறுவது மெய்யாகும்.*

## மேற்கோள் நூல் விவரத் தொகுப்பு:

1. இளங்கோ அடிகள் - சிலப்பதிகாரம் - இந்திர விழா எடுத்த காதை வரி 581 - 586.

2. திருமூலர் - திருமூலர் திருமந்திரம் - செய்யுள் 704.

3. கழகப் பதிப்பேடு - தெபகை அகராதி - பக்கம் 76.

4. டாக்டர் ஆர். தியாகராஜன் - குணபாடம் - தாதுசீல வகுப்பு - பக்கம் 407, தமிழக அரசு வெளியீடு, 1986, சென்னை.

5. டாக்டர் ஆர். தியாகராஜன் - குணபாடம் - தாதுசீல வகுப்பு, பக்கம் 529.

6. தேரையர் - டாக்டர் ஆர். தியாகராஜன் (பதிப்பாசிரியர்) - தேரையர் வெண்பா, பக்கம் 15, அன்பு செல்வி அச்சக வெளியீடு, 1975, சென்னை.

7. தேரையர் - டாக்டர் ஆர். தியாகராஜன் (பதிப்பாசிரியர்), தேரையர் காப்பியம், பக்கம் 16 - பண்டிட் ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் வெளியீடு, சென்னை - 17 - 1975.

8. தேரையர் - டாக்டர் ஆர். தியாகராஜன் (பதிப்பாசிரியர்), தேரையர் வெண்பா, பக்கம் 127, அன்பு செல்வி வெளியீடு, சென்னை - 1975.

9. தேரையர் - டாக்டர் ஆர். தியாகராஜன் (பதிப்பாசிரியர்) - தேரையர் காப்பியம், பக்கம் 11.

10. தேரையர் - தேரையர் வெண்பா - பக்கம் 16.

11. டாக்டர் ஆர். தியாகராஜன், குணபாடம் - தாதுசீல வகுப்பு - பக்கம் 301.

12. வைத்யபூபதி எஸ். கிருஷ்ணராவ் - பதார்த்த பஞ்ச குண மஞ்சரி - பக்கம் 156, ஆயுர்வேத ஆசிரமம் - மயிலாப்பூர், சென்னை - 1926.



